மணிமேகலைப் பிரசுரம்

# டயானா

# வஞ்சித்தாரா? வஞ்சிக்கப் பட்டாரா?

டாக்டர் க. இந்திரகுமார்
(லண்டன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டயானா வஞ்சித்தாரா ?
# வஞ்சிக்கப்பட்டாரா ?

**டாக்டர் க. இந்திரகுமார்**

(மனநோய் மருத்துவ வல்லுநர், இங்கிலாந்து)

**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண் : 1447,
4, தணிகாசலம் சாலை,
தியாகராய நகர்,
சென்னை - 600 017.
தொலை பேசி : 4342926
தொலை நகல் : 044 - 4346082

மின் அஞ்சல் : e-mail : tambhi @ md2.vsnl.net.in
(MANIMEKALAI)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | டயானா வஞ்சித்தாரா ? வஞ்சிக்கப்பட்டாரா ? |
| ஆசிரியர் | : | டாக்டர் க. இந்திரகுமார் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | 1998 |
| பதிப்பு விபரம் | : | முதல்பதிப்பு |
| உரிமை | : | மணிமேகலைப் பிரசுரம் |
| தாளின் தன்மை | : | 11.2 கி.கி. |
| நூலின் அளவு | : | கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | : | 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | : | 280 |
| நூலின் விலை | : | ரூ. 54.00 |
| அட்டைப்பட ஓவியம் | : | ஓவியர் ராமு |
| லேசர் வடிவமைப்பு | : | ஆதவ் கிராபிக், சென்னை - 14. ☎ : 823 5022 |
| அச்சிட்டோர் | : | ஜி.பி. பிரிண்ட்ஸ் 159/1, வி.எம். தெரு, ராயப்பேட்டை சென்னை-600 014. ✆ 8265691 |
| நூல் கட்டுமானம் | : | தையல் |
| வெளியிட்டோர் | : | மணிமேகலைப் பிரசுரம், சென்னை - 17. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| *தலைப்பு* | | *பக்கம்* |
|---|---|---|
| 1. | மன்னரின் அந்தரங்கம் பகிரங்கமானது பப்பரட்சி சகாப்தம் ஆரம்பமானது | 5 |
| 2. | சீசருக்கு ஒரு மார்க் அந்தனி டயானாவுக்கு ஒரு டோனி பிளேர் | 10 |
| 3. | சார்டீனியாவில் ஏற்றிய காதல் தீபம் பாரீஸ் சுரங்கச் சாலையில் அணைந்தது | 17 |
| 4. | காத்திருப்பேன் உனக்காக என்றார் இளவரசர்! அவளும் திரும்பி வந்தாள்- வந்த கோலமோ ? | 30 |
| 5. | டிவி. அலைவரிசைகளின் நேயர் செல்வாக்குப் போட்டி பிரிட்டனில் ஏற்படுத்திய டயானா ஹிஸ்டீரியா | 42 |
| 6. | கார்ச்சாரதிமீது பழிவிழுந்தது. குடிபோதையில் 120 மைல் வேக ஓட்டம் | 51 |
| 7. | பலிகடாவைத் தேடிய பிரிட்டிஷ், பத்திரிகைகள் 'டயானா புராணம்' பாடின - ஏன்? | 61 |
| 8. | உள்ளே 'டயானா வசைமாலை' வெளியே 'டயானா ஸ்தோத்திரமாலை' | 68 |
| 9. | பாராண்ட மன்னாதி மன்னருக்கே பதிக்காத கொடியை பத்திரிகைத் தளுக்குக் காரிக்காகப் பதிக்கச் சொன்னார்கள் | 79 |
| 10. | அரச குடும்பத்தை பலி பீடத்தில் நிறுத்திய பத்திரிகைகள் | 88 |
| 11 | எலிஸபெத் மகாராணி வந்தார் கண்டார் வென்றார் | 99 |
| 12. | வன தெய்வங்களின் திருமணமோ என்று வியந்தார்கள் | 121 |
| 13. | வின்ட்ஸர்கள் ஏறிய அரியாசனத்தின் மீது ஒரு (டயானா) ஸ்பென்ஸர் வைத்த குறி | 138 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. பொய், சூழ்ச்சி, ஏமாற்றம், விரக்தி, முரட்டுத்தனம்-
சிறுமி டயானா வெளிப்படுத்திய
குணாதிசயங்கள் ........................................ 150

15. குட்டிபோடும் குதிரைகளைத் தேர்ந்தெடுத்தார் மகாராணி;
ஒட்டிவரும் உறவின் பூர்வீகம் பற்றி
யோசிக்க மறந்தார். ........................................ 168

16. ஒரேயொரு நிமிடத்தில் இளவரசியான அனாமதேயம் ........................................ 191

17. ட்யானாவும் பிரிட்டிஷ் பத்திரிகைகளும் ........................................ 214

18. மாட்சிமை தங்கிய வேல்ஸ் இளவரசிக்கு
வரிசையாக வந்த கள்ளக் காதலர்கள் ........................................ 232

19. 240 கோடி டாலர் சொத்துக்களை ஆண்ட
அல்பாயத்துகளுக்கு பிரிட்டன் பாஸ்போர்ட்
வழங்க மறுத்தது எதற்காக? ........................................ 252

20. டயானா மரணம் விபத்தா? திட்டமிட்ட சதியா?
வஞ்சிக் கொடி வஞ்சித்தாரா?
வஞ்சிக்கப்பட்டாரா ........................................ 264

21. முன்பக்க அட்டைப்படம் சொல்லும் கதை ........................................ 279


## இந்நூலாசிரியரின் இதர நூல்கள்!

1. **Fire Walking - The Burning Facts**
   (ஆங்கில நூல்)
2. **மண்ணில் இருந்து விண்ணுக்கு**
   (இலங்கை அரசின் முதற்பரிசு பெற்றது)
3. **புதுயுகம் கண்டேன்**
   (சோவியத் பயண அனுபவங்கள்)
4. **விண்வெளியில் வீரகாவியங்கள்**
   (தமிழக அரசின் முதற்பரிசு பெற்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னரின் அந்தரங்கம் பகிரங்கமானது
# பப்பரட்சி சகாப்தம் ஆரம்பமானது

ஆகஸ்ட் 14, 1958...

ரோம் நகர், இத்தாலி...

நள்ளிரவை நெருங்கும் வேளை...

வயா வெனீட்டோ என்ற பகுதியில் உள்ள ஒரு உணவகம். ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்து நாட்டு அரியணையில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட மன்னர் பாரூக் ஒரு மேசையில் இரு அழகிய பெண் சிட்டுக்களுடன் ஜாலியாக அமர்ந்திருக்கிறார்.

அப்போது...

உணவகத்தினுள் நுழைகிறார் ஒரு இத்தாலியத் தினசரிப் பத்திரிகையின் படப்பிடிப்பாளர். மன்னர் பாரூக்கை அவர் அடையாளம் கண்டு கொள்கிறார். சேவைக்குத் தயாராக எந்நேரமும் காத்திருக்கும் அவரது காமரா உயர்கிறது. மின்னல் வெட்டியதுபோல் காமராவின் பிளாஷ் ஒளியை உமிழ்கிறது. மன்னரும் அவரது இரு மின்மினிகளும் காமராவில் சிறை வைக்கப்படுகிறார்கள்.

மறுநாள் பத்திரிகையில் என்னென்ன வரப்போகிறதோ, ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்! என்னென்ன அந்தரங்கம் பகிரங்கம் ஆகப் போகிறதோ, மன்னர் பாரூக்கிற்குத்தான் வெளிச்சம்!

குண்டுப் பூசணிக்காய்க்குப் போட்டியான உடலமைப்பு உடைய மன்னர், முஷ்டியை ஓங்கியவாறு படப்பிடிப்பாளர் மீது எகிறிப் பாய்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது -

உணவகத்தினுள் நுழைந்த இன்னொரு பத்திரிகைப் படப்பிடிப்பாளர் 'இது நல்ல ஆக்ஷன் ஷாட்' என்று நினைத்து, அந்த மோதலை தனது காமராவில் கணப்பொழுதில் பதிவு செய்துகொண்டார்.

இந்தத் திகில் சம்பவம் நடந்து 39 ஆண்டுகள் ஆகிவிட்டன. 'பப்பரட்சி சகாப்தம்' அன்றுதான் உலகில் உதயமானது என்று நம்பப்படுகிறது.

அந்தப் படப்பிடிப்பாளரின் பெயர் டாசியோ செச்சியரோலி. 'தாக்குதல் படப்பிடிப்பாளர்' என்று இத்தாலி யில் பெயர் பெற்றவர். புகழ் பெற்றவர்களை, நாடறிந்தவர்களை விரட்டியடித்து, அவர்களது அபகீர்த்தி படைத்த அந்தரங் கங்களை பகிரங்கமாக்குவதில் 'கில்லாடி' என்ற பெயர் பெற்றவர். அவர் பவனி வரும் வாகனம் ஒரு வெஸ்பா ஸ்கூட்டர்.

1960-

இந்தச் சம்பவம் நடைபெற்று இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் -

உலகப் புகழ் பெற்ற இத்தாலியர் பெட்ரிக்கோ பெலினி 'லா டொல்ஸ் வீட்டா' (இனிய வாழ்வு) என்ற பெயரில் ஒரு சினிமாப் படம் எடுக்கிறார். தாக்குதல் படப்பிடிப்பாளர் டாசியோ செச்சியரோலியின் சாகஸங்களால் கவரப்பட்ட பெலினி, அவரை மனதில் வைத்து, அவரது படப்பிடிப்பு சாகஸங்களை அடியொற்றி, அப்படியே ஒரு காரக்டரை அவரது படத்தில் அறிமுகப்படுத்துகிறார்.

அந்தக் காரக்டருக்கு வலியச் சண்டைக்குப் போகும் தனது பால்ய நண்பரான பப்பரட்சியூவின் பெயரை வைக்கிறார்.

அந்தப் படத்தின் கதாநாயகி - உலகப் புகழ் பெற்ற நடிகை அனிதா எக்பர்க். படத்தில் அனிதாவை விரட்டி விரட்டிப் படமெடுத்து உபத்திரவம் தருகிறார் பப்பரட்சியூ.

ஒருமையில் பப்பரட்சியூ, பன்மையில் பப்பரட்சி - இத்தாலிய மொழி இலக்கணத்தின் படி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பப்பரட்சியூ, பப்பரட்சி என்ற சொற்கள் அன்றுதான் உலக அகராதிகளில் இடம் பெற்றன.

பத்திரிகைகளால் நிரந்தர உத்தியோகம் தரப்பட்டு, மாதச் சம்பளம் தரப்படும் படப்பிடிப்பாளர்களை இந்தப் பதம் குறிப்பிடுவதில்லை. சுயேச்சையாக செயற்படும் படப்பிடிப்பாளர்களைத்தான் இது குறிப்பிடுகிறது.

எனவே –

பப்பரட்சி என்ற மகுடத்தைத் தமது தலையில் அணிந்து கொள்பவருக்கு பின்வரும் தகைமைகள் இருக்கவேண்டும்:

1. அவர்கள் சுயேச்சையான படப்பிடிப்பாளர்களாக இருக்கவேண்டும். எந்தப் பத்திரிகையாலும் நேரடியாக மாதா மாதம் சம்பளம் தரப்பட்டு, அந்தப் பத்திரிகையின் ஊழியத்தில் இருக்கக்கூடாது.

2. அவர்கள் புகழ்பெற்ற அல்லது நாடறிந்த அல்லது உலகறிந்த பிரமுகர்களை விரட்டியடித்து, அவர்களது அந்தரங்கங்களை பகிரங்கப்படுத்தும் நோக்கத்துடன் படம் பிடிப்பவர்களாக இருக்கவேண்டும்.

3. தாம் பிடித்த படங்களுக்கு எந்தப் பத்திரிகை ஆகக்கூடிய விலை தருகிறதோ, அந்தப் பத்திரிகைக்கு விற்பவர்களாக இருக்கவேண்டும். (தேவையேற்படின், தத்தமது வியாபார ஆதாயங்களையும், படங்களின் பரபரப்புத் தன்மையையும் பொறுத்து ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிகைகளுக்கும் விற்கலாம். உதாரணமாக, ஒரே படத்தை திங்கட்கிழமையன்று பிரசுரிப்பதற்கு ஒரு பத்திரிகையிடம் 2,00,000 டாலர்கள் வாங்கலாம். அதே படத்தை செவ்வாய்க் கிழமையன்று, ஒரு நாள் கழித்துப் பிரசுரிப்பதற்கு, இன்னொரு பத்திரிகையிடம் 1,00,000 டாலர்களை வாங்கலாம்).

எனவே -

இவ்வளவு பெறுமதிப்புள்ள படங்களை எடுப்பதற்கு பப்பரட்சி எதையும் செய்வதற்குத் தயங்கமாட்டார்கள். தாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிவைத்த ஆளை விரட்டிப் பிடிப்பதற்கு அதிவேக மோட்டார் சைக்கிள்கள், கார்கள், மோட்டார் படகுகள், மேலும் - ஹெலிகாப்டர்களைக் கூட வாடகைக்கு அமர்த்தத் தயங்க மாட்டார்கள்.

இதுதான் நவீன உலகம்; நவீன செய்தி யுகம்; நவீன பப்பரட்சி சகாப்தம்; ஒரு தனி மனிதனது பிறப்புரிமையான அந்தரங்கத்தை மறுக்கும் நவீன அடாவடிச் சமூக நீதி!

இதன் சரி - பிழைகளை, வாதப் பிரதிவாதங்களை இன்று மேற்குலகம் மிகவும் காரசாரமாக விவாதித்துக் கொண்டிருக்கிறது.

இந்த வேளையில் தான் -

செப்டெம்பர் 9, 1997ல்-

டயானா, வேல்ஸ் இளவரசியின் ஈமச் சடங்குகள் லண்டனில் நிறைவேறி மூன்றாம் நாளன்று -

அமெரிக்காவில், நியூ யார்க்கில் 'நாம் பப்பரட்சி' என்ற பெயரில் ஒரு புகைப்படக் கண்காட்சி 57ஆவது தெருவில் உள்ள புகழ்பெற்ற ரொபட் மில்லர் கலைக் கூடத்தில் ஆரம்பமானது.

இங்கே பாரூக் மன்னரின் அந்தரங்கம் பகிரங்கமான படங்கள் முதல் டயானாவின் அந்தரங்கம் பகிரங்கமான படங்கள் வரை மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

பாரூக்குக்கும் டயானாவுக்கும் இடையே 'வேட்டையாடப்பட்ட' பிரமுகர்கள் பட்டியலில் அனிதா எக்பர்க், எலிஸபெத் டெய்லர் (ஆடைகளை மாற்றுவதை விட அதிகமான தடவை கணவர்களை மாற்றிய 'கிளியோபாட்ரா' புகழ் நடிகை), 'ஜேம்ஸ் பாண்ட் புகழ் நடிகர்' சான் கான்னரி போன்ற பலர் அடங்குவர்.

இந்தக் கண்காட்சியில் இடம்பெற்றுள்ள கடைசிப் பப்பரட்சிப் படங்கள், பாரிஸ் நகரில் எடுக்கப்பட்ட டயானா படங்கள்.

என்ன ஆச்சரியம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைல் நதிக்கும் பப்பரட்சிக்கும் இடையே உள்ள அபூர்வ தொடர்புதான் என்னே!

இந்தக் கண்காட்சியில் உள்ள 'பப்பரட்சி யுகத்தின்' முதலாவது படம் - நைல் நதியைத் தழுவிய எகிப்தின் முன்னாள் மன்னர் பாரூக்கின் சிருங்கார ரசத்தைச் சித்தரிக்கும் படம்!

இந்தக் கண்காட்சியில் உள்ள 'பப்பரட்சி யுகத்தின்' மிகக் கடைசியாகக் கிடைத்த படம் நைல் நதியைத் தழுவிய எகிப்தின் கோடீஸ்வரர் முகம்மது அல்பாயத்தின் மகன் டோடியைத் தழுவிய வேல்ஸ் இளவரசி டயானாவின் படம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீசருக்கு ஒரு மார்க் அந்தனி!
# டயானாவுக்கு ஒரு டோனி பிளேர்!

ஆகஸ்ட் 31, 1997 -

லண்டன் நகர், ஐக்கிய ராஜ்யம் -

நள்ளிரவு தாண்டிய வேளை -

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை தானே என்ற நிம்மதியில் மேற்கு லண்டன் நெடிய தூக்கத்தில் ஆழ்ந்து இருக்கிறது.

பிபிஸி தொலைக்காட்சி நிலையத்திலிருந்து ஐந்து நிமிடக் கார் சவாரித் தொலைவில் உள்ள அந்த வீட்டில் நிசப்தத்தை ஊடறுத்துக் கொண்டு தொலைபேசி மணி அடிக்கிறது.

பதினைந்து மணி நேரம் தொடர்ச்சியாகத் தொலைக் காட்சிப் படப்பிடிப்பில் ஈடுபட்டுவிட்டு, ஆறாத அலுப்புடன் இரவு பத்தரை மணிக்கு கட்டிலில் சாய்ந்த செய்தி வாசிப்பாளர் மாட்டின் லூயிஸ் தொலைபேசியை எடுக்கிறார்.

அவருக்கு 52 வயது. பிபிஸி முதலாவது அலைவரிசையின் பிரதம செய்தி வாசிப்பாளர் அவர்தான். பிபிஸியின் செய்தி ஒளி பரப்பு, அறையிலிருந்து அந்தத் தொலைபேசி அழைப்பு வந்தது.

“ஒளிபரப்பை இடைநிறுத்தி அவசரச் செய்தி ஒன்றை அறிவிக்க வேண்டும். உடனே வருகிறீர்களா?”

நள்ளிரவில் அப்படி என்ன அவசரச் செய்தி?

கார் விபத்தில் டயானா, வேல்ஸ் இளவரசி காயமடைந் தார், அவருடன் கூடச் சென்ற நண்பர் டோடி அல்பாயத் ஸ்தலத் திலேயே மரணமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டயானாவை வெல்ல முடியாது என்று நினைத்தேன். வேல்ஸ் இளவரசிக்குக் காயம் என்றவுடன் அவருக்கு எல்லாம் சரியாகிவிடும் என்று நினைத்தேன்," என்று மூன்று நாட்களுக்குப் பின் ஒரு பத்திரிகைக்குப் பேட்டி அளித்திருந்தார் மாட்டின் லூயிஸ். (நன்றி டெய்லி மிர்ரர்," 3. 9. 1997)

தொலைக்காட்சி நிலையத்துக்கு விரைந்த மாட்டின் லூயிஸ் அவசரச் செய்தி ஒன்றை உலகிற்கு ஒளிபரப்பினார்.

"டயானாவுக்கு தலையில் அடிபட்டு அதிர்ச்சி மயக்கம், கையில் எலும்பு முறிவு, கால்களில் பலத்த தசைக் காயங்கள்," என்று அறிவித்தார். விபத்து பாரிஸில் நடைபெற்றது.

அந்தக் கட்டத்தில் டயானாவுக்கு உயிராபத்து ஏதும் இல்லை என்றே தோன்றியது.

மாட்டின் லூயிஸை வீட்டிற்குப்போய் தூக்கத்தைத் தொடருமாறு செய்தித் துறை மேலதிகாரி பணித்தார். அடுத்த சில நிமிடங்களுக்குள் மாட்டின் லூயிஸ் தனது இல்லத்தில் நித்திரா தேவியின் அரவணைப்பில் ஆழ்ந்தார்.

45 நிமிடங்கள் தலைதெறிக்க ஓடின.

நேரம் 3 மணி 50 நிமிடம்.

மீண்டும் தொலைபேசி அலறியது. "உடனே திரும்பி வாருங்கள். ஒரு வேளை அவர் இறந்திருக்கக் கூடும் என்று பலமான சமிக்கைஞகள் எமக்கு வந்து கொண்டிருக்கின்றன."

மார்ட்டின் லூயிஸ் தெரிவிக்கிறார்:

"நிலமை கவலைக்கிடமாக மாறியதை நான் உணர்ந்தேன். என்னுடைய தொண்டை அடைத்துக் கொண்டது. எனது இருதயம் எனது தொண்டைக்குள் இடம் மாறியது போன்ற உணர்வு. டயானா கொல்லப்படுவதை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

"இந்த ஆரவார்ரத்தில் எனது மனைவியும் இரு மகள்களும் தூக்கம் கலைந்து எழுந்து என்னருகே நின்றார்கள். அவர்களது கண்களில் கண்ணீர்மல்கக் கண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு மணி நேரத்திற்கு முன்பு நான் அணிந்திருந்த 'சூட்-டை' யிற்குப் பதிலாக, பகட்டற்ற, அவை அடக்கமான ஒரு சூட்டைத் தேர்ந்தெடுத்து அணிந்தேன். கழுத்தில் ஒரு கறுப்பு நிற டையைக் கட்டிக் கொண்டு புறப்பட்டேன். பத்து நிமிடங்களில் ஸ்டுடியோவை அடைந்தேன்.

"அங்கே எனது சக ஊழியர்கள் அனைவரும் முகங்களைத் தொங்கப்போட்டுக் கொண்டிருந்தார்கள்.

"இத்தகைய சூழ்நிலைகளில் எப்படி ஒளிபரப்புவது என்று நாம் பயிற்சி பெற்றிருக்கிறோம். பிரபல்யம் வாய்ந்தவர்களின் 'முதலாம் பிரிவு மரணங்கள்' என்ற பட்டியல் எம்மிடம் ஏற்கெனவே இருந்தது. இந்தப் பட்டியலில் ராஜகுடும்ப உறுப்பினர்களின் பெயர்களும் இருந்தன. இளவரசி டயானாவின் பெயரும் இருந்தது.

"ஏற்கெனவே ஒளிபரப்பு ஒத்திகை பார்த்திருந்ததால் எல்லாம் இயல்பாக வரும் என்று நினைக்கவேண்டாம். என்னென்ன செய்யவேண்டும் என்ற வடிவமைப்பு தயாராக இருந்தாலும், நிஜமான சம்பவம் எனறு வரும் போது மூச்சு நின்றுவிடும் போலிருக்கும்.

"ஒளிபரப்பு ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஸ்டுடியோ மானேஜர்களில் ஒருவர் 'ஒத்திகை விளக்கு' போடப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

"இது ஒத்திகையல்ல, நிஜம்," என்று யாரோ ஒருவர் அவருக்கு இரகசியமாகக் கூறினார்.

"உண்மையில் என்ன நடக்கிறது என்று ஒருவருக்கும் பூரணமாகப் புரியவில்லை. எனது முப்பது வருட ஒளிபரப்புத் துறை அனுபவத்தில் இத்தகைய பெரிய அளவிலான சவால் இதுவரை ஏற்பட்டதில்லை.

"ஒரு செய்தித் துறையாளர் என்ற அடிப்படையில் முதலில் எமது இதயத்தை இரும்பாக்கிக் கொள்ள முயற்சிக் கிறோம். எமது உணர்ச்சிகளை வெளியே காட்டக்கூடாது. எமக்கு ஆற்றுவதற்கு ஒரு பணி உள்ளது. அவ்வாறு செயல்படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு கஷ்டமானது என்பதை உணர்ந்தேன். ஒரு ஒளிபரப்பாளர் என்ற நிலையில் இதைப்போல் நான் ஒரு நாளும் உணர்ச்சிவசப்பட்டது கிடையாது.

"நினைத்துப்பார்க்க முடியாதது என்று நாம் நினைத்தது நடந்து முடிந்துவிட்டது என்று தேசத்திற்கு எடுத்துச் சொல்வதே எமது பணியாக இருந்தது.

"பிரமிப்பூட்டும் அளவிற்கு பிபிஸி ஒளிபரப்புக் குழுவின் பங்களிப்பு அமைந்திருந்தபோதிலும் எதை ஒளிபரப்புவது, எப்படி ஒளிபரப்புவது என்பது பற்றி முழுக்கத் தயாரற்ற நிலையில் நான் இருந்தேன். உலகெங்குமிருந்து 39 நிருபர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"ஒரு பேட்டியை ஒளிபரப்பிக்கொண்டிருந்தபோது அடுத்த தாக என்ன செய்வ்து என்று தெரியாத நிலையில் இருந்தேன்.

''சனிக்கிழமை இரவின் இந்த ஆரம்பத்திலிருந்து தொடர்ச்சியாக ஆறுமணி நேரம் ஒளிபரப்பினேன். நிமிடத்திற்கு நிமிடம், மணிக்கு மணி, நிகழ்ச்சியின் வேகமும் விறுவிறுப்பும் அதிகரித்துக் கொண்டே போனது.

''ஆறு மணி நேர ஒளிப்பரப்பிற்குப் பின்னர் நான் எழுந்தபோதுதான் அந்தக் களைப்பு எவ்வளவு தீவிரமாக என்னைத் தாக்கியது என்று உணர்ந்தேன். முழு உடலும் மரத்து, விண் விண்ணென்று வலித்துக் கொண்டிருந்தது.

''அந்த ஒளிபரப்பை நினைத்துப் பார்க்கும்போது இப்போதும் உணர்ச்சி வசப்படுகிறேன்.

"மூன்று பேரைப் பேட்டி கண்டு கொண்டிருந்தேன். அப்போதுதான் அந்தச் செய்தி வந்தது. வார இறுதியில் தனது தேர்தல் தொகுதிக்குச் சென்றிருந்த பிரதமர் டோனி பிளேர் அங்கிருந்து தொலைக்காட்சியில் பேசத் தயாராக இருக்கிறார் என்று அவரது தொகுதிக்குப் பறந்து சென்ற பிபிஸி காமரா குழுவிடமிருந்து சமிக்ஞைகள் வருகின்றன. நான் நடத்திக் கொண்டிருந்த பேட்டியை இடைநிறுத்திவிட்டு பிரதமரின் தொகுதிக்குச் செல்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிரதமர் காமராவுக்கு முன்னால் பேசினார். அவர் பேசி முடிந்ததும், ஸ்டூடியோவிலிருந்து அவரின் பேச்சை மீள எடுத்துக் கூறி அதன் சாராம்சத்தை விமரினம் செய்வது எனது பணியாக இருந்தது.

"சில விநாடிகள் கழித்துத்தான் என்னால் வாய் திறக்க முடிந்தது. ஒரு கணம் எனது பணியைக் கோட்டை விட்டு விட்டேனோ என்று பயந்தேன். என்னை நானே ஊக்குவித்துக் கொண்டு ஒருபடியாக ஆரம்பித்தேன். அவரது வார்த்தைகளில் பெரும் சக்தி இருந்தது, உணர்ச்சி கொப்பளித்தது.

"அந்த நேரத்தில் எனது கண்கள் குளமாகியிருந்தன என்று பிற்பாடு ஒருவர் கூறினார். ஆனால் நான் அழவில்லை."

ஞாயிறு காலை ஆராதனைகளுக்காக தமது குடும்பத்துடன் தேவாலயம் சென்ற டோனி பிளேர் தேவாலய முன்றிலில் நின்று பேசினார். கையிலே குறிப்பு ஏதும் இல்லாமல் பேசினார். அவரது இரங்கலுரை அவரது இதயத்தின் அடித்தளத் திலிருந்து வந்தது:

> "இந்த நாட்டிலுள்ள மற்ற ஒவ்வொருவரும் உள்ள மனநிலையில் நான் இருக்கிறேன் - முழுக்க முழுக்க இடிந்து போயிருக்கிறேன். எங்களது சிந்தனைகளும் பிரார்த்தனைகளும் இளவரசி டயானாவின் குடும்பத்தை ஒட்டி - குறிப்பாக அவரது இரு மகன்களையும் ஒட்டி அமைந்துள்ளன. எங்கள் இதயங்களில் அவர்களது நினைவுகள் நிறைந்துள்ளன. எங்கள் தேசம் இன்று அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளது, துக்கம் கொண்டாடுகிறது, துயரத்தில் துடிக்கிறது. இது எங்களுக்கு ஆழ்ந்த வேதனையைத் தருகிறது.
>
> அவர் ஒரு அற்புதமான, மனமுவந்த மனிதப் பிறவியாக விளங்கினார் - சோக நிகழ்வுகள் அவரது சொந்த வாழ்க்கையை அடிக்கடி வருடி நின்றது கவலைக்குரியது. எனினும் அவர் பிரிட்டனிலும் உலகெங்கணும் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ பேர்களின் வாழ்வுகளை வருடி ஆறுதலும் ஆனந்தமும் ஏற்படுத்தி வந்தார். அவரை நாம் எத்தனை வித்தியாசமான வழிகளில். எத்தனை தடவைகள் நினைவுகூரப் போகிறோம்? நோயாளிகளுடன் வைத்தா? உயிர் ஊசலாடிக்கொண்டிருப்பவர்களுடன் வைத்தா? குழந்தைகளுடன் வைத்தா? இல்லாக்குறை உடையவர்களுடன் வைத்தா? வார்த்தைகளை விடப் பன்மடங்கு அதிகம் பேசிய அவருடைய கனிவான பார்வை, சைகை மூலம் அவர் தனது இரக்க உணர்ச்சியினதும் மனிதநேயத்தினதும் ஆழத்தை எமக்கெல்லாம் வெளிப்படுத்தி நின்றார்.

காலத்திற்குக் காலம் அவருக்கு எவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டன என்பதை நாம் நிச்சயமாக ஊகித்துமட்டுமே அறியமுடியும். ஆனால் மக்கள் - பிரிட்டனில் மட்டுமல்ல, அவர்கள் எங்கெங்கு இருந்தாலும் - டயானா மீது விசுவாசம் வைத்திருந்தார்கள், அவர்கள் அவரை விரும்பினார்கள், அவர்மீது பாசம் கொண்டிருந்தார்கள், அவரை மக்களில் ஒருவராகக் கணித்தார்கள். அவர் **மக்களின் இளவரசியாக** விளங்கினார். அப்படித்தான் அவர் விளங்குவார், அப்படித்தான் எமது இதயங்களில் என்றென்றும் வீற்றிருப்பார்.

மகிழ்ச்சி நிறைந்தவராக, உயிர்த்துடிப்பு நிறைந்தவராக அவர் காணப்பட்டார். அவருடன் பழகுவது மகிழ்ச்சி தரும் அனுபவம். அவர் வித்தியாசமானவர். ஆனால் மனமுவந்த குணநலமும் உளஇயல்பும் உடையவர். தனிப்பட்ட முறையில் மிக அளப்பரிய பாசத்துடன் அவரை நான் நினைவில் வைத்திருப்பேன். முழு நாடும் மிக ஆழ்ந்த அன்புடனும் பாசத்துடனும் அவரை நினைவில் வைத்திருக்கும் என்று நான் நினைக்கிறேன். அதனால்தான் எங்களது துயரம் இன்று இவ்வளவு ஆழமாக உள்ளது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலியஸ் சீசருக்கு இரங்கலுரை சொல்ல ஒரு மார்க் அந்தனி என்றால், டயானாவுக்கு இரங்கலுரை சொல்ல ஒரு டோனி பிளேர்!

ஆனால் - அந்தனியின் உரை ஏற்படுத்திய தாக்கத்தைவிட பிளேரின் உரை பன்மடங்கு அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது என்று அந்த நேரத்தில் எவரும் ஊகித்திருக்க முடியாது.

மார்க் அந்தனியின் உரை உரோமாபுரியின் கலகக் கும்பலுக்கு வெறியை ஏற்றியது. டோனி பிளேரின் உரை பிரிட்டனின் கலங்கும் மக்களின் சோகத்துக்கு சுருதி கூட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்டீனியாவில் ஏற்றிய காதல் தீபம் பாரிஸ் சுரங்கச் சாலையில் அணைந்தது!

**ச**னிக்கிழமை பின்னிரவிலிருந்து டயானாவின் மரணம் பற்றிய செய்திகள் விசேஷ தொலைக்காட்சி ஒளிபரப்புகளில் வரத் தொடங்கிவிட்டன. ஆனால் பெரும்பாலான பிரிட்டிஷ் மக்கள் அந்நேரம் தூக்கத்தில் ஆழ்ந்து இருந்தார்கள். ஞாயிறு காலையில் வழக்கம்போல் காலந்தாழ்த்தித் துயிலெழுந்து தொலைக் காட்சியைப் பார்வையிட்டபோதுதான் அந்த அதிர்ச்சி தரும் செய்தி அவர்களை எட்டியது.

விபத்து சம்பவித்த கொடூரமான சூழ்நிலைபற்றியும், அதற்கான காரணங்களைப் பற்றியும் வந்த முதற் செய்திகள் ஏற்படுத்திய அதிர்ச்சியும் ஆத்திரமும் அங்கலாய்ப்பும் அழுகையும் சூடுபிடிக்கும்போதுதான் டோனி பிளேரின் அந்தப் பேச்சு தொலைக்காட்சியிலும் வானொலியிலும் வந்தது.

ஒரு கானகம் தீப்பற்றி எரியும்போது புயல்வேகத்தில் காற்றடித்தால் எப்படியிருக்கும்? அதே விளைவுதான் ஏற்பட்டது. பொதுமக்களின் உணர்ச்சிகள் கரைபுரண்டோடத் தொடங்கின.

உணர்ச்சிகளை அடக்கி வாசிக்கவேண்டும் என்பது தான் பிரிட்டிஷ் மரபு. அதிலும் குறிப்பாக தமது வீட்டுச் சுவர்களுக்கு வெளியே தமது உணர்ச்சிகளைக் காட்டிக் கொள்ளக் கூடாது. மேல் உதட்டை இறுக்கமாக வைத்துக் கொள்ளவேண்டும் (TO KEEP A STIFF UPPER LIP) என்பது காலம் காலமாக வழங்கி வரும் பிரிட்டிஷ் சம்பிரதாயம். அது வீரத்தின் அறிகுறி. உணர்ச்சி களுக்கு அணை கட்டுவது மனோபலத்தின் வெளிப்பாடு. மரணச் சடங்குககளில் கூட ஒருவரும் அழமாட்டார்கள். உணர்சிகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பல பறவைகளோடு சிறகடித்துப் பறந்த கோடீஸ்வரர் டோடி அல்பாயத்



டயானா-டோடி காதல் பயணத்திற்கு களம் வகுத்துக் கொடுத்த அல்பாயத்துக்குச் சொந்தமான உல்லாசக்கப்பல். நீளம் 190 அடி. பெறுமதி 3.2 கோடி டாலர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணைகட்டத் தெரியாதவர்களை, முடியாதவர்களை பிரிட்டிஷ் மக்கள் மதிக்க மாட்டார்கள் என்ற நிலை.

அந்த வேளையில்தான் பிரிட்டிஷ் மக்கள் தமது மாபெரும் உணர்ச்சி வெள்ளத்தைத் தடுக்கக்கட்டியிருந்த அணைக்கட்டில் ஒரு பெரிய துளையை ஏற்படுத்தினார் டோனி பிளேர். அணைத் துளை வழியே உணர்ச்சி வெள்ளம் பீறிட்டது. அடுத்த ஏழு நாட்களில் அந்த அணையை முற்றுமுழுதாகத் தகர்த்து எறிந்தனர். பிரிட்டிஷ் பத்திரிகையாளர்களும் தொலைக்காட்சி யாளர்களும். அடக்கி வாசிக்கவேண்டிய உணர்ச்சிகள் அமர்க்கள மாக வாசிக்கப்படலாயின! என்னென்ன ஆதாயங்களைக் குறிவைத்து பத்திரிகையாளர்களும் தொலைக்காட்சியாளர்களும் இதைச் செய்தனர் என்பதைப் பின்னால் விரிவாக ஆராய்வோம்.

பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரீஸ் நகரத்தில் வேல்ஸ் இளவரசி அர்த்த ராத்திரியில் விபத்துக்குள்ளாகி அகால மரணம் அடைந்தது எப்படி?

எகிப்து நாட்டில் பிறந்து, சர்வதேச வர்த்தகப் பிரமுகராக மலர்ந்து, லண்டனில் ஹரட்ஸ் (HARRODS) என்ற மாபெரும் விற்பனை ஸ்தாபனத்தையும், பாரிஸில் ரிட்ஸ் (RITZ)என்ற நட்சத்திர ஓட்டலையும் நடத்தி வருபவர்தான் முகம்மது அல்பாயத். அவரது மகன்தான் டோடி அல்பாயத். வயது 42. விவாகரத்து ஆனவர். தந்தையின் பல கோடி டாலர்கள் சொத்துக்களுக்கு வாரிசு. 'பறவைகள் பலவிதம், ஒவ்வொன்றும் ஒருவிதம்' என்ற அடிப்படையில் சல்லாபம் செய்து, உல்லாச வாழ்க்கை வாழ்ந்து வந்தவர். 'பொறுப்பற்ற பயல்' என்று தந்தையால் செல்லமாகக் கண்டிக்கப்பட்டு வந்தவர்.

இளவரசர் சார்லஸுக்கும் இளவரசி டயானாவுக்கும் திருமண முறிவு ஏற்பட்டு 1996ல் விவாகரத்து சட்டரீதியாக நிறைவேறியது. கடந்த பல வருடங்களாக டயானா பல ஆண்களுடன் காதல் தொடர்பு வைத்திருந்தார். கடந்த பல மாதங்களாக அவர் காதல் சிறகடித்துப் பறந்தது டோடியுடன். டோடியுடன் ஜோடியாக கோடைகாலத்தில் மூன்று தடவைகள் விடுமுறைக்குச் சென்று வந்தார். காதல்ஜோடி மத்தியதரைக் கடலில் உல்லாசமாக விடுமுறையைக் கழிக்க டோடியின் அப்பா தனது உல்லாசக் கப்பலைத் தந்து உதவினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டோடி-டயானா. "ஆண்டவன் படைச்சான், எங்கிட்ட கொடுத்தான், அனுபவி ராஜான்னு அனுப்பி வைத்தான்" என்கிறாரோ டோடி?



ஆடை நெகிழ உல்லாசக் கப்பலில் துள்ளிக் குதிக்கும் டயானா "உல்லாசம், சல்லாபம், எல்லாமும் இங்கே தான்" என்கிறாரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச பப்பரட்சிகள் அதிவேகப் படகுகளில் கப்பலைப் பின்தொடர்ந்தனர். கப்பலின் தளத்தில் நீச்சலுடையில் காதல் ஜோடி ஆரத் தழுவி நின்ற காட்சிகளையும் முத்தமிட்டு மகிழ்ந்த காட்சிகளையும் நீண்டதூர லென்சுகள் பொருத்திய சக்தி வாய்ந்த காமராக்கள் மூலம் பப்பரட்சிகள் மிகத் தொலைவிலிருந்து படம் பிடித்தனர். பிரிட்டன் உட்பட மேற்கு நாட்டுப் பத்திரிகை களுக்கெல்லாம் இந்தப் படங்களை 100,000 முதல் 200,000 டாலர் விலைக்கு பப்பரட்சிகள் விற்றுவிட்டனர்.

பத்திரிகைகளும் பரபரப்பான முன்விளம்பரம் கொடுத்து, பக்கம் பக்கமாக இந்தப் படங்களைப் பிரசுரித்து, தமது விற்பனையை அதிகரித்துக் கொண்டன.


டோடியும் டயானாவும் 1997 இறுதிக்குள் திருமணம் செய்துகொள்ளப் போகிறார்கள் என்ற செய்தியும் பரவி வந்தது.

சார்டீனியா என்ற தீவின் கரையோரமாக உல்லாசக் கப்பல் நங்கூரமிட்டு நின்றபோது பப்பரட்சிகளின் உபத்திரவம் உச்சக்கட்டத்திற்குப் போய் விட்டது. படகுமூலம் கப்பலுக்கே வந்துவிட்டார்கள். நீச்சல் உடையிலிருந்த ஜோடியை படத்திற்கு 'போஸ்' தரும்படி கேட்டனர். டயானாவுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்து விட்டது. 'போஸ்' தரமுடியாதென்று சொல்லி அவர்களுடன் வாக்குவாதம் செய்ய ஆரம்பித்து விட்டார். பப்பரட்சிகள் டயானாவை கெட்ட வார்த்தைகளால் திட்டிவிட்டுப் போய்விட்டார்களாம்.

இதனையடுத்து, டயானா - டோடி ஜோடி கடல் குதூகலத்தை உடனடியாக முடித்துக் கொண்டு, பாரிஸில் தமது விடுமுறையைத் தொடர முடிவெடுத்தனர். அல்பாயத்துக்குச் சொந்தமான பிரத்தியேக ஜெட் விமானத்தில் பாரிஸுக்குப் பறந்தனர். சனிக்கிழமை பிற்பகல் அவர்கள் பாரிஸில் வந்து இறங்குவதற்கு முன்னரே அவர்கள் வரவு பற்றி பாரிஸில் உள்ள பப்பரட்சிகளுக்கு செய்தி வந்துவிட்டது. இருபது பப்பரட்சிகள் விமான நிலையத்துக்கே வந்து விட்டார்கள்.

பாரிஸில் அவர்கள் சென்றவிடமெல்லாம் பப்பரட்சிகள் மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர்களில் அவர்களைத் துரத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உல்லாசக் கப்பலில் அப்பா முகமது அல்பாயத்
(இடப்புறம்) வருங்கால மருமகள் டயானாவுடனும் மகன் டோடியுடனும்.
"நாளை நமதே" என்கிறாரோ அப்பா?



இன்பப் பூஜையில் கரடி நுழைந்ததா? உல்லாசக்
கப்பலுக்குப் படகில் வந்த படப்பிடிப்பாளர்களோடு தர்க்கம்
செய்கிறார்கள் டயானா - டோடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இதனால் டயானா - டோடி பாரிஸ் குதூகலத்திற்கு போட்ட திட்டங்களை எல்லாம் உடனுக்குடன் மாற்றி அமைக்க வேண்டிவந்தது. டயானாவால் 'ஷாப்பிங்' கூட போக முடிய வில்லை. 'சென்டுகள்' வாங்கக் கடைகளுக்குக் காரில் சென்றார். பப்பரட்சிகளைக் கண்டவுடன் வாங்காமலேயே ரிட்ஸ் ஓட்டலுக்குத் திரும்பி ஓட்டி வந்தார்.

ஐம்பது பப்பரட்சிகள் ஓட்டலுக்கு வெளியே திரண்டு காத்திருக்க, டயானா - டோடி ஜோடி நள்ளிரவு வரை ஓட்டலுக் குள்ளேயே அடைந்து காத்திருக்க வேண்டியதாயிற்று. இரவு உணவையும் ஏற்கெனவே போட்ட திட்டத்திற்கு மாறாக ஓட்டலி லேயே சாப்பிடவேண்டியதாயிற்று.


நள்ளிரவு தாண்டிவிட்டது. பப்பரட்சிகள் போகக் காணோம். ஓட்டலின் முன்வாசலில் டயானா - டோடி ஓடித் திரிந்த காரும், காரோட்டியும் காத்திருக்க, ஓட்டலின் பின் வாயில் வழியாக டயானாவும் டோடியும் தப்ப முயன்றனர். ஓட்டலுக்குச் சொந்தமான ஒரு மேர்சிடீஸ் பென்ஸ் 280 S ரகக் காரில் பின் சீட்டில் டயானாவும் டோடியும் ஏறினர். ரிட்ஸ் ஓட்டலின உதவிப் பாதுகாப்பு அதிகாரி ஹென்றி பால் காரை ஓட்டினார். டயானாவுக்கு டோடி ஒழுங்கு செய்த பாதுகாப்பு அதிகாரி ட்ரெவர் ரீஸ் ஜோன்ஸ் முன் சீட்டில் அமர்ந்தார். கார் புறப்பட்டது. பறந்தது.

ஆனால் ஓட்டலின் பின்வாசலிலிருந்து சிறிது தொலை வில் கூட பல பப்பரட்சிகள் காவலிருந்தனர். மோட்டார் சைக்கிள்களில் காரைப் பின்தொடர்ந்தனர். அல்பாயத் தரப்பில் இருந்து முதல் முதலாகத் தெரிவிக்கப்பட்ட தகவல்களிலிருந்து, அமெரிக்க கௌபாய் (Cow Boy) படங்களில் அஞ்சல் (குதிரை) வண்டியை எவ்வாறு செவ்விந்தியர்கள் குதிரைகளில் விரட்டு வார்களோ, அது போலவே பென்ஸ் காரை பப்பரட்சிகள் மோட்டார் சைக்கிள்களில் விரட்டினார்களாம். பாரிஸின் இதயம் போன்ற பகுதியில் பெருவாரியான வாகனப் போக்கு வரத்து உள்ள பகுதியில் பெருவேகத்தில் இந்தக் கார்விரட்டு நடைபெற்றிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமெரிக்க கௌபாய் படங்களில் அஞ்சல் வண்டியை எவ்வாறு செவ்விந்தியர்கள் குதிரைகளில் ஏறி விரட்டுவார்களோ அது போலவே டயானா சென்ற பென்ஸ் காரை பப்பரட்சிகள் மோட்டார் சைக்கிள்களில் விரட்டினார்களாம் - அல்பாயத் தரப்பில் அடித்துச் சொல்லப்பட்ட கருத்து.



மூவரின் கதையை சோகத்தில் முடித்த பென்ஸ் வண்டியின் பரிதாபக் கோலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்டர் சைக்கிள்கள் காரின் இரு மருங்கிலும் முன்னேறின. ஒரு மோட்டார் சைக்கிள் காரை முந்திக்கொண்டு முன்னேறி, காரின் வேகத்தைத் தணிக்கும் நோக்கத்துடன் காருக்குக் குறுக்கே சென்றதாம். மோட்டர் சைக்கிள்களில் சென்ற பப்பரட்சிகள் தமது காமராக்களின் பிளாஷ் ஒளியை மின்னல்போல் தொடர்ச்சியாக இயங்கவைத்து, காரோட்டியின் கண்பார்வையை மழுங்க வைத்தனராம். இதன் விளைவாக காரோட்டியால் வாகனத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கார் சுரங்கப் பெருஞ்சாலையினுள்ளே நுழைந்து கொண்டிருந்தது. சாலையோரத் தளத்துடன் சில்லு மோதித் திசை திரும்பியது; தூண் ஒன்றுடன் மோதி மீண்டும் திசை திரும்பியது; சுரங்கப் பெருஞ்சாலையின் சுவரோடு மோதி பல தடவைகள் சாலையில் உருண்ட பின் ஒரு இரும்புக் குவியலான நிலைக்கு வந்தது.

பப்பரட்சிகள் தமது மோட்டார் வைக்கிள்களை நிறுத்திவிட்டு நொறுங்கிய காரைச் சூழ்ந்துநின்று படம்பிடிக்கத் தொடங்கினர். ஒருவர் காரின் ஒரு பின்கதவைத் திறந்து, அதனூடாகத் தெரிந்த டயானாவின் அடிபட்ட உடலைப் படமெடுத்தார். போலீஸார் செய்தி கேட்டு ஸ்தலத்திற்கு விரைந்தபோது படமெடுத்த பப்பரட்சிகள் அவர்களுக்கு வழிவிடவில்லை. தமது படமெடுக்கும் கடமைக்கு தடையாக இருந்த தற்காக போலீஸாரைத் திட்டியுள்ளனர்.

மேலும் பல போலீஸார் ஸ்தலத்திற்கு வந்து சேர்ந்தனர். பப்பரட்சிகள் கைது செய்யப்பட்டு போலீஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர். ஆம்புலன்ஸ் வண்டி வந்தது. டோடியும் ஹென்றி பாலும் ஸ்தலத்திலேயே உயிர் துறந்ததாக உறுதி செய்யப்பட்டது. டயானாவும் அவரது பாதுகாப்பு அதிகாரியும் பிரக்ஞை இழந்த நிலையில் அங்கிருந்து சிறு தொலைவில் உள்ள பாரிஸின் மிகப் பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர். காரினுடைய கதவை வெட்டி எடுத்து டயானாவின் உடலை வெளியே எடுக்க ஒரு மணி நேரம் பிடித்ததாம்.

டயானாவிற்கு பலமான உட்காயங்கள் இருந்தன. விபத்தின் விளைவாக, அவரது நுரையீரல்களிலிருந்து இருதயத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தத்தை எடுத்துச்செல்லும் PULMONARY VEIN அறுந்து நெஞ்சறையினுள் பலமான இரத்தப் பெருக்கு ஏற்பட்டிருந்தது. உடனடியாக டாக்டர்கள் அவர்மீது ஆபரேஷன் செய்து அந்த இரத்தக் குழாயிலிருந்து வந்த இரத்தக் கசிவை நிறுத்தினர். ஆனால் மிதமிஞ்சிய இரத்த வெளியேற்றம் காரணமாக அவரது இருதயம் இயங்கவில்லை. இருதயத்தை தமது கைகளால் விட்டு விட்டு அழுத்தி, அதனை மறுபடியும் இயங்க வைக்கும் முயற்சியில் டாக்டர்கள் ஈடுபட்டனர் (CARDIAC MASSAGE). இருமணி நேரமாக இந்தப் போராட்டம் நடைபெற்றது.

ஆனால் -

விதி வென்றுவிட்டது. டாக்டர்கள் தமது பகீரதப் பிரயத்தனங்களைக் கைவிட்டுவிட்டு, டயானாவின் உயிர் பிரிந்து விட்டது என்று அறிவித்தனர்.

இன்னொரு பக்கம் -

டயானாவின் பாதுகாப்பு அதிகாரியின் உயிரைப் பாதுகாக்க டாக்டர்கள் போராடிக் கொண்டிருந்தனர். அவருக்கும் படுகாயம். அடையாளம் காண முடியாதபடி அவரது முகம் சின்னாபின்னம் ஆகியிருந்தது. எனினும் அவரது இருதயம் தொடர்ந்து துடித்துக்கொண்டிருந்தது. தொடர்ந்து பிரக்ஞை இழந்த நிலையில் அவர் இருந்தாலும், விதி அவருக்கு வித்தியாச மான ஒரு தீர்ப்பு எழுதியிருந்ததை உணர முடிந்தது.

விபத்துக்கான காரணங்கள் பற்றியும், விபத்து சம்பவித்த விதம் பற்றியும் ஆகஸ்ட் 31ம் தேதி வந்த செய்திகளே இவை. ஆனால் இதையடுத்து, தினம் தினம் வந்த புதுப்புதுச் செய்திகள் விபத்தைப் பரபரப்பூட்டும் திருப்பங்கள் நிறைந்த ஒரு துப்பறியும் நவீனத்துக்குரிய கருப்பொருளாக மாற்றிவிட்டன.

நொறுங்கிப்போன காரிலிருந்து 2,15,000 டாலர்கள் மதிப்புள்ள ஒரு மோதிரம் கண்டெடுக்கப்பட்டது. அந்த மோதிரம், அன்றிரவு, அந்த இறுதி உணவு வேளையின்போது, டோடியினால் டயானாவுக்கு பரிசாக அளிக்கப்பட்டது என்று அல்பாயத் தரப்பிலிருந்து செய்திகள் வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கணையாழி சொன்ன, கண்ணீரும் செந்நீரும் கலந்த கதை என்ன? மத்தியதரைக் கடலின்மிசை நிலவினிலே, தேம்ஸ் நாட்டு இளவரசியுடன் காதல் பொதுமொழியில் பாட்டிசைத்து, உல்லாசக் கப்பலோட்டி விளையாடி வந்த நைல் நாட்டுக் கோடீஸ்வரன் கொடுத்த துஷ்யந்தன் பாணிக் கணையாழியா? கல்யாணத்திற்கு அச்சாரமா? அல்லது சல்லாபத்திற்குச் சன்மானமா?

ஞாயிறு பிற்பகல் லண்டன் திரும்பவிருந்த டயானா, லண்டன் வந்து இறங்கியதும் இறங்காததுமாக, 1997 இறுதிக்குள் தனக்கும் டோடிக்கும் திருமணம் நடைபெறும் என்று பத்திரிகை களுக்கு அறிவிக்க இருந்தார் என்று பாரிஸில் இருந்து வந்த முதற்செய்திகள் தெரிவித்தன.

(திங்கட் கிழமை காலைப் பத்திரிகைகளுக்கு முதற்பக்கத் தலைப்புச் செய்தி ஒன்றைத் தேர்ந்தெடுப்பது பொதுவாக மிகவும் கஷ்டமான ஒரு காரியம். உலகெங்கும் ஞாயிற்றுக்கிழமை ஒரு விடுமுறை நாளாக இருப்பதால் அந்நாளில் அடுத்தநாட் காலைப் பத்திரிகைகளுக்கு ஏற்ற தலைப்புச் செய்தி எளிதில் கிடைப்ப தில்லை. எனவே, ஞாயிறு பிற்பகல் லண்டனிலிருந்து டயானா தனது இரண்டாம் திருமணச் செய்தியை அறிவித்திருந்தார் என்றால், நிச்சயமாக அது முழு உலகத்தின் அத்தனை புதினப் பத்திரிகைகளிலும் முதலாவது பக்கத் தலைப்புச் செய்தியாக வந்திருக்கும். பத்திரிகைகளை பயன்படுத்திய டயானாவுக்கும் அது நன்கு புரிந்திருக்கும்.)

இந்த நோக்கம் உண்மை என்றால், அது நிறைவேறவில்லை. திங்கள் காலை உலகப் பத்திரிகைகளில் டயானாவின் மங்கள - மறுமணச் செய்தி வருவதற்குப் பதிலாக, ஒரு நாள் முன்னதாகவே, ஞாயிறு காலையிலேயே உலகப் பத்திரிகைகளின் முதலாவது பக்கத்துத் தலைப்புச் செய்தியாக டயானாவின் அமங்கல அகால மரணச் செய்தி வந்துவிட்டது.

காலன் டயானாவை வென்றுவிட்டான். அவரது ஆசைக்கனவுகளைக் கலைத்துவிட்டான்.

தனது வாழ்நாள் முழுவதும் அன்பைத் தேடி அலைந்ததாக அறிவித்த 36 வயது நிறைந்த பேரழகி டயானா, அந்த அன்பை -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விபத்தில் உயிர் தப்பிய மெய்காப்பாளர் ட்ரெவர் றீஸ் ஜோன்ஸ். விதி அவருக்கு வித்தியாசமான ஒரு தீர்ப்பு எழுதியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவை - காதலை - பாதுகாப்பை இறுதியாகக் கண்டுபிடித்து, அதை உலகத்திற்கு அறிவிக்க விழைந்த நாளிற்கு முதல் இரவு, அவரது உயிரை காலன் இவ்வளவு கொடூரமான, கல்லையும் கனிய வைக்கும் சூழ்நிலையில் அபகரித்த கொடுமை கிரேக்க துன்பியல் நாடகங்களை விடச் சோகம் நிறைந்தது. கல் நெஞ்சர்களையும் நெகிழ வைக்கும் தன்மை வாய்ந்தது.

டயானாவின் மரணம். பிரிட்டனிலும் அனைத்துலகிலும் ஏற்படுத்திய சூறாவளிக்கு நிகரான உடனடித் தாக்கத்திற்கான முக்கிய காரணங்களில் இதுவும் ஒன்று.

ஏனைய காரணங்கள் யாவை?

இவை மிக மிகச் சிக்கலானவை.

**டயானாவின் பிறப்பு, வளர்ப்பு, திருமணம், ராஜகுடும்பப் பொறுப்புகள் போன்ற பல அம்சங்களோடு ஒட்டிய எதிர் பார்ப்புகள், ஏமாற்றங்கள், முரண்பாடுகள் என்பனவற்றையும் இவற்றை எதிர்கொள்ள, அவர் கையாண்ட செயற்பாடுகள், இச் செயற்பாடுகளால் அவருக்கு விளைந்த நன்மைகள், இச்செயற்பாடுகள் அவருக்கு ஏற்படுத்திய எதிர்த்தாக்கங்கள் என்பனவற்றையும் டயானாவுக்கு ஏற்பட்ட மனநோயின் தன்மையையும் ஆழமாக அலசி ஆராய்ந்தால் ஏனைய காரணங்களை இனம் கண்டுகொள்ள முடியும்.**

**இத்தகைய ஒரு புலன்விசாரணை, இத்தகைய ஒரு ஆராய்ச்சி, இத்தகைய ஒரு விவாதம் ஆரம்பமாகிவிட்டது. பிரிட்டிஷ் வரலாற்றில் இந்த விவாதம் தொடர்ந்து நடக்கும். இதற்கு ஒரு முடிவு இருக்காது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருப்பேன் உனக்காக என்றார் இளவரசர்! அவளும் திரும்பி வந்தாள் - வந்த கோலமோ..?

பாரிஸில் கார் விபத்து சம்பவித்த ஒரு மணி நேரத்திற்குள் பால்மோரல் அரண்மனையில் தொலைபேசி அலறியது.

லண்டனிலிருந்து 550 மைல்கள் வடக்கே பால்மோரல் அமைந்துள்ளது. ஸ்காட்லாந்திலுள்ள இந்த அரண்மனையில் தான் ராஜகுடும்பத்தினர் தமது விடுமுறை நாட்களைக் கழிப்பார்கள்.

தொலைபேசி அழைப்பை எடுத்த அரண்மனை ஊழியர்கள் பதறிப் போய், தூக்கத்திலிருந்த வேல்ஸ் இளவரசர் சார்லஸையும், எலிசபத் மகாராணியாரையும் துயிலெழுப்பு கின்றனர்.

விபத்து விபரங்கள் தொலைபேசியில் ராஜகுடும்பத் தினருக்கு அறிவிக்கப்படுகிறது.

அடுத்த சில நிமிடங்களில் முகம்மது அல்பாயத்தின் தூக்கத்தை தொலைபேசி மணி கலைக்கிறது. லண்டன் மாநகர எல்லையை அடுத்து உள்ள செல்வச் செழிப்பு நிறைந்த சரே கவுன்டியில் (மாவட்டத்தில்) ஒரு பெரிய தோட்டத்தின் நடுவில் உள்ள அவரது மாளிகையில் அவர் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தார்.

விபத்து விபரங்கள் அவருக்கு அறிவிக்கப்பட்டவுடன் அவர் தனக்குச் சொந்தமான ஹெலிகாப்டரில் பாரிஸுக்குப் புறப்படத் தயாராகிறார். அதற்கிடையில் தொலைபேசி மீண்டும் ஒலிக்கிறது. விபத்தில் அவரது மகன் டோடி (41 வயது) இறந்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலை இரண்டு மணிக்கு பிரதமர் டோனி பிளேரின் செட்ஜ்பீல்ட் தொகுதி இல்லத்தில் தொலைபேசி ஒலிக்கிறது. துயிலெழுந்த பிரதமருக்கு சேதி தெரிவிக்கப்படுகிறது. செய்திகளை உடனுக்குடன் தனக்கு அறிவிக்குமாறு அவர் பணித்துவிட்டு, உறக்கத்திலிருந்த தனது துணைவி செர்ரியைத் (CHERIE) தட்டியெழுப்பி சேதியைத் தெரிவிக்கிறார்.

பாரிஸில் நடந்த விபத்தை அடுத்து, ஏழு பப்பரட்சிகளை போலீஸார் கைது செய்ததாகவும், குறைந்தபட்சம் மூவராவது தப்பியோடிவிட்டதாகவும் செய்தி வருகிறது.

பிரெஞ்சு தனியார் செய்தி ஸ்தாபனம் ஒன்றிடமிருந்து ஒரு பிரிட்டிஷ் பத்திரிகைக்கு தொலைபேசி அழைப்பு வருகிறது. விபத்தை பப்பரட்சிகள் படமெடுத்தார்கள் அல்லவா? "விபத்துப் படங்கள் தயார். விலை 3,20,000 டாலர்கள்!"

உயிர் பிரியும் பரிதாபத்தையும் படமாக்கி, அதற்கு இலட்சங்கள் விலைபேசினார்கள் மானிட வல்லூறுகள் - அதுவும் உயிர் பிரிந்து, சூடு உடலில் அடங்குவதற்குள்ளாகவே!

பிரிட்டிஷ் பத்திரிகையின் சார்பில் தொலைபேசி அழைப்பை எடுத்தவருக்கு பைத்தியமே பிடித்துவிடும் போலிருந்தது. தனது தலையை சுவரில் முட்டி மோதிக்கொள்வதா? அல்லது பாரிஸுக்கு உடனே பறந்துபோய் படங்களைப் பேரம் பேசியவரின் கழுத்தை நெறித்துக் கொலை செய்வதா?

ஏன் தெரியுமா?

டயானா - டோடி ஆரத் தழுவிய படங்களையும், அன்பு முத்தங்கள் பரிமாறிய படங்களையும் பப்பரட்சிகளிடம் பல இல்ட்சங்களுக்கு விலைக்கு வாங்கி, அன்றைய (ஞாயிறு) காலைப் பத்திரிகையில்தான் முதற் பக்கத்தில் அமர்க்களமாகப் பிரசுரித்திருந்தார்கள்.

கடைசிப் பதிப்பைத் தவிர ஏனைய பதிப்புகளெல்லாம் - சுமார் இருபது இலட்சம் பிரதிகள் - போய்விட்டன. கடுகதி ரயில் மார்க்கமாகவும் கனவேக வான்கள் வழியாகவும் அவை பிரிட்டனில் மூலைமுடுக்கெல்லாம் போய்ச் சேர்ந்திருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய அதிகாலை நேரமது. கடைசிப் பதிப்பு - லண்டன் நகர்ப் பிரதிகள் - அச்சேறும் நேரமது. ஆசிரியர், நிருபர்கள் குழு தமது தலைமுடியைப் பிய்த்துக் கொண்டு, முதலாம் பக்கத்தில் போய்ச் சேர்ந்த வண்ண வண்ணச் சிருங்காரப் படங்களை ஆவேசத்துடன் பிடுங்கி எடுத்து, கரு நிறத்தில் கரை கட்டி, கண் கலங்கும் அமங்கலச் செய்தியை 'கண்ணியமோ கண்ணியம்,' 'சோகத்தை எப்படிச் சொல்வோம்' என்ற இலட்சியத்துடன் பிரசுரிக்க, புடம்போட்ட புனிதர்களாக இயங்கிக் கொண்டிருந்த நேரமது.

"நோ, தாங்க்ஸ்" என்று சொல்லி தாம் போனை வைத்து விட்டதாக அந்தப் பத்திரிகை ஓரிரு நாள் கழித்து அறிவித்தது. "வேண்டாம், நன்றி" என்ற கௌரவான ஆங்கிலச் சொற்களைத் தான் அந்த நேரத்தில் அவர்கள் சொன்னார்களா, அல்லது அவற்றைவிட ஆக்ரோஷமான ஆங்கிலச் சொற்களைத் தான் எய்தார்களா என்பது தெரியவில்லை! அறிவதற்கு வழியும் இல்லை.

ஏறத்தாழ அதிகாலை நான்கு மணிக்கு, டயானா மீளாத்துயில் கொண்ட செய்தி பால்மோரல் அரண்மனைக்கு அறிவிக்கப் படுகிறது. தொலைக்காட்சி - வானொலிச் செய்திகள் அதிகாலை 5.09 மணிக்கு "இந்தக் கொடூரமான செய்தியைக் கேட்டு எலிஸபத் மகாராணியாரும் வேல்ஸ் இளவரசரும் தீவிர அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளனர்" என்ற சிறு அறிக்கையை ஒலிபரப்பின.

ஞாயிறு காலை 9.30 மணிக்கு பிரதமர் டோனி பிளேர் மகாராணியுடனும் இளவரசர் சார்லஸுடனும் தொலைபேசியில் பேசினார் என்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் அறிவித்தன. டயானாவின் இறுதிச் சடங்குககளை நிறைவேற்றுவது எப்படி என்று அரண்மனை பெருங் குழப்பத்தில் இருந்ததாம். முடிக்குரியஇளவரசரிடமிருந்து விவாகரத்துப் பெற்ற ஒரு மனைவி இறக்கும் பட்சத்தில், அவருக்கு எத்தகைய இறுதி மரியாதை செய்யப்படவேண்டும் என்று அரச ஒழுங்குமரபு விதிகள் எதுவும் முன்கூட்டியே நிர்ணயித்துத் தயாராக இருக்கவில்லை. பிரிட்டிஷ் அரச வரலாற்றில் இத்தகைய ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வு இதற்கு முன் ஏற்பட்டிருந்தால், அதற்குரிய விதிகள் நிர்ணயிக்கப்பட்டு அனுபவரீதியாகத் தயார் நிலையில் இருந்திருக்கும். டயானா 36 வயதில் இறப்பார் என்று எவருமே எதிர்பார்க்காததால், அவர் இறக்கும் பட்சத்தில் அவருக்குரிய இறுதி மரியாதைகள் என்னென்ன என்று ஒரு திட்டம் அரண்மனையிடம் இருக்கவில்லை.

பிரதமர் தனது கருத்துக்களை மகாராணியிடமும் இளவரசருடனும் பகிர்ந்து கொண்டாராம். இறுதி மரியாதைச் சடங்குகள் பிரிட்டிஷ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் அளவிற்குச் சிறப்பாக அமையவேண்டும். அப்படி இல்லாவிட்டால் நாட்டில் எதிர்ப்பு எழ வாய்ப்புண்டு என்று பிரதமர் கருத்து வழங்கினாராம்.

பதினெட்டு ஆண்டு காலம் தொடர்ச்சியாக பிரிட்டனினில் ஆட்சி செய்த கன்சர்வட்டிவ் கட்சியை இருந்தவிடம் தெரியாமல் செய்து, இந்த நூற்றாண்டின் இணையற்ற தேர்தல் வெற்றியை நான்கே நான்கு மாதங்களின் முன்னர் தான் சாதித்துக் காட்டிய டோனி பிளேருக்கா மக்கள் கருத்து எப்படி அமையப் போகிறது என்று நாடி பிடித்துச் சொல்ல முடியாது?

அரண்மனையுடன் பேசிவிட்டுத்தான் பிரதமர் ஞாயிறு ஆராதனைக்காகத் தேவாலயத்திற்குப் புறப்பட்டார். போகும் வழியில்தான் நாட்டு மக்களுக்குத் தொலைக்காட்சியில் உரையாற்றினார்.

பால்மொரல் அரண்மனையிலிருந்த ராஜகுடும்பத்தினர் மகாராணி எலிஸபத், அவரது கணவர் எடின்பரோ கோமகன், மகாராணியின் அன்னை, இளவரசர் சார்லஸ், அவரது மகன்களான இளவரசர் வில்லியம் (15 வயது) - இளவரசர் ஹரி (13 வயது) - வழக்கம்போல ஞாயிறு காலை ஆராதனைக்கு அருகிலிருந்த கிராத்தி தேவாலயத்திற்குச் சென்றனர். இதை ஒரு பெரிய குற்றம் என்று சொல்லி சில பத்திரிகைகள் கண்டித்தன. தேவாலயத்திற்குச் சென்றது டயானாவுக்கு இழைத்த அவமரியாதை என்றும், சார்லஸுக்கும் டயானாவுக்கும் பிறந்த இளம் இளவரசர்களை அன்று தேவாலயத்திற்கு அழைத்துச் சென்றது இரக்கமில்லாத செயல் என்றும் கண்டித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கண்டனத்திற்குப் பதிலடி மறுநாளே வேறு பத்திரிகைகளில் வந்தது. கிறிஸ்தவ மதவழிபாடு அருகி வரும் இன்றைய பிரிட்டனில் ஞாயிறு தோறும் இன்னும் தேவாலயத்திற்கு சென்று வழிபட்டு வரும் மகாராணியின் குடும்பத்தைக் குற்றம் சொல்வது எப்படி? உண்மையான கிறிஸ்தவர்கள் தமது குடும்பத்தில் ஏற்படும் மரணம் தரும் வேதனைகளைத் தணிப்பதற்கு தேவாலயம் சென்று பிரார்த்திப்பது எவ்வகையில் தவறாகமுடியும் என்ற மாற்றுக் கருத்து வெளியானது.

தேவாலயத்திலிருந்து பால்மொரல் அரண்மனைக்குத் திரும்பியதும், இளவரசர் சார்லஸ் தனது முன்னாள் மனைவி டயானாவின் உடலை பிரிட்டனுக்குக் கொண்டு வருவதற்காக பாரிஸ் புறப்பட்டார். அரண்மனையிலிருந்து அருகில் உள்ள அபர்டீன் விமான நிலையத்திற்குத் தனது காரைத் தானே ஓட்டிச் சென்றார். அங்கே டயானாவின் இரு சகோதரிகளைச் சந்தித்தார்.

ஒருவர் - சேரா மக்கோர்க்குடேல் சீமாட்டி; சார்லஸ் திருமணம் செய்துகொள்வதற்கு முன்னர் சில காலம் சார்லஸினுடைய நெருங்கிய பெண் சிநேகிதியாக இருந்தவர்; சேரா மூலமாகத்தான் சார்லஸிற்கு டயானாவின் அறிமுகம் கிடைத்தது; சேரா விவசாயப் பண்ணை வைத்திருந்த ஒரு செல்வந்தரைப் பின்னால் திருமணம் செய்து கொண்டார்.

மற்றவர் - ஜேன் பெல்லோஸ் சீமாட்டி; சேராவுக்கு இளையவர், டயானாவுக்கு மூத்தவர்; இவர் சர் ராபர்ட் பெல்லோஸைத் திருமணம் செய்து கொண்டார்; சர் ராபர்ட் 1977 முதல் 1986 வரை மகாராணியின் உதவி அந்தரங்கச் செயலாளராகவும், 1986 முதல் 1990 வரை துணை அந்தரங்கச் செயலாளராகவும் பணியாற்றினார். 1990 முதல் இன்று வரை மகாராணியின் பிரதம அந்தரங்கச் செயலாளராகப் பணியாற்றி வருகிறார். விவாகரத்து உட்பட, டயானாவுக்கு எதிராக அரண்மனை எடுத்த முக்கிய முடிவுகளுக்கு எல்லாம் தனக்கு எதிராக மகாராணிக்கு ஆலோசனை கூறிய 'தனது எதிரி' என்று டயானாவால் குற்றம் சாட்டப்பட்டவர் தான் சர் ராபர்ட்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்மனைக்குச் சொந்தமான BAe 146 போர் விமானத்தில் இளவரசர் சார்லஸ் டயனாவின் இரு சகோதரிகளுடனும் பாரிஸிற்குப் புறப்பட்டார். பாரிஸிற்குத் தென்கிழக்கே 30 நிமிடக்கார் சவாரித் தொலைவிலுள்ள ஒரு இராணுவ விமானத் தளத்தில் சென்றிறங்கினார்.

டயானாவின் உடலை ஒரு போர்விமானத்தில் பிரிட்டனுக்குக் கொண்டுவரக் கூடாது என்று சில அரண்மனை ஆலோசகர்கள் ஆட்சேபித்ததாகவும், அந்த ஆட்சேபணைகளை இளவரசர் சார்லஸ் நிராகரித்தார் என்றும் சில பத்திரிகைகள் இந்த அமளி துமளிக்குள்ளும் கிசு கிசு செய்தி வெளியிடத் தவறவில்லை.

விமானத் தளத்திலிருந்து இளவரசரும் அவர்து இரு முன்னாள் மதனிகளும், பிரெஞ்சு அரசு ஒழுங்கு செய்திருந்த போலீஸ் மெய்க்காவல் அணியினர் முன்னும் பின்னும் செல்ல, பிரெஞ்சு கனவேகக் காரில் மருத்துவமனை நோக்கி விரைந்தனர்.

பிற்பகல் 4.40க்கு இளவரசர் சார்லஸ் மருத்துவமனை வந்தடைந்தார். அங்கே பிரெஞ்சு ஜனாதிபதி ஜேக்ஸ் சிராக்கும் அவரது துணைவியாரும் இளவரசரை வரவேற்று தமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டனர். மருத்துவமனை முன்றிலில் பிரெஞ்சு இராணுவ அணிவகுப்பு, இளவரசர் சார்லஸிற்குத் தமது மரியாதையைத் தெரிவித்தது.

தனக்கு அளிக்கப்பட்ட அரச மரியாதைகளுக்கு நன்றி செலுத்திவிட்டு இளவசரசர் தனது முன்னாள் மதனிகளுடன் மருத்துவ மனைக்குள் விரைந்தார்.

முதல்மாடியிலுள்ள அவரச சிகிச்சைப் பிரிவின் ஒரு அறைக்குள் டயானாவின் பிணப்பெட்டி வைக்கப்பட்டிருந்தது.

சார்லஸ் தனியாக உள்ளே சென்றார். சில நிமிடங்களின் பின் வெளியே வந்தார்.

அதன் பின் சேரா.

அதன் பின் ஜேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவமனையின் பின் வாயிலுக்கருகே பெருந்திரளான பிரெஞ்சுப் பொதுமக்கள் கூடிவிட்டனர். அங்கே வந்துசேர்ந்த பிரிட்டிஷ் - பிரெஞ்சுப் பத்திரிகையாளர்களைப் பார்த்து “கொலைகாரர்கள் - கொலைகாரர்கள்” என்று பொதுமக்கள் கோபத்துடன் கோஷம் போட்டனர்.

பிற்பகல் 5.06 மணி -

நான்கு பிரெஞ்சு இராணுவத்தினர் பிணப்பெட்டியைச் சுமந்து மெல்ல மெல்ல அடி வைத்து அணிவகுத்து வர, மேலுமிருவர் மலர்வளையங்களை ஏந்திப் பின்னால் அணி வகுத்து வர, டயானா பிரான்சிலிருந்து பிரிட்டனுக்குத் தனது இறுதி யாத்திரையை ஆரம்பித்ததை கோடிக்கணக்கான உலகமக்கள் தங்கள் தொலைக்காட்சிப் பெட்டிகளில் கண்டு உளம் நெகிழ்ந்தனர் பிரேதக் காரில் பெட்டி ஏற்றப்பட்டதைக் கண்டு வேதனை உற்றனர்.

முன்னாள் மதனிகள் பின்தொடர மருத்துவமனையில் இருந்த சார்லஸ் வெளியே வந்தார். மக்கள் நிசப்தமாகினர். சிவந்த கண்கள். நேரே பார்த்தவாறு விறுவிறென்று வெளியேறி காரினுள் ஏறினார். அதற்கு முன்னால் - டயானாவின் உயிரைக் காக்கப் போராடிய பிரெஞ்சு டாக்டர்களுக்கு மருத்துவ மனையினுள் வைத்து கைகுலுக்கி, தனது மனமார்ந்த நன்றிகளை இளவரசர் வெளிப்படுத்தியிருந்தார்.

கார் ஊர்வலம் விமானத் தளத்தை நோக்கிப் புறப்பட்டது. ஊர்வலத்தைத் தொடர்ந்து மோட்டார் சைக்கிள்களில் படப்பிடிப்பாளர்கள் காமராக்களுடன் தொடர்ந்தனர். வழி நெடுகிலும் நின்ற பிரெஞ்சு மக்கள் மீண்டும் காமராக்களா என்று உணர்ச்சி வசப்பட்டனர். சிலர் கண் கலங்கினர். சிலர் கோபத்துடன் தமது முஷ்டிகளை உயர்த்திக் காட்டினர்.

அந்தப் படப்பிடிப்பாளர்கள் பப்பரட்சிகள் அல்லர். உரிய அனுமதியுடன் தமது உத்தியோகபூர்வமான கடமைகளைச் செய்ய வந்த பத்திரிகைப் படப்பிடிப்பாளர்கள்.

இதற்கிடையே -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையாளர்களின் பார்வைக்கு அப்பால், படப் பிடிப்பாளர்களின் காமராக்களுக்கு அப்பால், இன்னொருவர் தனது பாரிஸ் - லண்டன் இறுதி யாத்திரையை ஆரம்பித்தார்.

முகம்மது அல்பாயத் பிரான்சில் தமக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி, தனது மகனின் சடலத்தை லண்டனுக்குக் கொண்டு செல்ல துரிதகதியில் அனுமதி பெற்றார். தங்கள் சம்பிரதாயத்தின்படி, இறந்த ஒருவரின் உடல் 24 மணி நேரத்துக்குள் அடக்கம் செய்யப்படவேண்டும் என்று விளக்கி அனுமதி பெற்றார்.

திருக்குர்ஆனிலிருந்து எடுக்கப்பட்ட வாசகங்கள் தங்க எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட கறுப்புத் துணியால் மூடப்பட்ட பிணப்பெட்டி அல்பாயத்துக்குச் சொந்தமான ஜெட் விமானத்தில் லண்டன் வந்து சேர்ந்தது. புல்ஹாம் பிரேதச் சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட டோடியின் உடல், அங்கே அவசர அவசரமாக ஒரு சட்ட மருத்துவ அதிகாரியினால் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டபின் அடக்கத்திற்கான அனுமதி வழங்கப்பட்டது.

அதன்பின் ஜனாஸா லண்டன் றீஜன்ட்ஸ் பார்க் பகுதியில் உள்ள ஒரு மசூதிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. 600 பேர் கலந்துகொண்ட பத்துநிமிட மதச் சடங்குகளின் பின்னர் ஜனாஸா அல்பாயத் வசிக்கும் சரே கவுன்டியில் உள்ள ஒரு தனியார் இடுகாட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டு, ஆறே ஆறு கார்களில் வந்த குடும்பத்தினர், மிக நெருங்கிய உறவினர் - நண்பர்கள் முன்னிலையில் அமைதியாக நல்லடக்கம் செய்யப் பட்டது.

அப்போது - ஞாயிறு இரவு 10 மணி.

அது - ஐரோப்பாவிலே உள்ள மிகப்பெரிய தனியாருக்குச் சொந்தமான இடுகாடு.

அதற்கு முன்னர் -

இரவு ஏழு மணிக்கு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச விமானப்படை விமானம் மேற்கு லண்டனில் உள்ள நோர்த்தோல்ட் விமானப்படைத் தளத்தில் வந்திறங்கியது.

கோடை காலத்தின் கடைசி நாளது. மறுநாள் இலையுதிர் காலம் ஆரம்பம். கோடை வெய்யிலிலெல்லாம் கோடீஸ்வர னுடன் கொஞ்சிக் குலாவி கோடி இன்பக்கனவுகள் கண்ட டயானா, கோடையின் கடைசி நாளன்று டோடியுடன் மண வாழ்க்கையை அறிவிக்க விழைந்து விரைந்த டயானா, இலையுதிர் காலத்திற்கு முதல் நாளன்று, சருகாக மாறித் தானாக உதிராமல் பச்சைப்பசேல் என்ற நிலையிலேயே வாழ்க்கை என்னும் செடியிலிருந்து பலவந்தமாகப் பறிக்கப்பட்ட கொடுமையைப் பார்க்க விரும்பாது மாலைச் சூரியன் அடிவானத்தை வண்ணத் திரையாக்கிவிட்டு மறைந்து கொண்டிருந்தான்.

அம்புலியைக் கொண்டுவா என்று அம்மாவிடம் அடம்பிடித்து அழும் குழந்தைபோல், தனது இரண்டேமுக்கால் கோடி டாலர் விவாகரத்துத் தீர்வோடு ஒரு ஜெட்விமானமும் தா என்று அடம்பிடித்து, அகிலமெல்லாம் சட்சட்டென்று பறந்து திரிந்த டயானா, சர்வமும் அடங்கிய நிலையில் தனது இறுதி ஜெட் யாத்திரையை தனது முன்னாள் மாமியாரின் ஜெட் விமானத்தில் தனது சகோதரிகளும் முன்னாள் கணவரும் அருகிலிருந்து கண்சிவந்து கூட்டிவர தாயகம் திரும்பினர்.

மயான நிசப்தம்.

பிரதம மந்திரி டோனி பிளேர், பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் ராபர்ட்சன், பக்கிங்ஹாம் அரண்மனையின் இரு உயர் அதிகாரிகள் டயானாவை வரவேற்க வரிசையாக நின்றனர். இந்த வரிசையில் இரு சகோதரிகளும் இளவரசரும் வந்து இணைந்து கொள்கின்றனர்.

விமானத்தின் கதவின் வழியே டயானா உறங்கும் பிணப்பேழை வெளிப்படுகிறது. பிரிட்டிஷ் அரச பரம்பரையின் கொடியால் பேழை போர்த்தப்பட்டிருக்கிறது. அதற்கு மேலே வெண்நிறப் பூக்கள் கொண்டு பின்னிய மலர் வளையம். எட்டு விமானப்படை வீரர்கள் மெல்ல மெல்ல அடிவைத்து அணிவகுத்து நடந்து வந்து பெட்டியை பிரேதக்காரில் ஏற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார் விமானத் தளத்திலிருந்து விரைந்து வெளியேறியது.

பிரதமருடன் பேசிவிட்டு இளவரசர் அதே விமானம் மூலம் பால்மோரல் அரண்மனைக்குப் புறப்பட்டார். தாயை இழந்து தவிக்கும் தனது மகன்களுக்கு ஆறுதல் சொல்லப் புறப்பட்டார். என்றோ பிரிந்துபோய், அன்று உலகைவிட்டே போன தனது மனைவிக்கு இறுதி யாத்திரைக்கான ஒழுங்குகளைக் கவனிப்பதற்குப் புறப்பட்டார்.

வேல்ஸ் இளவரசி விமானப்படைத் தளம் வழியே மீளா உறக்கத்தில் தாயகம் திரும்பிய அந்த நிசப்தமான காட்சியை மக்கள் தொலைக்காட்சியில் கண்டு கலங்கினர்.

தொலைக்காட்சியின் கண்களுக்கு அப்பால், பத்திரிகை களின் கண்களுக்கு அப்பால், மக்கள் கண்களுக்கு அப்பால் டயானாவின் பிரேதக் கார் ஒரு இரகசிய இடத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தது.

அது -

மேற்கு லண்டனில் உள்ள புல்ஹாம் சவச்சாலை.

ஒரு சில மணி நேரங்களுக்கு முன்னர் டோடியின் உடலை சட்ட மருத்துவ அதிகாரி கூறுபோட்டுச் சோதித்த இடம்.

அப்போது ஆள் அரவம் இல்லாமலிருந்த அந்த இடம் இப்போது படு சுறுசுறுப்பாகக் காணப்படுகிறது. மிக உயர் மட்ட இரகசியப் போலீஸ் அதிகாரிகள் நிறைந்து காணப்படுகிறது. மரண விசாரணை அதிகாரி டாக்டர் ஜோன் பர்ட்டன் அங்கே காணப்படுகிறார். உள்துறை அமைச்சினால் அனுப்பப்பட்ட மிகச் சிரேஷ்ட சட்ட மருத்துவ அதிகாரி ஒருவர் காணப் படுகிறார். சட்ட மருத்துவ புகைப்படப்பிடிப்பாளர் ஒருவர் காணப்படுகிறார்.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் டயானாவின் பிரேதப் பரிசோதனை ஆரம்பமாகிறது. பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக உலகத்துப் பத்திரிகைகளில் எல்லாம் முதலாம் பக்கத்தில் பல காலங்களை நிரப்பிய வண்ணத் தாரகையாக ஜொலித்த அந்தப் பேரழகியின் கவர்ச்சி உடலில் சட்ட மருத்துவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரியின் கத்தியும் இரம்பமும் கண்ணீர் மல்கப் புகுந்து வகிர்கின்றன. இலட்சக்கணக்கான டாலர்கள் விலைபோன படங்களின் நிஜ உருவம் ஊடுருவப்பட்டு மருத்துவப் புலன் விசாரணைக்கு ஆளாகிறது.

வாழ்நாளெல்லாம் அவரது அந்தரங்க உரிமைகளை பப்பரட்சிகளின் காமரா லென்சுகள் ஊடுருவின. இப்போது அடக்கத்திற்குப் போகும் வழியில் கூட அந்த ஊடுருவல் நிற்கவில்லை. இப்போது அவரது பூதவுடலின் அந்தரங்கத்தை சட்டமருத்துவக் காமராவின் லென்சுகள் ஊடுருவுகின்றன.

படப்பிடிப்பாளர் கழிவறைக்குச் செல்லும்போதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு. அவரது படச்சுருள் பாதுகாப்புடன் ஒரு பாதுகாப்புள்ள ஸ்டூடியோவுக்கு கொண்டு செல்லப்பட்டு உடனடியாகக் கழுவப்படுகிறது. படங்கள் திருப்திகரமாய் உள்ளன என்பது உறுதிப்படுத்தப் பட்டபின் சேமிப்புக்காக எங்கோ ஒரு இரகசிய இடத்திற்கு கொண்டு செல்லப் படுகின்றன.

பிரேதப் பரிசோதனைக்குள்ளான டயானாவின் உடல் தைக்கப்படுகிறது. சேமிப்புக்கு வேண்டிய செய்முறைகள் நடைபெறுகின்றன.

மறுபடியும் பிரேதக் கார் டயானாவுடன் புறப்படுகிறது இன்னொரு இடத்தை நோக்கி. இரகசியப் பயணம்.

திங்கள் அதிகாலை 12.10 மணி -

நள்ளிரவு தாண்டிப் பத்து நிமிடங்கள் -

23 மணி 55 நிமிடங்களுக்கு முன்னால் பாரிஸ் ரிட்ஸ் ஓட்டலிலிருந்து வருங்காலக் கணவர் டோடியுடன் பரபரப்பாக வெளியேறிய டயானா, தனது முன்னாள் கணவர் இளவரசர் சார்லஸின் சென்ஜேம்ஸ் அரண்மனைக்குள் உயிர்நீத்த உடலாகப் பிரவேசிக்கிறார்.

சார்லஸின் வதிவிடமான அந்த அரண்மனையில் உள்ள தேவாலயத்தில் அவரது பிணப்பெட்டி வைக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்லஸ் - டயானா திருமண வாழ்வில் விரிசல் பல வருடங்களாக இருந்துவந்த போதிலும் மனக்குமுறல்களை அரண்மனையின் சுவர்களுக்குள் வைத்துக்கொண்டு, வெளி உலகத்திற்கு எதையுமே காட்டிக்கொள்ளாமல் வாழ்ந்து வந்தார் சார்லஸ். விவாகரத்து பற்றிய பேச்சை அவருக்கு உயிருக்கு உயிரான நண்பர்கள் எடுத்தபோதெல்லாம் "வேண்டாம், எனது மனைவி என்னை விரும்பி என்றாவது ஒரு நாள் திரும்பி வருவாள்," என்று சொல்லி வந்தார்.

ஆனால் -

இந்தச் சூழ்நிலையில்தான் தனது மனைவி தன்னிடம் திரும்பி வருவாள் என்று அவர் எதிர்பார்த்தாரா என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டி.வி. அலைவரிசைகளின் நேயர் செல்வாக்குப் போட்டி பிரிட்டனில் ஏற்படுத்திய டயானா ஹிஸ்டீரியா!

டயானாவின் மரணச் செய்தி வந்ததை அடுத்து பிரிட்டிஷ் தொலைக்காட்சி அலைவரிசைகள் யாவற்றிலும் வழக்கமான பல நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டன. தொடர்ச்சியாக டயானா பற்றிய சிறப்பு நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. இவை முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் அல்ல. உடனுக்குடன் தயாரானவை.

உலகெங்கும் இருந்து 39 பிபிஸி நிருபர்கள் தொடர்ச்சியாக செய்திகள் அனுப்பிக் கொண்டிருந்தார்கள். அந்தந்த நாடுகளின் தலைவர்கள், அரசியல்வாதிகள், பிரபலம் வாய்ந்த பிரமுகர்களுடன் நிருபர்கள் தொடர்பு கொண்டு டயானாவின் சேவை பற்றியும் அவரது அகால மரணம் பற்றியும் கருத்துக் கேட்டார்கள். பரிதாபத்துக்குரிய சூழ்நிலையில் அகால மரணம் அடைந்த, இளம் வயதுடைய, அழகிய வேல்ஸ் இளவரசியைப் பற்றிக் கருத்துக் கேட்டால் எத்தகைய பதில் வரும்? போற்றிப் புகழ்ந்து எல்லாரும் கருத்துச் சொன்னார்கள்.

இவை பிரிட்டிஷ் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகின.

ஞாயிறு பொழுதுபுலர்வதற்கு முன்னதாகவே பிபிஸியின் உள்நாட்டு நிருபர்கள் காமராக் குழுக்கள் சகிதம் லண்டனின் முக்கிய இடங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். மகாராணியின் உத்தியோகபூர்வ இல்லமும் அலுவலகமுமான பக்கிங்ஹாம் அரண்மனை, இளவரசர் சார்லஸின் உத்தியோகபூர்வ இல்லமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலகமுமான கென்ஸிங்டன் அரண்மனை என்பவற்றின் முன்றிலில் பிபிஸி நிருபர்கள் - காமராக் குழுக்கள் 24 மணிநேரமும் காத்திருந்தனர்.

பிபிஸி கலையகத்தில் நிகழ்ச்சியைத் தயாரித்தளித்தவர் நேர்முகப் பேட்டிகளை நடத்தி, அதே வேளையில், இடையிடையே நிருபர்களின் நேர்முக வர்ணனை - செய்திகளையும் ஒளிபரப்பிக் கொண்டிருந்தார்.

பிபிஸி முதலாம் அலைவரிசையின் பிரதம ஒளிபரப்பாளரான மாட்டின் லூயிஸ் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியின் (அத்தியாயம் 2) ஒரு பகுதியைச் சற்று ஆராய்வோம்:

"... என்னன்ன செய்யவேண்டும் என்ற வடிவமைப்பு தயாராக இருந்தாலும், நிஜமான சம்பவம் என்று வரும்போது மூச்சு நின்றுவிடும் போலிருக்கும்.. உண்மையில் என்ன நடக்கிறது என்று ஒருவருக்கும் பூரணமாகப் புரியவில்லை. எனது முப்பது வருட ஒளிபரப்புத்துறை அனுபவத்தில் இத்தகைய சவால் இதுவரை ஏற்பட்டதில்லை.. நினைத்துப்பார்க்கக்கூட முடியாதது என்று நாம் நினைத்தது நடந்து முடிந்துவிட்டது என்று தேசத்திற்கு எடுத்துச் சொல்வதே எமது பணியாக இருந்தது. பிரமிப்பூட்டும் அளவிற்கு பிபிஸி ஒளிபரப்புக் குழுவின் பங்களிப்பு அமைந்திருந்தபோதிலும் எதை ஒளிபரப்புவது, எப்படி ஒளிபரப்புவது என்பது பற்றி முழுக்கத் தயாரற்ற நிலையில் நான் இருந்தேன். உலகெங்குமிருந்து 39 நிருபர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒரு பேட்டியை ஒளிபரப்பிக் கொண்டிருந்தபோது அடுத்ததாக என்ன செய்வது என்று தெரியாத நிலையில் இருந்தேன்..."

பிபிஸி இந்த ஒளிபரப்புக்குத் தயாராக இருக்கவில்லை என்பது மாட்டின் லூயிஸின் இந்தப் பேட்டியிலிருந்து தெரிகிறது. எதை ஒளிபரப்புவது, எப்படி ஒளிபரப்பவுது, ஒரு பேட்டியை ஒளிபரப்பும்போது அடுத்ததாக என்ன செய்வது என்று தெரியாத, மூச்சே, நின்றுவிடுகிற நிலையில்தான் அவர்கள் இருந்தார்கள்.

டயானா 36 வயதில் அகால மரணம் அடைவார் என்று யார் எதிர்பார்த்திருந்தார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிட்டிஷ் தொலைக்காட்சி எதிர்பார்த்திருக்கவில்லை; பிரதமர் எதிர்பார்த்திருக்கவில்லை; அரண்மனை எதிர்பார்த்திருக்க வில்லை; பிரிட்டிஷ் பொதுமக்களும் எதிர்பார்க்கவில்லை!

ஞாயிறு காலை பொழுது விடிவதற்கு முன்னாலேயே மாட்டின் லூயிஸின் பேட்டிகள் ஆரம்பித்துவிட்டன. முன்னாள் அமைச்சரும் கடந்த பொதுத் தேர்தலில் தனது எம்.பி. பதவியையே இழந்தவருமான டேவிட் மெலோர் உட்பட மூன்று பேரை அவர் பேட்டி காண்கிறார். டேவிட் மெலோர் கன்சர் வட்டிவ் கட்சி அமைச்சராய் இருந்த காலத்தில் அவர் தனது மனைவிக்குத் தெரியாமல் வேறு பெண்களுடன் வைத்திருந்த இரகசிய உறவுகள் பப்பரட்சிகளாலும் பத்திரிகைகளாலும் அம்பலம் செய்யப்பட்டு அதன் விளைவாக அவர் தமது அமைச்சர் பதவியையே ராஜினாமா செய்யவேண்டி வந்தது.

விபத்து சம்பவித்ததற்கான காரணங்கள் பற்றி அதிகாலையில் பாரிஸிலிருந்து வந்த முதற் செய்திகளை மட்டுமே ஆதாரமாக வைத்து மார்ட்டின் லூயிஸ் இவர்களைப் பேட்டி கண்டார். பேட்டி ஒரு கலந்துரையாடல் பாணியில் நடை பெற்றது.

விபத்துக்கு முழுக் காரணம் பப்பரட்சிகளும், அவர்கள் எடுக்கும் படங்களை பெரும்விலை கொடுத்து வாங்கிப் பிரசுரிக்கும் பத்திரிகைகளுமே என்று அவசரத் தீர்ப்பை அவர்கள் வழங்கினார்கள். அதன் அடிப்படையில், ஒரு தனி மனிதனின் அந்தரங்கத்தை ஊடுருவ படப்பிடிப்பாளர்களுக்கும் பத்திரிகை களுக்கும் உரிமையில்லை, அவ்வாறு பத்திரிகைகள் நடக்கும் பட்சத்தில் அவர்கள் மீது வழக்குப்போட வழிகோலும் சட்டங் களை பாராளுமன்றம் நிறைவேற்ற வேண்டுமா இல்லையா என்ற ரீதியில் பேட்டி நடைபெற்றது.

டயானாவின் மரணத்துக்கான முழுப்பழியை உடனடியாக யார்தலையிலாவது கட்டவேண்டும் என்ற ஒரு அவசர நோக்கம் வெளிப்பட்டது. ஆனால் விபத்துக்கான முக்கிய காரணம் பப்பரட்சிகள் அல்ல என்ற உண்மை போலீஸ் விசாரணைகளின் விளைவாக விரைவில் வெளி வரப்போகிறது என்பது அவர்களுக்கு அப்போது தெரியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கலந்துரையாடலை இடையிடையே நிறுத்தி, மார்ட்டின் லூயிஸ், "இப்போது கென்ஸிங்டன் அரண்மனைக்கு வெளியே நிற்கும் நமது நிருபரிடம் செல்வோம். அங்கே மக்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்போம்," என்று சொல்லுவார். வெறிச்சோடிப்போய் ஆள் அரவம் இல்லாத ஒரு அரண்மனையின் முன்றிலை காமரா காட்டும். அங்கே மக்கள் யாரும் இருக்கமாட்டார்கள். நிருபர் எதையாவது சொல்லித் தானே ஆகவேண்டும்? "மக்கள் இன்னும் தூக்கம் கலைந்து எழவில்லை என்று நினைக்கிறேன். மரணச் செய்தி மக்களைச் சென்றடைந்ததும் நூற்றுக்கணக்கானோர் டயானாவுக்கு அஞ்சலி செய்ய இங்கே வருவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது," என்ற பாணியில் சொல்லி முடிப்பார்.

டயானாவுக்கு எப்படி அஞ்சலி செய்யலாம், அஞ்சலி செய்ய எங்கே போகவேண்டும் என்ற ஒரு எண்ணத்தை பிபிஸி நிருபர்கள் மக்கள் மத்தியில் விதைத்தனர்.

முப்பது நிமிடங்களுக்குப் பிறகு மார்ட்டின் லூயிஸ் தொலைக்காட்சியின் கவனத்தை கென்ஸிங்டன் அரண் மனைக்குத் திருப்பியபோது அங்கே இருபது பேர் நின்றார்கள்.

"மக்கள் வரத்தொடங்கிவிட்டார்கள். அவர்கள் பெரும் துயரில் இருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் இன்று டயானாவுக்கு அஞ்சலி செய்ய இங்கே வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சமீபத்தில் காற்பந்தாட்ட மைதானத்தில் சம்பவித்த விபத்தில் பலர் மரணமடைந்ததை அடுத்து, இறந்தவர் களைக் கௌரவிக்க மக்கள் அங்கே மலர்க் கொத்துக்களை வைத்தார்கள். அதே பாணியில் இன்றும் மலரஞ்சலி செய்வார்கள் என்று எதிர்பாாக்கப்படுகிறது. ஒரு தேசமே சோகத்தில் ஆழ்ந்திருக்கிறது. தமது கவலையை எப்படி வெளிப்படுத்துவது என்று தெரியாமல் திணறிக் கொண்டிருக்கிறது," என்ற அர்த்தம்பட வர்ணிக்கிறார் நிருபர்.

அங்கே உள்ள ஒரு இளம் பெண்ணை நிருபர் பேட்டி காண்கிறார். "டயானாவை நான் விரும்புகிறேன். அவர் நோயாளிகளை நேரில் சந்தித்து அவர்களைத் தொட்டு ஆறுதல் சொல்லி வந்தார். அவரது அரண்மனைக்கு முன்னால் நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கும்போது அவருக்கு அருகில் இருப்பது போன்ற ஒரு உணர்வு ஏற்படுகிறது," என்கிறார் அந்தப் பெண். இதே கருத்தை பலர் சொல்கிறார்கள்.

அடுத்த முறை மாட்டின் லூயிஸ் கென்ஸிங்டன் நிருபரிடம் வரும்போது அங்கே மக்கள் தொகை இருநூறு ஆகிறது. அரண்மனை வாயிலில் மலர்க்கொத்துக்கள் வைக்கப் பட்டிருக்கின்றன.

பிபிஸி அலைவரிசை மட்டுமல்ல, ஐ.டி.வி, ஸ்கை சாட்டிலைட் அலைவரிசைகளிலும் இதே பாணியில் நேர்முக வர்ணனைகள், மக்கள் எப்படித் தமது துயரத்தை வெளிப்படுத்த வேண்டும் என்ற அறிவுரைகள். மக்கள் மகுடிக்குக் கட்டுண்ட நாகம் போல் நிருபர்களின் சொற்கேட்டு அணி திரளத் தொடங்குகின்றனர் - அதற்கு வசதியாக அன்று ஞாயிற்றுக் கிழமை, ஓய்வுநாள் அமைந்துவிட்டது. நாளுக்கு நாள் ஒவ்வொரு கோலம் காட்டும் லண்டன் வானிலை கூட நன்றாக அமைந்திருந்தது. இதமான வெய்யில்.

மக்கள் வெள்ளம் படிப்படியாக அதிகரித்து ஜே, ஜே என்று அலைமோதத் தொடங்கிவிட்டது. மூன்று அரண்மனைகள் முன்னாலும் மக்கள் வெள்ளம் அலைமோதுவதற்கு தொலைக் காட்சி ஆக்கமும் ஊக்கமும் அளித்து வெற்றி கண்டது. ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வில் பங்காற்றுகிறோம் என்ற உணர்வு அவர்களை ஆட்கொண்டது. வரலாற்று முக்கியத்துவம் நிறைந்த ஒரு கடமையில் ஈடுபட்டுள்ளோம், இன்றைய நாளினை எமது வாழ்க்கையில் மறக்க முடியாது, இதைப் பற்றி எமது எதிர்காலச் சந்ததியினருக்கு நாம் பெருமையுடன் சொல்லப் போகிறோம் என்ற பெருமை அவர்கள் உணர்வுகளில் நிறைந்தது.

நமது நாட்டில் பொங்கல், தீபாவளி, சுதந்திர தினம் போன்ற வைபவங்கள் மக்கள் கலந்து கொண்டாடும் வைபவங்களாக உள்ளன. தெருக்களில் ஜே, ஜே என்று மக்கள் அலைமோதி ஒரே அமர்க்களமாக இருக்கும். இத்தகைய, மக்கள் ஒன்றுகூடிக் கொண்டாடும் வைபவங்கள் பிரிட்டனில் இல்லை. நத்தார் பண்டிகை, புதுவருடப் பண்டிகையின் போது கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருக்கள் ஆள்நடமாட்டமின்றி வெறிச்சோடிப் போய்க் காணப்படும். தத்தமது வீடுகளின் நான்கு சுவர்களுக்குள்ளேதான் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களுடன் கொண்டாட்டங்கள் நடைபெறும்.

கோயில்களில்கூட, திருவிழா, ஊர்வலம், கலை நிகழ்ச்சிகள் என்று மக்கள் வெள்ளம் அலைமோத நமது நாட்டில் அமர்களப்படுத்துகிறோம். பிரிட்டனில் இவை எதுவுமே இல்லை. மக்கள் தேவாலயங்களுக்குப் போவதே குறைவு. வயதானவர்கள் யாராவது போனால் சரி. மக்கள் வரவின்மையால் தேவாலயங்கள் இழுத்து மூடப்பட்டு வருகின்றன. அவற்றின் கட்டிடங்கள் விற்கப்பட்டு வருகின்றன. (லண்டனில் ஒரு தேவாலயக் கட்டிடம் பாரதீய வித்யா பவனாக செயல்படுகிறது. இன்னொரு தேவாலயக் கட்டடத்தில் முருகன் கோவில் அமைந்துவிட்டது).

இத்தகைய நாட்டில் டயானாவின் மரணம் மக்கள் தேசிய ரீதியில் ஒன்றுகூட அரிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியது. அவர்களது அன்றாட வாழ்க்கையில் உள்ள ஒரு பெரிய வெற்றிடத்தை அது நிரப்பியது.

பிரிட்டிஷ் மக்கள் தமக்கு அறிமுகமில்லாத ஒருவரோடு பொது இடங்களில் கூடப் பேசமாட்டர்கள். “ஹலோ” என்று சொல்வதே குறைவு. நீண்டதூர பஸ், ரயில் பயணங்களின்போது கூட அருகருகே உள்ள இருக்கைகளில் அமர்ந்திருப்பவர்கள் கூட ஒருவரோடு ஒருவர் பேசுவதைக் காண்பது அரிது. இது பிரிட்டிஷ் மரபு.

டயானாவின் மரணத்தையொட்டிச் சேர்ந்த கூட்டங்களில் இருந்த மக்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டார்கள். முன்பின் தெரியாதவர்களும் ஒருவரோடொருவர் கூச்சமின்றிப் பேசினார்கள். மரபு என்ற பெயரில் தம்மைச் சுற்றித் தாமே கீறிக்கொண்ட கோடுகளைத் தாண்டி முதல் முறையாக வெளியே வந்தார்கள். டயானாவின் பெயரால் ஒரு மிகப் பெரிய சுகானுபவம் அவர்களுக்குக் கிடைத்திருக்கும். எனினும் ஒரே நாளில் மரபுகள் மாறமுடியாது. மாறுவதுமில்லை. டயானா அஞ்சலி நிகழ்வு முடிந்த மாத்திரத்தே பிரிட்டிஷ் மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரும் தாம் கிழித்த கோடுகளுக்குள் தாமாகவே திரும்பிவிட்டார்கள். தத்தமது கூடுகளுக்கு மீண்டு விட்டார்கள்.

தொலைக்காட்சியைப் பொறுத்தமட்டில், அதன் முக்கியமான மூன்று அலைவரிசைகளுக்கும் உரிமையாளர்கள் வெவ்வேறு கம்பனிகள். ஒவ்வொரு அலைவரிசையையும் எத்தனை நேயர்கள் பார்க்கிறார்கள் என்று உடனுக்குடன் கணக்கெடுக்க பிரிட்டனில் வசதிகள் உள்ளன. எனவே மூன்று அலைவரிசைகளும் 'அருளிச் செய்த டயானா புராணங்களில்' எந்த அலைவரிசையை மக்கள் விரும்பி பார்த்தார்கள் என்ற புள்ளிவிவரப் போட்டிக்காக இந்த அலைவரிசைகளின் ஒளிப்பரப்பாளர்களும் போட்டி போட்டார்கள்.

மக்களை வசீகரிக்கும் சக்தி எந்த ஒளிபரப்பாளருக்கு உண்டோ அதற்கேற்ப அவர்களது சம்பளமும் உயரும். ஒரு வருடத்திற்கு 1,60,000 டாலர் சம்பளம் பெறும் ஒளிபரப் பாளர்களும் பிரிட்டனில் உள்ளனர்.

எனவே நீயா நானா என்று போட்டி போட்டுக்கொண்டு தொலைக்காட்சி ஒளிப்பரப்பாளர்கள் டயானாவின் சமூகப் பங்களிப்பை மிகைப்படுத்தியதில் ஆச்சரியம் ஏதும் இல்லை. நாடெங்கும் மக்கள் மத்தியில் ஒரு பரவலான ஹிஸ்டீரியாவை ஏற்படுத்தியதில் தொலைக்காட்சியின் முக்கியமான பங்களிப்பை மறுக்க முடியாது.

தொலைக்காட்சி அலைவரிசைகளின் நேயர் செல்வாக்குப் போட்டியில் பிபிஸியின் முதலாவது அலைவரிசை நிகழ்ச்சியைத்தான் அதிகமான நேயர்கள் விரும்பிப் பார்வை யிட்டார்கள் என்ற புள்ளிவிபரங்கள் பின்னால் அறிவிக்கப் பட்டன. எனவே மார்ட்டின் லூயிஸ் மற்றும் அவரது சக ஒளிபரப்பாளர்களின் முயற்சிகள் வீண்போகவில்லை.

டயானா இறந்து ஒரு வாரத்தின்பின் நடைபெற்ற அவரது இறுதிச் சடங்குகளை ஒட்டி ஐம்பது இலட்சம் மக்கள் லண்டனுக்கு வருவார்கள் என்று தொலைக்காட்சி அலை வரிசைசள் யாவும் ஒரு வாரகாலமாக இரவு பகலாகக் கூறி வந்தன; வரும்படி மறைமுகமாக மக்களைத் தூண்டி வந்தன. ஆனால் பதினைந்து இலட்சம் மக்கள் தான் வந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போல், இறுதிச் சடங்குகளை உலகெங்கும் 300 கோடி மக்கள் தொலைக்காட்சியில் பார்வையிட உள்ளார்கள் என்று ஒரு வாரமாக இரவு பகலாகத் தொலைக்காட்சி அலைவரிசைகள் கூறிவந்தன. ஆனால் சுமார் 100 கோடி மக்கள் தான் பார்வையிட்டார்கள் என்று இறுதியாக வந்த புள்ளி விபரங்கள் தெரிவித்தன.

திடீரென்று ஏற்பட்ட, ஏற்படுத்தப்பட்ட ஹிஸ்டீரியா அலை ஒரு வாரத்திற்குள்ளாகவே தணியத் தொடங்கிவிட்டது.

பிரிட்டனின் மக்கள் தொடர்பு சாதனங்கள் - பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி - டயானாவை ஒரு தேவதை ஆக்கிய விதம் மக்களிடையே சிறிது அதிருப்தியை ஏற்படுத்தியது என்று கருத இடமுண்டு. பிபிஸியின் "ரேடியோ-4" அலைவரிசையில் வெள்ளிதோறும் "பீட்பாக்" என்ற நேயர் கடித நிகழ்ச்சி இடம்பெற்று வருகிறது.

டயானாவின் மரணம் சம்பவித்து ஆறாவது நாள், அதாவது அவரது இறுதிச் சடங்குகளுக்கு முதல் நாள் நடைபெறவேண்டிய நேயர் கடித நிகழ்ச்சியை பிபிஸி ரத்துச் செய்யவேண்டி வந்தது. காரணம்? அவ் வாரம் நேயர் களிடமிருந்து வந்து சேர்ந்த பல நூற்றுக்கணக்கான கடிதங்களில் 98 சதவீதக் கடிதங்கள் ரேடியோ - 4 டயானாவின் அஞ்சலி நிகழ்ச்சிகளை ஒலிபரப்பிய முறையைக் கண்டித்திருந்தன. "அளவுக்கு மீறிவிட்டது," "மிகைப்படுத்தப் பட்டுவிட்டது" என்று நேயர்கள் குற்றம் சாட்டியிருந்தார்கள்.

செப்டம்பர் 18ம் தேதி, டயானாவின் இறுதிச் சடங்குகள் நிறைவேறி பன்னிரண்டு நாட்களின் பின்னர் பிபிஸியின் தொலைக்காட்சி - வானொலிப் பிரிவுகளின் உயர்மட்ட அதிகாரிகள் கூடினர். டயானாவின் இறப்பு முதல் இறுதிச் சடங்குகள் வரை தொலைக்காட்சியிலும் வானொலியிலும் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றி ஒரு மீளாய்வு நடத்தப்பட்டது. டயானா நிகழ்ச்சிகளை தயாரித்தளித்ததன் 'படிப்பினைகளை மனதில் கொண்டு' எதிர்கால நிகழ்ச்சிகள் எப்படி அமைய வேண்டும் என்று திட்டங்கள் தீட்டப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலஞ்சென்ற ஆறாவது ஜோர்ஜ் மன்னரின் மனைவி (எலிஸபத் மகாராணியின் அன்னை - 97 வயது) இறக்கும் பட்சத்தில் எத்தகைய நிகழ்ச்சிகள் தயாரித்தளிக்கப்பட வேண்டும் என்று தயார்நிலையில் இருந்த திட்டம் மறுபரிசீலனை செய்யப்பட்டது. நிகழ்ச்சிகளின் பரிமாணங்கள் குறைக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டது. மேலும், ஒரு வாரம் தொடர்ந்து துயரம் கொண்டாடும் முறை கைவிடப்படும். ஆறாவது ஜோர்ஜ் மன்னரின் மனைவி என்ற ரீதியில் அவர் ஆற்றிய சமூகப் பணி - குறிப்பாக இரண்டாவது உலக யுத்தத்தின்போது அவரது சீரிய பங்களிப்பு, குதிரைப் பந்தயங்கள் மீதும் ஸ்காட்லாந்து மீதும் அவருக்கு இருந்த பிரியம் என்ற அம்சங்களை உள்ளடக்கிய செய்திப்படங்களை உடனடியாகத் தயாரித்து தயார் நிலையில் வைத்திருக்கவேண்டும் என்றும் முடிவு எடுக்கப்பட்டதாக தினப் பத்திரிகைகள் தெரிவித்தன.

ஆனைக்கும் அடி சறுக்கும் என்பது பழமொழி. இனிமேல் அடி சறுக்காமல் இருக்க பிபிஸி போட்ட திட்டமும் பிரமாதம். ஆனால் - இந்தத் திட்டங்களை பத்திரிகைவரை வராமல் பரம இரகசியமாக வைத்திருக்கலாமே!

97 வயதான, இன்னமும் இலட்சுமி களை முகத்தை விட்டு அகலாத, அந்த கொள்ளுப்பாட்டியம்மா கி.பி. 2000 வரை - 100 வயதுவரை வாழ்வதை அவரது குடும்பம் விரும்பக்கூடும். இந்தச் செய்தியை பத்திரிகைகளில் வாசிக்கும்போது அவர் வருத்தப் படாமல் இருப்பாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்ச்சாரதி மீது பழி விழுந்தது!
## குடிபோதையில் 120 மைல்வேக ஓட்டம்!

டயானாவின் மரணச் செய்தி அறிவிக்கப்பட்ட ஞாயிறன்று அவரது தம்பியான ஏர்ள் ஸ்பென்சர் உணர்ச்சி கரமான அறிக்கை ஒன்றை தகவல் தொடர்பு ஸ்தாபனங்களுக்கு விடுத்தார்.

தென்னாபிரிக்காவிலுள்ள கேப் டவுனில் வசித்து வரும் இவர் தொலைக்காட்சிக் காமராக்களுக்கு முன்னால் தமது அறிக்கையை வாசித்தார்.

"இது ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டும் நேரமல்ல. கவலைக்குரிய நேரம். எனினும் பத்திரிகைகள் இறுதியில் டயானாவைக் கொன்றுவிடும் என்று நான் எப்போதும் நம்பியிருந்தேன் என்பதை இங்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் அவரது மரணத்தில் பத்திரிகைகளின் பங்களிப்பு இவ்வளவு நேரடியான முறையில் அமையும் என்று நான் கூடக் கற்பனை செய்து பார்த்ததில்லை."

"ஒவ்வொரு பத்திரிகையின் ஆசிரியர் மற்றும் உரிமையாளர் கரங்களில் இன்று இரத்தம் படிந்துள்ளது" என்று அவர் மேலும் குற்றம் சாட்டினார். "இவர்கள் தான் ஈவிரக்கமற்ற பேராசைக்காரர்களை, ஆபத்து என்னவானாலும் சரி, டயானாவின் படங்களை எடுத்து வரும்படி தூண்டினார்கள். இவர்கள் தான் அவரின் அந்தரங்கத்தை ஊடுருவிய, அவரைச் சுரண்டிப் பிழைத்த படங்களுக்குக் கூலி கொடுத்தார்கள்," என்று ஆவேசத்துடன் பேசி பத்திரிகைகளுக்கு, குறிப்பாக பிரிட்டிஷ் பத்திரிகைகளுக்குச் சாட்டையடி கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அடி, பிரிட்டனில் பிரசுரமாகும் எட்டு பிரதான தினசரிப் பத்திரிகைகளையும் அவற்றின் ஞாயிறு இதழ்களையும் குறிக்கும். இந்தப் பத்திரிகைகளின் பெயர்களும், ஜுன் 1997ல் எடுக்கப்பட்ட கணிப்புகளின்படி அவர்களது வாசகர் தொகையும் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | சன் (THE SUN) * | 37,89,168 |
| | நியூஸ் ஆப் த வேர்ல்ட் (NEWS OF THE WORLD) * * | 43,31,800 |
| 2. | டெயிலி மிரர் (THE DAILY MIRROR) * | 23,03,406 |
| | சன்டேமிரர் (THE SUNDAY MIRROR) * * | 22,24,136 |
| 3. | மெயில் (THE MAIL) * | 21,61,376 |
| | மெயில் ஆன் சன்டே (THE MAIL ON SUNDAY) * * | 21,00,068 |
| 4. | எக்ஸ்பிரஸ் (THE EXPRESS) * | 12,21,330 |
| | எக்ஸ்பிரஸ் ஆன் சன்டே (THE EXPRESS ON SUNDAY) * * | 11,34,246 |
| 5. | டெயிலி டெலிகிராப் (THE DAILY TELEGRAPH) * | 10,90,515 |
| | சன்டே டெலிகிராப் (THE SUNDAY TELEGRAPH) * * | 8,53,956 |
| 6. | டைம்ஸ் (THE TIMES) * | 7,36,714 |
| | சன்டே டைம்ஸ் (THE SUNDAY TIMES) * * | 12,98,369 |
| 7. | கார்டியன் (THE GUARDIAN) * | 4,09,584 |
| | ஆப்சேவர் (THE OBSERVER) * * | 4,43,049 |
| 8. | இன்டிபெண்டன்ட் (THE INDEPENDENT) * | 2,55,888 |
| | இன்டிபெண்டன்ட் ஆன் சன்டே (THE INDEPENDENT ON SUNDAY) * * | 2,72,032 |

* தினசரி பத்திரிகை

** ஞாயிறு இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த எட்டுப் பத்திரிகைகளிலும் கடைசி நான்கும் (5,6,7,8) பெரிய பத்திரிகைகள் (BROAD SHEETS). அதாவது, தமிழ் நாட்டில் இருந்து வரும் தினமலர்,தினத்தந்தி, தினமணி, தினகரன் பத்திரிகைகளின் நீள அகலம் உள்ளவை.

முதல் நான்கு பத்திரிகைகளும் (1,2,3,4) சிறிய பத்திரிகைகள் (TABLOIDS). அதாவது, பெரிய பத்திரிகைகளின் நீள அகலத்தில் பாதியளவு உள்ளவை. முதல் இரு சிறிய பத்திரிகைகளும் செக்ஸ், கற்பழிப்பு, கொலை சம்பந்தப்பட்ட செய்திகளுக்கு ஏனைய ஆறு பத்திரிகைகளை விட கூடுதலான இடம் வழங்கிவருகின்றன. இந்த இரு பத்திரிகைகளின் வாசகர் தொகை ஏனைய ஆறு பத்திரிகைகளை விட அதிகமாக இருப்பது இதனால்தான்.

சிறிய பத்திரிகைகள் தமக்கு அதிக வாசகர்கள் இருப்பதைச் சொல்லி, பெரிய பத்திரிகைகளைக் கேலி செய்து வருகின்றன. பெரிய பத்திரிகைகளோ சிறிய பத்திரிகைகளை மட்டரகமான சுவை உள்ள பத்திரிகைகள் என்று பதிலடி கொடுத்து வருகின்றன.

மெயில், எக்ஸ்பிரஸ் ஆகிய சிறிய பத்திரிகைகளுக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வரும். சன், மிரர் ஆகிய சிறிய பத்திரிகைகளோடு எங்களை ஒப்பிடவேண்டாம். அவர்கள்தான் மட்டரகமான சுவை உள்ள பத்திரிகைகள். நாங்கள் உருவில் சிறிதாக இருந்தாலும் எங்கள் செய்திகள் பெரிய பத்திரிகைகளை விடத் தரமானவை, பெரிய பத்திரிகைகளை விட எங்களுக்கு வாசகர்களும் அதிகம் என்று பதில் வரும்.


ஒவ்வொரு பத்திரிகையும் வாசகர் தொகைப் பட்டியலில் தனக்கு மேலே உள்ள பத்திரிகையோடு கடுமையாகப் போட்டி போடும். அதன் வார்சகர் தொகையை முந்துவதற்கு தன்னாலான சகல அகட விகட சாமர்த்தியங்களையும் செய்வார்கள். வாரத்தில் ஒரு நாள் பத்திரிகையை பாதிவிலைக்கு விற்று விலைப்போர் நடத்துவார்கள்.

சன் பத்திரிகைக்கும் மிரர் பத்திரிகைக்கும் எப்போதும் மோதல். கீரியும் பாம்பும் போல மோதிக் கொள்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டயானாவின் தம்பி ஏர்ள் ஸ்பென்ஸர் பத்திரிகைகளுக்கு சாட்டையடி கொடுத்து தொலைக்காட்சியில் பேசுகிறார்.



காரோட்டிய ஹென்றி போல். தள்ளாத போதையில் சவால் விட்டார். 120 மைல் வேகத்தில் காரோட்டினார். டயானாவின் உயிருக்கு முற்றுப் புள்ளி வைத்தார்.



டயானாவை காலனிடம் விரட்டிய பப்பரட்சி ஓநாய்கள். கேலிச்சித்திரம் : நன்றி. "கார்டியன்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெயில், எக்ஸ்பிரஸ், டெலிகிராப் பத்திரிகைகள் எந்த நேரமும் ஒன்றையொன்று கண்டித்துக்கொண்டே இருப்பதைக் காணலாம்.

டெலிகிராபுக்கும் டைம்ஸுக்கும் எப்போதும் கடும் போட்டி. விலைப்போரில் இவர்கள்தான் தீவிரவாதிகள்.

லேபர், லிபரல் டெமோகிராட் கட்சிகளுக்கு கூடிய ஆதரவு தரும் - கார்டியன், இன்டிபென்டென்ட் இரண்டுக்கும் இடையே வாசகர் தொகைக்குப் போட்டி.

பப்பரட்சிகளுக்கு போட்டி போட்டுக்கொண்டு பணத்தை வாரி இறைத்து, படங்களை வாங்கிப் பிரசுரிப்பதில் சன், டெய்லி மிரர் முன்னணியில் நிற்கின்றன. டயானாவின் அந்தரங்கப் படங்களை பெருமளவு பிரசுரித்த சாதனை இவர்களுக்கு உரியது. டயானா - டோடியின் படங்களைப் பிரசுரித்த நாட்களில் விற்பனை பத்து இலட்சம் பிரதிகள் அதிகரித்ததாம்.

இந்த இரண்டு பத்திரிகைகளின் விற்பனை இந்த அளவிற்கு அதிகரிப்பதைச் சகிக்கமுடியாமல் ஏனைய ஆறு பத்திரிகைகளும் கூட இடையிடையே ராஜகுடும்ப அந்தரங்கச் செய்திகளையும் படங்களையும் மிகுந்த சங்கோஜத்தோடு பிரசுரிக்க ஆரம்பித்தன.

டெலிகிராப், எக்ஸ்பிரஸ், மெயில் என்பன மன்னர் ஆட்சியை (முடியாட்சி) பலமாக ஆதரிப்பவை. கார்டியன், இன்டிபென்டென்ட் என்பன ஜனாதிபதி ஆட்சியை (குடியாட்சி) பலமாக ஆதரிப்பவை. சன், மிரர் இரண்டும் இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன, 'நாங்கள் ஆடுவதும் பாடுவதும் காசுக்கு' என்ற ரீதியில் இயங்குகின்றன.

டைம்ஸ் மன்னராட்சியை ஆதரிப்பதாகச் சொல்லிக் கொண்ட போதிலும் அதுவும் காசில்தான் குறியாக இருப்பதாகத் தெரிகிறது. டைம்ஸ் - சன் இரண்டு பத்திரிகைகளுக்கும் உரிமையாளர் அவுஸ்திரேலியாவில் பிறந்த உலக செய்தித் தொடர்புச் சாதனச் சக்கரவர்த்தி ரூபட் மேர்டொக் அவர்கள். உலகெங்கும் அவரது தொலைக்காட்சி - பத்திரிகை சாம்ராஜ்யம் வியாபித்திருக்கிறது. இந்தியாவில் உள்ள ஸ்டார் சாட்டலைட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டி.வி.யின் அதிபர் இவர்தான். உலகத்து நாடுகளிலெல்லாம் மக்களாட்சி நிலவுவதைத் தான் விரும்பிய போதிலும், பிரிட்டனைப் பொறுத்தளவு மட்டும் அங்கே மன்னராட்சி நிலவுவதையே ஆதரிப்பதாகவும் இவர் முன்னர் ஒரு தடவை கருத்துத் தெரிவித்திருந்தார். இது எவ்வளவு தூரம் உறுதியான ஒரு நிலைப்பாடு என்று சொல்லமுடியாது.

பிரிட்டனில் இதுகாறும் நடைபெற்ற தேர்தல்களில் எல்லாம் இவரது இரு பத்திரிகைகளும் கன்சர்வட்டிவ் கட்சியைத்தான் ஆதரித்து வந்தன. ஆனால் 1997, மே மாதம் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் இவரது; சன் பத்திரிகை லேபர் கட்சிக்காக அதிதீவிரமாக உழைத்தது. அதே நேரத்தில் தனது டைம்ஸ் பத்திரிகையை கன்சர்வட்டிவ் கட்சிக்கு உழைக்க வைத்தார் மேர்டொக்.

டயானாவின் மரணத்தை அடுத்து வந்த ஏழு நாட்களில் பிரிட்டிஷ் பத்திரிகைகள் தினம் தினம் எடுத்த நிலைப்பாடுகள், அடித்த திகிலூட்டும் குத்துக்கரணங்கள் வியப்பையும் குழப்பத்தையும் ஊட்டுவனவாக அமைந்தன.

இந்தப் பத்திரிகைகளின் பின்னணியை நன்கு விளங்கிக் கொண்டால்தான் இவை எடுத்த குளறுபடியான நிலைப் பாடுகளை ஓரளவு புரிந்துகொள்ள முடியும்.

டயானாவின் மரணத்துக்கான பழி முதலில் பப்பரட்சிகள் மீது போடப்பட்டது. இதையடுத்த கட்டத்தில் பப்பரட்சிகள் - பத்திரிகை ஆசிரியர்கள் - பத்திரிகை உரிமையாளர்கள் ஆகிய மூன்று சாராரும் சேர்ந்து செய்த கொலை என்று சொல்லி, இந்த மூன்று சாராரையும் அவர்களது கரங்களில் கொலை செய்த இரத்தம் வடிய வடியக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தினார் டயானாவின் தம்பி.

உலக மக்களின் மனச்சாட்சி என்ற நீதிமன்றத்தில் இந்த மூன்று சாராரும் கொலைக்குற்றம் சாட்டி நிறுத்தப்பட்டபோது, இந்தப் பத்திரிகைகள் முகம் திருதிருவென்று விழிக்க, மனம் திக்திக்கென்று துடிக்க, தமது பத்திரிகைகளின் முதற் பக்கத்தில் டயானாவைத் தேவதையாக்கிச் செய்தி வெளியிட்டுவிட்டு, தாம் குற்றம்சாட்டப்பட்ட செய்திகளை பரபரப்பின்றி உட்பக்கங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டன. எங்கே மக்கள் வெகுண்டெழுந்து பத்திரிகை களைப் பகிஷ்கரித்து வீழ்த்திவிடுவார்களோ என்ற பயத்தில் தமது கைகளைப் பிசைந்து கொண்டு தடுமாறிக் கொண்டிருந்தார்கள்.

அந்த நேரத்தில்தான் -

பத்திரிகைகளது பதட்டத்தைத் தணிக்கும் அந்தச் செய்தி பாரிஸிலிருந்து வந்தது.

டயானா - டோடி பயணம் செய்த காரை ஓட்டிச் சென்ற ரிட்ஸ் ஓட்டல் உதவிப் பாதுகாப்பு அதிகாரி ஹென்றி போல் நிறைந்த மதுபோதையில் காரை ஓட்டினார் என்பது அவரது பிரேதப் பரிசோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டது. பிரேதப் பரிசோதனை செய்த சட்ட மருத்துவ அதிகாரி அவரது இரத்தத்தை சோதனைக்கு அனுப்பியபோது, அதில் லிட்டருக்கு 175 மில்லிகிராம் ஆல்கஹால் (மது) இருந்ததாக தெரிவிக் கப்பட்டது.

பிரெஞ்சு விதிகளின்படி இரத்தத்தில் லிட்டருக்கு 50 மில்லிகிராமிற்கு மேல் ஆல்கஹால் இருந்தால் அவர் காரோட்டத் தகுதியற்ற நிலையில் இருக்கிறார் என்பது அர்த்தம். அந்த நிலையில் அவர் காரோட்டினால் அது தண்டனைக்குரிய ஒரு குற்றமாகும்.

எனவே பிரெஞ்சுச் சட்டவிதிகளின்படி குடித்துவிட்டுக் காரோட்டுவதற்கு அனுமதிக்கப்பட்ட சலுகை அளவைவிட, மும்மடங்கிற்கும் அதிகமாகக் குடித்துவிட்டு அவர் காரை ஓட்டியிருக்கிறார் (பிரிட்டிஷ் விதிகளின்படி லிட்டருக்கு 80 மில்லிகிராமிற்கு அதிகமாக இரத்தத்தில் ஆல்கஹால் இருக்கும் போது கார் ஓட்டுவது குற்றமாகும்.)

அடுத்த பெரிய செய்தி - மணிக்கு 30 மைல் வேகத்திற்கு மேல் காரோட்டக்கூடாது என்ற தடை இருந்த சுரங்கச் சாலையில், ஹென்றி போல் மணிக்கு 120 மைல் வேகத்தில் காரை ஓட்டினார் என்பதை விபத்துக்குள்ளான வாகனத்தைப் பரிசோதித்தபோது தெரிய வந்தது.

மூன்றாவது பெரிய செய்தி - ரிட்ஸ் ஓட்டலின் பின் வாசல் வழியாக டயானா - டோடியோடு ஹென்றிபோல் வெளியேறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அங்கே காத்துநின்ற பப்பரட்சிகளைப் பார்த்து, "முடியுமானால் எங்களைத் துரத்திப் பிடியுங்கள் பார்க்கலாம்," என்று சவால் விட்டுவிட்டு காரை ஓட்டிச் சென்றாராம். சில சாட்சிகள் இச்செய்தியை பிரெஞ்சுப் போலீஸாரிடம் சொல்லி யிருக்கிறார்கள்.

பிரான்சில், உலகெங்கும் வழக்கில் இருப்பது போல, ஒரு மோட்டார் வாகனத்தை ஓட்டுவதற்கு ஒருவரிடம் லைசன்ஸ் இருக்கவேண்டும். ஆனால் கார் ஓட்ட லைசன்ஸ் உள்ள எல்லாரும் கார் ஓட்டுநர் என்ற அடிப்படையில் ஒரு காரில் பயணிகளை (பாஸன்ஜர்களை) ஏற்றிச் செல்ல முடியாது. ஹென்றி போலிடம் கார் லைசன்ஸ் மட்டும் தான் இருந்தது, கார் ஓட்டுநர் லைசன்ஸ் இருக்கவில்லை என்று பப்பரட்சிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் சந்தேகம் எழுப்பினர்.

ஹென்றி போல் ஓர் ஒண்டிக்கட்டை. அவருக்கு தீவிர குடிப்பழக்கம் இருந்தது. அவர் வேலை நேரத்தில் குடிக்க மாட்டார். ஆனால் கடமை நேரம் முடிந்த மறுகணமே பாரில் குடிக்க ஆரம்பித்துவிடுவார். தனியாகத்தான் குடிப்பார். தான் குடிகாரன் என்று மற்றவர்கள் நினைத்துவிடக்கூடாது என்பதற் காக வரிசையாக பல பார்களில் குடித்துக் கொண்டே போவார். ஒவ்வொரு பாரிலும் மிக நாகரிகமாகக் கொஞ்சம் கொஞ்சம் குடிப்பார்.

இத்தகைய திடுக்கிடும் தகவல்கள் ரிட்ஸ் ஓட்டல் சிப்பந்திகளிடமிருந்து படிப்படியாக வெளிவரத் தொடங்கின.

சம்பவம் நடந்த அன்று இரவு 8 மணிக்கே ஹென்றி போல் தனது கடமை முடிந்து ஓட்டலை விட்டுப் போய்விட்டார். அவரைத் திரும்பவும் ஒரு அவசர வேலைக்காக ஓட்டலுக்கு வரும்படி அவரது மோபைல் போனில் அழைத்தார்கள். அப்போது இரவு பத்து மணி. அவரும் ஓட்டலுக்கு வந்து சேர்ந்தார்.

ஓட்டலின் பிரதம பாதுகாப்பு அதிகாரி அவருக்குரிய பணியை விளக்கினார். ஓட்டலின் முன் வாசலில் பெருந்தொகை யான பப்பரட்சிகள் குழுமியிருக்கிறார்கள். அதனால் டயானாவும் டோடியும் தம் திட்டப்படி இரவு உணவிற்கு வேறொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவகத்திற்குப் போக முடியவில்லை. தமது திட்டத்தை மாற்றி ரிட்ஸ் ஓட்டலிலேயே இரவு உணவு சாப்பிடுகிறார்கள்.

இரவு உணவு முடிந்தபின் பப்பரட்சிகளை ஏமாற்றிவிட்டு அவர்கள் வெளியே செல்லவேண்டும். இதற்கு ஒரு திட்டம் தயாராக இருந்தது. டோடியும் டயானாவும் அன்றைய தினம் பாரிஸில் ஓடித் திரிந்த கார் அவர்களுக்குத் தயாராக முன் வாசலில் நிற்கவேண்டும். அந்தக் காரை அன்றைய தினம் ஓட்டிச் சென்ற சாரதியும் தயாராக தனது சீட்டில் இருக்கவேண்டும்.

டயானாவும் டோடியும் ஓட்டலின் முன்வாசல் வழியாக எந்த நேரமும் வெளியே வரப்போகிறார்கள் என்று பாசாங்கு காட்டவேண்டும். அதே நேரத்தில் ஓட்டலின் பின் வாசல் வழியாக ஹென்றி போல் அவர்களை இன்னொரு காரில் ஏற்றிக்கொண்டு தப்பி ஓடவேண்டும்.

இது தான் திட்டம். இந்தத் திட்டம்தான் அன்று நள்ளிரவை அடுத்து செயற்படுத்தப்பட்டது. ஆனால் ஓட்டலின் பின் வாசலிலிருந்து சற்றுத் தொலைவில் இன்னொரு பப்பரட்சிகள் குழு டயானா - டோடி காருக்குத் தயாராக இருந்தது ஓட்டல் பாதுகாப்பு அதிகாரிகளுக்குத் தெரியாது.

ஹென்றி போல் அன்றிரவு எட்டு மணிக்கு தனது கடமை முடிந்து ஓட்டலைவிட்டு வெளியேறிய நேரத்திலிருந்து, மீண்டும் ஓட்டலுக்கு வருமாறு அழைக்கப்பட்ட இரவு பத்து மணி வரையில் அந்த இரண்டு மணி நேரமும் எங்கிருந்தார், என்ன செய்து கொண்டிருந்தார் என்பதை அறிய போலீஸ் விசாரணைகள் ஆரம்பமாகின. வழக்கம்போல வரிசையாக பல பார்களில் 'தீர்த்தம் அருந்தியிருப்பார்' என்று ஓட்டல் சிப்பந்திகள் வாயிலாக 'கிசு கிசுக்கள்' வரத் தொடங்கின. ஹென்றி போல் ஓட்டலுக்குத் திரும்பி வரும்போது 'ஒரு பன்றியைப் போல் குடித்திருந்தான்' என்று ஒரு சிப்பந்தி கூறியதாக ஒரு செய்தி காட்டுத் தீ போல் பரவியது.

ஹென்றி போல் அன்றிரவு குடித்திருக்கவில்லை என்று ஓட்டல் நிர்வாகத்திடமிருந்து உடனடியாக மறுப்பு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபத்துக்கு உடனடிக் காரணகர்த்தாக்கள் காரை விரட்டிய பப்பரட்சிகளும் அவர்களுக்குச் சுளை சுளையாகச் சன்மானம் கொடுத்து அவர்களை வளர்த்து வரும் பத்திரிகை ஆசிரியர்களும் பத்திரிகை உரிமையாளர்களும்தான் என்ற நிலை மாறிவிட்டது.

விபத்துக்கு உடனடிப் பொறுப்பாளிகள் - தீவிர மதுபோதையில், "ஓட்டப் பந்தயத்துக்கு வருகிறீர்களா" என்று சவால்விட்டுவிட்டு, கார் ஓட்டுநருக்கான லைசன்ஸ் கூட இல்லாத நிலையில், மணிக்கு 30 மைல் வேகத் தடை இருந்த சாலையில் மணிக்கு 120 மைல் என்ற பயங்கர வேகத்தில் காரை ஓட்டிச் சென்ற ஹென்றி போலும், இத்தகைய வி.ஐ.பி.களை காரில் அழைத்துச் செல்ல அவருக்கு உத்தரவு தந்த ரிட்ஸ் ஓட்டல் நிர்வாகமும்தான் என்ற நிலை வந்துவிட்டது.

பிரிட்டிஷ் பத்திரிகை ஆசிரியர்களும் உரிமையாளர்களும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

தமது தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போய் விட்டது என்பதை உணர்ந்தனர். உடனடியாக, சுறுசுறுப்பாக காரியத்தில் இறங்கினர்.

ஹென்றி போலைப் பற்றிய செய்தியை எவ்வளவு பெரிய கொட்டை எழுத்துக்களில் போடமுடியுமோ, எவ்வளவு பரபரப்புடன் போடமுடியுமோ, அத்தனை மேளதாள அமர்க்களங்களுடனும் போட்டு தமது கரங்களில் இருந்ததாகச் சொல்லப்பட்ட இரத்தத்தைக் கழுவ முனைந்தனர்.

ஆனால் - விஷயம் அத்தோடு முடிவதாக இல்லை.

அடுத்தடுத்து வந்த செய்திகள் உற்சாகமூட்டுவனவாக இல்லை. முழுப் பூசணிக்காயை சோற்றில் போட்டு மூடி மறைக்க முடியுமா என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பலிகடாவைத் தேடிய பிரிட்டிஷ் பத்திரிகைகள் 'டயானா புராணம்' பாடின - ஏன்?

டயானாவின் கார்விபத்தை பிரெஞ்சுப் போலீஸார் வெகு தீவிரமாகப் புலன் விசாரணை செய்து வந்தனர். இதன் விளைவாகத் தினம் தினம் பரபரப்பூட்டும் புதுச் செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தன. இச் செய்திகளில் உண்மை எது, வதந்தி எது என்று கண்டுபிடிப்பது கஷ்டமாக இருந்தது.

பிரிட்டனில் நடைபெறும் ஒரு குற்றச் செயலை பிரிட்டிஷ் போலீஸார் புலன்விசாரணை செய்யும்போது விசாரணையில் அவ்வப்போது வெளிவரும் தகவல்களை அறிவிக்க பத்திரிகை யாளர் மாநாடுகளைக் கூட்டுவார்கள். இம் மாநாடுகளில் ஒரு போலீஸ் உயர் அதிகாரி பங்குபற்றி, தொலைக்காட்சி, வானொலி பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி தருவார்.

இத்தகைய மரபுகள் பிரெஞ்சுப் புலன் விசாரணைகளில் இல்லை. விசாரணை செய்யும் போலீஸ் அதிகாரிகளை அல்லது அவர்களோடு நெருங்கிய தொடர்பு உடையவர்களை பத்திரிகையாளர்கள் தனிப்பட்ட முறையில் அணுகிச் செய்தி சேகரிப்பார்கள். இச் செய்திகளை நம்பகமான வட்டாரங்களை ஆதாரம் காட்டி நிருபர்கள் வெளியிடுவார்கள். இந்தச் சூழ்நிலைகளில் செய்திகள் வெளியாகும்போது உண்மையான செய்திகளை வதந்திகள் கலப்படம் செய்வதும் உண்டு.

டயானாவின் விபத்தை அடுத்து ஏழுபேர் கைதானார்கள். இவர்களில் அறுவர் பப்பரட்சிகள். ஒருவர் அவர்கள் எடுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டயானா விடுமுறையைக் கழிக்க கடலில் குளித்தாலும்
பதுங்கியிருந்து பப்பரட்சிகள் படம் எடுத்துவிடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலிம் சுருள்களை உடனுக்குடன் கழுவுவதற்கு ஸ்டூடியோவுக்கு எடுத்துச் செல்லும் மோட்டார் சைக்கிள் கூரியர்.

இவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட 20 பிலிம் சுருள்களை போலீ'ஸார் கழுவிப் பரிசீலித்தபோது அப் படங்கள் பப்பரட்சிகளுக்கு எதிராகச் சாட்சியம் கூறின. 'திட்டமிடப் படாத கொலைக்குற்றம்' என்ற அடிப்படையில் அவர்கள் மீதான புலன் விசாரணை முடுக்கிவிடப்பட்டது. இந்தக் குற்றத்திற்கு ஆகக் கூடிய தண்டனை ஆயுள் தண்டனை ஆகும்.

இந்தப் பப்பரட்சிகள் தமது புகைப்படங்களை உலகத்துப் பத்திரிகைகளுக்கு விற்பதற்கு புகைப்பட ஏஜன்ஸிகளை பயன்படுத்தி வந்தனர். போலீஸ் புலன் விசாரணைகளில் பப்பரட்சிகளின் அக்கறையைக் கவனிப்பதற்கு இந்த ஏஜென் ஸிகள் உயர் மட்ட வழக்கறிஞர்களை அமர்த்தினர். அது போலவே, விபத்தில் உயிர் துறந்த தனது மகன் டோடியின் அக்கறைகளைக் கவனிப்பதற்கு முகம்மது அல்பாயத்தும் உயர்மட்ட பிரெஞ்சு வழக்கறிஞர்களை ஏற்பாடு செய்தார். டயானாவின் தம்பி சளைத்தவரா என்ன? விசாரணைகளில் தனது அக்காளின் நலன்களைக் கவனிப்பதற்கு அவரும் உயர்மட்ட பிரெஞ்சு வழக்கறிஞர்களை ஏற்பாடு செய்தார்.

இதன் விளைவாக இந்த மூன்று சாராருக்கும் (பப்பரட்சிகள், முகம்மது அல்பாயத், ஏர்ள் ஸ்பென்சர்) போலீஸ் புலன் விசாரணை விபரங்கள் உடனுக்குடன் கிடைக்க உரிமை பிறந்தது. போலீஸ் விசாரணைகள் பூர்த்தியானதும், விசாரணை ஆவணங்களை, கோப்புகளை ஆதாரமாக வைத்து ஸ்பென்ஸரோ அல்பாயத்தோ தத்தமது குடும்ப உறுப்பினரின் இறப்பை ஒட்டி விபத்துக்குப் பொறுப்பானவர் மீது நஷ்டஈடு வழக்குப் போடக்கூடிய சாத்தியம் ஏற்பட்டது.

பப்பரட்சிகளிடம் நஷ்டஈடு கோரி ஸ்பென்ஸரும் அல்பாயத்தும் வழக்கா? அல்லது பப்பரட்சிகளின் மீதும் குடிபோதையிலிருந்து ஹென்றி போலை காரோட்ட அனுமதித்த ரிட்ஸ் ஓட்டல் மீதும் ஸ்பென்ஸர் வழக்கா?

இதுதான் கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தவர்களோ சர்வதேச அந்தஸ்து உள்ள கோடீஸ்வரர்கள். இப்படி ஒரு நஷ்டஈடு வழக்கு நடக்கும் பட்சத்தில் தீர்வுத் தொகை பலகோடி டாலர்களாக இருக்கும்; நஷ்டஈடு கட்டுபவரை போண்டியாக்கிவிடும்.

விவாகரத்து மூலம் இரண்டேமுக்கால் கோடி டாலர் சொத்துக்கு அதிபதியான டயானா ஆயுள் காப்புறுதி ஏதும் செய்திருக்கவில்லை என்பதும் வெளிவந்தது.

தமது கட்சிக்காரர்கள் பின்னால் பெரும் நஷ்ட ஈடு கட்ட வேண்டி வரக்கூடும் என்ற பயங்கரச் சாத்தியக் கூற்றை மனதில் வைத்து அவர்களின் வழக்கறிஞர்களும் போலீஸ் விசாரணைகளில் மிகவும் ஜரூராக தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர்.

அல்பாயத்தின் நிலையோ மிகவும் தர்மசங்கடமான நிலை. மகனை விபத்தில் இழந்தார். தமது வருங்கால மருமகளை (அதாவது வருங்கால பிரிட்டிஷ் மன்னரின் தாயாரை) விபத்தில் இழந்தார். இந்த வேதனை போதாதென்று, வருங்கால மருமகளின் மரணத்திற்கு ரிட்ஸ் ஓட்டலும் பொறுப்பு என்ற நிலை வந்தால், தனது சொத்துக்களையே விற்று நஷ்ட ஈடு கட்டவேண்டும் என்ற நிலையா?

விதியின் விபரீத விளையாட்டுக்கு ஒரு வரம்பே இல்லையா?

அல்பாயத் தரப்பு வழக்கறிஞர்கள் சுறுசுறுப்பாக இயங்கினர்.

டயானா சென்ற காருக்கு முன்னால் ஒரு சிறிய கார் சாலையை அடைத்துக் கொண்டு குறைந்த வேகத்தில் போய்க் கொண்டிருந்தது. அந்தக் காருடன் மோதாமல் தவிர்க்க டயானாவின் காரோட்டி தனது காரைத் திடீரென்று வளைத்துத் திருப்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்ற ஒரு கோட்பாட்டை முன்வைத்தனர்.

பப்பரட்சிகள் குழுவில் அதிவேக மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் டயானாவின் வண்டியை முன்னேறிக் கொண்டு, வேண்டுமென்றே நடுச்சாலையில் குறைந்தவேகத்தில் வண்டியை ஓட்டிச் சென்றார். இவ்வாறு செய்து டயானாவின் வண்டியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகத்தைக் குறைத்துவிட்டால், பின்னால் துரத்தி வரும் பப்பரட்சிகள் டயானாவின் வண்டியை எட்டிப்பிடித்துப் படமெடுக்க வாய்ப்புக் கிடைக்கும் என்பது தான் திட்டம். இது ஒரு கோட்பாடு.

மேலும் டயானாவின் காரை ஓட்டிய ஹென்றி போலின் மேதாவிலாசத்தைப் பற்றியும் அல்பாயத்தின் வழக்கறிஞர்கள் பறைசாற்றத் தவறவில்லை.

ஹென்றி 41 வயது நிறைந்தவர். திருமணம் ஆகாதவர். 13 வருட காலம் ரிட்ஸ் ஓட்டலில் பாதுகாப்புத் துறையில் பணி புரிந்திருக்கிறார். உதவிப் பாதுகாப்பு அதிகாரியாக ஓட்டலில் சேர்ந்து, பிரதிப் பாதுகாப்பு அதிகாரி என்ற நிலைக்குப் பதவி உயர்வு பெற்றவர்.

ரிட்ஸ் ஓட்டலில் சேர்வதற்கு முன்னால் ஹென்றி பிரெஞ்சு விமானப்படையில் காப்டனுக்கு இணையான அந்தஸ்துடைய விமானஓட்டியாக இருந்தார்.

ஓட்டலில் பாதுகாப்பு அதிகாரியாகப் பணியேற்ற பின் அவர் இடையிடையே ஓட்டலுக்கு வரும் வி.ஐ.பி. களுக்கு காரோட்டியாகப் பணியாற்றி இருக்கிறார். மேர்சீடீஸ் பென்ஸ் கார்களை ஓட்டுவதற்கு பென்ஸ் கார் தயாரிப்பாளர்கள் வழங்கும் உயர் பயிற்சிகளில் பங்குபற்றுவதற்காக இரு தடவைகள் ஜெர்மனியில் உள்ள ஸ்டுட்காட் நகருக்குச் சென்றிருக்கிறார்.

வி.ஐ.பி.க்களை காரில் ஏற்றிச் செல்லும்போது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினால் வி.ஐ.பி.க்களை அத்தகைய தாக்குதல்களிலிருந்து காப்பாற்றிக் காரை ஓட்டிச் செல்லும் பயிற்சிகள் பெற்றிருக்கிறார். குண்டுகள் துளைக்க முடியாத கார்களை ஓட்டுவதில் பயிற்சி பெற்றிருக்கிறார். டயானா - டோடி பயணம் செய்த காரும் அத்தகையதே.

ஹென்றி போல் கடமையுணர்வும் பொறுப்புணர்வும் மிகுந்த ஒரு அதிகாரி. பதின்மூன்று வருடகாலம் ரிட்ஸ் ஓட்டலில் அவர் பணியாற்றியபோது அவருக்கெதிராக ஒரு குறையும் சொல்லப்பட்டதில்லை. அல்பாயத் அவர்மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டனில் உள்ள ஹரட்ஸ் நிறுவனத்தில் அதிபரின் பொதுமக்கள் தொடர்பு இயக்குநராகக் கடமையாற்றிய மைக்கல் கோல் என்பவரும் இதே தகவல்களை லண்டனில் வைத்து செய்தித் தொடர்பு நிறுவனங்களுக்கு வெளியிட்டார்.

பப்பரட்சிகள் விரட்டப்போனதால்தான் பென்ஸ் கார் அவர்களிடமிருந்து தப்பி ஓட நேர்ந்தது. அதன் விளைவாகத் தான் விபத்து சம்பவித்தது. எனவே விபத்துக்கான முழுப் பொறுப்பையும் பப்பரட்சிகள் தான் ஏற்கவேண்டும் என்று அல்பாயத் தரப்பில் வாதிக்கப்பட்டது.

டயானாவின் அகால மரணம் அறிவிக்கப்பட்டபோது பப்பரட்சிகளுக்கு எதிராக பொதுமக்கள் மத்தியில் எழுந்த கோப அலை அடங்கக் காணோம். அல்பாயத்தின் கார்ச்சாரதி குடிபோதையில் பப்பரட்சிகளுக்கு சவால் விட்டுவிட்டு மணிக்கு 120 மைல் வேகத்தில் காரை ஓட்டி விபத்துக் குள்ளானார் என்ற சேதி வெளிவந்த பின்னரும் பப்பரட்சிகளுக்கு எதிரான கோபம் அடங்கியதாகத் தெரியவில்லை.

அல்பாயத் நிறுவனத்தின் பொறுப்புணர்ச்சி அற்ற தன்மையால் தான் டயானா இறந்தார் என்று யாரும் கண்டித்ததாகத் தெரியவில்லை.

இதற்கு மாறாக -

பப்பரட்சிகளுக்கு எதிரான கோபம் தொடர்ந்தது.

பாரிஸில் விபத்து சம்பவித்த சுரங்கச் சாலைச் சுவர்களில் 'பப்பரட்சிக் கொலைகாரர்கள்' என்ற சுலோகங்களைப் பொதுமக்கள் எழுதி வைத்தார்கள்.

லண்டனில் அரண்மனைகளுக்கு முன்னால் படமெடுக்க வந்த பத்திரிகைப் படப்பிடிப்பாளர்களை கொலைகாரர்கள் என்று திட்டி பொதுமக்கள் விரட்டினார்கள். ஒரு படப்பிடிப்பாளர் நையப் புடைக்கப்பட்டார்.

பிரிட்டிஷ் வெளிநாட்டுறவு அமைச்சர் ரொபின் குக் கருத்துத் தெரிவிக்கையில் தனிநபர் அந்தரங்கத்தை பத்திரிகைகள் ஊடுருவுவது பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலிசபெத் டெய்லர் முதல் மடோனா வரை - பப்பரட்சிகளின் தொல்லைக்கு ஆளான உலகப் பிரமுகர்கள் எல்லாம் பப்பரட்சிகளுக்கு எதிராகப் போர்க்கொடி எழுப்பினர்.

விபத்து சம்பவித்து 48 மணி நேரத்துக்குள் பிரிட்டனில் உள்ள பத்திரிகைகளுக்கு எதிரான முறையீட்டுக் கமிஷன் சுறுசுறுப்படைந்தது. அதன் தலைவரான வேக்ஹாம் பிரபு, தான் பத்திரிகை ஆசிரியர்களை அழைத்து அவசர பேச்சுவார்த்தைகள் நடத்தவிருப்பதாக அறிவித்தார். டயானாவை படப்பிடிப் பாளர்கள் விரட்டியதன் விளைவுகளையும் ஒரு தனிநபரின் அந்தரங்கம் ஊடுருவப் படுவதைத் தடுக்கும் வழிவகைகளையும் பற்றி கமிஷன் ஆராயப் போவதாக அவர் அறிவித்தார்.

தாம் ஒரு பெரிய வம்பில் மாட்டியிருப்பதை பத்திரிகைகள் உணர்ந்தன.

இந்த வம்பிலிருந்து தப்புவது எப்படி?

உடனடியாக 'டயானா ஸ்தோத்திர மாலை' பாட வேண்டும்.

பப்பரட்சிகள் மீதும் பத்திரிகைகள் மீதும் பொதுமக்களுக்கு இருந்த பெரும் கோபத்தை எப்படியாவது திசைதிருப்பி வேறு யாரையாவது உடனடியாக பலிகடாவாக ஆக்கவேண்டும்.

ஒரு பிக்பாக்கட்டிடம் தனது பர்ஸைப் பறிகொடுத்த ஒரு அப்பாவி, "திருடன் திருடன்.. பிடி பிடி" என்று கத்திக்கொண்டு பிக்பாக்கட் பின்னால் ஓட, பிக்பாக்கட்டும் தனக்கு முன்னால் பஸ்ஸைப் பிடிக்க ஓடிக்கொண்டிருந்தவனைக் காட்டி, "திருடன் திருடன்..பிடி பிடி" என்று அவன் பின்னால் ஓட, தெருவில் உள்ள வழிப்போக்கர்கள் பஸ்ஸுக்கு ஓடியவனைப் பிடித்து நையப் புடைக்க, பிக்பாக்கட்டும் எட்டி இரண்டு உதை கொடுத்துவிட்டு பர்ஸுடன் நழுவிய கதை.

பிரிட்டனில் "பஸ்ஸுக்கு ஓடிய பலிகடா" யார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே 'டயானா வசை மாலை'
# வெளியே 'டயானா ஸ்தோத்திர மாலை'
# ஆகஸ்ட் 31ல் பிரிட்டிஷ் பத்திரிகைகளின் அலங்கோலம்

*டயானாவின் மரணம் சம்பவித்த அந்த ஞாயிற்றுக் கிழமையிலிருந்து (31.8.1997), அவரது இறுதிச் சடங்குககள் நடைபெற்ற அந்தச் சனிக்கிழமை வரை (6.9.1997), பிரிட்டிஷ் பத்திரிகைகள் தினம் தினம் வெளியிட்ட செய்திகளையும், சிறப்புக் கட்டுரைகளையும், ஆசிரியத் தலையங்கங்களையும் வரிசைப்படுத்தி வாசித்தால், பத்திரிகை உலக வரலாற்றில் சம்பவித்த, மிக ஆச்சர்யகரமான, கொள்கை ரீதியற்ற, அநாகரிகமான குத்துக் கரணங்கள் வெளிப்படும்.*

*பிரிட்டிஷ் பத்திரிகைகள் டயானாவின் மரணத்திற்கான பழியைப் போடுவதற்குத் தேர்ந்தெடுத்த பலிகடாக்கள் யாரென்பதும் புலப்படும்.*

உலகப் பத்திரிகைத் துறைக்கே தாம் தான் எடுத்துக்காட்டு என்ற பெருமையோடு இயங்கி வந்த பிரிட்டிஷ் பத்திரிகைகள், தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தலை குனிந்த வேதனைக்குரிய நாட்கள் - அந்த ஏழு நாட்கள்.

**அந்த ஏழு நாட்கள் -**
**ஞாயிறு, ஆகஸ்ட் 31, 1997.**

*டயானாவின் மரணம் அதிகாலை 4 மணியளவில் அறிவிக்கப்பட்டபோது, ஞாயிற்றுக் கிழமைப் பத்திரிகைகளின் (லண்டனுக்கான) இறுதிப் பதிப்புகளைவிட ஏனைய பதிப்புகள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவும் அச்சேறி நாட்டின் சகல பகுதிகளுக்கும் அனுப்பப் பட்டுவிட்டன.

இப் பத்திரிகைகளின் முதற் பக்கத் தலைப்புச் செய்தியை மட்டும்மாற்றி, டயானாவின் மரணத்தை அறிவிக்க மட்டுமே நேரம் இருந்தது. பெரும்பாலான ஞாயிற்றுக்கிழமைப் பத்திரிகைகள் தமது உட்பக்கங்களில் டயானாவைக் கண்டித்த அல்லது குறைகூறிய விஷயங்களைப் பிரசுரித்திருந்தன. இவற்றை மாற்றுவதற்கு கால அவகாசம் இருக்கவில்லை.

'சன்' பத்திரிகையின் ஞாயிறு இதழான 'நியூஸ் ஆப் த வேர்ல்ட்' தனது உட்பக்கங்களில், பத்திரிகையினுடைய அரண்மனைச் செய்தி ஆசிரியர் கிளைவ் குட்மன் எழுதிய இருபக்க பிரத்தியேகக் கட்டுரையொன்றை வெளியிட்டிருந்தது. இக்கட்டுரையில் முன்வைக்கப்பட்ட செய்திகளில் ஒன்று வருமாறு:

> "மனக்கவலை அடைந்துள்ள இளவரசர் வில்லியம் இன்று தனது அன்னையிடம் ஒரு உரிமைக் கோரிக்கையை முன்வைக்கப் போகிறார். அது என்னவெனில் தனது அன்னை அவரது காதலனும், ஸ்திரீலோலன் என்ற பெயர் பெற்றவரும், ஹரட்ஸ் நிறுவனத்தினுடைய வாரிசுமான டோடி அல்பாயத்தை தூக்கி வீசவேண்டும் என்பதே அது."

'சன்டே டைம்ஸ்' பத்திரிகையில் ஒலிவர் ஜேம்ஸ் என்பவர் ராஜகுடும்பத்தை துணிகரமான, உளவியல் ரீதியான ஒரு பகுப்பாய்விற்கு ஆளாக்கி, பின்வருமாறு எழுதியிருந்தார்:

> "எங்கள் வாழ்க்கையில் எதையோ ஒன்றை இழந்து விட்டதாக எங்களில் பலர் இன்று உணர்கிறோம்.. இந்தப் பிரச்சனை எங்கள் மண்ணில் உள்ள மிகக் கெட்டிக்கார மக்களை, மிகப் பணவசதி உள்ள மக்களை, மிக அழகிய மக்களைத் தழுவி நிற்கிறது- அவர்களில் ஒருவர் இளவரசி டயானா."

"எக்ஸ்பிரஸ் ஆன் சன்டே" பத்திரிகையில் பெட்ரனெலா வயாட் எழுதியது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு கொள்கைக்காக தியாகம் செய்தவர் என்று தன்னைக் காட்டிக் கொள்வதை டயானா சுவைத்து அனுபவிக்கிறார் போலத் தெரிகிறது. இதன் வாயிலாக மகிழ்ச்சியை அவர் என்றாவது ஒரு நாள் அடைந்தார் என்றால் ஆண்டவர் அவருக்கு உதவட்டும் - அந்த மகிழ்ச்சியே அவருக்குத் துயரத்தை ஏற்படுத்தும்."

அதே பத்திரிகையில் (முன்னாள் பிரதமர் மார்கரட் தாட்சரின் பத்திரிகை அதிகாரியாகக் கடமையாற்றியவரான) சர் பர்னாட் இங்கம் பின்வருமாறு எழுதியிருந்தார்:

"இளவரசி டயானாவின் பத்திரிகைத் தொடர்புகள் இப்போது தெளிவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. நல்லதோ கெட்டதோ, எப்படியாவது பத்திரிகையில் தனது பெயர் வந்தால் போதும்... டயானாவும் டோடியும் ஒருவருக்கு ஒருவர் என்று சொல்லிச் செய்தாற் போன்ற ஜோடிப் பொருத்தம் உடையவர்கள் என்று கேள்விப் படுகிறேன். இருவருக்கும் அறிவு குறைவு; வெட்க உணர்வும் குறைவு; ஆணவம் தான் அதிகம்."

சரியாக ஒரு வாரம் கழித்து, 'எக்ஸ்பிரஸ் ஆன் சன்டே' பத்திரிகையில் சர் பர்னாட் இங்கம் தனது கதையை மாற்றினார்:

"கடந்த ஞாயிற்றுக்கிழமை எனது கட்டுரை வெளி வந்த சமயம் இளவரசி டயானா இறந்துவிடுவார் என்று எனக்கு முன்கூட்டியே தெரிந்திருக்குமாயின், அவரது பத்திரிகைத் தொடர்புகளை குறைகூறுவதை விடுத்து அந்தப் பெருவிபத்தைத் தடுக்கும் முயற்சியில் கூடிய நேரத்தைச் செலவிட்டிருப்பேன்," என்று எழுதி முதல் வாரம் தான் எழுதிய கருத்துக்களுக்காக பொது மன்னிப்புக் கோரினார்.

சர் பர்னாட் இங்கம் டயானாவை வகிர்ந்தது இது தான் முதல் தடவை அல்ல. 1996ல் பி.ஆர்.வீக் (P R WEEK) என்ற இதழில் எழுதும்போது, குருவிமூளை உள்ளவர்களைத் (அதாவது, மூடர்களை) தவிர, மற்ற எல்லாரது உணர்ச்சிகளையும் டயானா புண்படுத்துகிறார், இதனால் தனது மகன்களை வெட்கப்படச் செய்கிறார்," என்று குறை சொன்னார். லண்டன் நகரில் பெரும் பணக்காரர்கள் வசிக்கும் செல்ஸீ பகுதிக்கு டயானா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைகுறையான ஆடை அணிந்து சென்றாராம். முழங்கால் வரையான நிக்கர்பொக்கர்ஸ் (KNICKER BOCKERS) என்ற காற்சட்டையை வெட்டிக் குட்டையாக்கி, அதை அணிந்து கொண்டு டயானா சென்றார் என்று விளாசியிருந்தார் சர் பர்னாட் இங்கம்.

டயானாவை ஒரு 'பத்திரிகைத் தளுக்குக்காரி' என்று கண்டித்த சர் பர்னாட் பின்வருமாறு தனது கட்டுரையை முடிவு செய்தார்:

"நான் மீண்டும் மீண்டும் தெளிவு படுத்துகிறேன். பப்ளிசிட்டி மூலம் வாழ்க்கை நடத்துபவர்கள் பப்ளிசிட்டியின் கரங்களாலேயே இறுதியில் சாகவும் வேண்டி வரும். பப்ளிசிட்டி என்னும் மருந்தை அளவுக்கதிகமான அளவுக்கு உட்கொண்டு ஏற்கெனவே வெறிக் கொண்டிருக்கும் டயானா மீள உயிர்ப்பிக்கும் கட்டத்தைத் தாண்டியிருக்கக்கூடும்."

"சண்டே மிரர்" பத்திரிகையின் (ஆகஸ்ட் 31, 1997) உட் பக்கங்களில் கிறிஸ் ஹச்சின்ஸ் என்பவர் எழுதிய கட்டுரையில் இருந்து ஒரு பகுதி:

கவர்ச்சிகரமான ஸ்திரீலோலன் டோடி பயாதுடன் தான் கொண்டுள்ள தற்போதைய காதல், தனது முன்னாள் காதல் உறவுகளின் நினைவுகளை மற்றவர்கள் ஞாபகத்திலிருந்து அழித்திருக்கக் கூடும் என்று டயானா நம்பத் தொடங்கிய அந்த வேளையில் நான் பெல்கிரேவியா வட்டாரத்து இரவு விருந்து வைபவங்களில் அந்த ஒலிப்பதிவு நாடா வலம்வர ஆரம்பித்தது. இது மிக, மிக. மிகச் சூடான ஒரு ஒலிப்பதிவு நாடா ஸ்குவிட்ஜிகேட் 2 (SQUIDGYGATE II) என்று பெயரிடப்பட்ட இந்த ஒலிப்பதிவு நாடா. பல வருடங்களின் முன் தனது கள்ளக் காதலனாக இருந்த ஜேம்ஸ் கில்பியுடன் டயானா போனில் உரையாடிய (இதுவரை வெளிவராத) சம்பாஷணையின் ஒலிப்பதிவு. (டயானாவும் கில்பியும் போனில் சல்லாபம் புரிந்த முதலாவது ஒலிப்பதிவு "ஸ்குவிட்ஜிகேட் - 1" என்ற பெயருடன் 1992ல் பிரிட்டனில் வெளிவந்தது) மேற்கு லண்டனில் உள்ள எங்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடற்பயிற்சிக் கூடத்தில், அடுத்த தடவை, நானும் டயானாவும் அருகருகே உள்ள ஓட்டப்பயிற்சி இயந்திரங்களின் மேல் ஓடிப் பயிற்சி பெறும்போது இந்த இரண்டாவது ஒலிப்பதிவைப் பற்றி டயானாவிடம் விசாரிக்க நான் மறக்கமாட்டேன்."

அதே பத்திரிகையில் கரோல் மலோன் டயானாவைப் பற்றி எழுதிய கட்டுரையிலிருந்து ஒரு பகுதி:

"சர்வதேச ஃபாஷன் வர்த்தக ஸ்தாபனமான GUCCI தமது வாடிக்கையாளர்களுக்கு பிரத்தியேகமான, முகத்தில் அணிந்துகொள்ளக்கூடிய மூடுதிறப்பு அமைவுகளை (ZIP) தைப்பதில்லை என்பது கவலைக்குரியது. அப்படி அமைப்பார்களேயானால் இளவரசி டயானா அதை அணிந்துகொண்டு, (இந் நாட்களில் அடிக்கடி நடைபெறும் ஒரு சம்பவமான) தனது விவகாரம் புரியாத வாயைத் திறந்து, சர்வதேச ரீதியிலான சர்ச்சைகளை உருவாக்குவதற்கிடையில், ஸிப்பை இழுத்து தனது பெரிய வாயை மூடிக்கொள்ள முடியும். இளவரசி 'தனது மூளை இயங்குவதற்குள் தனது வாயைத் திறக்கும்' நோயினால் அவஸ்தைப் படுகிறார் என்று நான் நினைக்கிறேன். இந்த நோய் அற்பப் பிறவிகளையும் மூளை மரணமடைந்தவர்களையும் தாக்குகிறது."

'ஆப்சேவர்' பத்திரிகையில் ஞாயிறுதோறும் வரும் அரசியல் சிலேடைக் கட்டுரையில் ஆகஸ்ட் 31ம் தேதி டயானாவைப் பின்வருமாறு விமர்சித்திருந்தார்கள்:

"கன்சர்வட்டிவ் கட்சியில் நம்பிக்கை வைப்பதில் எந்தப் பயனும் இல்லை என்று டயானா பகிரங்கமாகக் கூறியுள்ளார். பத்திரிகைகள் இத்தகைய சரக்கை எப்படிப் பொறுக்கியெடுக்கின்றன என்பது எனக்கு பேராச்சர்யத்தைத் தருகிறது. அதிலும், குறிப்பாக, இக்கருத்துக்களை உதிர்த்த பெண்மணி அரிஸ்டோட்டலினுடைய அறிவை உடையவரும் அல்ல. பெர்னாட்ஷாவின் சொல் நயத்தை உடையவரும் அல்ல; அதற்கு மாறாக அவரது அறிவுத் திறனின் அளவெண் (I.Q.) தற்போது அவருக்கு உள்ள

அளவை விட ஐந்து புள்ளிகள் குறைவாக இருந்திருப்பின் செடிகொடிகளின் அறிவே அவருக்கு இருந்திருக்கும். தினம் தினம் அவருக்கு தண்ணீர் ஊற்றவேண்டிய நிலை வந்திருக்கும்."

டயானா மரணமான அதே தினத்தில், பிரிட்டிஷ் பத்திரிகைகளின் கடைசிப் பதிப்பு தவிர்த்த ஏனைய பதிப்புகளில் எல்லாம் அவரைப் பற்றி வந்த கருத்து அளவீடுகள், விமரிசனங்களில் இருந்து தேர்ந்து எடுக்கப்பட்ட ஒரு சில முத்துக்கள் தாம் இவை. இவற்றை அர்த்தமற்ற கண்டனங்கள் என்று உதாசீனம் செய்ய முடியாது.

தான் மரணமடைவதற்கு முதல் நாள் வரை டயானா வாழ்ந்துவந்த கட்டுப்பாடற்ற, கட்டுக்கோப்பற்ற, எதிர்கால பிரிட்டிஷ் மன்னரின் தாய் என்ற அந்தஸ்திற்கு அறவே ஒவ்வாத அலங்கோலமான வாழ்க்கைக்குக் கிடைத்த விமரிசனங்கள் தாம் இவை.

எனினும், பத்திரிகைகளுக்காகப் படம் பிடிக்கச் சென்ற பப்பரட்சிகள் விரட்டியதன் விளைவாக டயானா அகால மரணம் அடைந்தார் என்ற அதிர்ச்சிச் செய்தி எட்டியவுடன் பத்திரிகைகள் வெலவெலத்துப் போய் கடைசிப் பதிப்பின் முதற் பக்கங்களை மட்டும் மாற்றிவிட்டன.

அதாவது -

முதலாவது பக்கத்தில் 'டயானா ஸ்தோத்திர மாலை!' உட் பக்கங்களில் 'டயானா வசை மாலை!'

டயானாவைப் பற்றி இத்தனை அர்ச்சனை, அபிஷேகங்கள் உட்பக்கங்களில் வெளிவந்த அன்று,அவற்றின் முதற் பக்கங்களில் வந்த புகழோவியங்கள் எத்தகையன என்று பார்ப்போமா? நமது ஹாஸ்ய ரசத்திற்கு விருந்து படைப்போமா?

"தனது இதயராணிக்காக ஒரு தேசம் கண்ணீர் விடுகின்றது."

- **'எக்ஸ்பிரஸ்', தலைப்பு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கள் எல்லாரது இதயங்களினதும் மகாராணி".

-'சன்', தலைப்பு.

"காற்று வெளியில் ஒரு மெழுகுவர்த்தியாய் நீ இருந்தாய். மங்காத ஒளியை நீ அள்ளித் தந்தாய். தீபம் இன்று அணைந்துவிட்டதே!"

-'சன்', ஆசிரியர் தலையங்கம்.

"பலவீனம், காற்று வெளியில் ஒரு மெழுகுவர்த்தியின் பலவீனத் தோற்றம், அது தான் பொதுமக்கள் மத்தியில் டயானாவின் உன்னத குணாதிசயமாகத் தோன்றியது."

- ஜான் எசாட், 'கார்டியன்'

"அங்கே, கான்கிரீட்டினால் அமைக்கப்பட்ட ஒரு சுரங்கச் சாலையில், ஒரு மேர்சிடீஸ் வாகனத்தின் சிதைவுகள் காணப்படுகின்றன. இத்தகைய கவர்ச்சிகரமான ஒரு உயிர் இத்தகைய சாதாரணமான ஒரு இடத்தில் அணைக்கப்பட வேண்டும் என்பது இயற்கையின் பெரிய கேலிக் கூத்துக்களில் ஒன்று. எனினும் இது தான் உண்மை. பாரிஸ் நகரின் சாலைகளுக்கு அடியில்தான் உலகெங்கணும் உள்ள பல கோடிக்கணக்கான மக்களுக்கு ஒளிவீசிய விளக்கு அணைக்கப்பட்டது."

- ஜாக் கீ & ஜான் கோல்ஸ், 'எக்ஸ்பிரஸ்'

"குன்றின் மேலிட்ட ஒரு தீபம் அணைந்துவிட்டது."

- முன்னாள் பிரதமர் மார்கரட் தாட்சர், 'சன்.'

"எங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி, கவலைக்கடலில் ஆழ்த்தி விட்டு, கதிர் விரிய ஒரு கவர்ச்சிகரமான ஒளி அணைக்கப்பட்டுவிட்டது"

- "எக்ஸ்பிரஸ்", ஆசிரியர் தலையங்கம்.

"பொதுவாழ்க்கை என்ற வானவெளியினூடாக ஒரு வால் வெள்ளி பறந்து சென்றது, உலகத்தை ஆனந்தக் களிப்பில் ஆழ்த்தியது."

- சைமன் ஜென்கின்ஸ், 'டைம்ஸ்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்றிரவு வானத்தில் துலங்கும் மிகப் பிரகாசமான விண்மீன் டயனா தான்."

- ஆர்ச்சர் பிரபு, 'சன்'

"ஒரு பிரகாசமான நட்சத்திரம் திடீரென்று அணைக்கப் பட்டுவிட்டது."

- ஹேர்ட் பிரபு, 'எக்ஸ்பிரஸ்'

"மாசுமறுவற்ற ஒளிக்கீற்றை வெளிப்படுத்திய மாணிக்கக்கல் டயானா."

- பால் ஜான்சன், 'டெயிலி மெயில்'

"இந்த ஒளியை நாங்கள் இனிமேல் காணப்போவதில்லை."

- பிரியன் ரீட், மிரர்

"கவர்ச்சி என்னும் ஒளியில் துலங்கிய வண்ணத்துப் பூச்சி டயானா. அந்த ஒளி எங்கள் வாழ்க்கைகளுக்கு ஒளியூட்டியது."

- ரொஸ் பென்சன், 'எக்ஸ்பிரஸ்'

'PRIVATE EYE' ('அந்தரங்கக் கண்') என்பது பிரிட்டனில் மாதமிரு முறை வெளிவரும முதல்தர அரசியல் சிலேடைச் சஞ்சிகை (பூகம்மது பின் துக்ளக் - கவனிக்கவும்). இந்தப் பத்திரிகைக்துப் பிரிட்டிஷ் தினப் பத்திரிகைகளின் கூத்துக்கள் எரிச்சலை ஊட்டின.

செப்டம்பர் 5, 1997ல் வெளிவந்த 'பிரைவேட் ஐ' இதழில், பிரிட்டிஷ் பத்திரிகைகள் ஆகஸ்ட் 31ல் தமது உட் பக்கங்களில் 'டயானா வசை மாலை'யும் வெளிப்பக்கத்தில் 'டயானா ஸ்தோத்திர மாலை'யும் பிரசுரித்த விபரங்களை மேற்கோள் களுடன் பிரசுரித்தது.

மேலும், 'THE DAILY GNOME' ('தினப் பூதம்') என்ற ஒரு கற்பனைப் பத்திரிகை டயானா சம்பந்தமாக ஒரு பொது மன்னிப்பு கேட்பதாகக் கற்பனைசெய்து பிரிட்டிஷ் பத்திரிகை களுக்கு சிலேடை மூலம் சாட்டையடி கொடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GNOME என்ற சொல்லுக்கு இரு அர்த்தங்கள் உள்ளன. முதலாவது அர்த்தம்: அடி நிலக் கனிச் செல்வங்களைக் காப்பதாகக் கருதப்படும் குள்ளமான, அருவருப்பான தோற்றமுடைய ஒரு பூதம். (பிரிட்டிஷ் தினப் பத்திரிகைகள் பத்திரிகா தர்மத்தைக் காப்பதாகச் சொல்லிக்கொள்ளும் அருவருப்பான பத்திரிகைகள் என்பது சிலேடை). இரண்டாவது அர்த்தம்: நீதி மொழி, மூதுரை. (பிரிட்டிஷ் பத்திரிகைகள் ஊருக்குத் தான் உபதேசம் செய்கின்றன, அந்த உபதேசங்களின் வழி தாங்கள் நடந்துகொள்வதில்லை என்பது சிலேடை).

'பிரைவேட் ஐ' சஞ்சிகையில் வந்த அந்த 'மன்னிப்புச் செய்தி' இதோ:

# தினப்பூதம்

## — காலஞ் சென்ற இளவரசி டயானா —

## மன்னிக்க வேண்டுகிறோம்.

கடந்த சில வாரங்களாக (கடந்த பத்து வருட காலத்தை குறிப்பிட விரும்பவில்லை) தினப்பூதம் பத்திரிகையில் உள்ள நாங்களும், பொதுவாக மற்ற எல்லாப் புதினப் பத்திரிகைகளும், கவனக்குறைவு காரணமாக சில கருத்துக்களை முன் வைத்திருக்கக் கூடும்: காலஞ் சென்ற வேல்ஸ் இளவரசி ஒரு வழியில் நியூராட்டிக் தன்மை.உள்ளவர், பொறுப்பில்லாமல் தன் மனம் போன போக்கிலே நடந்து கொள்பவர், சூழ்ச்சித் திறனுடன் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்பவர், சதா பிரச்னைகளை உருவாக்குபவர், தனக்குத் தொடர்பற்ற அரசியல் விவகாரங்களில் மீண்டும் மீண்டும் தலையிட்டவர், பெயர் களங்கம் அடைந்த ஒரு எகிப்து நாட்டு வியாபாரியின் மகனுடன் மத்தியதரைக்கடல் பிரதேசத்தில் காதல் விளையாட்டுக்களில் ஈடுபட்டு மாட்சிமை தங்கிய மகாராணியாரை தனிப்பட்ட முறையில் வெட்கித் திக்குமுக்காடச் செய்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயங்களின் இளவரசி உண்மையில் உலகத்தில் இதுவரை காலமும் வாழ்ந்த மிகத் தெய்வத்தன்மை வாய்ந்த பெண்மணி என்பதையும், தனது அறச்சிந்தனை சார்ந்த செயல்கள் மூலம் உலகெங்கும் வாழும் பல நூறு கோடி மக்களுக்கு தமது அபிலாஷைகள் நிறைவேறும் என்ற நம்பிக்கையை ஊட்டியவர் - இடுக்கண் களையும் வகையில் உதவிகளை ஆற்றியவர் என்பதையும், நாங்கள், இன்று ஞாயிற்றுக் கிழமை காலை முதல் தான் மெய்யாக உணர்கிறோம்.

இந்த அவலநாளன்று எங்களுடைய சகல வாசகர்களுக்கும் எங்களுடைய மனமார்ந்த, ஆழ்ந்த பாசாங்கினை (HYPOCRISY) உணர்த்திக் கொள்வதோடு, எது எப்படி இருந்தாலும், வாசகர்கள் எங்களுடைய பத்திரிகையை தொடர்ந்தும் விலைகொடுத்து வாங்குவார்கள் என்ற ஆர்வத்துடன் கூடிய நம்பிக்கையையும் பிரார்த்தனைகளையும் முன்வைக்கிறோம்.

தினப்பூதம் உரிமையாளர் பிரபுவுக்காக,
(ஒப்பம்) ஈ. ஸ்ட்ரோப்ஸ்
தினப் பூதம்
காற்றில் மெழுகுவர்த்தி
ஹம்பக்
பேர்க்ஸ்

எப்படியிருக்கிறது 'பிரைவேட் ஐ' சஞ்சிகையின் சாட்டையடி?

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி அஞ்சலி செய்வாரடி கிளியே என்போமா?

இந்தச் சஞ்சிகை செப்டம்பர் 5 ஆம் தேதி நியூஸ் ஏஜன்ட் கடைகளுக்கு வழக்கம்போல விநியோகிக்கப் பட்டபோது அந்த வார இதழை ஏற்றுக்கொள்ள பெரும்பாலான கடைகள் மறுத்துவிட்டன.

காரணம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஒரு நெத்தியடி அச் சஞ்சிகையில் வருகிறது என்று உளவறிந்த தினப் பத்திரிகைகளின் பலம் வாய்ந்த உரிமையாளர்கள், நியூஸ் ஏஜண்ட் கடைகளின் ஒட்டுமொத்த முதலாளி நண்பர்களின் காதில் இரகசியமாக எதையோ ஏற்கெனவே ஓதியிருந்தது தான் காரணம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராண்ட மன்னாதிமன்னருக்கே பதிக்காத கொடியை 'பத்திரிகைத் தளுக்குக்காரி'க்காக பதிக்கச் சொன்னார்கள்!

டயானா மரணத்தைத் தழுவிய தினத்தன்று நிகழ்ந்த தப்புத் தாளங்களை இதுவரை ஆராய்ந்தோம். அடுத்து வந்த ஆறு நாட்களின் நிகழ்வுகளையும் பிரிட்டிஷ் பத்திரிகைகள் பிரசுரித்த செய்திகள், பத்திரிகைகளுக்கு, விஷயமறிந்த வட்டாரங்கள் சொல்லி வைத்த இரகசியச் செய்திகள், கட்டுரைகள், ஆசிரியர் தலையங்கங்கள் வாயிலாகத் தரிசிப்போம்.

**அந்த ஏழு நாட்கள் -**
**திங்கள், செப்டெம்பர் 1**

"சீமாட்டியாகப் பிறந்தார், எங்கள் இளவரசியாக மாறினார், தூயதிருத் தொண்டராக (SAINT) இறந்தார்" என்றும்; "ஒரு பெண் தெய்வத்தின் மந்திர சக்தி" என்றும் 'டெயிலி மிரர்' பத்திரிகையின் இரு தலையங்கங்கள் பக்திப் பரவசத்துடன் வெளிவந்தன. சொர்க்கத்தில் வழங்கப்படுகின்ற பட்டங் களின் அந்தரங்கத்தையும் ஊடுருவாமல் பூமியில் வைத்தே டயானாவுக்கு பிரியாவிடை தந்தது 'சன்' பத்திரிகையின் தலையங்கம்: "இனிய இளவரசியே, குட் நைட்."

மகாராணியின் அரண்மனை ஆலோசகர்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் சோதனைக் காலம் திங்கள் காலை ஆரம்பமாயிற்று. டயானாவின் உடலை ஞாயிறு மாலையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிசிலிருந்து லண்டனுக்கு இளவரசர் சார்லஸ் கொண்டுவந்து விட்டார். உடலும் சென் ஜேம்ஸ் அரண்மனையில் வைக்கப்பட்டு விட்டது. இறுதிச் சடங்குகளுக்கு எத்தகைய ஒழுங்குகளைச் செய்வது?

சார்லஸ் - டயானா விவாகரத்துத் தீர்வுபற்றி இரு சாராரின் வக்கீல்களும் விவாதித்தபோது 'மாட்சிமை தங்கிய' (HER ROYAL HIGHNESS) என்ற பட்டத்தை டயானா துறக்க விரும்புகிறார் என்று அவர் தரப்பில் சொல்லப்பட்டது. அரச மரபும் அது தான். முடிக்குரிய இளவரசரின் மனைவி என்ற நிலையிலிருந்து விலகி, மனைவி விவாரகத்து பெறும்போது அந்தப் பட்டத்தைப் பாவிக்க முடியாது. எனினும் அந்தப் பட்டத்தை தொடர்ந்து பாவிக்க தனக்கு அனுமதி தருவார்கள் என்று டயானா நம்பியிருந்தார். அது நடக்கவில்லை.

விவாகரத்தின் பின் 'மாட்சிமை தங்கிய' என்ற பட்டத்தை டயானா இழந்தார். 'இளவரசி டயானா' என்று தன்னை அழைத்துக் கொள்ளும் தகுதியையும் இழந்தார். அதற்குப் பதிலாக, 'டயானா, வேல்ஸ் இளவரசி' என்று சொல்லிக்கொள்ள மட்டும் விவாகரத்துத் தீர்வு இடமளித்தது.

இதன் காரணமாக பூரண அரச மரியாதைகளுடன் இறுதிச் சடங்குகள் நடைபெறும் உரிமையை டயானா இழந்தார். சற்றுக் குறைந்தபட்ச அரச மரியாதைகளுடன் இறுதிச் சடங்குகளை நடத்தும் நோக்கத்துடன், "தனித்தன்மை வாய்ந்த ஒருவருக்கேற்ற தனித்தன்மை வாய்ந்த இறுதிச் சடங்குகள்' டயானாவுக்கு ஏற்பாடு செய்யப்படும்" என்று அரண்மனை அதிகாரிகள் அறிவித்தனர்.

மரபும் சம்பிரதாயமும் பார்க்கத் தேவையில்லை. அவற்றை மீறி பூரண அரச மரியாதைகளுடன் இறுதிச் சடங்குகள் செய்யப்படவேண்டும் என்று நாடு எதிர்பார்க்கிறது என்று நாட்டின்மேல் பழியைப் போட்டு 'டைம்ஸ்' பத்திரிகை எழுதியது. இறுதிச் சடங்குகள் பற்றிய முதலாவது சலசலப்பு ஆரம்பமானது.

ஒரு பெரிய தேசியரீதியிலான சர்ச்சை ஆரம்பிக்கப் போகிறது என்பதை உணர்ந்த பிரதம மந்திரியின் அலுவலகம் உடனடியாக 'மக்களின் இளவரசிக்கு' 'மக்களின் இறுதிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்குகள்' என்றகோட்பாட்டை முன்வைத்து நிலைமையைச் சமாளித்தது. மகாராணிக்கு ஆலோசனை சொல்ல வேண்டிய தனது கடமையை நிறைவேற்றினார் பிரதமர். இறுதிச் சடங்குகள் எப்படி அமையலாம் என்ற தனது ஆலோசனைகளை மகாராணிக்கும் அரண்மனை அதிகாரிகளுக்கும் விளக்கினார்.

பக்கிங்ஹாம் அரண்மனையில் இறுதிச் சடங்கு ஒழுங்கு களைக் கவனித்து வந்த அதிகாரிகள் குழுவின் ஆலோசனைக் கூட்டங்களுக்கு அன்றிலிருந்து பிரதமரின் பிரதிநிதி ஒருவரை வரும்படி அரண்மனை அழைப்பு விடுத்தது. பிரதமரின் பிரதிநிதியாக அவரது பத்திரிகைச் செயலாளரும் நெருங்கிய ஆலோசகருமான அலிஸ்டயர் கம்பெல் அரண்மனைக் கூட்டங்களில் தினமும் கலந்து கொண்டு இறுதி ஒழுங்குகளில் முக்கிய பங்கு வகித்தார்.

இந்தச் சந்திப்புகளின் விளைவாக இறுதிச் சடங்குகள் பற்றிய அரண்மனையின் பூர்வாங்கத் திட்டங்கள் அன்று மாலையே வெளியாகின. செப்டம்பர் மாதம் 6ம் தேதி, சனிக்கிழமை இறுதிச் சடங்குகளுக்கு உரிய நாளாக நியமிக்கப் பட்டது. சனிக்கிழமை, வார இறுதி விடுமுறை நாள் என்ற ரீதியில் பெருமளவு பொதுமக்கள் சடங்குகளில் கலந்து கொள்ள வாய்ப்பு அளிக்கும் என்பதே எதிர்பார்ப்பு. இறுதிச் சடங்கு ஆராதனைகள் அரச சடங்குகள் நடைபெறும் வெஸ்ட்மின்ஸ்டர் தேவா லயத்தில் இடம் பெறும். 2000 பேர் இந்தச் சடங்குகளில் கலந்துகொள்வர். பிரேதப் பெட்டி தரைப்படை, கடற்படை, விமானப்படையின் பிரதிநிதிகள் புடைசூழ, ஒரு பீரங்கி வண்டியில் ஏற்றிச் செல்லப்படும். இவை அரச மரபுகளை மீறி அரண்மனை டயானாவுக்கு அளித்த கௌரவங்கள்.

டயானாவின் உடல் அரச குடும்பத்தினரின் உடல்களை அடக்கம் செய்யும் ஃபிரொக்மோர் என்ற இடத்தில் அடக்கம் செய்யப்படலாம் என்ற மரபு மீறிய கௌரவத்தையும் அரண்மனை முன்வைத்தது. ஆனால் அதனை டயானாவின் தம்பி ஏர்ள் ஸ்பென்ஸர் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். டயானாவின் உடல் அடக்கம் ஸ்பென்ஸர் பரம்பரையின் சொத்தான அல்தோப் எஸ்டேட்டில் உலகத்தின் கண்களுக்கு அப்பால் அந்தரங்கமான குடும்ப வைபவமாக நடைபெற வேண்டும் என்று அவர் சொல்லிவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி ஊர்வலம் சென்ஜேம்ஸ் அரண்மனையிலிருந்து வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயம் வரையில் ஒரு மைல் தூரத்திற்கு நடைபெறும். இதைவிட நீளமான ஊர்வலப் பாதை வேண்டாம் என்று பாதுகாப்புக் காரணங்களை ஒட்டி லண்டன் நகரின் போலீஸ் கமிஷனர் தடுத்துவிட்டார். ஆனால் இதற்கான பழியையும் பத்திரிகைகள் அரண்மனை மீது போட்டன. இளவரசியின் பிரேதப் பெட்டிக்கு பொது மக்கள் அஞ்சலி செய்வதற்கு இதைவிட நீளமான ஊர்வலப் பாதை தேவையென்று வாதிட்டன.

சென் ஜேம்ஸ் அரண்மனையில் பொதுமக்கள் தமது அனுதாபச் செய்திகளை எழுதுவதற்கென்று ஐந்து புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்தன. இவற்றில் செய்திகளை எழுதுவதற்கென பல்லாயிரவர் பல மணி நேரம் கியூ வரிசையில் நின்றதனால், புத்தகத்தில் எழுதுவதற்கு அரண்மனைக் கதவுகள் வெள்ளிக் கிழமை வரை 24 மணி நேரமும் திறந்திருக்கும் என்று அரண்மனை அறிவித்தது.

இதற்கிடையில் விமான நிலையங்கள், ரயில் நிலையங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் ஆகியன இறுதிச் சடங்கு நாளான சனியன்று பகல் 11 மணிக்கு நாடெங்கும் இரு நிமிட நேரம் மௌனம் அனுஷ்டிக்கப் போவதாக அறிவித்தன. இதைச் சாக்காக வைத்து பத்திரிகைகள் அரண்மனையைக் கண்டித்தன. அரண்மனை அறிவிக்காததை இந்த ஸ்தாபனங்கள் அறிவித்து விட்டனவே என்றன.

ஆனால் அரண்மனை திட்டமிட்டதோ வேறு. சரியாகப் பகல் பதினொரு மணிக்கு வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில் ஆராதனைகள் ஆரம்பித்து, நிகழ்ச்சிகள் இடம்பெறப்போகும் ஒழுங்கினை அரண்மனை அதிகாரிகள் தேவாலயக் குரு - அதி வணக்கத்திற்குரிய வெஸ்லி கார் அவர்களுடன் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

தேவாலய ஆராதனை நிகழ்ச்சிகள் முடிவடைந்தவுடன் நாடு தழுவிய ரீதியில் ஒரு நிமிட நேரம் மௌனம் அனுஷ்டிப்பதாகத் திட்டம். நிகழ்ச்சிகள் திட்டமிட்டப்பட்ட கால அளவுகளை விட ஒரு சில நிமிடங்கள் கூடலாம் அல்லது குறையலாம். எனவே மௌனாஞ்சலி ஆரம்பிக்கப்போகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தை முன்கூட்டியே திட்டவட்டமாக நிர்ணயிப்பது நடைமுறை சாத்தியமற்ற செயலாக இருந்தது. எனவே, ஆராதனை நிகழ்ச்சிகள் தேவாலயத்தில் முடிவடைந்த கணமே, தேவாலயத்தில் ஒரு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்படும். தேவாலய நிகழ்ச்சிகள் தொலைக்காட்சி, வானொலியில் அஞ்சல் செய்யப்படுவதால், அதே மௌனவேளையை முழு பிரிட்டனும் அனுஷ்டிக்க வேண்டும் என்று அரண்மனையும் தேவாலயமும் திட்டமிட்டுக் கொண்டிருந்த வேளையில் தான், ரயில் நிலையங்களும், விமான நிலையங்களும், வர்த்தக ஸ்தாபனங்களும் ஒரு தலைப்பட்சமான தமது மௌனம் அனுபவிக்கும் திட்டங்களை பகிரங்கப்படுத்தின. பத்திரிகைகளும் உண்மையை விசாரித்து அறியாமலோ, அல்லது திட்டமிட்ட வஞ்சக நோக்குடனோ, அரண்மனையைக் கடித்துக் குதறின.

டயானாவின் இறுதிச் சடங்கு நிகழ்ச்சியைத் திட்டமிட்டு ஒருங்கிணைத்தது, லண்டனில் உள்ள பக்கிங்ஹாம் அரண்மனை அதிகாரிகள்தான். இந்த ஒழுங்குகளின்போது அவர்கள் பல்வேறு இடங்களில் இருந்த பல்வேறு அமைப்புகளுடன் சேர்ந்து திட்டமிட்டு இறுதிச் சடங்குகளை ஒருங்கிணைக்க வேண்டியிருந்தது. பால்மோரல் அரண்மனையில் தங்கித் துக்கம் அனுஷ்டித்துக் கொண்டிருந்த டயானாவின் மகன்களும் ஏனைய ராஜ குடும்பத்தினரும்; அல்தோர்ப் எஸ்டேட் வீட்டில் தங்கியிருந்த டயானாவின் தம்பியும் அக்காள்களும்; பிரிட்டிஷ் அரசின் அயல்நாட்டுறவு அமைச்சு; பிரதம மந்திரியின் அலுவலகம்; வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயம்; முப்படைப் பிரிவுகள்; லண்டன் போலீஸ் கமிஷனர் அலுவலகம்; இன்னும் இன்னோரன்ன பல அமைப்புக்கள்.

இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வதற்கு பல இலட்சம் மக்கள் லண்டனுக்கு வரப்போகிறார்கள். அவர்களுடைய நலன்கள் பேணப்பட வேண்டும். எண்ணற்ற வி.ஐ.பி.க்கள் வரப்போகிறார்கள். இவர்களுள் பலர் பயங்கரவாதிகளின் தாக்குதல் பட்டியலில் உள்ளவர்கள். அவர்களுக்குப் போதிய பாதுகாப்புத் தரவேண்டும். தேவாலயத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை வீதிதோறும் குழுமி நிற்கும் இலட்சக்கணக்கான மக்கள் பார்வையிடுவதற்காக ஆங்காங்கே பெருந்திரைகளை நிறுவி தொலைக்காட்சி அஞ்சல் வசதிகள் செய்யப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த பத்து வருடங்களுக்குள் சாட்டிலைட் டிவி. உலகெங்கும் வந்து விட்டது. இதன் வாயிலாக இறுதிச் சடங்குகள் உடனுக்குடன் உலகெங்கும் வசிக்கும் இலட்சோப லட்சம் தொலைக்காட்சிப் பார்வையாளர்களின் இல்லங்களுக்குச் செல்லப் போகிறது. இதையொட்டி நூற்றுக்கணக்கான செய்தி நிருபர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் உலகெங்கும் இருந்து லண்டனுக்கு வரப்போகிறார்கள். அவர்களுக்கு உரிய வசதிகளைக் கவனிக்க வேண்டும். இந்த நூற்றாண்டிலேயே இவ்வளவு பிரமாண்டமான பொதுநிகழ்ச்சி பிரிட்டனில் நடைபெற்றதில்லை.

இத்தனைக்கும் வேண்டிய பாரிய திட்டமிடல், ஒருங்கிணைப்பு வேலைகளை அரண்மனை அதிகாரிகள் இரவு பகலாகக் கண்விழித்து ஒழுங்கு செய்துகொண்டிருக்க, எந்தவிதப் பொறுப்பும் இல்லாதவர்கள் பிரிட்டன் இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்போவது எப்போது என்பதை நிர்ணயிக்கும் உரிமையை தமதாக்கிக் கொண்டு அறிக்கைகள் விட்டனர். சுயவிளம்பரத்துக்காகச் செய்யப்பட்ட இந்த அறிவிப்புக்களைச் சாக்காக வைத்து பத்திரிகைகளும் அரண்மனையைச் சாடியது அற்பத்தனமான செயல்.

**அந்த ஏழு நாட்கள் -**
**செவ்வாய், செப்டெம்பர் 2**

மதுபோதையில் இருந்த ஹென்றி போல் டயானா பயணம் செய்த காரை மணிக்கு 120 மைல் வேகத்தில் ஓட்டினார் என்ற பரபரப்புச் செய்தி செவ்வாயன்று வெளிவந்த சகல பிரிட்டிஷ் பத்திரிகைகளிலும் முன்பக்கத் தலைப்புச் செய்தியாக வெளிவந்தது. தலையங்கம் மிகப் பெரிய எழுத்துக்களில் பிரசுரம் ஆகியது.

அன்று வெளிவந்த இன்டிபெண்டண்ட் பத்திரிகை இளவரசர் சார்லஸ் மீது ஒரு திடீர்த் தாக்குதலை ஆரம்பித்தது. சார்லஸை அவரது பெற்றோர்கள் வளர்த்த முறை அவரது அறிவாற்றலையும் சுயபுத்தியையும் முற்றாக அழிக்கவில்லை என்று நிரூபிக்க சார்லஸுக்கு இது ஒரு சந்தர்ப்பம். அவர் தான் வசிக்கும் வட்டத்தை விட்டு வெளியே வந்து சாமானியர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றும் கேட்டறிய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய மகன் இளவரசர் வில்லியம் சாதாரண ஒரு டீன். ஏஜ் (13-19 வயதுப் பிரிவு) இளைஞனின் வாழ்க்கை அனுபவத்தைப் பெறுவதற்கு அனுமதிக்க வேண்டும். இந்த அனுபவம் பாலியல் பரிசோதனைகளையும் போதைப்பொருள் பாவிப்பையும் உள்ளடக்கவேண்டும் - இவ்வாறு அந்தப் பத்திரிகை ஆசிரியத் தலையங்கம் எழுதியது!

டயானாவின் மரணத்திற்கும் இந்தத் தலையங்கத்திற்கும் என்ன சம்பந்தமோ?

எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் அரண்மனை நிருபர் (அரச பாரம்பரியங்களை நன்கு அறிந்திருக்க வேண்டிய ஒருவர்) பக்கிங்ஹாம் அரண்மனையில் அரச வம்சத்தின் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவில்லையே என்று ஒரு சர்ச்சையை ஆரம்பித்து வைத்தார்.

பிரிட்டிஷ் அரச வம்சத்தின் "ராயல் ஸ்டான்டர்ட்ஸ்" (ROYAL STANDARDS) கொடி வேறு; பிரிட்டனின் யூனியன் ஜாக் (UNION JACK) கொடி வேறு. பக்கிங்ஹாம் அரண்மனையின் மீது அரச வம்சக் கொடிதான் எப்போதும் பறக்கும்.

ஆட்சி புரியும் பிரிட்டிஷ் மன்னர் அல்லது ராணி பக்கிங்ஹாம் அரண்மனையில் தங்கியிருக்கும்போதுதான் அந்தக் கொடி பறக்கும். மன்னர் அல்லது ராணி அரண்மனைக் கதவுகளைத் தாண்டிச் சென்றதும் கொடி இறக்கப்பட்டுவிடும். அதாவது, கொடி பறந்தால், ராணி - 'உள்ளே' என்று அர்த்தம். கொடி பறக்காவிட்டால், ராணி - 'வெளியே' என்று அர்த்தம்.

இதுதான் மரபு. இதுதான் பல நூற்றாண்டு காலமாக அரண்மனை கடைப்பிடித்து வந்த சம்பிரதாயம்.

பிரிட்டிஷ் ராயல் ஸ்டான்டர்ட்ஸ் கொடி அரச வம்சத்தின் கொடியேயன்றி, அந்தந்தக் காலகட்டத்தில் ஆட்சி புரியும் ஒரு மன்னரதோ அல்லது ராணியினதோ தனிப்பட்ட சின்னமல்ல. ராஜாக்கள் - ராணிகள் பதவி ஏறலாம், பதவி இறங்கலாம், அல்லது இறக்க நேரிடலாம். ஆனால் அரச வம்சம் தொடர்ச்சியானது. அதற்கு ஏற்றமும் இல்லை, இறக்கமும் இல்லை, மரணமும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ராஜாவோ ராணியோ சிம்மாசனத்தைத் துறந்தாலோ அல்லது மரணம் எய்தினாலோ, மறுகணமே அவருடைய சட்டபூர்வமான அடுத்த வாரிசு புதிய ராஜாவாக அல்லது ராணியாக கடமை ஏற்றதாகக் கருதப்படும். அரச நிர்வாகம் தொடரும். பட்டாபிஷேக வைபவம் பின்னால் தொடரும்.

அரச வம்சம் அழிவதில்லை என்ற தத்துவத்தை அடிப்படையாக வைத்து, சிம்மாசனத்தில் இருக்கும் மகாராணி இறந்தால் கூட, பக்கிங்ஹாம் அரண்மனையில் பறக்கும் அரசவம்சக் கொடி அரைக் கம்பத்தில் பறப்பதில்லை.

1952ல் ஆறாவது ஜோர்ஜ் மன்னர் சிம்மாசனத்தில் இருந்தார். அவர் திடீர் மரணம் அடைந்த வேளையில், அவரது முதலாவது வாரிசான இளவரசி எலிசபெத் தனது கணவர் இளவரசர் பிலிப்புடன் வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் மேற் கொண்டிருந்தார். இளவரசியாக வெளிநாடு சென்ற எலிசபெத் மகாராணியாக நாடு திரும்பினார். அப்போதுகூட பக்கிங்ஹாம் அரண்மனையின் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவில்லை.

மகாராணி எலிஸபெத் தான் உயிருக்குயிராக நேசித்த தன் தந்தைக்காக அரச வம்சத்துக் கொடியை அரைக்கம்பத்திற்கு இறக்க நினைக்கவில்லை. அரச மரபுகளின் வழி நடந்தார்.

இளவரசர் சார்லஸைத் திருமணம் செய்ததால் இளவரசி ஆகி, சார்லஸோடு சண்டை பிடித்துக்கொண்டு - கணவன், மனைவி சச்சரவுகளை சந்திக்குக் கொண்டுவந்துவிட்டு - விவாகரத்து பெற்றுக் கொண்டதால் இளவரசி ஸ்தானத்தையே இழந்து நின்ற டயானாவின் மரணத்தையொட்டி அரச வம்சக் கொடியை அரைக் கம்பத்திற்கு இறக்கவேண்டும் என்றார் சின்னப் பக்கப் பத்திரிகை நிருபர்.

பிறப்பால், வளர்ப்பால், செங்கோலோச்சிய சிறப்பால் மன்னாதி மன்னர் என்ற புகழுடன் விளங்கியவர்கள் இறந்தபோது கூட இறக்காத கொடியை, "அறிவு குறைந்தவர்", "விளம்பரம் தேடி அலைபவர்", "பத்திரிகைத் தளுக்குக்காரி" என்று தமது பத்திரிகையில் மூன்றே மூன்று நாட்களுக்கு முன்னர் நையாண்டி செய்யப்பட்ட டயானாவுக்காக இறக்கச் சொன்னார் அந்த நிருபர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கார்டியன்' பத்திரிகையில் ஜூலி பர்ச்சில் என்ற நிருபர் மிகவும் காரசாரமான ஒரு கட்டுரை வரைந்திருந்தார். நல்லதுக்கு ஒரு டயானா, ஸ்டைலுக்கு ஒரு டயானா, கடமைக்கு ஒரு டயானா, அழிவுக்கு ஒரு டயானா. அவருடைய 'அழித்தல்' கடமை குடியரசுவாதிகளுக்கு குதூகலத்தைத் தரும். அரச வம்சத்தை நிர்மூலமாக்கும் ஒரு டைம்பாம்பை பார்சல் கட்டி பிரியாவிடைப் பரிசாக அரண்மனையிடம் கொடுத்துவிட்டுப் போகிறார், என்று மிகுந்த திருப்தியுடன் எழுதிய இந்த நிருபர், இளவரசர் சார்லஸ் ஒரு அறிவு கெட்ட முண்டம் என்று டயானா நிரூபித்துவிட்டார் என்ற தோரணையில் சார்லஸை ஒரு பிடி பிடித்திருந்தார்.

"சார்லஸ் குற்ற உணர்ச்சி குமுறக் கண்ணீர் வடிக்கிறார்", என்று 'டெய்லி மெயில்' பத்திரிகை முற்பக்கத் தலைப்புச் செய்தி ஒன்றை வெளியிட்டது. லண்டனிலிருந்து 550 மைல் தொலைவில் உள்ள பால்மோரல் அரண்மனையில் தங்கியிருந்த இளவரசர் அதிகாலையில் தன்னந்தனியாக அரண்மனை எஸ்டேட்டில் உலாவச் சென்றாராம். "ஏன், ஏன், ஏன்," என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டு வருந்தினாராம். அழக்கூட முடியவில்லையாம். இரவு முழுவதும் ஜின் மதுபானத்தை குடித்துக் குடித்து அழுது கண்களில் நீர் வற்றிவிட்டதாம்.

எங்கேயோ பார்த்த, கேட்ட சம்பவம் போலிருக்கிறதே!

"பா" வரிசையில் நடிகர் திலகம் நடிக்க, கண்ணதாசன் பாட்டெழுத, விஸ்வநாதன் - ராமமூர்த்தி இசையமைக்க, பீம்சிங் இயக்கிய காட்சிகள் ஞாபகத்துக்கு வரவில்லை?

அரண்மனை எஸ்டேட்டில், அதிகாலையில், தன்னந் தனியாக உலவிய இளவரசரின் மனச்சாட்சியின் குமுறல் விவரங்கள் 550 மைல்களுக்கு அப்பாலிருந்த 'டெய்லி மெயில்' நிருபருக்கு எட்டிவிட்டது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசகுடும்பத்தை பலிபீடத்தில் நிறுத்திய பத்திரிகைகள்

## பிரதம மந்திரி தலையிட்டுக் காப்பாற்றினார்

பாவ விமோசனம், தனலாபம், பலவிருத்தி வேண்டி பிரிட்டிஷ் பத்திரிகை ஆசிரியர்கள் 'யாகத் தீ' வளர்த்தனர். தீயை வளர்க்க 'டயானா அனுதாப அலை' என்ற எரியும் சூடத்தில் வதந்தி, வீண்பழி, பரபரப்பு என்ற வஸ்துக்களைக் கொட்டி எரித்தனர். தீ டயானா அனுதாப வெறியாக வானளாவ எரிந்தது.

சோகம், பரபரப்பு, கோபம், குழப்பம் மேலிட பிரிட்டிஷ் மக்கள் வீடுகளை விட்டு வெளியே வந்தனர். டயானா அனுதாபச் செய்திப் புத்தகத்தில் எழுத நின்ற கியூவரிசை பன்மடங்காகப் பெருகியது. ஐந்து புத்தகங்கள் போதாதென்று பதினொரு புத்தகங்கள் வைக்கப்பட்டன. அதன் விளைவு? கியூவரிசையில் காத்து நிற்க வேண்டிய காலஅளவு ஏழு மணி நேரத்திலிருந்து ஒன்பது மணி நேரமாக அதிகரித்தது!

அரண்மனையில் நடைபெற்ற இறுதிச் சடங்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், இறுதிச் சடங்குகளில் - புனித வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில், டயானாவின் நண்பரான பாப் இசைப் பாடகர் எல்டன் ஜான் டயானாவின் நினைவாக ஒரு பாடல் பாட வேண்டும் என்று டயானாவின் குடும்பத்தினர் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டதாம். இது என்ன அநாகரிகம் என்று அரண்மனை அதிகாரிகள் ஆட்சேபித் தார்களாம். குறிப்பாக, மகாராணியின் அந்தரங்கச் செயலாளரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டயானாவின் மூத்த அக்காளின் கணவருமான சர் ராபர்ட் பெலோஸ் இதற்குத் தீவிர எதிர்ப்புத் தெரிவித்தாராம். இந்த விஷயத்தில் இறுதி முடிவு எடுக்க மகாராணியால் மட்டும்தான் முடியும் என்று சொல்லிவிட்டாராம்.

பிரேத ஊர்வலப் பாதை நீடிக்கப்படவேண்டும் என்று இளவரசர் சார்லஸ் கேட்க, அதற்கு போலீஸ் கமிஷனர் ஆட்சேபனை தெரிவித்து, பாதுகாப்பு ரீதியான தனது சங்கடங்களை விளக்கினாராம். உங்கள் பிரச்னைகளை நீங்களே நாட்டுக்கு எடுத்து விளக்குங்கள், எங்கள் மீதல்லவா வீண்பழி சுமத்துகிறார்கட என்று சார்லஸ் சீறி விழுந்தாராம்.

வேறுவழியின்றி போலீஸ் கமிஷனர் ஊர்வலப் பாதை நீடிப்பிற்கு விட்டு; கொடுத்தார். இறுதிச் சடங்குகளுக்கு முதல்நாள் இரவு டயானாவின் பிரேதப்பெட்டி சென் ஜேம்ஸ் அரண்மனையிலிருந்து கென்ஸிங்டன் அரண்மனைக்கு எடுத்துச் செல்லப்படும் என்றும், சனிக்கிழமை காலை இறுதி ஊர்வலம் கென்ஸிங்டன் அரண்மனையிலிருந்து வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயம் வரை நடைபெறும் என்றும் அரண்மனை அறிவித்தது. ஊர்வலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாதை, காலஞ் சென்ற ஏழாவது எட்வர்ட் மன்னர், ஐந்தாவது ஜோர்ஜ் மன்னர், ஆறாவது ஜோர்ஜ் மன்னர், சர் வின்ஸ்டன் சர்ச்சில், ஏர்ள் மவுன்ட்பட்டன் ஆகியோரின் இறுதி ஊர்வலங்கள் பூரண அரச மரியாதைகளுடன் சென்ற அதே பாதையாகும்.

ஆமாம், அரண்மனை பெரிதாக எதுவும் வெட்டிப் பிடுங்கவில்லை, நாம் கொடுத்த நெருக்கம் தாங்கமுடியாமல் விட்டுக் கொடுக்கிறார்களாக்கும் என்று பத்திரிகைகள் இதற்கு உரிமை கொண்டாடின.

சார்லஸ் - டயானாவின் மகன்களான இளவரசர் வில்லியமும் இளவரசர் ஹரியும் இறுதி ஊர்வலத்தில் பிரேதப் பெட்டிக்குப் பின்னால் இளவரசர் சார்லஸ், ஏர்ள் ஸ்பென்சர் ஆகியோரோடு சேர்ந்து நடக்கக்கூடும் என்றும் அரண்மனை அறிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கென்ஸிங்டன் அரண்மனையின் முன்னிலையில் டயானா
ஆதரவாளர்கள் ஏற்படுத்திய மலர்ச்சாகரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்த ஏழு நாட்கள் -
## புதன், செப்டம்பர் 3

டயானா அஞ்சலிச் செய்திகளை எழுத விரும்பியோர் தொகை பெருகிக் கொண்டே வந்தது. சென் ஜேம்ஸ், அரண்மனையில் வைக்கப்பட்ட இரங்கலுரைப் புத்தகங்களின் தொகை பதினான்கிலிருந்து நாற்பத்திமூன்றாக அதிகரிக்கப் பட்டது. அதற்கு மேல் புத்தகங்கள் வைப்பதற்கு அரண்மனையின் அந்தக் கூடத்தில் இடம் இருக்கவில்லை.

அஞ்சலி செய்வதற்கு வந்த பெருந்தொகையான மக்களுக்கு சிற்றுண்டி வசதிகள் இல்லையென்று நகரப் போலீஸார் கவலை தெரிவித்தனர். தள்ளு வண்டிகளில் சிற்றுண்டி - பான வகைகளை அரண்மனை முன்றிலில் வைத்து விற்க முயன்ற சில்லறை வியாபாரிகளை அரண்மனை அதிகாரிகள் ஏசி விரட்டி விட்டார்கள் என்று பத்திரிகைகள் தூபம் போட்டன.

இந்தச் சலசலப்பு எழுந்ததும் முகம்மது அல்பாயத் உடனடியாகக் களத்தில் இறங்கினார். தனது ஹரட்ஸ் ஸ்தாபனத்துக்குச் சொந்தமான வான்களில் சிற்றுண்டியும் பானவகைகளும் அனுப்பி வைத்தார். ஹரட்ஸ் ஊழியர்கள் அஞ்சலி செய்யவந்த மக்களுக்கு இவற்றை இலவசமாக விநியோகித்தனர். ஹரட்ஸ், ஸ்தாபனத்தின் பெயர் பொறித்த வான்கள் அன்னமிட்ட கை யாருடையது என்று வெளிப்படுத்தத் தவறவில்லை.

இதுகாறும் ஓசையின்றி இருந்த டயானாவின் அம்மா பிரான்ஸஸ் ஷான்ட் கிட் வெளியே வந்தார். டயானாவின் தந்தையைக் கைவிட்டுவிட்டு தனது புதுக்காதலன் ஷான்ட் கிட் என்பவரைத் திருமணம் செய்தபின், பிரான்ஸஸ் ஸ்கொட் லாந்துக் கடலில் உள்ள ஜனசந்தடி குறைவான ஒரு தீவில் வாழ்ந்து வந்தார். தான் இறப்பதற்குப் பல மாதங்களுக்கு முன் டயானா தனது அன்னையுடன் சண்டைபோட்டுக் கொண்டு, அவரோடு பேசுவதையே நிறுத்தியிருந்தார். மகள் சார்பில் ஒரு சிறிய இரங்கலுரையை பத்திரிகைகளுக்கு வெளியிட்டுவிட்டு, டயானாவின் ஏனைய சகோதரிகளைச் சந்திப்பதற்காக லண்டன் புறப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டயானாவின் மறைவை அடுத்து, நாடு தழுவிய ரீதியில் எழுந்தஅபரிமிதமான அனுதாப அலைக்கு நன்றி தெரிவித்து அரண்மனையிலிருந்து அறிக்கையொன்று வெளிவந்தது. அரச குடும்பத்தினர் அனைவரும், குறிப்பாக இளவரசர் சார்லஸ், இளவரசர் வில்லியம், இளவரசர் ஹரி ஆகியோர் தமக்கு ஏற்பட்ட பெரிய இழப்பையும் துயரத்தையும் பொதுமக்களும் பகிர்ந்து கொள்கிறார்கள் என்பதை அறிந்து தெம்பும் மனத்திடமும் அடைந்துள்ளனர். மக்களின் ஆதரவு அரச குடும்பத்தினரைத் திணறடித்துவிட்டது, அவர்களது உள்ளங்களை உருகச் செய்துவிட்டது என்று அந்த அறிக்கை கூறியது.

அரச குடும்பத்திற்கெதிராக பத்திரிகைகள் தூபமிட்ட நெருப்பை ஓரளவு தணியவைப்பதாக அந்த அறிக்கை அமைந்தது. எனினும் பத்திரிகைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தின.

நாட்டின் மனநிலையை அரண்மனை புரிந்துகொள்ளத் தவறிவிட்டது என்று தாக்கியது 'சன்' ஆசிரியர் தலையங்கம். வேறொரு கிரகத்திலிருந்து வந்த வேற்றுலகவாசிகள் போல் அரச குடும்பத்தினர் நடந்துகொள்கின்றனர் என்று கண்டித்தது. அரண்மனைக்கு இதயமே இல்லையா?

அரண்மனைக் கொடி அரைக்கம்பத்தில் ஏன் பறக்கவில்லை? சம்பிரதாயம், மரபு விதிகளை வரையறுக்கும் புத்தகத்தைத் தூக்கி வீசிவிட்டு மகாராணி தொலைக்காட்சியில் தோன்றி மக்களுக்கு உரையாற்றவேண்டும் என்றது 'டைம்ஸ்'.

டயானாவைப் போற்றி, கல்லையும் உருகவைக்கும் கவிதைகளை 'டெய்லி மிரர்' பிரசுரித்தது.

டயானாவுக்கு மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கை அரச குடும்பம் உணர்ந்துவிட்டதை மக்களுக்கு நிரூபிக்க வேண்டுமென்றால், எதிர்வரும் சனிக்கிழமை எலிஸபெத் மகாராணியும் இளவரசர் சார்லஸும் வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தின் வாயிற் படிகளில் நின்று ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்துக்கொண்டு கதறி அழவேண்டும் என்று 'இன்டிபென்டன்ட்' ஆசிரியர் தலையங்கம் சீறிப் பாய்ந்தது. அப்படி அவர்கள் செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டார்கள் என்பதிலிருந்து 'தமது இளவரசிக்காக' அழும் மக்களுக்கும் அரச குடும்பத்தினருக்கும் மத்தியில் எவ்வளவு பெரிய இடைவெளி உள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது என்றார் அந்தப் பத்திரிகை ஆசிரியர்.

**அந்த ஏழு நாட்கள் -**
**வியாழன், செப்டம்பர் 4**

அரச குடும்பத்துக்கு எதிராக பிரிட்டிஷ் மக்களின் புரட்சி வெடித்துவிட்டதா? மன்னராட்சிக்கு முற்றுப்புள்ளி வந்துவிட்டதா? இத்தகைய ஒரு சூழ்நிலை செப்டம்பர் 4ம் தேதி பிரிட்டனில் நிலவியது.

பெரும்பாலான பத்திரிகைகள் அரச குடும்பத்துக்கு எதிராக ஒன்று சேர்ந்து, ஸ்ருதி பிசகாமல் உச்சஸ்தாயியில் ஓங்கிக் குரலெழுப்பின. முன்பக்க முதன்மைச் செய்திகள் யாவும் கொட்டை எழுத்துத் தலைப்புகளுடன் அரண்மனையைக் கண்டித்தன.

"எங்கே எங்கள் மகாராணி? எங்கே அவரது கொடி?" என்ற தலைப்புடன் 'சன்' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் முதலாம் பக்கத்தில் வெளியிடப்பட்டிருந்தது. "லண்டனில் மக்களெல்லாம் அழுகிறார்கள். மகாராணியோ 550 மைல்களுக்கப்பால் பால்மோரல் அரண்மனையில் இருக்கிறார். வேண்டுமானால் சார்லஸும் வில்லியமும் ஹரியும் ஸ்கொட்லாந்தின் மலைச் சாரலில் தனிமையில் இருந்து துக்கம் அனுஷ்டிக்கட்டும். மகாராணி உடனடியாக லண்டனுக்குப் பறந்து வரவேண்டும். தமது துயரத்தை மக்களுடன் பகிர்ந்து கொள்ளவேண்டும். மரபுவிதிப் புத்தகத்தைத் தூக்கி வீசவேண்டும். தொலைக் காட்சியில் மக்களுக்கு உரையாற்ற வேண்டும். அரண்மனையில் அரைக் கம்பத்தில் கொடி பறக்கவேண்டும். பக்கிங்ஹாம் அரண்மனையின் பால்கனியில் மகாராணி, மக்களுக்குக் காட்சி தரவேண்டும். பக்கிங்ஹாம் அரண்மனையில் அரச குடும்பத்தினர் எவரும் தங்கியிராது ஓடும் ஒவ்வொரு மணி நேரமும் மக்களின் கோபம் அதிகரித்துக் கொணடே போகும்," என்று காரசாரமாக எழுதினார் 'சன்' ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்களுடைய பிரஜைகள் வேதனையில் துடிக்கிறார்கள் - எங்களுடன் பேசுங்கள் மேடம்," என்று முதலாம் பக்கத்துக்கு வந்த 'டெயிலி மிரர்' ஆசிரியர் தலையங்கத்தின் தலைப்பு துடித்தது. தலையங்கம் பதினோராம் பக்கம் நிறைய வந்திருந்தது. முதலாம் பக்கத்தில் தலைப்பிற்குக் கீழே மூன்று கலர்ப்படங்கள் மட்டும் வந்திருந்தன. ஒரு பெண்மணி வாய்விட்டு அழும் படம்; ஒரு சிறுவன் முகத்தை மூடி அழும் படம்; மகாராணி முகத்தை கடுகடுப்பாக வைத்திருக்கும் ஒரு சிறிய படம். உட் பக்கத்தில் வந்த ஆசிரியர் தலையங்கத்தில், இளவரசர் சார்லஸுக்குக் கவலை இருக்கத்தான் செய்யும். தனது மகன்களைத் தேற்றும் கடமையும் உண்டு. அவர் தனது மகன்களோடு ஸ்காட்லாந்தில் இறுதிச் சடங்கு நாள்வரை இருப்பதில் தவறில்லை. மகாராணிக்கு கவலை இருக்கத்தான் செய்யும். ஆனால் நாட்டின் அரசி என்ற ரீதியில் அவருக்கு ஒரு கடமையும் உண்டு. லண்டனுக்கு வந்து அவரது பிரஜைகளின் கவலையிலும் அவர் கலந்து கொள்ளவேண்டும். நாட்டு மக்களுக்கு அவர் தொலைக்காட்சியில் உரையாற்ற வேண்டும் என்ற பொருள்பட ஆசிரியர் தலையங்கம் அமைந்தது.

"கொடி அரைக் கம்பத்தில் பறக்கட்டும்", என்ற பெரிய தலைப்புடன் 'மெயில்' பத்திரிகை ஒரு முற்பக்கச் செய்தியைப் பிரசுரித்தது. உள்ளே வந்த ஆசிரியர் தலையங்கம் நாட்டில் வீசும் டயானா அனுதாப அலையைச் சுட்டிக் காட்டி, அரச மரபுப் புத்தகத்தின்படி நடக்கும் நேரம் அல்ல இது என்றது. பக்கிங்ஹாம் அரண்மனையில் அரசவம்சக் கொடிக்குப் பதிலாக, பிரிட்டனின் 'யூனியன் ஜாக்' கொடியினை ஏற்றி, அதை அரைக் கம்பத்தில் பறக்கவிட வேண்டும் என்றது. மகாராணி அனுதாப அறிக்கைகள் விடுவது போதாது. மக்களுக்கு நேரடியாக உரையாற்றவேண்டும். மக்களாட்சியின் ஆதரவாளர்கள் முடியாட்சிக்கு எதிராக டயானா அனுதாப அலையைப் பாவிக்க விடக்கூடாது என்று 'மெயில்' ஆசிரியர் எழுதினார்.

"உங்களுக்கு அக்கறை உண்டு என்பதை எங்களுக்குக் காட்டுங்கள்," என்ற பெரிய தலைப்புடனும், மகாராணியின் ஒரு பெரிய படத்துடனும் 'எக்ஸ்பிரஸ்' பத்திரிகையின் முன்பக்கச் செய்தி வெளிவந்தது. உட்பக்கத்தில் வந்த ஆசிரியர் தலையங்கம் மகாராணி லண்டனுக்கு உடன் வரவேண்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சியில் பேசவேண்டும், அரண்மனைக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தது. உணர்ச்சிகளை, வேதனைகளை மனதில் புதைத்து வெளியே காட்டாமல் இருக்கும் பிரிட்டிஷ் பாரம்பரியத்தில் வளர்ந்தவர் மகாராணி. அதே பாரம்பரியத்தில் இளவரசர் சார்லஸையும் வளர்த்தவர் மகாராணி. அது பழைய தலைமுறை. இன்றைய தலைமுறை இந்தப் பழைய பிரிட்டிஷ் பாரம்பரியத்தைக் கைவிட்டுவிட்டது என்பது டயானாவின் மரணத்தை அடுத்துத் தெரிகிறது. எனவே மகாராணியும் தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற ரீதியில் 'எக்ஸ்பிரஸ்' ஆசிரியர் எழுதியிருந்தார்.

"முடியாட்சிக்கு எதிராக மக்கள் கருத்து திரும்புகிறது", என்று 'இன்டிபென்டன்ட்' பத்திரிகைகளின் முதல் பக்கத் தலைப்பு எச்சரித்தது.

இவ்வாறு, பெரிய பிரித்தானியா நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் இருந்த மக்களின் உணர்வுகளை லண்டனின் சொகுசான பகுதிகளில் வசிக்கும் எட்டுப் பிரதான பத்திரிகையாசிரிகள் ஓரிரு நாட்களுக்குள் நாடிபிடித்து அறிந்து, "மக்கள் நினைக்கிறார்கள்", "மக்கள் சொல்கிறார்கள", "மக்கள் கொதித்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று மக்கள்மேல் பழியைப் போட்டு, அரச குடும்பம் என்ற பலிகடாவை அறுத்து, தமது எஜமானர்களான பத்திரிகை உரிமையாளர்களுக்கு பாவ விமோசனம், தனலாபம், பலவிருத்தி தேடித்தர முனைந்தார்கள்.

பிரிட்டனில் முடியாட்சி கவிழ்க்கப்பட்டுவிடுமோ என்ற பயங்கர சூழ்நிலையை பத்திரிகைகள் அன்று ஏற்படுத்தியிருந்தன. பணவருவாய் கருதி, தாம் இழைத்த பாவங்கள் தங்களை விழுங்கி விடுமோ என்ற அச்சத்தில் அரச குடும்பத்தைப் பலிகடா ஆக்கி, தாம் தப்பித்துக்கொள்ள முயன்றனர் பத்திரிகை உரிமை யாளர்கள். "மக்கள் குரல்" என்ற போலி முகமூடியின் பின்னால் ஒளிந்துகொண்டு பத்திரிகை உரிமையாளர்கள் அரச வம்சத்திடம் விடுத்த கோரிக்கைகள் நிறைவேற்றக் கஷ்டமானவை; பிரிட்டிஷ் அரச பாரம்பரியத்தினால் எளிதில் ஜீரணிக்க முடியாதவை; பல நூற்றாண்டு காலமாக பிரிட்டிஷ் அரச வம்சம் பெருமையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிக்காத்த பாரம்பரியங்களை எல்லாம் ஒரே நாளில் காற்றில் பறக்கவிடுமாறு அச்சுறுத்தி நின்றவை. 'ஒரு நாள் கூத்துக்கு மீசை வைத்தவன், அல்லது வழிக்கும்படி பயமுறுத்தப்பட்டவன்' கதை போன்றது இது.

ஆனால், அதே நேரத்தில், மக்களின் "டயானா அனுதாப அலை" அரச குடும்பத்துக்கு எதிரான "டயானா அனுதாப வெறியாக" திசை திருப்பப்பட்டிருந்தது. இக் கோரிக்கைகளை அரண்மனை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில், டயானாவின் இறுதிச் சடங்கு நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ நாட்டில் அராஜகம் வெடித்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இதனை பிரிட்டனில் ஒரு முக்கிய பிரமுகர் உணர்ந்தார். அவர் - மக்கள் தலைவரான டோனி பிளேர்; பிரிட்டிஷ் பிரதமர்.

அவரது கட்சியின் கொள்கை பொதுவாக குடியாட்சி சார்ந்ததே. எனினும் டோனி பிளேர் தற்போதைய அரச குடும்பத்தின்மீது அன்பும் அபிமானமும் கொண்டிருந்தார். மகாராணியின் கடமையுணர்வு மீது அவருக்கு அலாதி பிரியம். இளவரசர் சார்லஸின் முற்போக்கான கொள்கைகள் அவரை மிகவும் கவர்ந்திருந்தன. பிரிட்டனில் பெருந்தொகையான மக்கள் வேலைக்குப் போகாமல், வீட்டிலிருந்துகொண்டு, வேலை யற்றோருக்கான அரசின் வாராந்தர இலவச மானியத்தை பெற்றுக்கொண்டு வாழ்க்கை நடத்தி வந்திருக்கிறார்கள். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்பதைவிட, அவர்களுக்கு வேலைக்குப் போகச் சோம்பல் என்பதே உண்மையாக இருந்தது.

இலவச மானியத்தில் வாழ்வோரை எப்படியாவது வேலைக்குக் கொண்டுவருவோம் என்பதை தனது பிரதான கொள்கைகளில் ஒன்றாக 1997, மே மாதத்தில் நடைபெற்ற, தேர்தலில் முன்வைத்து அமோக வெற்றி அடைந்தவர் தான் டோனி பிளேர்.

இத்தகைய ஒரு கொள்கையைப் பல வருடங்களாகவே முன்வைத்து, அதற்கு செயல்வடிவம் கொடுப்பதற்காக ஒரு தர்ம ஸ்தாபனத்தை இளவரசர் நடத்தி வருகிறார். இளவரசருடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகளையும் தனது அரசாங்கத்தின் முயற்சிகளையும் ஒன்றிணைத்து முன்கொண்டு செல்ல பிரதமர் விரும்புகிறார்.

தான் பிரதமரான பிற்பாடு டயானாவையும் டோனி பிளேர் சந்தித்திருக்கிறார். அவரது கவர்ச்சி, முயற்சிகளையும் நாட்டுக்கும் தமது அரசாங்கத்துக்கும் பயன்தரக்கூடிய முறையில் வழிநடத்த அவர் மனதில் சில திட்டங்கள் உருவாகியிருந்தன.

இக் குடும்பத்துக்குள் ஏற்பட்ட விரிசல்கள், கோபதாபங்கள் அவருக்கு வேதனையைத் தந்தன. சார்லஸ் - டயானா பிரிவும் விவாகரத்தும் நடந்தேறிய காலத்தில் ஜோன் மேஜருக்குப் பதிலாக டோனி பிளேர் பிரதமராக இருந்திருந்தால் தனது நல்லெண்ணத்தையும் சாமர்த்தியத்தையும் பயன்படுத்தி ஒரு சுமுக மான முடிவுக்கு வர உதவியிருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

எனவே - செப்டம்பர் 4ம் தேதி காலை அரண்மனையின் அஸ்திவாரத்தையே அதிரவைக்கக்கூடிய செய்திகள் காலைப் பத்திரிகைகளில் வந்தவுடன் பிரதமர் சுறுசுறுப்பானார். இத்தகைய செய்திகள் பத்திரிகைகளில் வெளிவரப்போகின்றன என்று கேள்விப்பட்டு அதற்கு முதல்நாள் இரவே அவர் செயலில் இறங்கிவிட்டார் என்றும் செய்திகள் கூறுகின்றன.

மகாராணியுடனும் இளவரசர் சார்லஸுடனும் பிரதமர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நாட்டிலுள்ள நெருக்கடி நிலைமையை விளக்கியிருக்கிறார். இந்த நெருக்கடியை நீக்குவதற்காக பல அரச பாரம்பரியங்களை உடனடியாக விட்டுக் கொடுக்கவேண்டும் என்றும் விளக்கியிருக்கிறார். டயானாவின் இறுதிச் சடங்குகள் முடிவடைந்த பின்னர் அரச வம்சத்தின் நிலையை மீள ஸ்திரப்படுத்த முடியும்.

இப்போது சில மரபுகளை விட்டுக்கொடுப்பதால் அரசவம்சம் பலவீனப்படப் போவதில்லை. அதற்குமாறாக அது அரசவம்சத்தின் அஸ்திவாரத்தை பலப்படுத்துவதாகவே அமையும். அரசவம்சம் இயங்கும் முறையை 21ம் நூற்றாண்டுக்கு ஏற்றபடி மாற்றியமைக்க வேண்டும். இளவரசர் சார்லஸின் மனதில் உள்ள சில முற்போக்கான சீர்திருத்தங்களின் அடிப்படையில் இதைச் சாதிக்கலாம் என்ற ரீதியில் பிரதமர் ஆலோசனை வழங்கியிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாராணியும் இளவரசரும் பிரதமர் பிளேரின் ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டனர்.

இதையடுத்து, பிரதமர் பத்திரிகையாளர்களுடன் பேசினார். "மகாராணி மீதும் அவரது குடும்பத்தினர் மீதும் தெரிவிக்கப்பட்ட கண்டனங்கள் நியாயமற்றவை. அவர்களுடைய கஷ்டமான சூழ்நிலையை எல்லாரும் எண்ணிப் பார்க்கவேண்டும். இறுதிச் சடங்குகளை உரிய முறையில் ஒழுங்கு செய்யும் கடமையைக் கவனிப்பதா? தாயை இழந்து துடிக்கும் இரு சிறுவர் களைத் தேற்றுவதா? எங்களுக்கு ஏற்பட்டுள்ள துயரம் அவர் களுக்கும் தான் இருக்கிறது. அந்தத் துயரத்தை அந்தக் குடும்பத் தினர் ஒருவருக்கு ஒருவர் அனுசரணையாக இருந்து தனிமையில் தேற்றிக் கொள்ள முயல்கின்றனர். இது இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் அனுபவிக்கின்ற உரிமை. அந்த உரிமை அவர்களுக்கும் உண்டு. அதை நாம் மதிக்க வேண்டும். இறுதிச் சடங்குகளுக்கு முன்னால், மக்களுடன் தமது துயரத்தைப் பகிர்ந்துகொள்ள அவர்கள் வெளியே வருவார்கள். இத்தகைய வாதங்களில் நமது சக்தியைச் செலவழிப்பதை விட்டு, நமது அன்புக்குப் பாத்திரமான டயானாவின் இறுதிச் சடங்குகளை எவ்வளவு சிறப்பாக ஒழுங்கு செய்யமுடியுமோ அவ்வளவு சிறப்பாகச் செய்து முடித்துப் பெருமை அடைவோம்."

பிரதமரின் இந்தக் கோரிக்கையில் நியாயம் இருப்பதை மக்கள் உணரத் தொடங்கினர். கொந்தளிப்பு அடங்கத் தொடங்கியது. பிரதமரின் வலது கரம் போன்றவரான அமைச்சர் பீட்டர் மன்டல்சன் (லேபர் கட்சியின் அமோகமான தேர்தல் வெற்றியின் பின்னால் உள்ள 'மூளை' என்று வர்ணிக்கப்படுபவர்) அரச குடும்பத்தின் மீது சுமத்தப்படும் வீண்பழிகளைக் களையும் பணியில் உடனடியாக அமர்த்தப்பட்டார்.

அரண்மனையும் அடுத்தடுத்து சில அதிரடி நடவடிக்கை களில் இறங்கியது. இவை மக்களை ஆச்சரியப்பட வைத்தன. அவர்களைத் திருப்திப்படவும் வைத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலிஸபெத் மகாராணி
# வந்தார், கண்டார், வென்றார்!
# தேசம் கடந்து எதிரொலித்தது
# அவரது மனிதாபிமானம்!

வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில் நடைபெறவிருந்த இறுதிச் சடங்குகளுக்கு வருமாறு சகல தேசியப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கும் அரண்மனை, அழைப்பிதழ்களை ஏற்கெனவே அனுப்பி வைத்திருந்தது.

ஆனால் வியாழனன்று காலை, டயானாவின் தம்பி - ஏர்ள் ஸ்பென்ஸர் சின்னப் பக்க (டாப்ளொய்ட்) பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு, தானே நேரடியாகப் போன் செய்தார். இறுதிச் சடங்குகளில் அவர்கள் கலந்துகொள்வதை தான் விரும்பவில்லை என்று சொல்லி, “தயவுசெய்து வரவேண்டாம்” என்று முகத்தில் அறைந்ததுபோல் கூறிவிட்டார்.

இதற்குக் காரணம் -

சின்னப் பக்கப் பத்திரிகைகள் அன்று காலை அரண்மனையை காரசாரமாய் விமர்சனம் செய்துவிட்டன என்று எவராவது நினைத்தால் அது தவறு.

சின்னப் பக்கப் பத்திரிகைகள்தான் டயானாவின் அந்தரங்கத்தை அதிகமாக ஊடுருவின என்பது தான் ஸ்பென்சருடைய கோபத்துக்குக் காரணம் என்று எவராவது நினைத்தால் அது ஓரளவு தான் சரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்பென்சருடைய கோபத்திற்கு முக்கியக்காரணம், இந்தச் சின்னப் பக்கப் பத்திரிகைகள் முன்னைய சந்தர்ப்பங்களில். ஸ்பென்சருடைய குடும்ப அந்தரங்கங்களை அம்பலப் படுத்தியது தான். அந்தப் பத்திரிகை ஆசிரியர்களைப் பழிவாங்குவதற்கு மக்கள் இளவரசியின் இறுதிச் சடங்குகள் தான் அருமையான சந்தர்ப்பம் என்று 'ஸ்பென்ஸரின் மனச்சாட்சி நினைத்தது போலும்.

நண்பகலளவில், படுக்கைவிரிப்புகள், குடைகள், சூட்கேஸ்கள் சகிதம் பல பொதுமக்கள் வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்துக்கு முன்னால் உள்ள பிளாட்பாரத்தில் இடம் பிடித்துக் கொண்டனர். சனிக்கிழமை நடைபெறவிருந்த சடங்குகளை நேருக்கு நேர் பார்வையிடுவதற்கு இந்த ஏற்பாடு.

கென்ஸிங்டன் அரண்மனைக்கு முன்னால் 70 அடி நீள அகலம், 5 அடி உயரத்துக்கு மக்கள் அஞ்சலிக்காக வைத்த மலர்கள் குவிந்திருந்தன.

பிற்பகல் - அரண்மனையிலிருந்து முக்கியமான ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் குறிப்பிடப்பட்ட முக்கிய அம்சங்கள்:

- அரச மரபுகளை ஒதுக்கி வைத்துவிட்டு மகாராணி வெள்ளியன்றே லண்டன் திரும்புவார்.
- வெள்ளி இரவு மகாராணி தொலைக்காட்சியில் டயானாவைப் பற்றி நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார்.
- வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில் எல்டன் ஜோன் டயானா நினைவுப் பாடல் ஒன்றைப் பாடுவார்.
- மகாராணியின் இளைய குமாரர்களான இளவரசர் அன்ட்ரூவும் இளவரசர் எட்வர்ட்டும் வியாழனன்று லண்டன் திரும்புவார்கள்.
- சனிக்கிழமை காலை, இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக மகாராணி பக்கிங்ஹாம் அரண்மனையை விட்டுப் புறப்பட்டதும், அரண்மனைமீது பறக்கும் அரசவம்சக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடி இறக்கப்படும். நாட்டுக்கொடியான 'யூனியன் ஜாக்' ஏற்றப்பட்டு அரைக் கம்பத்தில் பறக்கும்.

இந்தச் செய்தி ஒலிபரப்பை அரண்மனைகளின் முன்னால் நின்ற மக்கள் தமது பாக்கட் வானொலிகளில் கேட்டமாத்திரத்தே கைதட்டி வரவேற்றனர்.

அன்று மாலை - தேவாலயத்தில் விசேஷ ஆராதனை களுக்குச் செல்வதற்காக பால்மோரல் அரண்மனைக்கு வெளியே அரசகுடும்பத்தினர் வந்தனர். அப்போது அரண்மனை வாயிலில் வைக்கப்பட்ட மலர்ச் செண்டுகளையும் அனுதாபச் செய்திகளையும் பார்வையிட்டனர். மகாராணி எலிஸபத், எடின்பரோ கோமகன், இளவரசர் சார்லஸ், இளவரசர் வில்லியம், இளவரசர் ஹரி, இளவரசி ஆனின் மகன் பீட்டர் பிலிப்ஸ் ஆகியோரே அக்குழுவில் இருந்தனர்.

இளவரசர் ஹரி தனது தந்தை சார்லஸின் கரங்களை. இறுகப் பற்றியவாறே குனிந்து அனுதாபச் செய்தியொன்றை வாசித்தார். இளவரசர் வில்லியம் அனுதாபச் செய்திகளை தனது தந்தைக்கும் பாட்டிக்கும் (மகாராணி) சுட்டிக்காட்டிக்கொண்டே வந்தார். தாயை இழந்த இரு சிறுவர்களுக்கு தமது குடும்பத்தவருடன் இருந்த நெருக்கத்தை தொலைக்காட்சியில் கண்டவர்கள் மனம் நெகிழ்ந்தனர்.

வியாழனன்று லண்டன் வந்துசேர்ந்த இளவரசர்கள் அன்ட்ரூவும் எட்வர்ட்டும் சென் ஜேம்ஸ் அரண்மனைக்குச் சென்று டயானாவின் பிரேதப் பெட்டிக்கு அஞ்சலி செலுத்தினர். அதன்பின் அரண்மனைக்கு வெளியே வந்து அங்கு நின்ற மக்களுக்கு அவர்களது ஆதரவுக்கு நன்றி தெரிவித்தனர். பின்னர் மக்களோடு மக்களாக தெருவில் 300 யார் தூரம் நடந்துசென்று பக்கிங்ஹாம் அரண்மனையை அடைந்தனர். அரச குடும்பத்தினர் லண்டனில் இல்லையே என்று ஒப்பாரி வைத்த பத்திரிகைகள் இளவரசர்களின் வருகையை தமது உட்பக்கங்களில் சிறிய படங்களுடன் வெளியிட்டன. இளவரசர்கள் வந்ததும் போனதும் மக்கள் யாருக்கும் தெரியாது என்று எழுதின. 'டெயிலி மிரர்' பத்திரிகை மட்டும் அன்ட்ரூ - எட்வர்ட் வருகையைப் பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளவரசர் சார்லஸும் அவரது மகன்களும் கென்ஸிங்டன் அரண்மனைக்கு வெளியே மக்கள் வைத்த அனுதாபச் செய்திகளைப் பார்வையிடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மையான செய்தி வெளியிட்டது. மக்கள் மகிழ்ச்சிப் பெருக்குடன் அவர்கள் வரவைப் பாராட்டித் திருப்திப் பட்டனர் என்று அப்பத்திரிகை எழுதியது. அவர்கள் வருகையைக் காட்டும் படங்களையும் பொருத்தமான முறையில் பிரசுரித்தது.

## அந்த ஏழு நாட்கள் - வெள்ளி, செப்டம்பர் 5

மெயில் பத்திரிகை மீண்டும் பல்டி அடித்தது. பெனி ஜுனர் என்ற நிருபர் இளவரசர் சார்லஸுக்கு சோப்பு போட்டு குளிப்பாட்டினார். தாயை இழந்த வில்லியம், ஹரி இருவருக்கும் பாசத்தை அள்ளிக் கொட்டும் தந்தையாக சார்லஸ் விளங்குவார் என்று கூறி, அதற்கு எடுத்துக்காட்டாக பழைய சம்பவங்கள் சிலவற்றை நினைவுகூர்ந்தார். அதே பத்திரிகையின் அரசியல் நிருபர் சைமன் ஹெஃபர் ஏனைய பத்திரிகைகளுக்கு ஒரு எச்சரிக்கை விடுத்தார். சிறுவர்கள் வில்லியம், ஹரியினுடைய தந்தையையும் பாட்டியையும் நாம் அரசியல் ரீதியாக அழிக்க முற்பட்டால் அது இரு சிறுவர்களையும் அழிப்பதற்கு ஒப்பானது என்று வேதம் ஓதினார். ஏனைய பத்திரிகைகளின் தாக்குதல் ஓயவில்லை.

106 மணி நேரத்திற்குப் பிறகுதான் கொடியை அரைக்கம்பத்திற்கு இறக்க எண்ணம் வந்ததா என்று கேட்டது 'சன்'. அரச குடும்பம் "எங்களை நட்டாற்றில் விட்டுவிட்டது" என்றது. (எங்களை என்று 'சன்' சொன்னால் அது இயல்பாகவே மக்களைக் குறிக்கும் என்பது அவர்களது எண்ணம்!)

அந்தக் காலத்தில் நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று அரச குடும்பத்தினர் சொல்லுவார்கள். இந்தக் காலத்தில் அவர்கள் என்ன செய்யவேண்டும் என்று நாங்கள் சொல்கிறோம் என்று எக்ஸ்பிரஸ் பத்திரிகை ஆணவக் களிப்போடு எழுதியது.

ஆன் ராபின்சன் என்ற பெண் நிருபர் அதே பத்திரிகையில் ஆர்ப்பரித்தார். "எடின்பரோ கோமகனாருக்கு (டயானா செய்தது போல) பொதுமக்களைக் கட்டித்தழுவுவது எப்படி என்று சொல்லிக்கொடுக்கும் வகுப்புகளுக்கு போக முடியாது. அவருக்கு வயது ஏறிவிட்டது. சார்லஸுக்கும் (டயானா செய்தது போல)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்டொனால்ட்ஸ்ுக்கு (மாடு, பன்றி, கோழி இறைச்சி பொரித்து ரொட்டிக்குள் வைத்து விற்கும் உணவகம்) போக வழி தெரியாது. நல்லவேளை, டயானா இவற்றை தனது மகன்களுக்குப் பழக்கிவிட்டார், மாட்சிமை மிகு அரச குடும்பமே, வருமின், மக்கள் சக்தியைக் காண்மின்', என்று கிண்டலடித்தார் ஆன்.

'டைம்ஸ்' எழுதிய கண்டனத் தலையங்கத்தில், "அரண்மனைக்கு முதுகு சொறிபவர்கள் பத்திரிகைகளிலும் இருக்கிறார்கள். அரண்மனையில் அதிகாரிகளாகவும் இருக்கிறார்கள். அரண்மனைக்கு ஏற்பட்ட சங்கடத்துக்கு இவர்கள்தான் காரணம். பத்திரிகை விமர்சனங்கள் தமது மனதைப் புண்படுத்தி விட்டதாக அரச குடும்பத்தினர் கூறுவது அர்த்தமற்றது."

'கார்டியன்' நிருபர் இளவரசர் சார்லஸைக் குதறினார். 'சார்லஸ்' மன்னராக வருவதற்கு இனி வாய்ப்பில்லை என்று திருப்திப்பட்டுக் கொண்டார். 50 வருட காலம் மகிழ்ச்சியில்லாத வாழ்க்கை நடத்திய சார்லஸ் இனி ஓய்வெடுத்து, அவருக்கு விருப்பமான தோட்டவேலை, சத்துணவு பிஸ்கட், அவருக்கு பிடித்தமான காதலி என்று இத்தியாதிகளில் தனது காலத்தை ஓட்டட்டும்" என்று இளவரசருக்கு அன்புடன் ஆலோசனை வழங்கினார்.

பத்திரிகைகள் செய்த அர்ச்சனைகள் ஒரு புறம் இருக்க, அரச குடும்பத்தினர் அனைவரும் லண்டன் வந்து சேர்ந்தனர்.

பிற்பகல் இரண்டு மணியளவில் மகாராணியும் எடின்பரோ கோமகனும் பக்கிங்ஹாம் அரண்மனையின் வாயிற்கதவுகளுக்கு வெளியே வந்தனர். அங்கே குவிந்து கிடந்த அஞ்சலி மலர்களையும் அனுதாபச் செய்திகளையும் பார்வையிட்டனர். பின் வெளியே நின்ற மக்களோடு பேசத் தொடங்கினர். மகாராணிக்கு எதிராக பத்திரிகைகள் ஏற்படுத்தி வைத்த குரோதம் எல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் ஆவியாகி மறைந்தது. துன்பக் கண்ணீரோடு வந்த மக்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்து கரகோஷம் செய்து மகாராணியை வரவேற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மகாராணியுடன் மனம் திறந்து பேசினர். மகாராணி மக்களுடன் மனம் திறந்து பேசினார். டயானாவுக்கென்று கொண்டு வந்த மலர்களை மக்கள் மகாராணிக்குக் கொடுத்து அவரைத் தேற்றினர். தனது பிரதான கவலை எல்லாம் 15 வயதும் 13 வயதும் நிரம்பிய தனது பேரன்களைப் பற்றித்தான் என்று மகாராணி மக்களுக்குச் சொன்னார். கண்கலங்கி நின்ற அவருக்கு மக்கள் ஆறுதல் சொன்னார்கள்.

அங்கிருந்து சென் ஜேம்ஸ் அரண்மனைக்குள் மகாராணியும் கணவரும் சென்றனர். தமது முன்னாள் மருமகளின் பிரேதப் பெட்டிக்குத் தனிமையாக அஞ்சலி செய்தனர். பின் வெளியே வந்து மக்களுடன் கலந்து கொண்டனர்.

கியூ வரிசையில் நின்ற மக்கள் கொண்டு வந்த மலர்களையும் மலர்க்கொத்துக்களையும் எடின்பரோ கோமகன் வாங்கி மலராஞ்சலிக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வைத்தார்: பக்கிங்ஹாம் அரண்மனைக்கு முன்னால் நடைபெற்றது போல், மகாராணியும் மக்களும் மனதால் இணைந்தனர்.

45 வருட காலமாக தமது நாட்டை கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, அன்பு, அடக்கம், நிதானம், கௌரவத்தோடு ஆண்டு வரும் அந்தப் பெரிய மனுஷிக்கு மக்கள் கரகோஷம் செய்து, ஆனந்தக் கண்ணீர் மல்க தமது பேராதரவைத் தெரிவித்தனர்.

மகாராணிக்கும் அவரது பிரஜைகளுக்குமிடையே நடைபெற்ற அந்த உள்ளங்களின் உறவாடலைப் பெரும்பான்மையான பத்திரிகைகள் அடுத்த நாள் அரைமனதோடு பிரசுரித்தன. ‘டெயிலி டெலிகிராப்’ பத்திரிகை மட்டும் மகாராணியோடு உரையாடிய மக்கள் பலரைப் பேட்டி கண்டு, அவர்களது கருத்துக்களை வெளியிட்டிருந்தது.

மகாராணியும் கணவரும் அழுது, தொண்டை கட்டிய நிலையில் இருந்தார்கள். அவர்கள் கண்கள் சிவந்திருந்தன. தமது துயரத்தைக் கட்டுப்படுத்தி, வெளியே காட்டிக்கொள்ளாமல் இருக்க அவர்கள் முழு முயற்சி எடுத்தது தெரிந்தது. எடின்பரோ கோமகனின் அடைத்துப்போன குரல் அவரது சோகத்தை வெளிப்படுத்தியது. மகாராணி பேசியபோது அவரது உதடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடித்ததையும் அவரது கைவிரல்கள் நடுங்கியதையும் காண முடிந்தது. வில்லியம், ஹரி – வில்லியம், ஹரி என்று தனது பேரன்களின் சோகத்தைப் பற்றியே மகாராணி சதா பேசிக் கொண்டிருந்தார். இவை தான் மகாராணியோடு பேசிய மக்கள் சொன்ன கருத்துக்கள்.

இளவரசர் சார்லஸும், அவருடன் அவரது மகன்கள் வில்லியமும் ஹரியும் கென்ஸிங்டன் அரண்மனையிலிருந்து வெளிப்பட்டனர். விவாகம் உடைந்து போவதற்கு முன்னால், அவர்கள் மூவரும் டயானாவுடன் வாழ்ந்தது இந்த அரண்மனை யில்தான். மக்கள் அவர்களைச் சுற்றி மொய்த்துக் கொண்டனர். கரகோஷ ஒலி எழுந்தது. உள்ளங்கள் பேசின. உணர்வுகள் ஒன்றாயின.

மக்கள் சார்லஸுக்கும் மகன்களுக்கும் ஆறுதல் மொழி கூறினர். கலங்கிய கண்களுடன், ஆனால் சிரித்த முகத்துடன் தந்தையுடன் தனயர்களும் மக்களுக்கு நன்றி கூறினர். 15 வயதும், 13 வயதும் நிறைந்த பையன்கள் பொங்கி வரும் வேதனையை அடக்கிக் கொண்டு, குமுறும் இதயங்களோடு அளவளாவியது காண்போர் உள்ளங்களில் வேதனையையும் பெருமதிப்பையும் ஏற்படுத்தியது. உணர்ச்சிகளை அடக்கி வாசிக்கும் பாரம்பரிய பிரிட்டிஷ் பண்பாடு எலிஸபெத் மகாராணியிடமிருந்து அவரது மகனான இளவரசர் சார்லஸ் வரை மட்டுமல்ல, மகாராணி யிடமிருந்து அவரது சிறிய பேரன்கள் வில்லியம், ஹரி வரைக்கும் போய்விட்ட கண்ணியத்தை, கௌரவத்தை சுக்கான் இல்லாத கப்பல் போல் கடந்த சில நாட்களாகத் தத்தளித்த, தத்தளிக்க வைக்கப்பட்ட நாடு உணர்ந்தது.

அன்றிரவு, பக்கிங்ஹாம் அரண்மனையின் பால்கனியில் நின்று கொண்டு மகாராணி தொலைக்காட்சி வாயிலாக பிரிட்டிஷ் மக்களுக்கு உரையாற்றினார். கையிலே எந்த விதக் காகிதமோ குறிப்புமோ இல்லாமல், தமது இதயத்திலிருந்து வந்த உணர்ச்சிகளை (முன்கூட்டிய ஒளிப்பதிவுகள் ஏதும் இன்றி) நேரடியாக தனது பிரஜைகளின் இல்லங்களுக்கு ஒளிபரப்பினார் மகாராணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடந்த ஞாயிற்றுக்கிழமையின் கொடூர நிகழ்வை அடுத்து, நாடு தழுவிய ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் டயானாவின் மறைவை ஒட்டி எழுந்த கரைகடந்த சோக உணர்வை நாம் பார்த்தோம்.

"இந்த இழப்பைத் தாங்கிக் கொள்வதற்கு நாங்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு வழிகளில் முயற்சி செய்திருக் கிறோம். எங்களது இழப்பை வார்த்தைகளால் வெளிப்படுத்துவது இலகுவான ஒரு காரியம் அல்ல. ஆரம்பத்தில் ஏற்படும் அதிர்ச் சியை அடுத்து, பல்வேறு உணர்ச்சிகள் எங்கள் உள்ளங்களில் சங்கமித்து எம்மை ஆட்கொள்கின்றன: நடந்ததை நம்ப முடியாத நிலை, எதையும் புரிந்து கொள்ள முடியாத தன்மை, இழப்பு ஏற்படுத்தும் கோபம், மறைந்தவர் விட்டுச் சென்றோர் மீதான பரிவு - அக்கறை.

"கடந்த சில தினங்களாக நாங்கள் அனைவரும் இத்தகைய உணர்ச்சிகளை அனுபவத்திருக்கிறோம். எனவே, உங்களுக்கு நான் இப்போது சொல்லப்போவது, உங்களது மகாராணி என்ற ரீதியிலும் ஒரு பாட்டி என்ற ரீதியிலும், எனது இதயத்தின் வெளிப்பாடு ஆகும்."

மகாராணி தொடர்கிறார்:

"முதலில், தனிப்பட்ட முறையில் டயானாவின் சிறப்பைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அவர் இயல்பு கடந்த தனிச்சிறப்பும் திறமையும் வாய்ந்த ஒரு மனிதப் பிறவி. மகிழ்ச்சியுடன் இருந்தாலென்ன நலிவுற்று இருந்தாலென்ன, புன்முறுவல் செய்யும் ஆற்றலையும் சிரிக்கும் ஆற்றலையும் எக்கட்டத்திலும் அவர் இழக்கவில்லை; தனது அன்பினாலும் சிநேகபூர்வமான தன்மையினாலும் மற்றவர்களை ஊக்குவிக்கும் ஆற்றலையும் இழக்கவில்லை.

"மற்றவர்கள்மீது அவர் செலுத்திய கடமை உணர்வையும் ஊக்க உணர்வையும், குறிப்பாக தனது இரு பையன்கள் மீது அவர் வைத்திருந்த ஈடுபாட்டையும் நான் மதிக்கிறேன், போற்றுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வில்லியம், ஹரி இருவருக்கும், ஏனைய குடும்பத்தினருக்கும் ஏற்பட்ட பேரிடிபோன்ற இழப்பினை, அவர்கள் இருவரும் உணர்ந்து, ஏற்றுக்கொண்டு, தாங்கிக்கொள்ளும் மனப்பக்குவத்தை உருவாக்க உதவுவதற்கு இவ்வாரம் நாங்கள் அனைவரும் பால்மோரல் அரண்மனையில் முயற்சி செய்து கொண்டிருந்தோம்.

"டயானாவோடு பழகியவர்களால் அவரை ஒருநாளும் மறக்க முடியாது. டயானாவைச் சந்திக்காத இலட்சக்கணக்கான ஏனையோர்கூட அவரைப் புரிந்துகொண்டதாகவே கருதினர்; அவர்களும் அவரை நினைவில் வைத்திருப்பார்கள்."

எத்தனையோ பேட்டிகளிலும் இரங்கலுரைகளிலும் கடந்த சில நாட்களாக வந்துகொண்டிருந்த கருத்துகளை மகாராணியின் உரை உறுதிப்படுத்தியது. அவரது இதயத்தில் இருந்து வந்த இந்த உணர்ச்சிகள் பிளவுபடுத்தப்பட்டிருந்த நாட்டை ஒன்றிணைத்தன.

டயானாவுடைய வாழ்க்கையிலிருந்தும் அவரது மறைவு ஏற்படுத்திய கற்பனைக்கு அப்பாற்பட்ட உளம்நெகிழும் தாக்கத்திலிருந்தும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் உண்டு என்று தான் நம்புவதாகக் கூறிய மகாராணி, டயானாவோடு இறந்த ஏனையோரது குடும்பங்களுக்கும் தனது அனுதாபங்களை வெளிப்படுத்தினார்.

டயானாவின் மறைவைப் பற்றியே நினைத்தும், கலங்கியும், பேசிக்கொண்டும் இருந்த ஒரு தேசத்திற்கு, அவருடன் பலியான மேலும் இரு மனித ஜீவன்களையும் மறக்கவேண்டாம், அவர்களும் மனிதர்கள் தான், அவர்களும் எமது அனுதாபத்துக்கும் பிரார்த்தனைகளுக்கும் உரியவர்களே என்று மகாராணி நாசூக்காக நினைவூட்டியபோது ஒரு தேசமே வெட்கித் தலைகுனிந்தது. மகாராணியினுடைய பரந்த மனப்பான்மையும் கண்ணியமும் பிரிட்டனுக்கு அப்பால் உள்ள பிரான்ஸ் வரையும், அதற்கும் அப்பாலுள்ள எகிப்து வரையும் எதிரொலித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தேவாலயத்தில் 'சத்திய விமரிசனம்' இன்னொரு தேவாலயத்தில் 'அபஸ்வரம்'

கிறித்தவ சமயத்தில் கத்தோலிக்க கொள்கையை மறுத்துப் பிரிந்து சென்று போப்பாண்டவரின் ஆட்சிக்கு எதிரான கொள்கையைப் பின்பற்றுகிறவர்கள் புரொடெஸ்டன்டிசம் பிரிவைச் சேர்ந்தவர்கள். கத்தோலிக்க, புரொடெஸ்டன்ட் மரபுகளை ஒன்றிணைத்த மேற்கத்திய கிறித்தவக் கிளைநெறியின் இங்கிலாந்துக் கிளை 'சர்ச் ஆஃப் இங்கிலான்ட' (CHURCH OF ENGLAND) என்று அழைக்கப்படும். பெரும்பாலான இங்கிலாந்து மக்கள் இப் பிரிவைச் சேர்ந்தவர்களே. இப்பிரிவும் போப்பாண்டவரின் அதிகாரத்தை நிராகரிக்கிறது. இப்பிரிவின் சம்பிரதாயபூர்வமான அதிபர் அரியணையில் உள்ள பிரிட்டிஷ் மன்னர் (அல்லது மகாராணி) தான்.

டயானாவின் அம்மா டயானாவின் அப்பாவை விவாகரத்துச் செய்து, புதிய கணவரைத் தேடிக்கொண்டபோது அதுகாறும் தான் அனுஷ்டித்து வந்த 'சர்ச் ஆஃப் இங்கிலான்ட்' பிரிவிலிருந்து விலகி தனது புதுக் கணவரின் மதமான கத்தோலிக்க சமயத்தைத் தழுவிக் கொண்டார்.

சனிக்கிழமையன்று டயானாவுக்கு நடைபெறவிருந்த இறுதிச் சடங்குகள் 'சர்ச் ஆஃப் இங்கிலாண்ட்' மரபுப்படி, அந்தப் பிரிவுக்குச் சொந்தமான, அரச குடும்ப நிகழ்வுகள் நடைபெறும் வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.,

ஆனால் - டயானாவின் அம்மா, திருமதி பிரான்ஸஸ் ஷான்ட் கிட், தான் தழுவிக் கொண்ட மதப் பிரிவின் சார்பில் டயானாவின் ஆவி அமைதி பெறுவதற்காக சிறப்பு வழிபாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றை வெள்ளியன்று லண்டனில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் கதீட்ரலில் ஏற்பாடு செய்திருந்தார். இங்கிலாந்தினதும் வேல்ஸினதும் உரோமன் கத்தோலிக்க மதப்பிரிவின் தலைவரும், போப்பாண்டவருக்கு அடுத்த இரண்டாவது குருவகுப்பைச் சேர்ந்தவருமான கார்டினல் பஸில் ஹியூம் இந்த சிறப்பு வழிபாட்டை நடத்தினார். சுமார் 3000 பேர் இந்த வழிபாட்டில் கலந்துகொண்டனர்.

டயானாவுக்காக மட்டும் அல்ல; இளவரசர்கள் வில்லியம், ஹரி, சார்லஸ் ஆகியோருக்கும்; டயானாவின் அம்மா, தம்பி, சகோதரிகள் ஆகியோருக்கும்; மகாராணிக்கும்; டயானாவுடன் விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கும் கூட பிரார்த்திக்க கார்டினல் வேண்டுகோள் விடுத்தார்.

**டயானாவை "ஒழுக்க உறுதியற்றவர்", "குற்றம் செய்தவர்", "குறைபாடு உள்ளவர்" என்று சத்தியபூர்வமாக வர்ணித்த கார்டினல், "அப்படியிருந்தாலும் நாங்கள் டயானாவை நேசித்தோம்" என்று கூறினார்.**

**"டயானா இப்போது ஆண்டவருடைய பார்வைக்குள் போய்க் கொண்டிருக்கிறார். பூமியில் கிடைக்கமுடியாத உண்மையான அமைதி, மகிழ்ச்சி அவருக்கு அங்கே கிடைக்கும்" என்றார்.**

**"இளவரசியை ஆண்டவர் மன்னித்து, கருணை செலுத்தித் தீர்ப்பளிப்பார்" என்றார் கார்டினல்.**

**"அங்கவீனர்கள், நோயாளிகள், பாலகர்கள், முதியவர்கள் மீது டயானா அக்கறை கொண்டிருந்தார். அவர்களுக்கு அவர் ஆற்றிய சேவை உண்மையில் ஆண்டவனுக்கு ஆற்றிய சேவையாகும்" என்றார் கார்டினல்.**

**டயானாவைப் பற்றி பூவுலகில் செய்யப்பட்ட மிகச் சத்தியபூர்வமான விமர்சனம் இது தான். வார்த்தைச் சிக்கனத்தோடு, ஆனால் அறிவு வளத்தோடு வழங்கப்பட்ட இந்த உரையை அடுத்தநாள் வெளிவந்த பிரிட்டிஷ் பத்திரிகைகள் இருட்டடிப்புச் செய்தன; அல்லது "3000 பேர் கலந்து கொண்ட**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு வழிபாடு'' என்ற தலைப்பின் கீழ் செய்தியை உட்பக்கங்களில் 'அமுக்கி விட்டன.'

வெள்ளியன்று இரவு, டயானாவின் பிரேதப்பெட்டி சென்ஜேம்ஸ் அரண்மனையிலிருந்து கென்ஸிங்டன் அரண்மனைக்கு பிரேதக் கார் மூலம் கொண்டு செல்லப்பட்டது. அதைப் பின்தொடர்ந்த மோட்டார் வண்டியில் இளவரசர் சார்லஸும் அவரது மகன்களான இளவரசர் வில்லியமும் ஹரியும் சென்றனர்.

அந்த நேரத்தில் அந்த மூவரின் மனதில் என்னென்ன நினைவுகள் அலைமோதினவோ? ஒரு காலத்தில் கென்ஸிங்டன் அரண்மனை அவர்களது இல்லமாக இருந்தது. நாம் இருவர் நமக்கு இருவர் என்று சார்லஸ், டயானா, வில்லியம், ஹரி 'குடியிருந்த கோயில்' அது.

அந்தக் 'கோயிலுக்கு' டயானாவை மணமகளாக சார்லஸ் அழைத்து வந்தபோது ஒளிமயமான எதிர்காலம் அவரது உள்ளத்திலே தெரிந்திருக்கலாம்.

டயானாவும் சார்லஸும் ஒருவரோடு ஒருவர் நெருக்கமாகப் பழகி வந்த காலத்தில் பத்திரிகைகளில் அவர்கள் திருமணம் செய்வார்களா இல்லையா என்று ஏகப்பட்ட வதந்திகள் வந்தன. சார்லஸின் அப்பா எடின்பரோ கோமகன் மகனுக்கு ஒரு கடிதம் வரைந்தார்.

"மகனே, நீ டயானாவை காதலிக்கிறாயோ இல்லையோ, அவளைத் திருமணம் செய்துகொள்ளப் போகிறாயோ இல்லையோ, அது உன் இஷ்டம். ஆனால் கூடிய சீக்கிரத்தில் ஒரு முடிவு எடுப்பது நல்லது. நீ அவளைத் திருமணம் செய்து கொள்ளாவிட்டால், இந்தத் தொடர்பைத் துண்டித்து ஒரு இளம் பெண்ணின் பெயருக்கு வீண் களங்கம் ஏற்படாமல் பார்த்துக் கொள்" என்ற தோரணையில் எழுதினார்.

டயானாவைத் திருமணம் செய்வதா இல்லையா என்று மனம் பேதலித்துக் கொண்டிருந்த சார்லஸை 'ஆம்' என்ற உடனடி முடிவை எடுக்க வைத்தது அப்பாவின் கடிதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(மேலே) குதிரை வண்டியில டயானாவின் திருமண ஊர்வலம் 29.7.81.
(கீழே) அதே இடத்தில் பீரங்கி வண்டியில் டயானாவின் பிரேத ஊர்வலம் 6.9.97.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டயானாவை மணமகளாக கென்ஸிங்டன் அரண்மனைக்கு சார்லஸ் அழைத்துவந்தபோது எடின்பரோ கோமகன் தனது முதலாவது மருமகளை "குங்குமச் சிமிழே, குடும்பத்து விளக்கே, குலமகளே வருக, எங்கள் கோவிலில் வாழும் காவல் தெய்வம் கண்ணகியே வருக," என்று நெஞ்சார வாழ்த்தி வரவேற்றிருப் பாரோ?

அது பகற்கனவு என்பதை தந்தையும் மகனும் என்றோ உணர்ந்திருப்பார்கள்.

அந்தக் கனவினால் எற்பட்ட காலத்தால் அழியாத வேதனை அந்த வேளையில் சார்லஸின் மனதை உறுத்தியிருக்கக் கூடும். அந்தக் கனவின் விளைவாகத் தோன்றிய இரு பாலகர்களின் துடிப்பும் வேதனையும் அவரது நெஞ்சை மேலும் நீறாக்கியிருக்கக்கூடும்.

இறைவனின் சோதனை ஆள்பவன், ஆளப்படுபவன் என்ற வரம்புகளுக்கு அப்பாற்பட்டது என்பது தெரிகிறதல்லவா?

எந்த கென்ஸிங்டன் அரண்மனையில் பக்கிங்ஹாம் அரண்மனைக்குப் போட்டியாக ஒரு தர்பார் நடத்தி வந்தாரோ, அந்த அரண்மனைக்கு மீளாத்துயிலில் வந்து சேர்ந்தார் டயானா.

இலையுதிர்காலத்து இதமான இருளில் அவரது துயில் தொடர்ந்தது.

**அந்த ஏழு நாட்கள் -**
**சனி, செப்டெம்பர் 6**

பொழுது புலர்ந்தது.

டயானாவின் இறுதி ஊர்வலத்துக்குத் தயாராக ஆதவனும் துயில் விட்டெழுந்தான்.

அந்த ஆதவனின் அருட்பெயரைத் தாங்கிய, பிரிட்டனின் "சன்" பத்திரிகையும் வீதிகளுக்கு வந்தது.

அருள் வடிவம், அன்புத் தெய்வம், கருணைக் கடல் அன்னை தெரசா இறைவனடி சேர்ந்த செய்தியை ஒரு கார்ட்டூன் படம் மூலம் 'சன்' வெளிப்படுத்தியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொர்க்கத்தில் தேவதைகளாக அன்னையும் டயானாவும் கைகோர்த்து அருகருகே வீற்றிருக்கும் கார்ட்டூன், அதாவது கேலிச் சித்திரம்!

அதிகாலையில் இப்படி ஒரு அஜீரணம் தேவை தானா?

நல்ல வேளை, வேறெந்த பிரிட்டிஷ் பத்திரிகையும் அன்று காலை அன்னைக்கு இத்தகைய ஒரு கௌரவத்தைத் தரவில்லை.

காலை 9.08 மணிக்கு கென்ஸிங்டன் அரண்மனையில் இருந்து டயானாவின் இறுதி யாத்திரை ஆரம்பமானது. பிணப் பெட்டி அரச வம்சக் கொடியால் மூடப்பட்டு பீரங்கி வண்டி மீது கொண்டு செல்லப்பட்டது. பீரங்கி வண்டியை ஆறு கறுப்பு நிறக் குதிரைகளும் அரசபடையைச் சேர்ந்த எட்டு வீரர்களும் இழுத்துச் செல்ல, இளவரசர் சார்லஸினுடைய வேல்ஸ் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த பன்னிரு வீரர்கள் இரு மருங்கிலும் சென்றனர்.

இந்த அணிக்கு முன்னாலும் பின்னாலும் குதிரைஏறிய போலீஸார் சென்றனர்.

கென்ஸிங்டன் அரண்மனை முதல் வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயம் வரையான நான்கு மைல் நெடுகிலும் சாலையின் இரு மருங்கிலும் சுமார் பத்து இலட்சம் மக்கள் அணிதிரண்டு நின்று டயானாவின் உடலிற்கு அஞ்சலி செய்தனர். சிலர் அழுதனர், பலர் கண்கலங்கினர், பெரும்பாலோர் கவலை தோய்ந்த முகத்துடன் 'மக்களின் இளவரசி' என்று மரணத்தில் மகுடம் சூட்டப்பட்ட டயானாவுக்கு பிரியாவிடை அளித்தனர்.

பக்கிங்ஹாம் அரண்மனையை ஊர்வலம் நெருங்கிய போது மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த அரச குடும்பத்தினர் அரண்மனை வாயிற் கதவுகளுக்கு வெளியே வந்து சாலையோரம் நின்றனர். மகாராணி எலிஸபத், இளவரசி மார்கரெட், இளவரசி ஆன், இளவரசர் எட்வர்ட், இளவரசர் ஆன்ட்ரூ, அவரது முன்னாள் மனைவி சேரா, இரு மகள்கள் - அவர்களுள் அடங்குவர். அரண்மனையில் பால்கனியில் தோன்றி மக்களுக்குக் காட்சி தரும் அரசகுடும்பத்தினர், சாலையோரத்தில் மக்களோடு மக்களாக நின்று டயானாவின் இறுதி ஊர்வலத்திற்கு அஞ்சலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தி மக்கள் மனதில் நிறைந்தனர். ஊர்வலம் பக்கிங்ஹாம் அரண்மனையைத் தாண்டியதும், கார்களில் ஏறி வேறு பாதை வழியாக வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்துக்கு விரைந்தனர்.

ஊர்வலம் சென் ஜேம்ஸ் அரண்மனையைத் தாண்டிய போது இளவரசர் சார்லஸ், இளவரசர் வில்லியம், இளவரசர் ஹரி, எடின்பரோ கோமகன், ஏர்ள் ஸ்பென்ஸர் ஆகியோர் ஊர்வலத்தில் இணைந்து, பிரேதப் பெட்டிக்குப் பின்னால் நடந்து வந்தனர். தனது இரு பேரன்களும் விரும்பி அழைத்ததன்பேரில் எடின்பரோ கோமகன் ஊர்வலத்தில் கலந்து கொண்டார் என்று அறிவிக்கப்பட்டது. இல்லையேல் அவர் மகாராணியுடன் சேர்ந்து நிகழ்ச்சியில் கலந்துகொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது. ஊர்வலத்தில் தங்களோடு தாத்தாவும் கலந்து கொண்டால் தங்களுக்கு தெம்பு அதிகமாகும் என்று வில்லியமும் ஹரியும் கருதினார்களாம்.

எனவே, கண்டிப்பானவர் என்ற பெயர் பெற்ற முன்னாள் கடற்படைத்தளபதியான தாத்தாவும் தனது வாலிப காலத்து மிடுக்கு சற்றேனும் குறையவில்லை என்று நிரூபிப்பது போல ஊர்லத்தில் கம்பீரமாக நடந்து சென்றார். தாத்தா- பாட்டி மரபுப்படி, தமது சொந்த உணர்ச்சிகளை வெளியே காட்டாமல் அந்தச் சிறுவர்கள் பீரங்கி வண்டியின் பின்னால் நடந்துசென்ற பண்பு உள்ளத்தைத் தொடுவதாக அமைந்தது.

டயானா தனது வாழ்நாளில் சேவைசெய்த 110 அறக்கட்டளைகளின் பிரதிநிதிகள் 500 பேர் சென்ஜேம்ஸ் அரண்மனையின் முன்னால் வைத்து ஊர்வலத்தில் இணைந்து கொண்டனர்.

பிக் பென் கடிகாரம் பகல் 11 மணியை ஒலித்தவேளையில் டயானாவின் பிரேதப் பெட்டியை போர்வீரர்கள் தாங்கி வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்திற்குள் புகுந்து கொண்டிருந்தனர். அங்கே நடைபெற்ற கூட்டுவழிபாட்டில் 2000 பேர் கலந்து கொண்டனர்.

தேவாலயச் சடங்குகளுக்கு அழைப்பிதழ் அனுப்பப் பட்டோரில் பெரும்பான்மையினர் டயானாவுக்கு வேண்டியவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டயானா ஆண்டுதோறும் நத்தார் வாழ்த்துக்கள் அனுப்பும் பட்டியலில் இருந்து இறுதிச் சடங்குகளுக்கு அழைப்பிதழ் பெயர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. சமீபத்தில் கொலை செய்யப்பட்ட பாஷன் ஆடை புனைவாளர் ஜியானி வேர்சேஸ் அவர்களின் மகனும் மகளும் வந்திருந்தார்கள். ஹாலிவுட் நடிகர்கள் டாம் குறுஸ், டாம் ஹாங்க்ஸ், நிக்கோல் கிட்மன் ஆகியோரும் தயாரிப்பாளர் ஸ்டீவன் ஸ்பில்பர்க்கும் வந்தார்கள். ஒபரா பாடகர் லூசியானோ பவரோட்டி வந்திருந்தார். பாப் பாடகர் கிளிஃப் ரிச்சர்ட்ஸ் வந்திருந்தார். அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனின் மனைவி நான்ஸி தனிப்பபட்ட முறையில் கலந்துகொண்டார். இத்தியாதி உலகப் பிரமுகர்கள் வந்திருந்தனர்.

கூட்டு வழிபாட்டை வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தின் அதிபர் வணக்கத்துக்குரிய டாக்டர் வெஸ்லி கார் அவர்கள் மேற்பார்வை செய்தார். டயானாவுடைய சகோதரிகளான சேராவும் ஜேனும் செய்யுள்கள் வாசித்தனர். பைபிளிலிருந்து ஒரு வழிபாட்டுப் பகுதியை (1 CORINTHIANS 13) பிரதமர் டோனி பிளேர் வாசித்தார். பாப் இசைப் பாடகர் எல்டன் ஜான் தனது சிநேகிதி டயானா நினைவாக 'இங்கிலாந்தின் ரோஜா' என்ற உருக்கமான பாடலைப் பாடினார். காலஞ்சென்ற சினிமா நடிகை மர்லின் மன்றோவின் நினைவிற்காக தான் பாடிய பாட்டின் சொற்களை மாற்றியமைத்து அதை டயானாவுக்கு அர்ப்பணித்தார் எல்டன். கன்டர்பரியின் அதிமேற்றிராணியார் வணக்கத்துக்குரிய டாக்டர் ஜார்ஜ் கேறி அவர்கள் இறையருள் வேண்டுதலுக்குத் தலைமை தாங்கினார்.

எல்லா நிகழ்ச்சிகளும் அப்பழுக்கின்றி, கௌரவமாக, கண்ணியமாக இடம் பெற்றன. ஒரே ஒரு நிகழ்ச்சியில் பயங்கர அபஸ்வரம் ஒலித்தது.

அது -

டயானா போற்றுதலுரை!

வழங்கியவர் டயானாவின் தம்பி ஏர்ள் ஸ்பென்ஸர்.

100 கோடி மக்கள் உலகெங்கும் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருக்க, டயானாவைப் போற்றுகிறேன் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்வையில் தனக்குப் பிடிக்காதவர்களையெல்லாம் மறைமுக மாகவும் நேரடியாகவும் தூற்றி உரையாற்றினார் ஸ்பென்ஸர்.

'டயானா பிராண்ட்' மந்திரசக்தியைப் பிறப்பிக்க அரசகுலப் பட்டங்கள் தேவையில்லை என்று டயானா கடந்த வருடம் நிரூபித்தார் என்று சொல்லி, விவாகரத்தின் போது அவரது 'மாட்சிமை தங்கிய இளவரசி' பட்டத்தை பறித்ததற்காக மகாராணியைக் குத்திக்காட்டினார்.

அரச குடும்பத்தில் 'கடமை, பாரம்பரியம்' என்பனவற்றில் பிள்ளைகளை 'மூழ்கடித்து' வளர்க்கும் விதத்தை அவர் கண்டித்தார். 'கற்பனைவளத்துடன், பாசத்துடன்' டயானா தனது பிள்ளைகளை வளர்த்த முறையைப் பாராட்டினார். பிள்ளை களை டயானா வளர்த்ததுபோல் தொடர்ந்து வளர்க்கவும், டயானா திட்டமிட்டபடி "பகிரங்கமாகப் பாட" வழிவகுக்கவும் டயானாவுடைய 'இரத்த உறவுகளாகிய' தாங்கள் தம்மால் ஆன அனைத்தையும் செய்வார்கள் என்றும் டயானாவின் பெயரால் சத்தியம் செய்தார் ஏர்ள் ஸ்பென்ஸர்.

ஏர்ள் ஸ்பென்ஸரின் அப்பா மகாராணியின் குதிரைலாயத்திற்கு பொறுப்பாயிருந்து ராஜசேவகம் செய்தவர். ஏர்ள் ஸ்பென்ஸர் குழந்தையாக இருந்தபோது, அவரது ஞானஸ்நான வைபவத்தில் எலிஸபத் மகாராணியார் கலந்துகொண்டு, குழந்தையை தன்னுடைய 'ஞானக்குழந்தையாக' ஏற்றுக்கொண்டார்.

அதே ஏர்ள் ஸ்பென்ஸர், இன்று, பிரிட்டிஷ் அரச வம்சத்தின் வரலாறோடு இரண்டறக் கலந்த வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில் நின்றுகொண்டு, 100 கோடி மக்கள் உலகெங்கும் தொலைக்காட்சியில் இமை கொட்டாது பார்த்துக்கொண்டி ருக்க, அந்த நாட்டின் மகாராணியை, அந்தத் தேவாலயத்தையும் உள்ளடக்கிய 'சர்ச் ஆஃப் இங்கிலான்ட்' சமயப் பிரிவின் தலை வியை, தனது ஞானத்தாயை, குற்றம் - குறைகள் மலிந்த தனது தங்கையின் பேரால், அதிரடித் தாக்குதலுக்கு உள்ளாக்கினார்.

பிரிட்டிஷ் சட்டத்தின்படி, விவாரகத்து செய்துகொண்ட பெற்றோரில் ஒருவர் இறந்தால், பிள்ளைகளின் பராமரிப்புக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுப் பொறுப்பு உயிரோடிருக்கும் மற்றவருக்கு தானாகவே வந்து விடும். அங்கே இறந்தவரின் 'இரத்த உரிமைக்காரர்கள்' வாலாட்ட இடமே இல்லை.

மேலும் பிரிட்டனின் அரச திருமணச் சட்டத்தின்படி முடிக்குரிய இளவரசன் அல்லது இளவரசியின் பராமரிப்பு அரண்மனையினுடையதே. 'இரத்த உரிமைக்காரர்கள்' வாலாட்ட சட்டரீதியாக எவ்வித வாய்ப்பும் இல்லை.

உண்மை அப்படி இருக்க, ஏர்ள் ஸ்பென்ஸரின் பேச்சு அடாவடித்தனமாக, ஒரு 'பேட்டை பிஸ்தாவின்' ஆர்ப்பாட்ட மாகத்தான் அமைந்தது.

முடிக்குரிய இளவரசரை விவாகரத்துச் செய்த டயானா, தனது கருணை வெள்ளத்தினால் எய்ட்ஸ் நோயாளிகள், தொழு நோய் கண்டவர்கள், அங்கவீனர்கள், முதியோர்கள், சமுதாயத் தால் ஒதுக்கி வைக்கப்பட்டோர், வெள்ளையரற்றோர் போன்ற வர்களை மூழ்கடித்தார்; தொட்டுப் பேசினார்; அரவணைத்தார்; புகழ் பெற்றார்.

அவரது கருணை வெள்ளம் அவரது கணவரை மட்டும் மூழ்கடிக்கத் தவறிவிட்டது. ஏன்?

தனது விவாகரத்தின் முன்னரும் பின்னரும் பல ஆடவர்களுடன், சர்வதேச ஸ்திரீ லோலர்களுடன் டயானா 'பகிரங்கமாகப் பாடித்' திரிந்தார். அத்தகைய ஒருவரின் அரவணைப்பில் இருந்தபோது குடி, கும்மாளம், அதிவேகக் காரோட்டம் என்ற சூழ்நிலையில் உயிர் துறந்தார்.

இத்தனை தவறுகளை டயானா இழைத்த பின்னரும், நடந்தவைகளை மறந்து, மன்னித்து, பெருந்தன்மையுடன், அரசின் செங்கம்பளத்தை டோடியின் மனைவியாவதற்குத் தயார் நிலையில் இருந்த டயானாவுக்காக விரித்தார் மகாராணி.

அதற்குப் பரிசு?

மகாராணியாரின் ஞானமகன் மகாராணியாரின் முதுகில் பாய்ச்சிய கட்டாரி. உலக வரலாற்றிலேயே ஈடிணையற்ற நிந்தனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாராணியின் இரத்தத்தை வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில் சிந்தவைத்த ஏர்ள் ஸ்பென்ஸர் பிரிட்டிஷ் பத்திரிகைகள் மீதும் பப்பரட்சி படப்பிடிப்பாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தவும் தவறவில்லை.

டயானாவின் இறுதிச் சடங்குகளை முடைநாற்றம் அடிக்க வைத்துவிட்டார் டயானாவின் தம்பி.

ஆயிரக்கணக்கான பிரிட்டிஷ் பொதுமக்கள் ஏர்ள் ஸ்பென்ஸரின் பேச்சைக் கண்டித்து பத்திரிகைகளுக்கு கடிதங்களை அனுப்பி வைத்தனர்.

தேவாலய கூட்டுவழிபாடு முடிவடைந்தபின்னர் ஒரு நிமிட மௌனம் தேசிய ரீதியாக அனுஷ்டிக்கப்பட்டது.

பிற்பகல் 12.05 மணிக்கு டயானாவின் பிரேதப்பெட்டியை வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்துக்கு வெளியே சுமந்து வந்தனர் போர்வீரர்கள். பிரேதக் காரில் அது ஏற்றப்பட்டது.

டயானாவின் 77 மைல் இறுதிப் பயணத்தை அது ஆரம்பித்தது. லண்டனிலிருந்து வடக்குத் திசையில் உள்ள நோர்த்தாம்டன்ஷயர் என்ற மாவட்டத்தை நோக்கிப் புறப்பட்டது. அங்கே டயானாவின் மூதாதையர்கள் 15-ம் நூற்றாண்டில் வாங்கிய அல்தோப் எஸ்டேட் உள்ளது. 550 ஏக்கர் நிலத்தில் அமைந்த இந்த எஸ்டேட்டின் ஒரு பகுதியில் ஒரு சிறிய ஏரியும் அதன் நடுவில் ஒரு தீவும் உள்ளது.

இந்தத் தீவில் டயானாவை அடக்கம் செய்ய ஸ்பென்ஸர் குடும்பத்தினர் தீர்மானித்திருந்தனர். இந்த நிகழ்ச்சியின் போது மிக நெருங்கிய உறவினர்களைத் தவிர வேறுயாரும் கலந்துகொள்ளக் கூடாது என்பது அவர்களது நிலைப்பாடு. இந்த வேண்டுகோளுக்கு ஏற்ப, அல்தோப் எஸ்டேட்டின் எல்லையிலிருந்து மூன்று மைல் தூரத்திற்குள் மக்கள் எவரும் போலீஸாரால் அனுமதிக்கப்படவில்லை.

ஸ்பென்ஸர் குடும்பத்தையும் இளவரசர் சார்லஸ் மற்றும் அவரது இரு மகன்களையும் ஏற்றிக்கொண்டு விசேஷ அரச ரயில் வண்டி லண்டனிலிருந்து நோர்த்தாம்ப்டனுக்கு மணிக்கு 125

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைல் வேகத்தில் விரைந்தது. அரச குடும்பத்தின் சார்பில் சார்லஸும் மகன்களும் அடக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

ஓடும் ரயிலில் டயானாவின் அக்கா ஜேனும் அவரது கணவருமான சர் ராபட் பெலோஸும் (மகாராணியின் பிரதம அந்தரங்கச் செயலாளர்) இருந்தனர். ஏர்ள் ஸ்பென்ஸரிடம் சர் ராபட் பேச்சுக் கொடுத்தார். மகாராணியின் சார்பில் ஒரு கோரிக்கையை முன்வைத்தார்.

அது -

இறப்பில் டயானாவைக் கௌரவிப்பதற்காக அவருக்கு மாட்சிமை தாங்கிய இளவரசி (H.R.H.) என்ற பட்டத்தை வழங்க மகாராணி விரும்புகிறார் என்பதே.

வேண்டாம் என்று முகத்தில் அறைந்தாற்போல் சொல்லி விட்டார் டயானாவின் தம்பி.

அரச ரயிலில் வந்தவர்கள் அல்தோப் எஸ்டேட்டை அடைந்து ஒரு மணி நேரத்தின் பின், பி.ப. 3.31க்கு, டயானாவின் பிரேத வண்டி தன்னந்தனியாக எஸ்டேட்டின் வாயிற்கதவுகள் வழியே நுழைந்தது. வண்டியின் பின்னால் எஸ்டேட்டின் இரும்புக் கதவுகள் மூடின. 'இரும்புத் திரை' விழுந்தது.

அதற்குமேல் உள்ளே நடந்த சங்கதிகளைப் பார்வையிட உலகத்திற்கு அனுமதி தரவில்லை ஏர்ள் ஸ்பென்ஸர். லண்டனில் இருந்து எஸ்டேட்டுக்கு மூன்று மைல் தூரம் வரை வழிநெடுகிலும் மக்கள் குழுமி நின்று மணிக்கு 45 மைல் வேகத்தில் பயணம் செய்த பிரேதக் காரை தரிசித்தனர். எஸ்டேட்டின் வாயில் வரை வந்த டி.வி. காமராக்கள் லண்டன் திரும்பின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனதெய்வங்களின் திருமணமோ என்று வியந்தார்கள்! ஆனால் தேன்நிலவிலேயே அக்னி நட்சத்திரம் உதயமானது!

டயானாவின் மரணம் உலகெங்கும் ஒரு பெரிய அனுதாப அலையை ஏற்படுத்தியது. சமீப காலங்களில் இத்தகைய ஒரு நிகழ்வினை உலகம் கண்டதில்லை. மக்களுடைய அனுதாப அலை சில வேளைகளில் பத்திரிகைகளுக்கு எதிரான அலையாக வீசியது. அரச குடும்பத்துக்கு எதிரான அலையாகவும் வீசியது.

டயானாவின் அந்தரங்கத்தை பத்திரிகைகள் ஊடுருவி அவரை வஞ்சித்தனவா?

டயானாவின் தாம்பத்திய வாழ்க்கை தடம்புரண்டு விவாகரத்தில் முடிவடைந்து போனதற்கு அரண்மனை செய்த வஞ்சனை தான் காரணமா?

டயானாவுக்கும் பத்திரிகைகளுக்கும் இடையே ஊடலும் கூடலும் மாறிமாறி வந்தன. அதுபோலவே அரண்மனைக்கும் டயானாவுக்கும் இடையே கூட தொடர்ச்சியான இழுபறி இருந்து வந்தது.

இந்த இழுபறிகளில் வஞ்சித்தது யார்? வஞ்சிக்கப்பட்டது யார்?

இந்த ஆராய்ச்சி வரலாற்று ரீதியாகத் தொடரப்போகிறது என்பது நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விவாதத்தின் வாதப்பிரதிவாதங்களை இக்கட்டத்தில் ஆராய்வது உசிதமானது. இதற்கு ஏதுவாக டயானாவின் தாம்பத்திய வாழ்க்கையின் முக்கிய சில மைல்கற்களை மனதில் வைத்திருப்பது அவசியம்:

24. 2. 81 : சார்லஸ் - டயானா திருமண நிச்சயதார்த்தம் அறிவிப்பு

29. 7. 81 : திருமணம்

21. 6. 82 : முதல் மகன் வில்லியம் பிறப்பு

15. 9. 84 : இரண்டாம் மகன் ஹரி பிறப்பு: இல்வாழ்வில் கசமுசா என்று வதந்திகள் ஆரம்பம்.

நவம்பர் 86 : உத்தியோகபூர்வமற்ற முறையில் சார்லஸும் டயானாவும் பிரிந்துவாழ ஆரம்பிக்கின்றனர். வெளி உலகத்திற்கு இது தெரியாது. ஆனால் வதந்திகள் தொடர்கின்றன.

16. 6. 92 : 'டயானா - அவரது உண்மைக் கதை' என்ற பெயரில் அன்ட்ரூ மார்ட்டன் எழுதிய நூலிலிருந்து சில அத்தியாயங்களை "சன்டே டைம்ஸ்" தொடராகப் பிரசுரிக்க ஆரம்பிக்கிறது. ஒரு பூகம்பமே உருவெடுக்கிறது.

17. 6. 92 : அன்ட்ரூ மார்ட்டனின் 181 பக்க நூல் விற்பனைக்கு வருகிறது. டயானாவின் (அங்கீகரிக்கப்படாத) வாழ்க்கை வரலாறு என்று சொல்லிக்கொண்டு வெளிவந்த இந்த நூலை 'உலகிலேயே மிக நீளமான விவாகரத்து நோட்டீஸ்' என்றும் பலர் கண்டித்தனர். பூகம்பம் தொடர்கிறது.

9. 12. 92 : சார்லஸ் - டயானா சட்டரீதியாக விலகி வாழ்கின்றனர் என்ற செய்தியை பிரதமர் ஜான் மேஜர் பிரி... பாராளுமன்றத்தில் அறிவிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. 6. 94 : இளவரசர் சார்லஸின் (அங்கீகரிக்கப்பட்ட) வாழ்க்கை வரலாற்றை புகழ்பெற்ற சிரேஷ்ட ஒளிபரப்பாளரும் வாழ்க்கை வரலாற்றுத் துறை நூலாசிரியருமான ஜொனதன் டிம்பிள்பி 746 பக்க நூலாக எழுதுகிறார். அந்த நூல் வெளியீட்டிற்கு முன்னோடியாக சார்லஸை தொலைக்காட்சிக்கெனப் பேட்டி கண்டு. 'சார்லஸ், அந்தரங்கமான மனிதர்: பகிரங்கமான கடமைகள்' என்று மகுட மிட்ட இரண்டரை மணிநேர நிகழ்ச்சியாக ஒளிபரப்புகிறார். டயானா பற்றிய நூல் தெரிவித்த பல தவறான தகவல்களுக்கும் இந்நூல் பதில் தருகிறது.

20. 11. 95 : டயானா தனது திருமண வாழ்வின் கசப்பான அனுபவங்களைப் பற்றி கண்ணீர் மல்க பிபிஸி தொலைக்காட்சிக்கு அளித்த இரகசியப் பேட்டி ஒரு மணி நேர நிகழ்ச்சியாக ஒளிபரப்பாகிறது. அரண் மனையில் பூகம்பம்.

28. 8. 96 : சார்லஸ் - டயானா விவாகரத்து சட்ட பூர்வமாக நிறைவேறுகிறது.

சார்லஸும் டயானாவும் திருமணம் செய்துகொண்டு மூன்று ஆண்டுகளின் பின்னர்தான் அவர்களது இல்லற வாழ்க்கையில் கசப்புகள் ஏற்பட்டுவிட்டதாக வதந்திகள் வரத்தொடங்கின. இந்த வதந்திகளை மக்கள் பொதுவாக நம்பவில்லை. சின்னப் பத்திரிகைகளின் வழக்கமான கயிறு திரிப்பு என்றே பலரும் கருதினர்.

எனினும் பொதுநிகழ்ச்சிகளில் சார்லஸும் டயானாவும் கலந்து கொண்டபோதெல்லாம் பத்திரிகை நிருபர்களும் படப்பிடிப்பாளர்களும் அவர்களைக் கூர்மையாகக் கண் காணிக்கத் தொடங்கினர். அருகருகே அவர்கள் நின்றபோது அவர்களது முகங்கள் வெளிப்படுத்தியது சிருங்கார பாவமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது பீபத்ஸ (அருவருப்பு)/ரௌத்ர பாவங்களா என்பதை காமரா லென்ஸுகள் தேடின. இவற்றை ஆதாரமாக வைத்து இல்லற வாழ்க்கை இனிக்கிறதா அல்லது இடிக்கிறதா என்று பத்திரிகைகளில் பலதரப்பட்ட கருத்துக்கள் வெளிவந்தன.

உத்தியோகபூர்வமற்ற முறையில் 1986 முதல் அவர்கள் பிரிந்து வாழ்ந்துவந்த போதிலும், அவர்கள் சட்டபூர்வமாக விலகி வாழத்தொடங்கிய டிசம்பர் 1992 வரை பொது நிகழ்ச்சிகளில் ஒன்றாகக் கலந்துகொண்டனர்.

ஏப்ரல் 1992ல் இந்திய விஜயம் மேற்கொண்டனர். அங்கே டயானா விரிசலை வெளிப்படையாகக் காட்டத் தொடங்கினார். தாஜ்மகாலுக்கு தனியாகச் சென்றார். பத்திரிகைப் படப்பிடிப் பாளர்களை படமெடுக்கத் தூண்டிவிட்டு, தாஜ்மகாலுக்கு முன்னால் தன்னந்தனியாக முகத்தில் சோகரசம் ததும்ப அமர்ந்து 'போஸ்' கொடுத்தார். இந்தப் படம் உலகெங்கும் பிரசுரமானது.

இந்திய விஜயத்தின்போது இடம்பெற்ற ஒரு போலோ விளையாட்டுப் போட்டியில் கலந்துவிட்டு இளவரசர் தனது மனைவியின் கன்னத்தில் முத்தமிட முனைந்தார். டயானா சரேலென்று தனது தலையை முன்னால் சரிக்க இளவரசரின் உதடுகள் டயானாவின் பிடரியில் பதிந்தன. அசடு வழிய அவமானத்தை சகித்துக் கொண்டார் சார்லஸ். சார்லஸின் பிடரி முத்தப்படமும் உலகெங்கும் பிரசுரமானது.

அன்ட்ரூ மார்ட்டனின் நூல் வெளிவந்து ஐந்து மாதங்களின்பின் (நவம்பர் 1992), தம்பதிகளின் தென்கொரிய விஜயம் வந்தது. இரு வருடங்களுக்கு முன்னர், தென்கொரிய அரசின் அழைப்பை அடுத்து ஏற்றுக்கொள்ளப்பட்ட விஜயம் அது. தென்கொரியாவிற்குப் போகமாட்டேன் என்று டயானா அடித்துச் சொல்லிவிட்டார்.

அரச கடமைகள், சொந்த விருப்பு வெறுப்புகளுக்கும் கோபதாபங்களுக்கும் அப்பாற்பட்டவை என்பது எலிஸபெத் மகாராணியார் கண்டிப்பாகக் கடைப்பிடித்து வந்த கொள்கை. மகாராணியாரும் இளவரசரும் காலில்விழாக் குறையாக டயானாவிடம் கெஞ்சிக் கேட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டயானா மசியவில்லை.

இளவரசருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"நீ வரவில்லை என்பதற்காக நான் எனது விஜயத்தை ரத்துச் செய்யப்போவதில்லை. தென்கொரிய அரசிடமிருந்து அழைப்பு எம்மிருவருக்கும் தான் வந்தது. நீ வரவில்லை என்றால் வரமுடியாத காரணத்தை நீதான் தென்கொரிய அரசுக்கு அறிவிக்க வேண்டும்; பிரிட்டிஷ் மக்களுக்கும் எடுத்து விளக்க வேண்டும்;" என்று கூறிவிட்டு கோபத்துடன் வெளியேறினார்.

டயானா திகைத்தார். சிந்தித்தார். டயானாவின் பிடிவாதத்தை மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். மக்கள் முன்னிலையில் அப்பாவி அபலை, கருணையின் வடிவம் என்று தன்னைக் காட்டிக் கொள்வதை ஒரு தந்திர இலட்சியமாக வரித்து வாழ்ந்து வந்த டயானா இறங்கி வந்தார். சார்லஸுடன் தென்கொரியா சென்றார்.

இந்தியாவில் செய்தது போல படப்பிடிப்பாளர்கள் முன்னிலையில் கப்பல் கவிழ்ந்தாற்போல 'போஸ்' கொடுத்தார். இளவரசராலும் இதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவர் மனதில் அலைமோதிய வேதனையை அவரது முகமும் காட்டிக் கொடுத்துவிட்டது.

தென்கொரிய விஜயம், குளிக்கப்போய் சேற்றைப் பூசிக் கொண்ட கதையாய் முடிந்தது.

மகாராணி மிகுந்த சகிப்புத்தன்மை உடையவர். எதையும் பொறுத்துக் கொள்வார். திருமணம் ஆன நாளிலிருந்து டயானா செய்த கெடுபிடிகளுக்கு எல்லாம் விட்டுக் கொடுத்தோ, அல்லது பொருட்படுத்தாமல் சகித்துக்கொண்டோ வந்தவர் அவர்.

அரச கடமையில் எவராவது தவறினால் அதைத் தாங்கிக் கொள்ளமாட்டார்.

தென்கொரிய விஜயம் மகாராணியின் சீற்றத்தைக் கிளறியது. அரண்மனையின் சட்ட வல்லுநர்கள் சுறுசுறுப்பு அடைந்தனர். சர்ச் ஆஃப் இங்கிலாண்ட் உயர் தலைவர்களுடனும் பிரதம மந்திரியுடனும் பேச்சுவார்த்தைகள் துரிதமாக நடைபெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்கொரியாவிலிருந்து அவர்கள் நாடுதிரும்பிய சில வாரங்களுக்குள் சட்டபூர்வமாகப் பிரிந்து வாழத் தொடங்கினர். இதனை 9.12.92ல் பிரதம மந்திரி பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

ஐந்து மாதங்களுக்கு முன்னர் வெளிவந்த டயானா பற்றிய நூல் அரச குடும்பத்தின்மீதும் இளவரசர் மீதும் புழுதிவாரித் தூற்றியபோது கூட அதையும் தாங்கிக் கொண்டு அமைதி காத்த மகாராணிக்கு அரச கடமைகளை டயானா குரங்கின் கைப் பூமாலை ஆக்கியபோது பொறுமை எல்லை கடந்தது.

இதயவீணை தூங்கும்போது பாடமுடியுமா என்று மகாராணியிடம் கேட்டால், பாடமுடியும் - பாடித்தான் ஆகவேண்டும் என்றுதான் பதில் வரும். அரச கடமைகளை அவர் அப்படித்தான் ஆற்றி வந்திருக்கிறார். அப்படித்தான் ஆற்றப் பழக வேண்டும் என்று தனது பிள்ளைகளை மிகக் கண்டிப்பாக வளர்த்திருக்கிறார். தனது பிள்ளைகளுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் அவர் தலையிட்டது மிகமிகக் குறைவு.

அன்ட்ரூ மார்ட்டன் எழுதிய டயானா பற்றிய நூல் அப்படி எதைத்தான் சொன்னது?

சார்லஸ் - டயானா இல்வாழ்க்கை பற்றி 1984 முதல் சிறு பத்திரிகைகளில் வந்த வதந்திகள் எல்லாம் உண்மையே, உண்மையைத் தவிர வேறெதுவும் இல்லை என்று அந்த நூல் சொன்னது.

அது மட்டுமல்ல.

வனதெய்வங்களின் கதை இதுதானோ, கல்யாணம் இதுதானோ என்று உலகெல்லாம் வியந்த, வர்ணித்த அந்தத் திருமணத்தின் தேன்நிலவின் போதே சண்டை சச்சரவு ஆரம்பமானது, அக்னி நட்சத்திரம் உதயமானது என்று அந்த நூல் சொன்னது.

அது மட்டுமல்ல.

விடிந்தால் திருமணம், விடியும்வரை கண்மூடித் துயிலாது, வாந்திக்கு மேல் வாந்தியெடுத்து, சூரியோதயத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலிக்களத்திற்கு இழுத்துச் செல்லப்படவிருந்த ஆடெனச் சித்தம் கலங்கியிருந்தார் டயானா என்று அந்த நூல் சொன்னது.

இத்தனைக்கும் டயானாவுக்கும் அந்த நூலாசிரியருக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை, டயானா அந்த நூலாசிரியரை தன் வாழ்நாளில் ஒரு நாள்கூடச் சந்தித்ததில்லை என்று அன்ட்ரூ மார்ட்டன் உறுதியாகச் சாதித்தார். இல்லற வாழ்க்கையில் டயானா அனுபவித்து வந்த நரகவேதனையைச் சகிக்க முடியாத டயானாவின் சிநேகிதர்களும் சிநேகிதிகளும் அன்ட்ரூவைச் சந்தித்து, டயானாவின் தாம்பத்திய வாழ்க்கையின் அந்தரங்கச் செய்திகளையெல்லாம் கக்கினார்களாம். டயானாவுக்கு இதுபற்றி எதுவுமே தெரியாதாம். எதிர்கால பிரிட்டிஷ் மன்னரின் மனைவியின் இல்வாழ்க்கை பற்றிய மகா அந்தரங்க இரகசியங்கள் யாவற்றையும், அவற்றை அறிந்திருக்கும் அளவிற்கு அவரோடு நெருக்கமான உறவு வைத்திருந்தவர்கள் அனைவரும் ஒன்று திரண்டு, தமது உயிருக்கும் உயிரான சிநேகிதிககு எதுவுமே சொல்லாமல், ஒரு கத்துக்குட்டி நூலாசிரியரிடம் கக்கினார் களாம். பிரிட்டிஷ் சமுதாயத்தில் ஒரு பெரிய பூகம்பத்தையே, ஏற்படுத்தக்கூடிய அந்தரங்க விவகாரங்கள் நூல் வடிவம் பெற தகவல் தந்து உதவியர்கள், அதுபற்றி தமது உயிருக்கும் உயிரான சிநேகிதி டயானாவிற்கு மூச்சே விடவில்லையாம். டயானா பரிசுத்தமான அப்பாவி, அவருக்கு எதுவுமே தெரியாது, நம்புங்கள் என்று பிரிட்டிஷ் தேசத்திற்கு 'தலையிலடித்துச் சத்தியம் செய்தார்' மார்ட்டன்.

ஆனால் - அந்த நூலில், அதுவரையில் அச்சு இயந்திரம் கண்டறியாத டயானாவின் இளவயதுப் படங்கள் புற்றீசல் போல் பிரசுரமாகியிருந்தன. அந்தப் படங்கள் ஒரு குடும்பத்தின் பிரத்தியேக போட்டோ ஆல்பத்திலிருந்து எடுக்கப்பட்டவை என்பதைப் பறைசாற்றி நின்றன. டயானாவுக்கும் மார்ட்டனுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்பது உண்மையென்றால், டயானா வீட்டு பிரத்தியேக போட்டோ ஆல்பப் படங்கள் அவருக்கு இவ்வளவு பெருவாரியாகக் கிடைத்தது எப்படி? டயானாவின் அப்பா ஏர்ள் ஸ்பென்ஸர் உயிரோடு இருந்த காலத்தில் அந்தப் படங்களைத் தனக்குத் தந்தார் என்று அன்ட்ரூ சாதித்தார். இறந்தவர்களால் சாட்சியம் சொல்ல முடியாது தானே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்ட்ரூவின் நூலில் முன்வைக்கப்பட்ட மிகப் பெரிய உண்மை, சார்லஸ் - டயானாவின் இல்வாழ்க்கை மீளவும் ஒட்டிப் பிணைக்கக்கூடிய நிலையைக் கடந்து, பிரிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதேயாகும். மற்றும்படி அந்த நூல் ஒரு தலைப்பட்சமாக டயானா சார்புடையதாகவே அமைந்தது.

டயானாவுக்கு சமுதாயத்தில் எவரும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒரு அதி உன்னத ஸ்தானத்தை அந்த நூல் அளித்தது. டயானா அன்னை திரேசாவினதும், நவீன ஐரோப்பிய 'புதுயுகப் பெண்மணி' யினதுமான பண்புகளை உள்ளடக்கியவர் என்ற ஒரு பவித்திரமான நிலையை அவருக்குத் தந்தது.

'நியூ ஏஜ்' (NEW AGE) என்பது தற்போது மேற்கு நாடுகளில் பரவிவரும் ஒரு பரந்துபட்ட இயக்கம். மேற்கு நாடுகளின் பாரம்பரிய மரபுகளுக்கும் கலாசாரத்துக்கும் மாற்றான சில நம்பிக்கைகளை அது முன்வைத்து வருகிறது.

இந்த இயக்கத்தினர் மாயமந்திரம் சார்ந்த நிகழ்வுகள், இயற்கைமீறிய நிகழ்ச்சிகள், அறிவு கடந்த மெய்யுணர்வு என்பனவற்றில் ஈடுபாடு உடையவர்கள். ஆவி உலகத்தொடர்புக் கோட்பாட்டில் நாட்டம் உடையவர்கள்.

ஒரு நோய்க்குச் சிகிச்சை அளிக்கும்போது நோய்க் குறிகளுக்கு மட்டும் சிகிச்சை தருவது போதாது. ஒரு நோயைப் பிறப்பிப்பதற்கு மனம் அல்லது மனநோய் சார்ந்த காரணக் கூறுகளும், சமூகம் சார்ந்த காரணக்கூறுகளும் கூட ஏதுவாய் உள்ளன. எனவே சிகிச்சை முறையானது இத்தகைய காரணக் கூறுகள் யாவற்றிற்கும் பரிகாரம் காணுவதாக அமைய வேண்டும் என்ற 'முழுமையான மருத்துவ மரபில்' நம்பிக்கை உடையவர்கள். (பாரம்பரிய சீன மருத்துவ மரபு இத்தகையதே).

புதுயுக இயக்கத்தினர் நாம் வாழும் பூமியின் சுற்றாடலி லும் தீவிர நாட்டம் உடையவர்கள். சுயநலம், வியாபார நோக்கம், அறியாமை, கவலையீனம் போன்ற காரணங்களினால் மனிதன் தான் வாழும் சுற்றாடலை அழித்து வருகிறான்; அல்லது அசுத்தப்படுத்துகிறான். அதை எதிர்த்து புதுயுகத்தினர் போர்க்கொடி தூக்குகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை திரேசாவுடைய பண்புகளும் புதுயுக இயக்கத்தினரின் பண்புகளும் இரண்டறக் கலந்தவர்தான் டயானா என்ற பாணியில் அவரது குணாதிசயங்களை வெளிப்படுத்தியது அண்ட்ரூவின் நூல்.

டயானா அன்புள்ளம் கொண்டவர். அதே நேரத்தில் தனது நம்பிக்கையையும் கருத்துக்களையும் ஆணித்தரமாக அடித்துச் சொல்லவும் தயங்காதவர். அவர் ஒரு வஞ்சிக்கப்பட்ட அபலை. பழம் பாரம்பரியங்களில் ஊறித் திளைத்துப்போன ஒரு குடும்பத்தினராலும், வேறு பெண்ணுடன் கள்ளத் தொடர்பு வைத்திருந்த ஒரு அன்பற்ற கணவனாலும் நசுக்கப்பட்டவர்.

ராஜகுடும்பத்திற்கு நாட்டை ஆள ஒரு வாரிசையும், சார்லஸுக்கு பெயர் சொல்லப் பிள்ளைகளையும் பெற்றுத் தருவதற்கு மட்டும் பாவிக்கப்பட்டவர், பலி கொடுக்கப் பட்டவர்தான் டயானா என்ற கன்னிமை கழியாத அபலை. தான் மாட்டிக் கொண்ட சிறையிலிருந்து தப்புவதற்காக போராடி வருபவர் தான் டயானா.

அன்பே இல்லாத அரண்மனை. அதன் வெவ்வேறு பகுதிகளில் ராஜகுடும்பத்தின் வெவ்வேறு உறுப்பினர் தனித்தனியாக தத்தமது அலுவலகம், வாசஸ்தலம், ஊழியர்கள் சகிதம் வாழ்ந்து வந்தனர். ஒருவர் வசிக்கும் பகுதியிலிருந்து மற்றவர் வசிக்கும் பகுதிக்குச் செல்வதானால் இடையே உள்ள நீண்ட நடைக்கூடத்தின் வழியாக கால்வலிக்க நடந்து செல்லவேண்டும்.

தாமுண்டு, தமது கடமையுண்டு என்று எல்லாரும் தனித்தனியாக இயங்குவார்கள். பண்டிகை, பெருநாள் களின்போதுதான் ஒருவரை ஒருவர் சந்திப்பார்கள். இளவரசர் சார்லஸ் கூட சதா கூட்டம், திறப்புவிழா என்று பறந்துகொண்டு இருப்பார். தனிமையில் விடப்பட்டுத் தவித்தார் டயானா.

இளவரசர் சார்லஸ் தனது முன்னாள் காதலி கமிலாவின் தொடர்பை விடவே இல்லை. ஒருகாலத்தில் சார்லஸின் காதலி யாக இருந்தவர் கமிலா. அவர்கள் திருமணம் செய்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சார்லஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமியாரா?
மருமகளா?
ரௌத்ர ரசம்
வெளிப்படுத்தி
நிற்பது யார்?
விளாசுவது யார்?
வாங்கிக் கட்டுவது
யார்?





டயானாவின் சிம்ம
சொப்பனமாகத்
திகழ்ந்த கமிலா
பார்க்கர் பௌல்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முடிவு சொல்லாததால் காத்திருந்து அலுத்துப்போன கமிலா மேஜர் பார்க்கர் பௌலஸ் என்ற இராணுவ அதிகாரியை (அவரும் ராஜ சேவகத்தில் உள்ளவர்; மகாராணிக்கு நெருங்கிய வட்டத்தைச் சேர்ந்தவர்; மகாராணி வீட்டு விருந்து வைபவங்களுக்கு அழைக்கப்படுபவர்) திருமணம் செய்து கொண்டார்.

கமிலா திருமணம் செய்துகொண்ட பின்னரும் அவருக்கும் சார்லஸுக்கும் காதல் தொடர்ந்தது. டயானாவை சார்லஸ் திருமணம் செய்து கொண்டபோதுகூட சார்லஸுக்கும் கமிலாவுக்கும் காதல் இருந்தது. தேன்நிலவுக்கு சார்லஸும் டயானாவும் சென்றபோது சார்லஸின் டயரியில் கமிலாவின் படம் இருந்ததை டயானா கண்டு பிடித்தாராம். கமிலாவுக்குப் பரிசாகக் கொடுக்க சார்லஸ் வாங்கி வைத்திருந்த ஒரு காப்பை டயானா கண்டுபிடித்தாராம்.

டயானாவுக்கு ஆறு வயது நடந்துகொண்டிருந்த வேளையில் அவரது பெற்றோர் விவாகரத்துச் செய்து கொண்டனர். டயானாவின் அன்னை வீட்டைவிட்டு வெளியேறினார். தாயன்பு என்பது என்னவென்று அறியாமல் வளர்ந்தார் டயானா. ஒரு அன்னையின் அரவணைப்பு, அன்பு முத்தங்கள் என்பன இல்லாமல் ஏக்கத்துடன் வளர்ந்தார் டயானா.

சிறுபிராயத்தில் தனக்குக் கிடைக்காத அந்த அரவணைப்பை, அந்த முத்தங்களை தனது இரு பிள்ளை களுக்கும் அபரிமிதமாக வழங்கி ஆனந்தம் அடைகிறாராம் டயானா. அரவணைப்பை, முத்தங்களை பிள்ளைகளுக்கு வழங்கி விட்டு, "உங்களுக்கு யாரை அதிகமாகப் பிடிக்கும்?" என்று கேட்பாராம். "மம்மி", என்று அவர்கள் இருவரும் கத்துவார்களாம்.

(இங்கே டயானா தனது பிரிவினை அரசியலை தனது பிள்ளைகள் மத்தியிலும் விளையாடிவிட்டார் என்று தெரிகிறது. அன்பும் அறனும் உடைய ஒரு இல்வாழ்க்கையில் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குத் தம்மை இரு கண்களுக்கு ஒப்பானவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று விளக்கி சம அந்தஸ்து ரீதியில் வளர்ப்பார்களே தவிர, இரு கண்களுள் சிறந்தது எது என்ற ரீதியில் பிரிவினையை விதைக்க மாட்டார்கள்.)

விவாகரத்து எவ்வளவு கொடுமையானது என்பதை தனது பெற்றோரின் விவாகரத்து மூலம் அனுபவரீதியாக உணர்ந்தவர் டயானா. எனவே அத்தகைய ஒரு விவாகரத்து தனது வாழ்க்கையில் ஏற்பட்டுவிடக்கூடாது, அதனால் தனது பிள்ளைகளின் வாழ்க்கை பாழாகிவிடக்கூடாது என்று டயானா மிகுந்த கவனம் எடுத்தாராம்.

நிச்சயதார்த்தம் அறிவிக்கப்பட்ட சில நாட்களுக்குள், பக்கிங்ஹாம் அரண்மனையின் ஒரு பகுதிக்கு வந்து குடியேறுமாறு அவருக்கு அழைப்பு வந்ததாம். அவர் தனது பெட்டி, பைகளோடு அரண்மனைக்குச் சென்றபோது அவரை வரவேற்க இளவரசர் சார்லஸோ அல்லது அரச குடும்பத்தவர் வேறு எவரோ இருக்கவில்லையாம். அரண்மனை ஊழியர்கள் அவர் வசிக்கப்போகின்ற பகுதிக்கு அவரை அழைத்துச் சென்றார்களாம்.

புகுந்த வீட்டின் வேதனைகள் காரணமாக டயானாவிற்கு புலீமியா நேர்வோசா (BULIMIA NERVOSA), மகப் பேற்றுடன் கூடிய மனச்சோர்வு (POST NATAL DEPRESSION) ஆகிய மனநோய்கள் ஏற்பட்டன.

அந்தக் குடும்பத்தின் தொல்லைகள் காரணமாகத்தான் தனக்கு இந்த நோய்கள் ஏற்பட்டன என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல், டயானா ஏறுக்குமாறாக நடப்பதற்கு அவரது மனநோய்கள்தான் காரணம் என்று சொல்லி மனநோய் மருத்துவர்களை வரவழைத்து டயானாவைக் காட்டினார்களாம். ஆனால் மருத்துவர்களுடன் டயானா ஒத்துழைக்கவில்லை. தனக்கிருந்த புலீமியா நோயின் அறிகுறிகளை மருத்துவர்களிட மிருந்து மறைத்துவிட்டார். அவர்கள் கொடுத்த மாத்திரைகளை சாப்பிடவும் மறுத்துவிட்டார்.

புலீமியா நோயினால் டயானா தொடர்ந்து அவஸ்தைப் பட்டார். நிச்சயதார்த்தம் அறிவிக்கப்பட்ட காலத்தில் ஒரு நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவரசர் டயானாவின் இடுப்பைச் சுற்றி தனது கைகளைக் கோர்த்து அந்த இடத்தில் டயானா சற்றுக் குண்டாய் இருக்கிறார் என்று சொல்லிவிட்டாராம். வந்ததே புலீமியா!

பக்கிங்ஹாம் அரண்மனையில் திருமணத்துக்கு முன்னால் பல வாரங்கள் வாந்தி. திருமணத்திற்கு முதல் நாள் இரவு வாந்தி. நிச்சயதார்த்தத்தை அடுத்து திருமண ஆடை தைப்பதற்கு அளவு எடுத்தபோது 29 அங்குலங்களாக இருந்த இடை திருமண தினத்தன்று 23 அங்குலங்களாகச் சுருங்கி விட்டதாம். டயானா இடை மட்டுமல்ல முழு உடலுமே இளைத்துப்போய் விட்டாராம்.

தொடர்ந்து தேன்நிலவில் வாந்திக்கு மேல் வாந்தி; தாயகம் திரும்பி கென்ஸிங்டன் அரண்மனையில் குடியேறியபின் வாந்தி; அவுஸ்திரேலிய விஜயத்தின்போது வாந்தி; வேல்ஸ் விஜயத்தின் போது வாந்தி; டயானாவுக்குப் பிடிக்காத பால்மோரல் அரண்மனைக்குப் போகும்போதெல்லாம் அதிகரித்தது வாந்தி.

வாந்தியும் தொடர்ந்தது. புலீமியாவும் தொடர்ந்தது. டயானா எடுத்த வாந்திக்கு இளவரசர் மீதும் அரச குடும்பத்தின்மீதும் அவர் போட்ட பழியும் தொடர்ந்தது.

அவுஸ்திரேலிய விஜயத்தின்போது டயானாவுக்கு ஜெட்விமானப் பயணம் ஏற்படுத்திய களைப்பு ஒரு புறம். வட அவுஸ்திரேலியாவின் வெப்பம் மறுபுறம். இந்த நேரம் பார்த்து வந்து சேர்ந்த வாந்தி இன்னொரு புறம். அவர் மயக்கம் போட்டு விழாததுதான் ஒரு குறை. அகல பாதாளத்தில் என்னைத் தள்ளி விட்டார்களே என்று இளவரசரையும் அரசகுடும்பத்தையும் திட்டித் தீர்த்தார்.

அவர்கள் என்ன செய்வது?

பூரண மகிழ்ச்சியுடன்தான் டயானா அவுஸ்திரேலிய அரசின் அழைப்பிதழை ஏற்று சார்லஸுடன் அந்த நாட்டிற்குப் பயணம் மேற்கொண்டார். ஜெட் களைப்பிற்கு சார்லஸ் என்ன செய்ய முடியும்? அவுஸ்திரேலிய உஷ்ண நிலைக்கு மகாராணி என்ன செய்ய முடியும்? வாந்திக்கு அரண்மனை என்ன செய்ய முடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவரசர் வில்லியம் தனது வயிற்றில் வளர்ந்து வந்த வேளையில் டயானா மேல்மாடியிலிருந்து கீழே படிக்கட்டுகள் வழியாக வேண்டுமென்றே விழுந்து உருண்டாராம். மகாராணியின் அன்னையார் முன்னிலையில் இது நடைபெற்றதாம்.

டயானா அரண்மனையில் சார்லஸை சண்டைக்கிழுத்தால் அல்லது கூச்சல்போட்டு ரகளை செய்தால் இளவரசர் அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் அல்லது கணக்கெடுக்காமல் போய்விடுவாராம். அல்லது, "ஓநாய் வருகிறது, ஓநாய் வருகிறது என்று பொய்க்குக் கூச்சல்போடாதே! அப்புறம் உண்மையாகவே ஓநாய் வந்துவிடப்போகிறது," என்று சொல்லிவிட்டுப் போய்விடுவாராம்.

இதனால் ஆத்திரம் அடைந்த டயானா ஒருமுறை ஆரஞ்சுப் பழம் நறுக்கும் கத்தியை கையில் தூக்கி வைத்துக் கொண்டு தன்னைத் தானே வெட்டிக் கொள்ளப் போவதாக சார்லஸைப் பயமுறுத்தி இருக்கிறார். பத்ரகாளி ஆட்டம் ஆடியிருக்கிறார்.

சார்லஸ் கண்டுகொள்ளவில்லை.

தனது மணிக்கட்டில் கீறிக் கொண்டாராம் டயானா.

இத்தகைய முயற்சிகள் ஐந்து, ஆறு தடவைகள் நடைபெற்றனவாம்.

இவை அன்ட்ரூ மார்ட்டனுக்கு உண்மையான தற்கொலை முயற்சிக்கு அப்பாற்பட்ட உணர்ச்சிவழி அச்சுறுத்தல் (EMOTIONAL BLACKMAIL) முயற்சிகளாகத் தெரியவில்லை. இவற்றைத் தற்கொலை முயற்சிகள் என்று வர்ணித்து டயானாவை வாழ்க்கையின் ஓரத்துக்கே தள்ளப்பட்ட ஒரு அபலையாகப் படம்பிடித்துக் காட்டுகிறார் மார்ட்டன். மக்கள் மத்தியில் டயானாவை ஒரு துன்பியல் நாயகியாகக் காட்டி, அவர்களது இரக்க நரம்புகளை மீட்டி, அவர்களது பேராதரவை டயானாவுக்குப் பெற்றுத் தருகிறார்.

ஒரு புறம் வேடன் (சார்லஸ்), மறுபுறம் நாகம் (அரச குடும்பம்), இரண்டுக்கும் நடுவே அழகிய கலைமான் (டயானா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாணியில் டயானாவின் உண்மைக் கதை கேட்போர் உள்ளத்தை நெகிழவைக்கும் சோகரசத்துடன் உருவாக்கப் பட்டிருந்தது.

பரம்பரை பரம்பரையாய் வந்த மேற்குடிக் குடும்பத்தில் டயானா பிறந்திருந்தாலும் அவர் அரசவம்சத்தைச் சேர்ந்தவர் அல்ல. அவரை 'எங்க வீட்டுப் பிள்ளையாக', 'நம்ம வீட்டுப் பெண்ணாகத்' தான் பிரிட்டிஷ் பொதுமக்கள் தமது இதயத்தில் இருத்தி வைத்திருந்தார்கள். மகாராணி வீட்டிற்கு மருமகளாக டயானா சென்றபோது, தங்கள் வீட்டு 'மாட்டுப் பெண்ணே' அரண்மனைக்குப் போனதாக அவர்கள் நினைத்துக் கொண்டார்கள்.

"மகாராணி, நாங்கள் எங்கள் கண்களையே உங்களுக்குத் தருகிறோம், அவற்றில் கண்ணீர் வராமல் பார்த்துக்கொள்வது உங்கள் கடமை," என்று சொல்லித்தான் பொதுமக்கள் டயானாவை அந்த வீட்டுக்கு மருமகளாக அனுப்பி வைத்தார்கள். இது மக்களின் நினைப்பு.

இப்போது 'மக்கள் வீட்டுப் பெண்' கண்ணீரும் கம்பலையுமாக (மார்ட்டனின் நூல் வழியாக) 'பிறந்த வீட்டுக் கதவுகளைத் தட்டி முறையிடுகிறாள்.

நற்குணப் பண்புகளுக்குப் பேர்போனது அரச குடும்பம். குடும்ப வாழ்க்கை நெறிமுறைகளில் நாட்டுக்கு முன் உதாரணமாகத் திகழ்வது எலிஸபெத் மகாராணியாரின் குடும்பம் தான் என்ற மனக்கோட்டை சுக்குநூறாக வெடித்துச் சிதறுகிறது. உள்வீட்டு அழுக்குத் துணிகளை சாலையில் வைத்துப் பகிரங்கமாகத் துவைத்தது மார்ட்டனின் நூல். வீட்டுக்கு வீடு வாசப்படி என்ற நிலை வந்தது. குடும்பச் சண்டை மக்களின் கொலுமண்டபத்திற்கு வந்தது. பிரிட்டிஷ் அரண்மனையைப் பார்த்து உலகெங்கும் உள்ள சந்திகள் சிரிக்கும் நிலையை ஏற்படுத்திவிட்டார் டயானா.

பிரிட்டிஷ் மகாராணி, பொதுநலவமைப்பு நாடுகளின் தலைவி இரண்டாவது எலிஸபெத் ஒரு வில்லி! அவரது மகன், முடிக்குரிய இளவரசன் சார்லஸ் ஒரு வில்லன்! அவர்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம் வில்லர்களின் பாசறை! டயானா வஞ்சிக்கப்பட்ட அபலைக் கதாநாயகி!

அன்ட்ரூ மார்ட்டன் எழுதிய இந்த 'திகில் திரைக்கதை'யை மக்கள் முதலில் நம்பவில்லை. இந்த நூலில் தரப்பட்ட தகவல்கள் பொய்யானவை என்று பத்திரிகைகளில் கருத்துக்கள் வரத் தொடங்கின. இந்த நூலுக்கும் தனக்கும் தொடர்பில்லை என்று டயானாவே சொல்லிவிட்டார். டயானர்வின் தறிகெட்ட சில சிநேகிதர்கள் கொடுத்த விஷமத்தனமான தகவல்களை ஆதாரமாக வைத்து இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. இந்த நண்பர்கள் டயானாவின் கோபத்திற்கு ஆளாகப் போகிறார்கள் என்றெல்லாம் பத்திரிகைகளில் செய்திகள் வரத் தொடங்கின.

அப்போதுதான் -

அந்தத் திடீர்த்திருப்பம் ஏற்பட்டது!

மார்ட்டனின் நூலில் டயானா பற்றிய தகவல்களை வெளியிட்ட போது நெருங்கிய சிநேகிதியான கரலின் பத்தோலமியூ என்பவரை டயானா சந்தித்து ஆரத் தழுவிய காட்சி சகல பத்திரிகைகளிலும் வெளிவந்தது.

இந்தச் சந்திப்பு கரலினது இல்லத்தின் வெளிவாசலில் வைத்து நடைபெற்றது. தெருவிலே குழுமி நின்ற பத்திரிகை நிருபர்கள், படப்பிடிப்பாளர்களின் கண் முன்னால் நடைபெற்றது.

கரலினின் இல்லத்திற்கு, டயானா சென்று, வீட்டுக்கு வெளியே வீதியில் வைத்து கரலினை கட்டித்தழுவியிருக்கிறார். படப்பிடிப்பாளர்களுக்கு ஒரு பகிரங்க போஸ்!

இதன் அர்த்தம் என்ன!

மார்ட்டனின் நூலில் டயானா பற்றிய தகவல்களைத் தந்தவர்களில் முக்கியமானவர்கள் என்ற பட்டியலில் இரண்டாவதாக கரலினின் பெயர் வந்திருக்கிறது. டயானாவுக்குத் தெரியாமல் டயானா பற்றிய விஷமத்தனமான தகவல்களை அவரது சிநேகிதர்கள் வெளியிட்டுவிட்டார்கள், டயானாவின் சீற்றம் அவர்கள் மீது திரும்பப் போகிறது என்று நாடே பரபரப்பில் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சந்தர்ப்பத்தில் டயானா தனது சிநேகிதி கரலினை அன்புடன் கட்டித் தழுவி தனது 'ஈடிணையற்ற அன்பை' வெளிப்படுத்தினார்.

என்னைப் பற்றி அவர்கள் சொன்னதெல்லாம் உண்மை, உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை என்று டயானாவே அத்தாட்சிப் பத்திரம் வழங்கியதாகத் தானே பொருள்படும்?

அது மட்டுமல்ல -

இன்று மாலை, இந்த முகவரியில், இன்ன நேரத்திற்கு டயானா கரலினை சந்திக்கப்போகிறார் என்று அத்தனை பத்திரிகைக் காரியாலயங்களுக்கும் தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தவர்களே டயானாவின் சிநேகிதர்கள்தான்!

பத்திரிகைகள் டயானாவை விரட்டினவா? அல்லது டயானா பத்திரிகைகளை விரட்டினாரா?

பத்திரிகைகள் டயானாவின் அந்தரங்கத்தை ஊடுரு வினவா? அல்லது டயானா தனது அந்தரங்கத்தை பத்திரிகை களுக்குத் திறந்து காட்டி, ஒரு கெட்ட பழக்கத்தை பத்திரிகை களுக்கு தானே பழக்கினாரா?

பத்திரிகைகளை தனது தேவைக்கு சூழ்ச்சிகரமான முறையில் டயானா பாவித்தாரா? அல்லது பத்திரிகைகள் டயானாவைப் பாவித்தனவா?

இந்தச் சம்பவத்தின்பின், தனக்கும் இந்த நூலுக்கும் சம்பந்தமில்லை என்ற டயானாவின் நிலைப்பாட்டை பெரும் பாலானோர் நம்பவில்லை. ஆனால் அந்த நூலில் டயானா சார்பில் முன்வைக்கப்பட்ட கண்ணீர்க் கதையை பலர் நம்பத் தலைப்பட்டனர்.

அந்த நூல் உலகெங்கும் 45 இலட்சம் பிரதிகள் விற்பனையானது. அன்ட்ரூ மார்ட்டன் கோடீஸ்வரர் ஆனார்! டயானா தியாகி ஆனார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வின்ட்ஸர்கள் ஏறிய அரியாசனத்தின் மீது ஒரு (டயானா) ஸ்பென்ஸர் வைத்த குறி!

டயானாவுக்கு புலீமியா நேர்வோசா என்ற நோய் இருந்ததையும் அதன் விளைவாக அவர் அடிக்கடி வாந்தி எடுத்துவந்தார் என்பதையும் அன்ட்ரூ மார்ட்டனின் நூல் உறுதிப்படுத்தியது.

புலீமியா என்ற நோயின் சில தன்மைகளை அறிந்துகொண்டால்தான் டயானாவின் பிரச்சனைகளை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும்.

ஆக்ஸ்பர்ட் பல்லைக்கழகத்தின் மனநோய்ப் பாடநூல் புலீமியா பற்றி கூறுவதாவது:

இந்த நோய் கண்டவர்கள் குறுகிய காலப்பொழுதினுள் (பெரும்பான்மையோர் சாப்பிடும் அளவைவிட) மிக அதிகமான அளவு உணவை சாப்பிடுவார்கள். சாப்பிடுவதை நிறுத்த வேண்டும் அல்லது சாப்பிடும் அளவை குறைத்துக்கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாட்டை அவர்கள் முழுதாக இழந்து விடுவார்கள். அளவுக்கு அதிகமாகச் சாப்பிடவேண்டும் என்ற கட்டுக்கடங்காத ஆசையை அவர்களால் அகற்றமுடியாது. பொதுவாக இவர்கள் தனிமையாக இருக்கும் வேளைகளில் தான் இப்படிச் செய்வார்கள். இத்தகைய சாப்பாடு அவர்களது மனதிலே உள்ள அழுத்தத்திலிருந்து அவர்களுக்கு நிவாரணம் தேடித் தருகிறது.

ஆனால் இத்தகைய நிவாரணம் சொற்பநேரமே நீடிக்கும். அதன்பின்பு அவர்கள் அருவருப்பினாலும் குற்றவுணர்ச்சியாலும் பீடிக்கப்பட்டு உட்கொண்ட உணவை வெளியேற்ற முனைவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் வாய்க்குள் விரலைவிட்டு வாந்தி எடுப்பார்கள். சாப்பிட்ட பேருண்டியை சுக்கித் தள்ளுவார்கள். இவர்களில் சிலர் பேதி மருந்து குடித்து வயிற்றோட்டத்தை ஏற்படுத்திக்கொள்வார்கள். சிலர் எனீமா வைப்பார்கள். இன்னும் சிலர் பட்டினிகிடப் பார்கள் அல்லது அளவுக்கதிகமாக உடற்பயிற்சி செய்வார்கள்.

அளவுக்கு மீறிச் சாப்பிடுவதும், சாப்பிட்ட உணவை வெளியேற்றுவதுமான இந்த நிகழ்வுகள் வாரத்திற்கு இரு தடவையிலிருந்து தினமும் பலதடவைகள் வரை ஏற்படலாம். இவர்கள் தாம் குண்டாக இருப்பதாகவோ அல்லது எடை அதிகரித்து இருப்பதாகவோ தப்பாகக் கற்பனை செய்து கொள்வார்கள்.

அமெரிக்கர்களான காப்லனும் சாடக்கும் எழுதிய மனநோய் உயர்நிலைப் பாடநூலில், இந்த நோய் முன்னேற்றமடைந்து வரும் நாடுகளைவிட தொழில் வளர்ச்சி கண்ட நாடுகளிலேயே அதிகமாக ஏற்படுகிறது என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். இந்நோயால் பாதிக்கப்படுவோரில் 90 முதல் 95 சதவீதத்தினர் பெண்கள். 12 முதல் 25 வயதுக்குள் இந்நோய் பெரும்பாலும் ஆரம்பிக்கிறது.

சிலர் மேற்கொள்ளும் தொழில்களுக்கு அவர்களது உடல் ஒல்லியாக இருப்பது மிகவும் சாதகமாக அமையக்கூடும். மேற்கத்திய 'பாலே' நடனம் ஆடுவோர், பாஷன் மாடல்கள் இதற்கு உதாரணங்கள். இத்தகையோருக்கு இந்த நோய் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் அதிகம். பரம்பரை ரீதியாகவும் ஒருவரிலிருந்து இன்னொருவரைச் சென்றடைகிறது இந்த நோய்.

தனிப்பட்ட முறையில் தாம் நாதியற்றவர்கள் என்று எப்போதும் அஞ்சும் சுபவாம் உடையவர்களாக சிலர் இருப் பார்கள். சிலர், தாம் தமது கட்டுப்பாடுகளை இழந்து விடுவோமோ என்று எந்நேரமும் அஞ்சிக் கொண்டிருப்பர். இன்னும் சிலர் மற்றவர்கள் தம்மைப் பற்றி என்ன நினைக் கிறார்கள் என்பதில் தான் தமது சுயமதிப்பு தங்கியுள்ளது என்று கருதுவார்கள். இத்தகையோருக்கு இந்தநோய் வரக்கூடிய வாய்ப்பு அதிகம் என்று காப்லனும் சாடொக்கும் எழுதியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும்சிலர் 'அடித்தால் மொட்டை, வைத்தால் குடுமி' என்ற போக்குடையவர்களாக இருப்பார்கள். குடுமிக்கும் மொட்டைக்கும் இடையே கிராப்பு வைத்துக்கொள்ளக்கூடிய எத்தனையோ கட்டங்கள் இருப்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இத்தகையோருக்கும் இந்நோய் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அதிகம் என்கிறார்கள் இந்த நூலாசிரியர்கள்.

புலீமியா நோய் உள்ளவர்களுக்கும் ஆளுமைக் கோளாறுகளின் எல்லைக்கோட்டைத் தொட்டு நிற்பவர் களுக்கும் ஒரு தொடர்பு உண்டு என்பதற்குச் சான்றுகள் உள்ளன என்கிறார்கள் இவர்கள். புலீமியா நோய் உள்ளவர்களுக்கு 'எல்லைக்கோட்டு ஆளுமைக் கோளாறுகளும்' (BORDERLINE PERSONALITY DISORDERS) சேர்ந்திருக்கக்கூடிய வாய்ப்பு அதிகம் என்கிறார்கள்.

பின்வரும் ஒன்பது பண்புகளில் குறைந்தது ஐந்து பண்புகளை உடையவர்கள் ஆளுமைக் கோளாறுகளின் எல்லைக் கோட்டைத் தொட்டு நிற்கிறார்கள் என்று முடிவு செய்யலாம்:

**1. மாறும் இயல்புடைய மனித உறவுகள் 2. உணர்ச்சிகளின் உந்துதலால் செய்யப்படும் நடவடிக்கைகள் 3. அடிக்கடி மாறுபடுகிற மனநிலை ("மூட்") 4. கோபத்தைக் கட்டுப்படுத்த இயலாத தன்மை 5. திரும்பத் திரும்ப நிகழ்கின்ற தற்கொலைப் பயமுறுத்தல்களும் நடவடிக்கைகளும் 6. தன்னுடைய தனித்துவத்தைப் பற்றிய ஐயப்பாட்டு நிலை 7. மனதில் பலகாலமாகத் தொடர்ந்து நீடிக்கும் வெறுமை உணர்வுகள் 8. மற்றவர்கள் தம்மைக் கைகழுவிவிடுவதைத் தவிர்ப்பதற்கு முயற்சிகள் எடுத்தல் 9. அழுத்தத்தின் விளைவாக தற்காலிகமாக ஏற்படும் நோய்க் குறிகள். இவை மற்றவர்கள் தனக்கு அநியாயம் செய்யப்போகிறார்கள் என்ற தவறான நம்பிக்கை, தனது முக்கியத்துவத்தைப் பற்றி உண்மைக்குப் புறம்பான, அதிகரித்த, தவறான நம்பிக்கை என்பனவற்றை உள்ளடக்கலாம். இந்த நம்பிக்கைகள் அசைக்க முடியாத நம்பிக்கைகளாக இருக்கும்; இன்னும் சிலருக்கு தமது தொடர்புகள் அறுந்த, தொடர்புகளை மறந்த நோய்க்குறிகளும் ஏற்படக்கூடும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலிப் பார்க்கர் எழுதிய இளம்வயதில் ஏற்படும் அடிப்படை மனநோய்கள் என்ற பாடநூலில் புலீமியா நோய் உள்ளவர்கள் தமது நோயின் குறிகளை பரம இரகசியமாக வைத்திருப்பார்கள் என்கிறார். கணவனும் மனைவியும் ஒன்றாக வாழ்ந்தாலும், மனைவி தனது கணவனிடமிருந்து தனது நோயின் குணம்குறிகளை பல ஆண்டுகளுக்குக்கூட மறைத்துவிடுவது வழக்கம் என்கிறார். இத்தகைய நோய் உடையவர்கள் வளர்ந்து, அப்பா அல்லது அம்மா ஸ்தானத்தை அடைவதையிட்டு அச்சம் அடைவார்களாம்.

புலீமியா நேர்வோசா நோயும் எல்லைக்கோட்டு ஆளுமைக் கோளாறுகளும், பால்ய வயதில் பிள்ளைகள் சந்திக்கும் தோல்விகள், துன்பங்கள், துன்பகரமான குடும்பச் சூழல்களின் அடிப்படையாக பிற்காலத்தில் எழுகின்றன என்று மனநோய் ஆய்வாளர்கள் சந்தேகிக்கிறார்கள். இத்தகைய கருத்தை உறுதியாக நிரூபிக்கக்கூடிய ஆராய்ச்சிகள் அத்தகையவர்களை தொடர்ச்சியாக 20-25 வருடங்களுக்கு அடிக்கடி சந்தித்து ஆராயக்கூடிய வகையில் அமையவேண்டும். இது மிகவும் சிரமமான ஒரு காரியம் என்பதால்தான் இத்தகைய நீண்டகால ஆராய்ச்சிகள் இதுகாறும் மேற்கொள்ளப்படவில்லை.

டயானாவைப் பீடித்திருந்த புலீமியா மனநோயின் அடிப்படைப் பண்புகள் இவை தான்.

மறுபடியும் அன்ட்ரூ மார்ட்டனிடம் திரும்புவோம்.

டயானாவின் மரணம் அறிவிக்கப்பட்டு 48 மணி நேரத்திற்குள் அன்ட்ரூ சுறுசுறுப்பானார். 'டயானா - அவரது உண்மைக் கதை' என்ற நூலை எழுதி, ஓட்டாண்டி என்ற நிலையிலிருந்து கோடீஸ்வரன் என்ற அந்தஸ்திற்கு உயர்ந்தவராயிற்றே அவர்! இன்னும் சில கோடிகளுக்கு அதிபதியாக வருவதற்கு ஒரு அற்புத சந்தர்ப்பம் கிடைத்ததை உணர்ந்தார். தனது நூலின் பதிப்பாளர்களிடம் ஓடினார், பேசினார், ஒரு முடிவிற்கு வந்தார்.

நீர்நிலைகளுக்கு அருகில் இருக்கும்போதுதான் டயானாவின் செழிப்பான சிந்தனைகள் செயல்பட ஆரம்பிக்கின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தனது நூலில் எழுதியவர் மார்ட்டன். டயானாவின் உடல் ஒரு நீர்நிலையின் நடுவில் உள்ள தீவில் அடக்கம் செய்யப் படுவதற்கு முன்னாலேயே மார்ட்டனின் செழிப்பான சிந்தனை கடுகதி வேகத்தில் செயற்பட்டு புதிய ஒரு செயல் திட்டத்தை முடுக்கி விட்டது.

அதன் விளைவாக -

டயானா அடக்கம் செய்யப்பட்டு சரியாக 30 நாட்களின் பின், 'டயானா - அவரது உண்மைக் கதை' என்ற பழைய நூலின் புதிய பதிப்பு ஒன்று கடைகளை வந்து அடைந்தது.

நூலின் தலைப்பில் சிறிய மாற்றம். 'டயானா - அவரது உண்மைக் கதை - **அவரது சொந்த வார்த்தைகளில்'** என்பது தான் புதிய தலைப்பு. புதிய முன்னுரையும் எழுதியிருந்தார் மார்ட்டன்.

புதிய தலைப்பும் புதிய முன்னுரையும் புதிய பூகம்பம் ஒன்றை ஏற்படுத்தின.

புதிய முன்னுரையில் மார்ட்டன் என்ன கூறினார் தெரியுமா?

1992ல் தான் எழுதிய இந்த நூலின் முதற்பதிப்பு, உண்மையில் டயானாவின் நண்பர்கள் தகவல் தந்து தான் எழுதிய நூல் அல்ல. அந்த நூலில் வெளியிட்ட தகவல்களைத் தனக்குத் தந்தது சாட்சாத் காலஞ்சென்ற டயானாவேதான். அந்த நூலை எழுதுவதற்காக தான் டயானாவை நேருக்கு நேர் சந்திக்கவில்லை என்பது உண்மை. ஆனால் கென்ஸிங்டன் அரண்மனையில் ஒரு 'டேப்-ரிக்கார்டரை' வைத்துக் கொண்டு மணிக்கணக்காக டயானா தனது உணர்ச்சிகளை அந்த இயந்திரத்தினுள் கொட்டித் தீர்த்தார். அந்த டேப்புகள் மார்ட்டனுக்கு ஒரு தரகர் மூலம் அனுப்பப்பட்டன.

டயானாவின் ஒலிப்பதிவுகளைக் கேட்ட மார்ட்டன், அவற்றின் அடிப்படையில் அவருக்கு எழும் புதிய கேள்விகளை எழுதி டயானாவுக்கு அதே தரகர் மூலமாக அனுப்பி வைப்பார். அவைகளுக்கு டயானா கூறும் பதில்களும் விளக்கங்களும் ஒலிப்பதிவு நாடா வழியாக மார்ட்டனை வந்தடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை அடிப்படையாக வைத்து மார்ட்டன் டயானாவின் 'உண்மைக் கதையை' எழுதினாராம். அச்சுக்குப் போகும் முன்னால், நூலின் இறுதிக் கட்ட அச்சுப் பிரதியை டயானாவின் பார்வைக்கு மார்ட்டன் அனுப்பிவைத்தார்.

அந்த நூலை வரிவரியாகப் படித்துப் பார்த்த டயானா ஆங்காங்கே சில திருத்தங்களைத் தனது கைப்படவே செய்து மார்ட்டனுக்குத் திருப்பி அனுப்பினார். அதற்கேற்ப இறுதிப் பிரதியை மார்ட்டன் திருத்தி அமைத்தாராம்.

'டயானா - அவரது உண்மைக் கதை - அவரது சொந்த வார்த்தைகளில்' என்ற பெயரில் வெளிவந்த அக்டோபர் 1997 பதிப்பில், டயானா தனது கைப்படத் திருத்திய இறுதிப் பிரதியில் இருந்து ஒரு பக்கத்தை மார்ட்டன் அப்படியே பிரசுரித்து டயானாவின் ஈடுபாட்டை நிரூபித்தார்.

அது மட்டுமல்ல -

டயானா அவருக்குக் கையளித்த ஒலிப்பதிவு நாடாக்களின் மிகச் சுவையான பகுதிகளை அப்படியே 46 பக்கங்களில் பிரசுரித்தார்.

முதல் பதிப்பில் வந்த டயானாவின் எண்ணற்ற அந்தரங்கப் படங்களை டயானாவின் அப்பா தனது மரணத்திற்கு முன் மார்ட்டனுக்கு தந்துதவினார் என்று மார்ட்டன் முன்நாளில் அடித்துக் கூறியிருந்தார் அல்லவா? அது அப்பட்டமான பொய் என்பதை ஒப்புக் கொண்டார்.

உண்மையாக நடந்தது என்ன?

தமது குடும்பப் பட ஆல்பங்கள் எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாக பெட்டிகளில் போட்டு அடைத்து, மார்ட்டனின் அலுவலகத்திற்கு வான்மூலம் அனுப்பி வைத்தது சாட்சாத் (ஒன்றுமே தெரியாத அப்பாவி அபலை) டயானாவே தானாம். அவற்றில் தனக்குப் பிடித்தமான படங்களை நார்ட்டன் தேர்ந்தெடுத்து, அவற்றைப் பிரதி பண்ணிவிட்டு டயானாவுக்கு ஆல்பப் பெட்டிகளை வானில் திருப்பி அனுப்பினாராம். அதுதான் 'உண்மையான உண்மை' என்று மார்ட்டன் வழக்கம் போல அடித்துச் சாதித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்களைப் பற்றி மார்ட்டன் சொன்ன 'புது உண்மை' உண்மையில் உண்மையா அல்லது பொய்யா என்று நமக்கு இன்றுவரை தெரியாது என்றாலும், அவரது புது உண்மை டயானாவின் அப்பா ஏர்ள் ஸ்பென்ஸரின் ஆத்மாவை சாந்தியடைய வைத்திருக்கும் என்பது மட்டும் நிச்சயமான உண்மை.

மார்ட்டனின் நூலில் பிரசுரிக்கப்பட்ட டயானாவின் பால்ய காலப் படங்களின் தேர்வு விந்தையிலும் விந்தையாக உள்ளது. அதே வயதில், அதே நாளில், அதே உடையில் டயானா நிற்கும் படம், இருக்கும் இடம், குனியும் படம், நிமிரும் படம் என்று ஒரே பட வாந்தி. மார்ட்டன் ஒரு காலத்தில் ஒரு மிகச் சின்னப் பத்திரிகையின் நிருபராக இருந்தவர் அவர் ஒரு கத்துக்குட்டி நூலாசிரியர் தான் என்ற அமைச்சூர் தகைமைகளை வைத்துப் பார்த்தாலும் படத்தேர்வை அவர்தான் செய்திருப்பார் என்பதை நம்பக்கஷ்டமாக இருக்கிறது.

தனது உடம்பின்மீது தானே காதல் கொள்ளும் நார்ஸிசிஸ்டிக் ஆளுமை (NARCISSISTIC PERSONALITY) உள்ள ஒருவரைத் தவிர வேறு எவரும் இத்தகைய படத்தேர்வைச் செய்திருக்க முடியாது.

எதிர்காலத்தில் டயானாவின் பெயரைச் சொல்லி இன்னும் சில கோடிகள் சம்பாதிக்கக்கூடிய இன்னொரு வாய்ப்பு எழும் பட்சத்தில், மார்ட்டன் 1997ல் தெரிவித்த 'புது உண்மையை' மேலும் புதுப்பித்து, படங்களைத் தேர்வு செய்ததும் டயானா தான், அவற்றை ஒன்றுவிடாது பிரசுரிக்கும்படி நெருக்கடி தந்ததும் டயானா தான் என்று இன்னொரு 'புத்தம் புதிய உண்மையை' முன் வைக்கமாட்டார் என்பது என்ன நிச்சயம்?

மார்ட்டனின் முதல் பதிப்பில், டயானா மாடிப்படிகள் வழியே விழுந்துருண்டு தற்கொலை செய்ய முயற்சித்ததை மகாராணியின் அன்னை நேரில் கண்டார் என்று எழுதப்பட்டிருந்தது. கடைசிப் பதிப்பில் கதை மாறிவிட்டது. மகாராணியின் முன்னிலையில் தான் டயானா விழுந்துருண்டார் என்றும், மகாராணிக்கு கௌரவக்குறைவு ஏற்பட்டுவிடக்கூடாதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்காக மகாராணிக்குப் பதிலாக மகாராணியின் அன்னை பெயரைப் போடும்படி டயானா மார்ட்டனைக் கேட்டுக் கொண்டார் என்றும் புதிய பதிப்பு குறிப்பிட்டது.

'டயானா - அவரது உண்மைக் கதை - அவரது சொந்த வார்த்தைகளில்' என்ற நூலின் வழியாகவும் அதன் முந்திய பதிப்பான 'டயானா - அவரது உண்மைக் கதை' (அவரது நண்பர்கள் வார்த்தைகளில்) வாயிலாகவும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய பயங்கர உண்மை ஒன்று உள்ளது.

அது என்ன?

**டயானா அப்பட்டமான பொய் சொன்னார்!**

**அன்ட்ரூ மார்ட்டன் அப்பட்டமான பொய் சொன்னார்!**

**டயானாவின் நூலில் பெயர் குறிப்பிடப்பட்ட அவரது சிநேகித சிநேகிதிகள் அத்தனைபேரும் அப்பட்டமான பொய் சொன்னார்கள்.**

**இவர்கள் எல்லாரும் இந்த நூலை விலைகொடுத்து வாங்கிய 45 இலட்சம் மக்களுக்கு அப்பட்டமான பொய் சொன்னார்கள். இந்த நூலை வாசித்து நம்பிய அதைவிடப் பன்மடங்கு இலட்சம் மக்களுக்கு அப்பட்டமான பொய் சொன்னார்கள். பிரிட்டிஷ் தேசத்திற்கு அப்பட்டமான பொய் சொன்னார்கள். முழு உலகத்திற்கும் அப்பட்டமான பொய் சொன்னார்கள்.**

இந்தப் பொய் ஒரு சில்லறைக் காரணத்துக்காகச் சொல்லப்படவில்லை.

பல நூற்றாண்டு காலமாக பிரிட்டிஷ் வரலாற்றோடு இரண்டறக் கலந்து, பிரிட்டிஷ் சமூகத்தில் மக்களின் உணர்வோடு, உதிரத்தோடு ஒன்றிவிட்ட முடியாட்சியின் அஸ்திவாரங்களையே கிடுகிடுக்கவைத்த நிகழ்வைப் பற்றி அப்பட்டமாகப் பொய் சொன்னார்கள்.

இவர்களை இனியும் நம்பமுடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தமது நோக்கம் நிறைவேறுவதற்காக, தமது காரியத்தைச் சாதித்துக்கொள்வதற்காக முழு பூசணிக்காயையே ஒரு கேக் உள்ளே போட்டு அமுக்கிய இவர்கள், இந்த நூலில் இளவரசர் சார்லஸைப் பற்றி, மகாராணியைப் பற்றி, பத்திரிகையாளர்களைப் பற்றி எத்தனையோ பழிகளை முன்வைத்துள்ளார்கள்.*

*இந்தப் பழிகளில் உண்மையானவை எவை. ஜோடிக்கப் பட்டவை எவை?*

*இந்த நூலிலே கூறப்பட்டுள்ள கருத்துக்களை நம்புவது எப்படி?*

*துறைதோயக்கற்ற வரலாற்றாசிரியர் எவரும் இந்நூலில் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்களை மட்டும் நம்பி ஒரு முடிவுக்கு வரமாட்டார்கள் என்பது நிச்சயம்.*

*இந்த நூலை டயானா எழுதியதன் முக்கிய நோக்கம் என்ன?*

இளவரசர் சார்லஸின் பெயரை இயன்ற மட்டும் மக்கள் மத்தியில் கெடுத்து, எலிஸபெத் மகாராணியின் பின்னர் மூன்றாவது சார்லஸ் மன்னராக வருவதை, அவர் அரியணை ஏறுவதைத் தடுப்பதுதான். சார்லஸைப் பழிவாங்குவதே டயானாவின் குறிக்கோளாக இருந்தது. வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் அவரைத் தூக்கி வீசுவதே டயானாவின் வெறியாக இருந்தது. இதில் சந்தேகமில்லை.

இதோ, அவரது நூலில், அவரது வார்த்தைகளில் சொல்லப்பட்டிருப்பது :

"நான் நினைத்தபடியே எல்லாம் நடக்குமென்றால் நான் விரும்புவது இதைத் தான்: என்னுடைய கணவர் போய் விடவேண்டும். இந்தப் பெண்மணியுடன் (கமிலா) போய்விட வேண்டும். போய் அந்த வேலையைப் பார்க்கவேண்டும். வில்லியம் அரியணை ஏறும்வரை வேல்ஸ் பெயரை சுமப்பதற்கு (அதாவது, முடிக்குரிய இளவரசரின் பணிகளைப் புரிவதற்கு) என்னையும் பிள்ளைகளையும் விட்டுவிடவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிள்ளைகளுக்குப் பின்னால் நான் எப்போதும் உறுதுணையாக இருப்பேன். இந்தத் தொழிலை நான் தனியாக இதைவிடத் திறமையாக (அதாவது, சார்லஸ் செய்ததை விடத் திறமையாக) செய்ய முடியும்."**

(அடைப்புக் குறியினுள் உள்ள விளக்கங்கள் இந்த நூலாசிரியருடையவை).

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு பிபிஸி தெலைக்காட்சிக்கு டயானா அளித்த பேட்டியிலும் இதே கருத்தை வலியுறுத்தினார் :

**இளவரசர் சார்லஸுக்கு தலைமைதாங்கக்கூடிய திறமைகள் இல்லை. இன்னொருவருடைய தலைமையின்கீழ் இயங்குவதற்குத்தான் அவரால் முடியும். எனவே எலிஸபத் மகாராணிக்குப் பின் தனது மகன் வில்லியம்தான் (அப்போது வயது 13) மன்னராக வரவேண்டும் என்றார் டயானா.**

இளவரசர் சார்லஸுக்கு அடுத்ததாக அரியணை ஏறவேண்டிய வாரிசு இளவரசர் வில்லியம்தான்.

தற்போது அரியணையில் உள்ள மகாராணி, வின்ட்ஸர் பரம்பரையைச் சேர்ந்தவர். சார்லஸும் அப்படியே. இளவரசர் வில்லியம் 50 சதவீதம் வின்ட்ஸர் பரம்பரை, 50 சதவீதம் (முதல்முதலாக) ஸ்பென்ஸர் பரம்பரை.

எனவே ஸ்பென்ஸர் பரம்பரைக் கலப்பும் உடைய ஒருவர் (வில்லியம்) அரியணை ஏறுவதற்கு சார்லஸ் மன்னர் இறக்கும் வரை காத்திருக்க வேண்டும்.

ஆனால் அந்தளவு பொறுமை டயானாவுக்கு இல்லை. ஒரே அவசரம்.

எலிசபெத் மகாராணியின் அன்னைக்கு இப்போது 98 வயது ஆகிறது. எலிஸபெத் மகாராணிக்கு இப்போது 72 வயது நடக்கிறது. இவர்களது பரம்பரை நீண்ட ஆயுசு உள்ளது. தனது அன்னையைப் போல், எலிசபெத் மகாராணியும் 97-100 வயது வரை வாழ்ந்தால் அதன் பிறகுதான், அவர் இறந்தபிறகுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவரசர் சார்லஸே அரியணை ஏற முடியும். சார்லஸும் 100 வயதுவரை வாழ்ந்து அரியணையில் அமர்ந்திருந்தால் வில்லியம் எப்போது மன்னராவது? ஸ்பென்ஸர் கலப்பு உள்ள ஒருவர் எப்போதுதான் மன்னராவது?

பிரிட்டிஷ் சட்டதிட்டங்களின்படி அரியணை ஏறும் ஒருவர் தனது மரணம்வரை அரசபதவியை விசுவாசமாகச் செய்வேன் என்று சத்தியப்பிரமாணம் செய்துகொள்கிறார். அரச பதவியில் வயதின் நிமித்தம் 'பென்ஷன்' எடுக்கும் கதையே கிடையாது. ஆட்சி செய்பவர் தானாகவே முடியைத் துறந்தால்தான் புதிய ஒரு அரசருக்கோ அல்லது அரசிக்கோ வாரிசு வழிப்படி பட்டாபிஷேகம் செய்வார்கள்.

அரியணையில் இருப்பவர்கள், தாமாகவே முன்வந்து, முடியைத் துறப்பதை ஒரு இழுக்கு என்று கருதுகிறார்கள். அரியணை ஏறும்போது, சாகும்வரை அந்தப் பதவியை விசுவாசமாகச் செய்வதாக எடுத்துக்கொண்ட சத்தியப் பிரமாணத்தை நிறைவேற்ற முடியாதவர் என்ற பெயரை ஒரு அவப்பெயராக அரச வம்சம் கருதுகிறது.

டயானாவுடைய அவரசத்துக்கு இதுதான் காரணம்.

தன்னுடைய பிள்ளைகளில் வில்லியம் தன்னைப்போன்ற குணாதியங்கள் உரியவர். எதிர்கால அரசருக்கு இருக்க வேண்டிய பண்புகளை ஊட்டி அவரை வளர்த்து வருகிறேன். ஏழை எளியவர்களின் பிரச்னைகளை அவருக்கு விளக்கி வருகிறேன். வீடற்றவர்கள் வசிக்கும் சத்திரத்துக்கு ஒரு இரவு நான் சென்றபோது வில்லியத்தையும் அழைத்துச் சென்றேன் - இப்படியெல்லாம் டயானா வில்லியத்தைப் பற்றி எப்போதும் பேசுவார். பத்திரிகையாளர்கள், தன்னைச் சந்திக்க வருபவர்கள் எல்லாரிடமும் திரும்பத் திரும்பச் சொல்லுவார். டயானாவின் இந்தக் கருத்து பத்திரிகைகளில் அடிக்கடி வெளி வந்துள்ளது.

எனவே -

பிரிட்டிஷ் அரியாசனத்தை உடனடியாக அமுக்க வேண்டும் என்பதே டயானாவுடைய வெறியாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைச் சாதிப்பதற்கு அவர் எய்த முதலாவது பாணம்தான் 'டயானா - அவரது உண்மைக் கதை.'

50 சதவீதம் ஸ்பென்ஸரான வில்லியம், ஒரு ஸ்பென்ஸர் பரம்பரைப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டால் அவர்களுக்குப் பிறக்கின்ற பிள்ளை (அடுத்த வாரிசு) அரியணையை வின்ட்ஸர்களிடமிருந்து ஸ்பென்ஸர்களுக்கு மாற்றிவிடும் அல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய், சூழ்ச்சி, ஏமாற்றம், விரக்தி, முரட்டுத்தனம் சிறுமி டயானா வெளிப்படுத்திய குணாதிசயங்கள்

பால்ய வயதில் டயானா சந்தித்த தோல்விகள், துன்பங்கள், துன்பகரமான குடும்பச் சூழல்கள் என்பன பிற்காலத்தில் அவருக்கு ஏற்பட்ட புலீமியா நோய்க்கு அஸ்திவாரமாக அமைந்திருக்கலாம். அவருடைய ஆளுமையை உருவாக்குவதிலும் பங்கு பெற்றிருக்கலாம். அவருடைய ஸ்திரமற்ற மனித உறவுகளுக்கும் ஏதுவாக இருந்திருக்கலாம்.

வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில் டயானா ஞாபகார்த்த கூட்டுவழிபாட்டு நிகழ்ச்சியில் டயானாவின் தம்பி தனது 'போற்றல் - தூற்றல் உரையின்போது,' தனது சகோதரி வாழ்நாள் முழுவதும் ஒருவித பாதுகாப்பற்ற தன்மையால் அவதிப் பட்டதாகக் குறிப்பிட்டார். டயானாவினுடைய வேதனைக்குரிய பால்ய அனுபவங்கள் இதற்கு விதையாக அமைந்திருக்கலாம்.

ஸ்பென்ஸர்களுடைய பூர்வீகத்தைப் பற்றியும் டயானாவுடைய பால்ய அனுபவங்களைப் பற்றியும் பலர் ஆராய்ச்சி செய்து எழுதியுள்ளனர். சேரா பிராட்பட் எழுதிய எலிஸபெத் மகாராணியின் வாழ்க்கை வரலாறு (476 பக்கங்கள் - 1996 முதற் பிரசுரம்), பென் பிம்லட் எழுதிய மகாராணியின் வாழ்க்கை வரலாறு (652 பக்கங்கள் - 1996 முதற்பிரசுரம்), ஜானத்தன் டிம்பிள்பி எழுதிய இளவரசர் சார்லஸின் வாழ்க்கை வரலாறு (746 பக்கங்கள் - 1994 முதற்பிரசுரம்) என்பன இவற்றில் சில.

சேரா ஆக்ஸ்பர்ட் பல்கலைக்கழகத்தில் சரித்திரத் துறையில் பட்டம் பெற்றவர். ஒன்பது நூல்களுக்கு ஆசிரியை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாராணியின் வாழ்க்கை வரலாறு உட்பட ஐந்து முக்கியஸ்தர் களது வாழ்க்கை வரலாற்று நூல்களும் இவற்றுள் அடங்கும். தற்போது பிரிட்டனின் தலைசிறந்த வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் என்று கருதப்படுபவர்.

பென் பிம்லட் பல நூல்களை எழுதிப் புகழ்பெற்றவர். இவற்றுள் வாழ்க்கை வரலாறுகளும் அடங்கும். 1987 முதல் லண்டன் பல்கலைக் கழகத்தின் பேர்பெக் காலேஜில் அரசியல் - சமகால வரலாற்றியல் துறையில் பேராசிரியராக பணியாற்றி வருகிறார்.

ஜானத்தன் டிம்பிள்பி ஒளிபரப்புத் துறையில் கொடிகட்டிப் பறப்பவர். பல டாக்குமென்டரி படங்களைத் தயாரித்து அளித்தவர். இவருடைய அரசியல் பேட்டிகள் மிகவும் காரசாரமாக இருக்கும். டிம்பிள்பியின் கேள்விக் கணைகளில் இருந்து தப்புவது பரீட்சையில் 'பாஸ் மார்க்' வாங்குவதற்கு நிகரானது என்பது பிரிட்டிஷ் அரசியல் தலைவர்களின் அனுபவம். பேட்டி காணப்படுபவர் பிரதமர் என்றாலும் பரவாயில்லை, நேருக்கு நேரான பதில்கள் தராவிட்டால் டிம்பிள்பி துளைத்து எடுத்துவிடுவார். இவருடைய அப்பாவும் (ரிச்சர்ட் டிம்பிள்பி) ஒளிபரப்புத் துறையில் ஒரு ஜாம்பவானாக கொடிகட்டிப் பறந்தவர். ஜானத்தன் இதுவரை, இரண்டு வாழ்க்கை வரலாறுகள் உட்பட, மூன்று நூல்கள் எழுதியுள்ளார்.

றொஸ் பென்ஸன் என்ற பத்திரிகையாளரும் ஸ்பென்ஸர்களுடைய பின்னணியைப் பற்றி நிறைய ஆராய்ச்சி செய்து பல கட்டுரைகள் எழுதியுள்ளார்.

ஸ்பென்ஸர் பரம்பரையின் மூத்த குடிமகன் 15-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு கால்நடைப் பண்ணையாளர். செம்மறி ஆடு விற்றுச் செல்வம் தேடியவர். ஆனால் ஏனைய கால்நடைப் பண்ணையாளர்களைப் போல் ஆடுகளை உள்ளூரில் விற்காமல், லண்டனுக்குக் கொண்டுவந்து அங்குள்ள இறைச்சிக்கடைக்காரர்களுக்கும் கம்பனி வியாபாரிகளுக்கும் நேரடியாக விற்றார் இவர். பெருஞ் செல்வம் குவிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பணத்தைவைத்து, அப்போது அரியாசனத்தில் இருந்த முதலாவது சார்லஸ் மன்னரிடம் ஒரு அரச கௌரவப் பட்டத்தை விலைக்கு வாங்கினார். தற்போது டயானாவின் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள நோர்த்தாம்டனில் உள்ள அல்தோப் எஸ்டேட்டை விலைக்கு வாங்கியவர் அவர்தான். அந்த எஸ்டேட்டில் பிரமாண்டமான ஒரு மாளிகையைக் கட்டினார்.

சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தை எட்டவேண்டும் என்பது ஸ்பென்ஸர்களுடைய ஆசை. எனவே செம்மறி ஆடு விற்றுத் தேடிய திரவியத்தை மூலதனமாக வைத்து அரச குடும்பத்துக்கு 'வால் பிடிக்கத்' தொடங்கினர். அரச குடும்பத்துடன் நெருக்கம் உடையவர்கள் என்று தம்மைக் காட்டிக் கொள்வதில் பெருமை அடைந்தனர்.

ஸ்பென்ஸர் பரம்பரையின் ஆண்கள் ராஜசேவகத்தில் தம்மை விசுவாசமாக அர்ப்பணித்துக் கொண்டனர். அரண்மனையின் நாளாந்த வீட்டு நிர்வாகத்துக்குப் பொறுப்பான 'லார்ட் சேம்பர்லின்' பதவி முதல் அரண்மனையின் குதிரை லாயத்துக்குப் பொறுப்பான 'ஈக்குவேரி' பதவி வரை பரம்பரை பரம்பரையாக வகித்து பாராட்டும் சன்மானமும் பெற்றனர்.

ஸ்பென்ஸர் பரம்பரையின் பெண்களோ அரசர்களது அல்லது இளவரசர்களது கடைக்கண் பார்வை தம்மீது எப்போது விழும், அவர்களுடன் அம்சதூளிகா மஞ்சத்தில் படுக்கும் வாய்ப்பு ஒரு தடவையேனும் கிடைக்காதா என்று அலைந்து திரிந்தனர்.

ஸ்பென்ஸர் பரம்பரையில் வந்த சேரா (காலஞ்சென்ற டயானாவின் அக்காவின் பெயரும் அதுவே) என்ற பெண்மணி முதலாவது மாள்பரோ கோமகனைத் திருமணம் செய்தார். இந்தக் கோமகன் 14-வது லூயி மன்னரின் படைகளை 'பிளென்ஹெய்ம் யுத்தத்தில்' தோற்கடித்துப் புகழ் பெற்றவர். இதைச் சாதகமாக வைத்து தனது பேத்திக்கு (ஸ்பென்ஸர் குலப் பெண்) அரச குடும்பத்தில் மாப்பிள்ளை எடுக்கத்திட்டம் தீட்டினார் சேரா. அரச குடும்பத்தினுள் ஒரு ஸ்பென்ஸர் குலப் பெண்ணை முதன்முறையாகப் புகுத்துவதற்கு முயற்சி நடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது ஜார்ஜ் மன்னரின் மகனுக்கு (அவனுக்கு 'வேல்ஸ் இளவரசன்' என்று பட்டம், இன்றைய இளவரசர் சார்லஸைப் போல்) தனது பேத்தியை (பேத்தியின் பெயரும் லேடி டயானா ஸ்பென்ஸர், காலஞ்சென்ற டயானாவைப் போல்) திருமணம் பேசினார் சேரா. ஒரு இலட்சம் பவுன் (ஒரு இலட்சத்து அறுபதினாயிரம் டாலர்கள்) வரதட்சணையும் தருவதாகச் சொன்னார். இளவரசருக்கும் சம்மதம்.

ஆனால் இந்தச் சம்பந்தத்தில் அன்றைய பிரதம மந்திரிக்கு இஷ்டமில்லை. ஸ்பென்ஸர் குலப்பெண் வேண்டாமென்று தனது தடுப்புரிமையைப் ('வீட்டோ') பாவித்து திருமணத்தைத் தடுத்துநிறுத்திவிட்டார் பிரதமர். ஸ்பென்ஸர்களின் ஆசையில் மண் விழுந்தது.

எனினும் அந்த டயானாவின் சகோதரனுக்கு 'ஏர்ள்' என்ற (பரம்பரை பரம்பரையாக வழக்கிலிருக்கும்) விருதை அரசர் வழங்கினார். அந்த டயானாவின் சகோதரர் 'முதலாவது ஏர்ள் ஸ்பென்ஸர்' ஆனார். அல்தோப் எஸ்டேட் உட்பட, குடும்ப சொத்துக்களுக்கும் வாரிசானார்.

அந்தப் பரம்பரையில் வந்த 9-வது ஏர்ள் ஸ்பென்ஸர்தான் காலஞ்சென்ற டயானாவின் தம்பி சார்லஸ். (ஆம், டயானாவின் தம்பியின் முதற்பெயரும் சார்லஸ் தான்!)

என்ன ஆச்சரியம்!

"சொந்தம் எப்போதும் தொடர்கதை தான்" என்று சொல்வார்கள். ஒன்பது தலைமுறைகளுக்கு முன்னர் தனது பேத்தி டயானாவை இரண்டாவது ஜார்ஜ் மன்னரின் மகனான வேல்ஸ் இளவரசனுக்கு திருமணம் செய்து கொடுக்க முயன்று தோற்றுப்போனார் சேரா என்ற ஸ்பென்ஸர் குலப் பெண்.

இன்று -

ஒன்பது தலைமுறைகளுக்குப் பின் -

சேரா என்ற ஸ்பென்ஸர் குலப் பெண், தனது தங்கை டயானாவை ஆறாவது ஜார்ஜ் மன்னரின் பேரனான வேல்ஸ் இளவரசனுக்கு அறிமுகம் செய்து வைத்ததன் விளைவாக அவர்களது திருமணம் நிறைவேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த டயானா தான் இந்த டயானாவாக மறுபிறப்பு எடுத்து வந்தாரா?

அந்த சேரா அன்றைய ஆன் மகாராணியுடன் லெஸ்பியன் (ஓரினச் சேர்க்கை) ரீதியிலான காதலுறவு வைத்திருந்தாராம். அவர்கள் பரிமாறிக் கொண்ட காதல் கடிதங்கள் வரலாற்று ஆசிரியர்களிடம் சிக்கிக் கொண்டன.

காலஞ்சென்ற டயானாவின் தாத்தாவான ஏழாவது ஏர்ள் ஸ்பென்ஸர் மிகவும் மூர்க்க சுபவாம் உள்ளவர். இரக்க சிந்தையே அற்றவர். வேலையாட்களைக் கொடுமைப் படுத்துபவர். வீட்டு வாசற்கதவு மணியை எவராவது அடித்தால் கதவைத் திறக்க வேறுயாரும் போகக்கூடாது என்பது அவரது கண்டிப்பான உத்தரவு.

தானே சென்று கதவைத் திறப்பாராம். தனது கையில் ஒரு வேட்டைத் துப்பாக்கியை வைத்துக்கொண்டு வந்தவர்களை வரவேற்பாராம்.

இத்தகைய 'அன்பு உபசாரத்தை' ஜீரணித்துக் கொண்டு எவராவது வீட்டிற்குள் நுழையத் தலைப்பட்டால் அவர்களது சப்பாத்துக்களில் அழுக்கு உண்டா என்று சோதனை செய்வாராம். கையில் தூசி துடைக்கும் துணியுடன் வீட்டிற்குள் அவர்களைப் பின்தொடருவாராம்.

முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் சர் வின்ஸ்டன் சர்ச்சில் ஏழாவது ஸ்பென்ஸரின் உறவுக்காரர். ஸ்பென்ஸர் முன்னிலையில் சர்ச்சில் தனக்கு அலாதியாகப் பிடித்த சுருட்டு ஒன்றைப் பற்ற வைத்தாராம். ஸ்பென்ஸருக்கு இது பிடிக்கவில்லை. சர்ச்சிலைத் தாக்கிவிட்டார்.

"அந்தச் சுருட்டை அவரது வாயிலிருந்து பிடுங்கி எடுத்து தரையில் போட்டு மிதித்தேன்," என்று ஏழாவது ஸ்பென்ஸர் பலரிடம் பெருமையாகக் கூறியிருக்கிறார்.

இந்த முரடரின் மகன்தான் டயானாவின் அப்பாவான எட்டாவது ஏர்ள் ஸ்பென்ஸர். தனது தந்தையளவு மூர்க்கராக இல்லாவிட்டாலும் தந்தையிடமிருந்து கணிசமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரட்டுத்தனத்தை பெற்றுக்கொள்ள இவரும் தவறவில்லை. (இவரிடமிருந்து இந்தப் பரம்பரைக் குணாதிசயத்தைப் பெற்றுக் கொள்ள டயானாவும் அவரது தம்பி சார்லஸ் ஸ்பென்ஸரும் கூடத் தவறவில்லை).

டயானாவின் அப்பா ஜானியும் தனது 'முட்' சரியில்லை என்றால் மற்றவர்களது முகத்தில் அறைந்தாற்போலப் பேசுவாராம். அதிகாரத்துடன் நடந்துகொள்வாராம். அவருக்கு சட்டுச் சட்டென்று கடுங்கோபம் வருமாம். தனது பிள்ளைகளுடன் கனிவாகப் பழகுவது எப்படியென்றே இவருக்குத் தெரியாதாம். அதுமட்டுமல்ல, தனது மனைவியுடன் எப்படிப் பழகவேண்டும் என்றே இவருக்குத் தெரியாதாம்.

ரெயின் (RAINE) என்ற பெண்ணுடன் இவரது (இரண்டாவது) இல்வாழ்க்கை நிலைத்ததற்கு ரெயினுடைய அசாதாரண பொறுமையும் சகிப்புத்தன்மையும்தான் காரணம் என்று சொல்லப்படுகிறது. ரெயின் உலகப்புகழ்பெற்ற காதல் நாவலாசிரியை பார்பரா காட்லன்ட் அவர்களின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது.

எட்டாவது ஏர்ள் ஸ்பென்ஸரின் முதலாவது மனைவி பிரான்சஸ் (FRANCES) என்பவருக்குத் தான் சேரா, ஜேன், டயானா, சார்லஸ் ஆகியோர் பிறந்தனர்.

டயானாவின் அம்மா பிரான்சஸ் ஒரு அழகி. ஆனால் புத்தி கம்மியானவர். அடிக்கடி மாறக்கூடிய அலைபாயும் மனம் அவருக்கு. "ஆண்களுக்குப் பின்னால் ஓடுபவர்" என்று அவர் பழகும் வட்டாரங்களில் பெயர் பெற்றவர்.

"தாயைப் போல் பிள்ளை நூலைப் போல் சேலை" என்று பரம்பரை பரம்பரையாக வரும் குணாதிசயங்களைக் குறிப்பிடுவர்.

பரம்பரைக் குணாதிசயங்களால் மட்டும் அல்ல, தமது பெற்றோர் வாழ்ந்து காட்டிய முறையாலும் பிள்ளைகள் பாதிக்கப்படுகிறார்கள். ஜானியும் பிரான்ஸஸும் அடிக்கடி சண்டை பிடிப்பார்கள். உக்கிரமான வாய்ச்சண்டை பெரும்பாலும் அடி உதையில் வந்து முடியும். மூத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டயானாவின் அப்பா எட்டாவது ஏர்ள் ஸ்பென்ஸரும் (ஜானி) அவரது இரண்டாவது மனைவி ரெயின் ஸ்பென்ஸரும்.



அங்கோலாவில் கண்ணிவெடிகளால் கால் இழந்தவர்களுக்கு ஆறுதல் சொல்கிறார் டயானா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளான சேராவும் ஜேனும் கல்லூரி விடுதியில் இருந்து படித்துவந்ததால் இந்தச் சண்டைகளைக் கண்ணால் காணும் கொடுமையிலிருந்து தப்பிவிட்டார்கள். பள்ளிப்பருவம் அடையாத டயானாவும் சார்லஸும் வீட்டிலிருந்து பெற்றோரின் சண்டைகளைத் தினம் தினம் கண்டு வந்தனர்.

கதவுத் திரைக்குப் பின்னால் ஒளிந்திருந்து டயானா இந்தச் சண்டைகளை அவதானிப்பாராம்.

டயானாவின் அப்பா ஜானி அழகியான லேடி ஆன் கோக் என்னும் பெண்ணையே திருமணம் செய்ய நினைத்து நிச்சய தார்த்தமும் நடந்து முடிந்துவிட்டதாம். அந்தச் சமயத்தில் எங்கிருந்தோ வந்தவர்தானாம் பிரான்ஸஸ் ரோச். தன்னை விட பன்னிரண்டு வயது அதிகமான ஜானி மீது குறிவைத்து விட்டா ராம். வைத்த குறி தவறவில்லை. ஆனைக் கழட்டிவிட்டு ஜானியை பிரான்ஸஸ் திருமணம் செய்துகொண்டாராம். (இதே போலத் தான் டயானாவும் தன்னைவிட 13 வயது அதிகமான சார்லஸ் மீது குறி வைத்தார்).

ஜானிக்கும் பிரான்ஸஸுக்கும் முதலில் பிறந்தது சேரா, ஜேன் என்ற பெண்கள். ஆஸ்திக்கு ஒரு ஆணைப் பெற்றுத் தரவில்லையே என்று ஜானி தனது மனைவியைத் திட்டுவார். இந்தச் சமயத்தில் தான் பலவீனமான ஒரு ஆண்குழந்தை பிறந்து இறந்தது. ஜானியின் கோபம் அதிகரித்தது. அடுத்த குழந்தையும் பெண் - டயானா! ஏன் பிறந்தாய் மகளே என்று நொந்து கொண்டார் ஜானி. மனைவியைக் கௌரவக் குறைவாய் நடத் தினார். லண்டனுக்கு அனுப்பி பல்வேறு மருத்துவப் பரிசோதனைகளுக்கு ஆளாக்கினார்.

நல்லவேளையாக அடுத்த பிள்ளை ஆணாகப் பிறந்தது. அதுதான் டயானாவின் தம்பி சார்லஸ். பால்யவயதில் மயானத்தில் உள்ள கல்லறைகளால் கவரப்பட்டவராம் டயானா. இறந்துபோன தங்கள் சகோதரனின் கல்லறைக்கு டயானாவும் சார்லஸும் அடிக்கடி போவார்களாம். இறந்துபோன அந்தக் குழந்தைக்கு ஜான் என்ற பெயர் வைக்கப்பட்டிருந்ததாம்.

"அக்கா, ஜான் வாழ்ந்திருந்தால் நான் பிறந்திருக்க மாட்டேன். அப்பாவும் அம்மாவும் உன்னோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தியிருப்பார்கள்,'' என்று சிறுவன் சார்லஸ் சொல்லுவானாம்.

“இல்லை, இல்லை, நானும் பிறந்திருக்கமாட்டேன். அப்பாவும் அம்மாவும் ஜானோடு நிறுத்தியிருப்பார்கள்,” என்று சிறுமி டயானா சொல்லுவாளாம்.

இப்படி கல்லறைக்கு அடிக்கடி வருவதும், நான் பிறந்திருக்க மாட்டேன் - நான் பிறந்திருக்க மாட்டேன் என்று சொல்லிக் கொள்வதும் எண்ணற்ற தடவைகள் நடைபெற்றதாம்.

இந்த விபரீதமான பொழுதுபோக்கு, அக்கா - தம்பி இருவருக்கும் அந்த இளவயதிலேயே தாங்கள் விரும்பப் படாத பிள்ளைகள் என்ற தாழ்மை உணர்ச்சி இருந்ததைக் காட்டுகிறது.

ஆண்குழந்தை பிறந்த பின்னர், டயானாவின் அம்மா பிரான்ஸஸுக்கு தனது கணவருடன் நடத்திய தாம்பத்திய வாழ்க்கையில் அலுப்புத் தட்டியது. வீட்டுச் சுவர்கள் மீது ஒட்டும் கடதாசிகள் தயாரித்த ஒரு பெரிய வர்த்தகரைக் குறி வைத்தார். அவரது பெயர் பீட்டர் ஷான்ட் கிட். அவருக்கு மனைவி உண்டு.

ஜானியோடு வாழ்ந்துகொண்டு பீட்டருடன் ஜாலியாகக் கள்ள உறவு வைத்தார் டயானாவின் அம்மா. ஆனால் இந்தக் கள்ள உறவை டயானாவின் அப்பா கண்டுபிடித்துவிட்டார். ஏற்கெனவே சண்டை சச்சரவு என்றிருந்த வீடு போர்க்களமாகவே மாறிவிட்டது.

தன்னைத் தனது கணவர் துன்புறுத்துகிறார் என்ற அடிப்படையில் விவாகரத்து வழக்குத் தொடுத்தார் பிரான்ஸஸ். தனது மனைவி கள்ளத்தனமாக இன்னொரு ஆடவனுடன் தகாத உறவு வைத்திருந்தார் என்ற அடிப்படையில் ஜானி பதில் வழக்குத் தொடுத்தார்.

விவாகரத்து வழங்கப்பட்டது. ஆனால் பிள்ளைகள் பிரான்ஸஸ் பாதுகாப்பில் விடப்படவில்லை. தந்தை ஜானியின் பொறுப்பில் பிள்ளைகள் வளரவேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. பிரான்ஸஸின் சொந்த அம்மாவான லேடி ஃபேர்மோய் விவாகரத்து வழக்கில் சாட்சியமளிக்கையில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளை வளர்த்தெடுக்கக்கூடிய தகைமை தனது மகளுக்கு இல்லையென்றும் தந்தையிடமே பிள்ளைகளைப் பொறுப்புக் கொடுப்பது தான் சிறந்தவழி என்றும் நீதிபதியைக் கேட்டுக்கொண்டார்.

தனது அம்மா பெட்டி படுக்கைகளோடு வீட்டைவிட்டு வெளியேறிய அந்த நிகழ்வு டயானாவின் மனதில் நீங்காத வடுவாகப் பதிந்தது. அந்த வரவேற்பு அறையினூடாக பிரான்ஸஸ் நடந்துசென்று வெளியே நின்ற காரில் ஏறிய அந்தக் காட்சி, படிப்படியாகக் குறைந்து மறைந்த அந்தக் காலடியோசைகள் அவரது மனதைவிட்டு என்றுமே அகலவில்லை.

ஷான்ட் கிட் தனது மனைவியை விவாகரத்துச் செய்தார். பிரான்ஸஸ் அவரைத் திருமணம் செய்தார். அவர்களது வாழ்க்கை தொடர்ந்தது. எட்டாவது ஏர்ள் ஸ்பென்ஸர் நடைப்பிணமானார். மீளாச் சோகத்தில் மூழ்கினார். தனது கார்ச்சாரதியுடனும் எஸ்டேட் நிர்வாகியுடனும் மட்டும்தான் பேசுவார். வேறு எவருடனும் பேசுவதில்லை.

சேராவும், ஜேனும் பாடசாலை விடுதிகளில் வளர்ந்தனர். டயானாவும் சார்லஸூம் வீட்டின் தனிமையில் வளர்ந்தனர்.

இரவு வேளைகளில் 'அம்மா, அம்மா' என்று தேம்பித் தேம்பி அழுதவாறு சிறுவன் சார்லஸ் தூங்குவானாம். அவன் அழுவதைக் கேட்டு சிறுமி டயானா கலங்குவாளாம். ஆனால் டயானாவுக்கு இருள் என்றால் பயம். இருளில் நடந்துசென்று அழுகின்ற தம்பியைத் தேற்றுவதற்கும் துணிவும் இல்லாமல் வேதனையுடன் தூங்கிவிடுவாளாம் சிறுமி டயானா.

டயானாவையும் சார்லஸையும் வளர்ப்பதற்கு ஆயாக்கள் பணி அமர்த்தப்பட்டனர். வந்ததே வினை. அதிலும் அந்த ஆயாக்கள் இளவயதுப் பெண்களாய் இருந்தால் வினை பன்மடங்காக அதிகரிக்கும். டயானா தனது தந்தையை மிகவும் நேசித்தார். தனது தந்தை தனக்கு மட்டும் தான் சொந்தம் என்ற கிடுக்கிப்பிடி அன்பாக அது இருந்தது. தனது தந்தைக்கு அருகில் இளம்பெண் எவள் வந்தாலும் அவள் தனது தந்தையை தன்னிடமிருந்து பறித்துவிடுவாளோ என்ற ஆதாரமற்ற பீதியாக அந்த அன்பு இறுகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவயதில் டயானாவும் அவரது தம்பி சார்லஸ் ஸ்பென்ஸரும்.





பிரிட்டனில் இருதய நோயாளியுடன் டயானா..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் விளைவு?

ஆயாக்கள் அமரும் நாற்காலிகளின் இருக்கையில் ஊசிகளைப் பதித்து வைத்தனர் டயானாவும் சார்லஸும். அவர்களின் துணிமணிகளை எடுத்து ஜன்னல் வழியாக வெளியே வீசினார்கள். இதனால் எந்த ஆயாவும் தொடர்ந்து வேலையில் நிலைக்கவில்லை. ஆயாக்கள் வருவதும் போவதுமாக இருந்தனர். டயானாவின் ஆயா வதைபடலமும் தொடர்ந்தது.

தனது தந்தை தனக்கு மட்டும்தான் சொந்தம் என்ற டயானாவின் வெறி தொடர்ந்தது.

ஜானி ஸ்பென்ஸர் ரெயின் டாட்மத் என்பவரை திருமணம் செய்து அழைத்து வந்தபோது டயானாவுக்கு 15 வயது. பேயாட்டமே ஆடிவிட்டார். தனது தந்தையின் கன்னத்தில் பளாரென்று ஓங்கி அறைந்துவிட்டார். சிற்றன்னையோடு பேசவோ முகம் கொடுக்கவோ மறுத்துவிட்டார். “மழையே (Rain) மழையே போய்விடு” என்று ஆரம்பிக்கும் ஒரு ஆங்கில நர்சரிப் பாடலை “ரெயின் ரெயின் கோ எவே” என்று ரெயின் (RAINE) என்ற பெயருடைய சிற்றன்னையின் முன்னால் நின்றுபாடி அட்டகாசம் செய்வார்கள் டயானாவும் அவரது தம்பி சார்லஸும்.

ஒரு சமயம் உறவினர்கள் வீட்டில் ஒன்றுகூடிய வேளையில், எல்லாரும் பார்த்துக் கொண்டிருக்க, சிற்றன்னையைப் பிடித்து மாடிப்படி வழியே கீழே தள்ளிவிட்டார் டயானா.

ஜானி ஸ்பென்ஸர் பாரிச வாதத்தினால் கால் வழங்காமல் போனபோது தனது அன்பான கவனிப்பினாலும் உபசரிப் பினாலும் அவரை எழுந்து நடமாட வைத்தது அவரது இரண்டாவது மனைவிதான். இதுகூட டயானாவின் மனதை இளகவைக்கவில்லை.

டயானாவுக்குத் திருமணமாகி எத்தனையோ வருடங் களின்பின் (1992) ஜானி ஸ்பென்ஸர் காலமானார். டயானா இறுதிச் சடங்குகளுக்காக அல்தோப் எஸ்டேட்டிற்கு வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெயின் ஸ்பென்ஸரின் உதவியாளர் இந்த நிகழ்ச்சியைப் பற்றி நூலாசிரியர் சேரா பிராட்பட்டிடம் விவரமாகக் கூறியுள்ளார்.

தந்தையின் மரணம் டயானாவிற்கு நல்ல விளம்பர வேட்டையாக அமைந்தது. பெரிய மலர்வளையம் ஒன்றை டயானா சாத்தியிருந்தார். அதில் "டார்லிங் டாடி, நீங்கள் இல்லாமல் நான் அவதிப்படுகிறேன். என்றென்றும் உங்களை நேசிப்பேன்" என்ற வார்த்தைகள் காணப்பட்டன.

இறுதிச் சடங்குகளின்போது தனது சிற்றன்னையை நோக்கி பகிரங்கமாக இரு கரம் நீட்டினார் டயானா. பழைய கோபதாபங்களை எல்லாம் மறந்துவிட்டது போல் மக்கள் முன்னிலையில் நடித்தாராம்.

உண்மை என்ன?

தனது தம்பி 1989ல் திருமணம் செய்துகொண்டபோது தான் டயானா கடைசியாக அல்தோப் எஸ்டேட்டுக்கு வந்தாராம். அதன்பின் தந்தையின் மரணச்சடங்குகளையொட்டித் தான் வந்தாராம். மூன்று வருடங்களாக தந்தையைப் பார்க்கவும் வரவில்லை. தந்தை லண்டன் வந்த வேளைகளில் கூட அவரைச் சந்திக்க எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. ஆனால் மரணச் சடங்குகளின்போது தந்தைக்கு வைத்த மலர் வளையத்தில் இருந்த வாசகங்களோ தந்தையைவிட்டு எந்நாளும் பிரியாத ஆசைமகள் தான் டயானா என்ற நடிப்பாக இருந்தன.

தனது கணவரின் மரணத்தின்பின் அல்தோப் எஸ்டேட்டில் உள்ள தனது உடைமைகளை எடுத்துச் செல்ல ரெயின் வந்தார். மரணச் சடங்குகளின்போது இரு கரம் நீட்டி நடித்த ஆசை அக்காவும் அவரது அருமைத் தம்பியும் என்ன செய்தார்கள் தெரியுமா?

ரெயின் தனக்குச் சொந்தமான உடைமைகளை அப்புறப்படுத்துவதானால், அவை அவருக்குத் தான் சொந்தம் என்று நிரூபிக்க அந்தப் பொருட்களைக் கடையில் வாங்கியதற்கான ரசீதுகளை ரெயின் சமர்ப்பிக்கவேண்டும் என்று நிபந்தனை போட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு சூட்கேஸ்களுடன் ரெயின் வீட்டைவிட்டுப் புறப்பட எத்தனித்தபோது அக்காளும் தம்பியும் கதவடியில் நின்று ரெயினை வழிமறித்தார்களாம். சூட்கேஸ்களை பறித்துத் திறந்து சோதனையிட்டார்களாம்.

அதன்பின் சூட்கேஸ்களைப் பறிமுதல் செய்தனர். அவற்றில் இருந்த ரெயினின் விலையுயர்ந்த துணிமணிகளை குப்பைகூளங்களை அள்ளிப்போடும் கருப்பு நிறப் பிளாஸ்டிக் பைகளில் (BIN BAGS) அடைத்து கொடுத்தனுப்பினார்களாம்!

டயானா வஞ்சித்தாரா, வஞ்சிக்கப்பட்டாரா என்ற கேள்வியை எத்தனை பேரோடுதான் தொடர்புபடுத்திக் கேட்பது?

டயானா எப்போதும் பொய் சொல்வார். வாயைத் திறந்தால் பொய்சொல்லியே ஆகவேண்டும் என்ற நிலையிலுள்ள COMPULSIVE LIAR என்று சேரா பிராட்பட் எழுதுகிறார். இந்தக் கருத்தை பலர் அவரிடம் கூறியிருக்கின்றனர். அவர்களுள் டயானாவை விரும்புபவர்கள், விரும்பாதவர்கள் ஆகிய இரு சாராரும் அடங்குவர்.

டயானாவுடைய இந்தப் பொய் சொல்லும் குணத்தைப் பற்றி அவருடைய தம்பிகூட சொல்லியுள்ளார். அன்ட்ரூ மார்ட்டனின் நூலில் சார்லஸ் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

“உண்மையைச் சொல்வது அவருக்கு (டயானாவுக்கு) நிஜமாகக் கஷ்டமாய் இருந்தது. இதற்குக் காரணம் தான் சொல்லும் விஷயத்தோடு கற்பனையை இணைத்துச் சுவையைப் பெருக்க அவர் விரும்பியது தான்.”

டயானா பாடசாலைக்குப் போகும் வழியில் ஒருநாள் அந்த ஊர் மதகுருவின் மனைவி காரை மறித்து, டயானாவை எச்சரித்தாராம். “டயானா ஸ்பென்ஸர், அதைப்போல இன்னுமொரு பொய் சொன்னால் உன்னை வீடுவரை நடந்துசெல்ல வைப்பேன்.” டயானாவின் தம்பி குறிப்பிட்ட இந்தச் சம்பவமும் மார்ட்டனின் நூலில் வெளியாகியுள்ளது.

நோர்ஃபோக்கில் டயானாவின் அடுத்த வீட்டுக்காரர் ஒருவர், வளர்ந்த டயானாவைப் பற்றி பின்வருமாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியிருக்கிறார்: "சிறுத்தைக்குப் புள்ளிகள் விடுபட்டுப் போகுமா?" சிறுவயதில் இருந்த குணங்கள் விட்டுப் போகுமா என்ற அர்த்தத்தில் இது சொல்லப்பட்டது.

டயானாவுக்கு ஆறு வயது நடந்தபோது அவரது பாடசாலை ரிப்போர்ட்டில் பின்வருமாறு அவரது தலைமை ஆசிரியை எழுதியிருந்தாராம்: "எனது வாழ்க்கையில் நான் சந்தித்த மிகச் சூழ்ச்சிகரமான சிறுமி டயானா ஸ்பென்ஸர்தான்."

தனது பால்யவயதுகளைப் பற்றி கடைசிவரையும் டயானா மனதில் வைத்திருந்த நினைவு, தன்னை யாரும் விரும்பவில்லை, வேண்டவில்லை, எல்லாரும் தன்னைக் கைகழுவி விட்டார்கள் என்பதே.

டயானாவின் உண்மையான குணாதிசயங்கள் எத்தகையன, அவரது ஆளுமை எத்தகையது என்பதை இத்தகைய எடுத்துக்காட்டுகளின் அடிப்படையில் அளவிட முடிகிறது.

தனது திருமணவாழ்வு தோல்வியில் முடிந்ததற்கு இளவரசர் சார்லஸ்மீதும் அரசகுடும்பத்தினர் மீதும் முழுப்பழியையும் சுமத்தினார் டயானா.

பொய்யிலும், சூழ்ச்சித்திறனிலும், ஏமாற்றத்திலும், விரக்தியிலும், முரட்டுச் சுபாவத்திலும் சிறுவயது முதலே ஊறித்திளைத்த டயானா அவரது திருமணத்தோல்வி விஷயத்தில் மாத்திரம் சும்மா இருந்து விடுவாரா?

"நிரூபிக்கப்பட்ட பொய்ச் சாட்சியான" டயானாவின் வாக்குமூலத்தை மட்டும் கணக்கில் கொண்டு, டயானாவால் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்பட்ட இளவரசர் சார்லஸ், அரச குடும்பத்தினர் ஆகியோர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை எந்த நீதிபதியும் நிராகரித்துவிடுவார் என்பது நிச்சயம்.

டயானா ஒரு சிறந்த சமூக சேவகியாக இருந்திருக்கலாம். ஆனால் அதற்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டயானா எய்ட்ஸ் நோயாளிகளைச் சந்தித்து ஆறுதல் சொன்னார். குஷ்டரோகிகளைச் சந்தித்து அளவளாவினார். மரணத்தின் வாசலில் நின்று ஊசலாடிய நோயாளிகளுக்கு உற்சாகம் ஊட்டினார். உலகெங்கும் நிலக் கண்ணிவெடிகளைத் தடைசெய்யவேண்டும் என்று இயக்கம் நடத்திய ஸ்தாபனங்களுக்கு உறுதுணையாக இருந்து அந்த இயக்கங்களின் குரல் உலகெங்கும் ஓங்கி ஒலிக்க உதவினார்.

இந்தக் காரியங்களுக்காக அவரை வாழ்த்துவது, நினைவு கூருவது மிகச் சரியானதே. ஆனால் அன்னை தெரேசாவோடு அவரை ஒப்பிடுவது பொருத்தமாக இருக்குமா என்பதே கேள்வி.

டயானா செய்த சமூகசேவைகள் யாவும் பத்திரிகைகள் மற்றும் காமராக்களின் பார்வையில்தான் பெரும்பாலும் நிறைவேற்றப்பட்டன. எனவே இவை மக்களைத் தன்பக்கம் இழுத்துப்போட்டுக் கொண்டு, அரண்மனையுடன் தான் நடத்தி வந்த போராட்டத்திற்கு ஆதரவைப் பெருக்கும் நோக்குடன் டயானா செய்த 'பப்ளிசிட்டி ஸ்டன்டுகள்' தானோ என்ற ஐயம் எழ இடமுண்டு.

தான் நோயாளிகளைக் கவர்வது எப்படி என்று டயானாவே ஒரு சமயத்தில் விளக்கியிருக்கிறார். நோயாளிக்கு மிக அருகில் சென்று அவர்களைக் குனிந்து பார்ப்பாராம். அவர்களது கண்களை நோக்குவாராம். அவர்களது உடலைத் தொட்டுத் தொட்டுப் பேசுவாராம். எனவே நோயாளிகளை அணுகுவது எப்படி என்று சிந்தித்து, ஒரு விரிவான வழிமுறையை டயானா உருவாக்கி வைத்திருந்தார் என்பது தெளிவாகிறது.

டோடி அல்பாயத்தை திருமணம் செய்துகொண்டு 1997 இறுதிக்குள் அமெரிக்காவின் சொர்க்கமான கலிபோர்னியாவுக்கு நிரந்தரமாகப் போய்விட டயானா திட்டமிட்டிருந்தார். இதை அவருடைய சில நெருங்கிய நண்பர்களிடமும் கூறியிருந்தார். அமெரிக்காவிற்கு தான் எடுத்துச்செல்ல உத்தேசித்த ஆடைகளையும் கென்ஸிங்டன் அரண்மனை ஊழியர்களுக்கு அடையாளம் காட்டியிருந்தார்.

அப்படியானால் - அவர் 'உயிருக்கு உயிராக நேசித்த' பிரிட்டிஷ் நோயாளிகளின் கதி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நிலக்கண்ணி வெடி எதிர்ப்பு இயக்கத்தின் சார்பில் அங்கோலாவில் டயானா. கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட பகுதியினூடாக பாதுகாப்பு அங்கி அணிந்து நடந்துவருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பைத் தேடுகிறேன், அன்பைத் தேடுகிறேன் என்று சொல்லிச் சொல்லி அலைந்த டயானா, அந்த அன்பை அவர் தொட்டு உறவாடிய நோயாளிடம் பெற்று தற்காலிகமாக ஆறுதல் அடைந்தார். ஆனால் நிரந்தரமான அன்பு டோடியின் வடிவத்தில் கிடைத்துவிட்டது என்று டயானா நம்பத் தொடங்கியதும் நோயாளிகளுக்கு "டாட்டா" சொல்லத் திட்டமிட்டாரா? குபேரர்களின் குடியிருப்பான கலிபோர்னியாவுக்கு சிறகடித்துச் செல்லத் திட்டமிட்டாரா?

சாதாரணமாக சமுதாயத்தில் சமூகசேவை செய்பவர்களை நாம் பாராட்டுகிறோம். அவர்கள் சமூகசேவை செய்வது ஏன், எதற்காக என்று ஆராய்ச்சி செய்வதில்லை. அந்தவகையில் டயானா ஒரு சிறந்த சமூகசேவகியாக வாழ்ந்தார் என்பதை ஏற்றுக்கொள்வோம். வாழ்த்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டிபோடும் குதிரைகளைத் தேர்ந்தெடுத்தார் மகாராணி; ஒட்டிவரும் உறவின் பூர்வீகம் பற்றி யோசிக்க மறந்தார்!

டயானாவினுடைய குடும்பப் பின்னணியையும் அவருடைய பால்யப் பின்னணியையும் பார்க்கும்போது, அவரை வருங்கால மன்னரின் மனைவியாக எப்படி அரச குடும்பம் ஏற்றுக்கொண்டது என்ற வியப்பு எழுகிறது.

போதாக்குறைக்கு டயானா கல்லூரிப் படிப்பிலும் அடிமட்டம்தான். படிப்பிற்குப் பேர்போன தனியார் கல்லூரிக்குத்தான் டயானா அனுப்பப்பட்டார். எனினும் பத்தாவது ஆண்டுப் பரிட்சைகளை, தொடர்ந்து மூன்று தடவைகள் எடுத்தும் ஒரு பாடத்தில்கூட சாதாரண சித்தியாவது பெற டயானாவால் முடியவில்லை. இதன்மூலம் மக்கு என்று தன்னைத்தானே நிரூபித்துக்கொண்டார்.

அதன் பின்பு சுவிட்சர்லாந்தில் உள்ள உலகப்புகழ் பெற்ற 'கடைசிப் பூச்சுக் கொடுக்கும் கல்லூரி' (FINISHING SCHOOL) ஒன்றுக்கு டயானாவை அவரது தந்தை அனுப்பி வைத்தார். இத்தகைய கல்லூரிகள் இளம் பெண்களை ஃபாஷன் நிறைந்த சமுதாயத்தின் உயர்மட்ட வாழ்க்கைக்குத் தயார் செய்கின்றன. நடை, உடை, இங்கிதம், நாகரிகம், பழக்கவழக்கங்கள், ஆடையலங்காரம், ஒப்பனை போன்ற பலதுறைகளில் பயிற்சி தரப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கல்லூரியிலும் டயானா கோட்டைவிட்டார். ஏதோ சாக்குபோக்குச் சொல்லி படிப்பை முடிக்காமலே பிரிட்டன் திரும்பிவிட்டார்.

பிறகு ஏதோ சமையற்கலைப் பாடங்களுக்குச் சென்றார். எப்படியோ ஒரு டிப்ளோமா பட்டம் பெற்றார். பின்னர் ஒரு நர்சரி பாடசாலையில் ஆசிரியராகச் சேர்ந்தார்.

இளவரசர் சார்லஸின் வாழ்க்கையில் இவர் புகுந்தது எப்படி?

சார்லஸின் குடும்பப் பின்னணி பற்றியும் அவரது பால்ய அனுபவங்கள் பற்றியும் சற்று ஆராய்வோம்.

எட்டாவது எட்வர்ட் மன்னர் வாலிஸ் சிம்ப்ஸன் என்ற ஒரு அமெரிக்கப் பெண்ணைக் காதலித்தார். அவரையே திருமணம் செய்துகொள்வேன் என்று விடாப்பிடியாக நின்றார். வாலிஸ் ஏற்கெனவே திருமணம் செய்து விவாகரத்து ஆனவர். பிரிட்டனின் அரச திருமணச் சட்டம் இதற்கு இடம் கொடாததால் அரியணையைத் துறந்தார்.

அவருடைய சகோதரரும் முடிக்குரிய அடுத்த வாரிசுமான ஆறாவது ஜார்ஜ் மன்னர் அரியணை ஏறினார். ஆறாவது ஜார்ஜ் மன்னருக்கு மகளாகப் பிறந்தவர்தான் இன்றைய எலிசபெத் மகாராணி. ஜார்ஜ் மன்னரின் ஒரு மைத்துனர் தான் லூயி மவுன்ட்பேட்டன் பிரபு. இந்தியாவில் பிரிட்டிஷ் அரசின் கடைசிப் பிரதிநிதியாகப் பதவி வகித்தவர். ஜார்ஜ் மன்னரைப் போலவே இவரும் விக்டோரியா மகாராணியின் பரம்பரையில் வந்தவர். அரச குடும்பத்தில் மவுன்ட்பேட்டனுக்கு மிகுந்த செல்வாக்கு இருந்து வந்தது.

இளவரசி எலிசபத்திற்கு கிரேக்க நாட்டு இளவரசர் பிலிப்பை அறிமுகம் செய்துவைத்து, ஜார்ஜ் மன்னரதும் அவருடைய மனைவியினதும் பூரண சம்மதத்துடன் திருமணம் செய்து வைத்தவர் மவுன்ட்பேட்டன். பிலிப், மவுன்ட்பேட்டனின் அக்கா வான அலிஸ் இளவரசியின் மகன். பிலிப் தனது அம்மாவின் வழியில் கிரேக்க ராஜகுடும்பம், டென்மார்க் ராஜகுடும்பம், ரஷ்ய ராஜகுடும்பம் ஆகிய மூன்று அரசபரம்பரை களின் வழியில் வந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலிப் நெட்டையான ஆஜானுபாகுவான உடல்வளம் கொண்ட ஆணழகன். வீரமும் தீரமும் நிறைந்தவர். திறமையுடன் கடற்படையை நடத்திச் சென்ற தளபதி. விமானம் ஓட்டத் தெரிந்தவர். அவரை நினைத்து ஏங்காத பெண்கள், குறைவு. இளவரசி எலிஸபெத் அவரைக் கண்ட மாத்திரத்தே காதல் கொண்டாராம்.

எலிஸபெத் மகாராணியினுடைய குடும்பத்திலும் மவுன்ட்பேட்டனுடைய செல்வாக்கு தொடர்ந்தது.

சார்லஸினுடைய தங்கை இளவரசி ஆன் சிறுவயது முதலே தன்னம்பிக்கையும் அஞ்சாநெஞ்சமும் படைத்தவர். ஆனால் சார்லஸ் அப்படி அல்ல. அன்பும் கருணையும் நிறைந்த சார்லஸ் மிகுந்த அவைக்கூச்சம் உடையவராக விளங்கினார். தயக்க இயல்பும் கூட்டத்திலிருந்து ஒதுங்கிக் கொள்கின்ற தன்மையும் உடையவராக இருந்தார்.

இது பிலிப்பிற்கும் மவுன்ட்பேட்டனுக்கும் கவலையைத் தந்தது. எலிஸபத்திற்குப் பின் அரியணை ஏறவேண்டியவர் சார்லஸ். பிலிப்பைப் போல் அஞ்சாநெஞ்சமும் வீரமும் தீரமும் உடையவராக சார்லஸை வளர்க்கவேண்டும் என்று பிலிப்பும் அவரது தாய்மாமனும் தீர்மானித்தனர். எலிஸபெத் ராணி தலையிடவில்லை. "நாட்டுக்கு ராணி எலிஸபெத், வீட்டுக்கு ராஜா பிலிப்" என்ற அடிப்படையில் தான் அந்தக் குடும்பம் ஓடியது. எலிஸபத்தை பிலிப் திருமணம் செய்து இப்போது அரை நூற்றாண்டு ஆகிவிட்டது. அவர்களது திருமணத்தின் பொன்விழா 1997 நவம்பரில் கொண்டாடப்பட்டது. அவர்கள் இன்னும் ஒருவரை ஒருவர் ஆழமாக நேசிக்கின்றனர்.

எலிஸபத்தின் அரச நிர்வாகத்தில் பிலிப் ஆலோசனை கூறுவாரே தவிர தலையிட்டுக் குழப்பமாட்டார். எல்லார் முன்னிலையிலும் தனது மனைவியை மகாராணி என்று தான் அழைப்பார். அதுபோலவே, எலிஸ்பத்தும் வீட்டில் கணவருக்கு மனைவியாகத் தான் வாழ்கிறார். பிள்ளைகள் விஷயத்தில் தனது கணவரின் முடிவே தனது முடிவு என்று வாழ்கிறார். தனக்குச் கசப்பான முடிவுகளை பிலிப் எடுக்கும் போதெல்லாம், "உங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவு சரிதானா என்று உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்," என்று மட்டும் சொல்லுவார். முடிவை முழு மனதுடன் கணவரிடமே விட்டுவிடுவார்.

"அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை பண்பும் பயனுமது."

என்ற வள்ளுவன் வாக்கிற்கு அமைய வாழ்ந்து காட்டிய பிரிட்டிஷ் அரச தம்பதிகள் அவர்கள் என்றால் அது மிகையாகாது.

எனவே இளவரசர் சார்லஸை அரண்மனையிலிருந்து 550 மைல்களுக்கு அப்பாலுள்ள பாடசாலைக்கு, பாடசாலை விடுதியில் தங்கிப் படிக்க அனுப்பினார்கள். அதன்பின்பு, ஆறுமாதம் அவுஸ்திரேலியாவில் தங்கிப் படிக்க அனுப்பினார்கள். பொது நலவமைப்பு நாடுகளைப் பற்றி அந்நாடுகளின் தலைவராக வரவேண்டிய சார்லஸ் அறிந்திருக்க வேண்டும் என்பதற்காக இந்த ஏற்பாடு. அதன்பின்பு கடற்படையில் சேர்த்துவிட்டார்கள்.

சார்லஸுக்கு இதெல்லாம் வேம்பாகக் கசந்தது. அவருடைய இயற்கையான சங்கோஜ இயல்பிற்கு இவையெல்லாம் தண்டனைகளாகத் தெரிந்தன. குடும்ப பாசம் உள்ளவர் சார்லஸ். எந்நேரமும் அரண்மனையில் அப்பா, அம்மா, சகோதரர்களுடன் ஒட்டி உறவாடி வளர்வதையே அவர் விரும்பினார்.

ஸ்காட்லாந்திலுள்ள தனது பாடசாலை விடுதியிலிருந்து வாரஇறுதியில் மட்டும் அரண்மனைக்கு வருவார் சார்லஸ். திங்கள் அதிகாலையில் விமானம் மூலம் பாடசாலைக்குப் புறப்படுவார். விமானத்தை இளவரசர் பிலிப்பே ஓட்டிச் செல்வார். சார்லஸ் பாடசாலைக்குப் புறப்பட தாமதமாகும். அதைத் தேடுகிறேன் இதைத் தேடுகிறேன் என்று இழுத்தடிப்பார். சார்லஸுக்கு வேதனை, பிலிப்பிற்கும் வேதனை. இந்தச் சோதனை நேரத்தைக் குறைத்தால் எல்லாருக்கும் நல்லது என்று பிலிப் முடிவெடுத்து, "தேடியது போதும், போகலாம் வா," என்று சார்லஸின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்மனையிலிருந்து புறப்படுவார். "ஆயாவிற்கு பிரியாவிடை சொல்லவில்லை," என்று சார்லஸ் ஆட்சேபிப்பார்! அதைக் காதில் போட்டுக்கொள்ள மாட்டார் பிலிப்.

இளவரசர் பிலிப்பிற்கு திங்கட்கிழமை ஒரு சோதனை மிகுந்த நாள். சார்லஸை ஸ்காட்லாந்தில் விட்டுவிட்டு அரண்மனை திரும்பும்போது அவரது முகம் வெளிறிப்போய் சோகமயமாக இருக்குமென்று அரண்மனை ஊழியர்கள் சேரா பிராட்பட்டிடம் சொல்லியிருக்கிறார்கள். ஒரு கிண்ணத்தில் பிராந்தியை ஊற்றி மடமடவென்று அருந்துவாராம்.

கண்டிப்பான, கடமையுணர்வு கொண்ட தந்தைக்கும் புத்திரபாசம் உண்டு, கல்லுக்குள்ளும் ஈரம் உண்டு என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு மகாராணியின் கணவர்.

சார்லஸுக்கு பெற்றோர் மேல் பாசமும் இருந்தது. அவர்கள் கண்டிப்பானவர்கள் என்ற பயமும் இருந்தது. அவர்களிடமிருந்து ஓரளவு ஒதுங்கியே அவர் வாழ்ந்தார். அப்பா எப்போது தனது முதுகில் தட்டிக்கொடுப்பார், எப்போது தன்னைப் பாராட்டுவார் என்பதே சார்லஸின் வேட்கையாக இருந்தது என்று டயானாவே மார்ட்டனின் நூலில் கூறியுள்ளார்.

சார்லஸுக்குக் கலகலவென்று சிரித்துப் பேசிப் பழகும் மவுன்ட் பேட்டன் மீது அலாதிப் பிரியம். அப்பாவுக்கு அப்பாவாகவும் அம்மாவுக்கு அம்மாவாகவும் சார்லஸுடன் பழகி வந்தார் மவுன்ட்பேட்டன். சார்லஸுக்கு பிடிக்காத விஷயங்களை சொல்லவேண்டும், சார்லஸின் சம்மதத்தைப் பெறவேண்டும் என்றால் அதற்கு மவுன்ட்பேட்டனைத்தான் தூது அனுப்புவார்கள் மகாராணியும் கணவரும். அவ்வளவு நெருக்கம் சார்லஸுக்கும் மவுன்ட்பேட்டனுக்கும்.

இளைஞர் சார்லஸ் பெண்களோடு பழகுவதற்கு முதலில் சங்கோஜப்பட்டார். இதுவும் அவரது பெற்றோருக்கும் மவுன்ட்பேட்டனுக்கும் கவலையை அளித்தது. இந்த விஷயத்திலும், சார்லஸுக்கு மன்னர்களின் 'மன்மத லீலைகளைச்' சொல்லிக் கொடுத்த ஆசானாக மவுன்ட்பேட்டனே விளங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்லஸினுடைய முதலாவது பெண் சிநேகிதி லூசியா சாந்தகுறூஸ். அவர் மூலமாக அறிமுகமானார் கமிலா ஷான்ட். அது நடைபெற்றது 1970-ல். அன்றுமுதல் இன்றுவரை சார்லஸினுடைய வாழ்க்கையோடு இணைத்துப் பேசப்பட்ட சர்ச்சைக்குரிய பெயராக கமிலா விளங்குகிறார். கமிலா சார்லஸை விட 18 மாதங்கள் மூத்தவர். ஏற்கெனவே பாலியல் அனுபவம் பெற்றவர். அரச கௌரவப் பட்டங்கள் பெறாவிட்டாலும் அவரது குடும்பம் உயர்குடி மரபைச் சேர்ந்தது. அவருடைய தந்தை ஒயின் வர்த்தகர். அதற்கு முன்னர் இராணுவத்தில் மேஜராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். அவரது அம்மா, ஆஷ்கோம்ப் பிரபுவின் மகள். லண்டனில் செல்வச் செழிப்பு நிறைந்த பெல்கிரேவியா பகுதியின் உல்லாச மனைகளைக் கட்டிய தாமஸ் கியூபிட் என்ற பெரிய 'பில்டரின்' பரம்பரையில் வந்தவர்.

இவை எல்லாவற்றையும்விடச் சுவையான செய்தி என்ன வென்றால், கமிலாவின் அம்மா வழிக் கொள்ளுப்பாட்டியான திருமதி ஜார்ஜ் கெப்பல் என்பவர் ஏழாவது எட்வட் மன்னரின் 'சின்ன வீடாக' நீண்ட காலம் விளங்கியவர். தனது கொள்ளுப் பாட்டியைப் போலவே கமிலாவும் படோடாபம் அற்றவர். நகைச்சுவை நல்கப் பேசி, எளிமையாகப் பழகி, கனிவுடன் பணிவிடை செய்து ஆண்களைக் கவர்ந்து விடுவார். துன்பத்தில் மூழ்கிய ஒருவர் கமிலாவுடன் சிறிது நேரம் சம்பாஷித்தால் போதும், கவலை எல்லாம் மறந்து கலகலவென்று சிரித்துப்பேச ஆரம்பித்துவிடுவார்.

சார்லஸுக்கு கமிலா பாலியல் ரீதியில் பயன்பட்டதைவிட உளவியல் ரீதியில் தான் அதிகம் பயன்பட்டார். மனதிலே என்ன கவலையென்றாலும் ஆறுதல்பெற கமிலாவுக்குத்தான் இளவரசர் போன் செய்வார். அல்லது நேரில் சென்று சந்திப்பார். பணிவுடனும் பண்புடனும் பழகிய கமிலா மீது அரச குடும்பத்தில் உள்ள அத்தனை பேருக்கும் அலாதி பிரியம். கமிலாமீது பொறாமையும் பயமும் கொண்டு டயானா பகிரங்கமாக அவரைத் தாக்கிப் பேசியபோதும் அரச குடும்பத்தினர் கமிலாவுடன் இருந்த நட்புறவைக் குறைக்கவில்லை. அரச விருந்துகளுக்கு அவருக்கு அழைப்பு தொடர்ந்து சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமிலாவோடு சார்லஸ் சிநேகிதம் வைத்துக்கொண்டது பற்றி மவுன்ட்பேட்டனுக்கு பரம திருப்தி. சார்லஸின் சங்கோஜத் தன்மையை அகற்றி அவரை கமிலா மகிழ்ச்சிப்படுத்துவாள் என்று மவுன்ட்பேட்டன் நம்பினார். கமிலாவை 'சின்ன வீடு' என்ற ஸ்தானத்தில் வைத்துக் கொள்ளும்படியும், மனைவி ஸ்தானத்துக்கு வேறொரு பெண்ணைத் தேடும்படியும் மவுன்ட்பேட்டன் சார்லஸுக்கு அறிவுரை சொன்னார்.

இளவரசருக்கு மனைவியாக வருபவள் கன்னிமை கழியாதவளாக இருக்கவேண்டும். இல்லையென்றால் தினசரிப் பத்திரிகைகள் துப்பறியும் பணியில் ஈடுபட்டு, அவளுடைய கன்னிமை யாரால் கழிந்தது, அவளுடன் அதற்கு முன் உறவு வைத்திருந்தவர்கள் யார் யார் போன்ற விபரங்களைப் பிரசுரித்து நாறடித்து விடுவார்கள். அவர்களில் யாருக்காவது பெருந்தொகை யான பணம் கொடுத்து தான் கண்ட காமசுகத்தைப் பற்றி பேட்டியும் போட்டுவிடுவார்கள் என்பது மவுன்ட்பேட்டனின் அச்சம்.

திருமணமாவதற்கு முன்னர் ஒரு ஆணும் பெண்ணும் சிநேகிதம் வைத்துக் கொள்ளலாம். உடலுறவும் கொள்ளலாம் ஒரு சிநேகிதம் உடைந்துபோனால் இன்னொரு சிநேகிதம் வைத்துக் கொள்ளலாம். திருமணமான பின் ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழவேண்டும். இதுதான் மேற்கு நாட்டுக் கலாசாரம். ஒரு அரசன் 'சின்னவீடு' வைத்துக்கொள்வதும் ஏற்றுக்கொள்ளப் பட்ட சமாச்சாரமே.

பிரபலஸ்தர்களுடன் பெண்கள் வலியச்சென்று பழகி, உடலுறவும் வைத்துவிட்டு, பிறகு பத்திரிகைகளிடம் பெருந்தொகைப் பணம் வாங்கிக் கொண்டு, காமசூத்திரத்தில் சொல்லப்பட்ட எந்தநிலையில் உறவுகொண்டோம் என்ற அளவுக்கு விபரமாக, விலாவாரியாகப் பேட்டி அளிப்பதும்கூட மேற்கு நாடுகளில் இன்று வழக்கமாகி விட்டது.

எனவே மவுன்ட்பேட்டனின் அச்சம் நியாயமானதே. ஆனால் இளவரசருக்கு ஈற்றில் வந்தமைந்த கன்னிமை கழியாத பெண்ணோ, மவுன்ட்பேட்டன் யார்யாரையோ பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னென்னவெல்லாம் பயந்தாரோ, அதைவிடப் பன்மடங்கு அதிகமாக அரச குடும்பத்தை பத்திரிகைகளில் நாறடித்து விடுவார் என்று அவர் ஆருடம் பார்த்தாரா என்ன?

கமிலா சார்லஸுடன் பழகினாரே தவிர சார்லஸை திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற உத்வேகத்தில் இல்லை. இளவரசி ஆனின் முன்னாள் காதலரான மேஜர் அன்ட்ரூ பாக்கர் பௌளல்ஸ் மீதுதான் கமிலா கண்வைத்திருந்தார். கமிலாவை முதலில் காதலித்த சார்லஸ், மவுன்ட்பேட்டனின் ஆலோசனை கேட்டு மனம் தடுமாறிக் கொண்டிருந்தார். அரச வர்க்கத்தில் பிறந்த தனது பேத்தி அமன்டா நாச்புல் என்ற இளம் அழகியை இளவரசருக்கு அறிமுகம் செய்துவைத்தார் மவுன்ட்பேட்டன். இதோ உன் எதிர்கால மனைவி - இவளுடன் பழகிப்பார் என்று பச்சை விளக்கும் காட்டிவிட்டார்.

தனது சிபாரிசைப் பற்றி அமன்டாவின் பெற்றோரிடம் சொல்லி அவர்களது சம்மதத்தையும் பெற்றார். மகாராணியினதும் இளவரசர் பிலிப்பினதும் ஆசியையும் பெற்றார். எல்லாம் சரி. இளவரசரும் அமன்டாவும் முடிவு சொல்ல வேண்டியதுதான் பாக்கி.

இளவரசரும் அமன்டாவும் சிலகாலம் பழகினர். ஒருவரை ஒருவர் காதலிக்கத் தொடங்கினர்.

"அமன்டா நீ என்னைக் கணவனாக ஏற்றுக் கொள்கிறாயா?" என்று சார்லஸ் அமன்டாவிடம் கேட்டார். அமன்டா சார்லஸை காதலிக்கத் தொடங்கியது உண்மை. ஆனால் அதற்கிடையில் கல்யாணப் பேச்சை சார்லஸ் எடுப்பார் என்று அமன்டா எதிர்பார்க்கவில்லை. யோசித்துப் பதில் சொல்ல சிலநாள் அவகாசம் கேட்டாள் அமன்டா.

அவளது பதிலும் வந்தது:

"சார்லஸ். நான் உங்களைக் காதலிக்கிறேன். கல்யாணம் செய்து கொள்ளவும் விரும்புகிறேன். ஆனால் நீங்களோ இளவரசர். எதிர்காலத்தில் மன்னர் ஆகப் போகிறவர். முடிக்குரிய இளவரசரையோ மன்னரையோ திருமணம் செய்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய வாழ்க்கையின் சுதந்திரங்கள் பலவற்றை நான் தியாகம் செய்யவேண் ்ம். அதற்கு நான் தயாரில்லை. என்னை மன்னித்துவிடுங்கள்,' ன்ற தோரணையில் பதிலளித்தாள் அமண்டா.

அமண்டாவின் நிலைப்பாட்டை மவுன்ட்பேட்டனுக்கு சார்லஸ் அறிவிப்பதற்கி யில் மவுன்ட்பேட்டன் திடீர் மரணம் அடைந்தார். ஐ.ஆர்.ஏ. இயக்கத்தின் வெடிகுண்டிற்குப் பலியானார்.

இதற்கிடையில் கமிலாவும் மேஜர் அன்ட்ரூ பாக்கர் பௌல்ஸைத் திருமணம் செய்துகொண்டார்.

மவுன்பேட்டனின் மரணத்தால் சிதறிப் போய்விட்டார் சார்லஸ். தனது தாய்தந்தையருக்கு நிகரான மவுன்பேட்டன் மீது அத்தனை பாசம் வைத்திருந்தவரல்லவா?

மவுன்ட்பேட்டன் உயிருடன் இருந்திருந்தால் எப்படியாவது சாாலஸ் அமண்டா திருமணத்தை நடத்தி வைத்திருப்பார். அல்லது அமண்டாவுக்கு நிகரான இன்னொரு அரச வர்க்கப் பெண்ணை சார்லஸுக்கு அறிமுகம் செய்திருப்பார்.

கதிகலங்கிப் போன சார்லஸின் தலைமையில் மவுன்ட்பேட்டனின் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

மவுன்ட்பேட்டன் இறந்தது 1979, ஆகஸ்ட் 27ம் தேதியன்று. ஆனால் 1977ம் ஆண்டு முதலே இளவரசர் சார்லஸை எப்படியாவது திருமணம் செய்யவேண்டும் என்று குறிவைத்துக் கொண்டிருந்தார் டயானா. அப்போது அவருக்கு வயது 16.

டயானாவினுடைய அன்னைவழிப் பாட்டியான லேடி றுத்ஃ பேர்மோய், மகாராணி எலிஸபத்தின் அன்னையிடம் அந்தரங்க உதவியாளராக 1956 முதல் பணியாற்றியவர். அதுபோலவே, டயானாவின் தந்தையான ஜானி ஸ்பென்ஸர் மகாராணி எலிஸபத்துடைய குதிரை லாயத்துக்கு மட்டுமல்ல, அவரது தந்தையான ஆறாவது ஜார்ஜ் மன்னரின் குதிரை லாயத்துக்கும் பொறுப்பாக இருந்தவர். ராஜசேவகம் செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம் என்றதால் அரசகுடும்பத்துக்கு உரிமையான சான்ட்ரிங்காம் எஸ்டேட்டில் உள்ள 'பார்க் ஹவுஸ்' அவர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. இதன் விளைவாக மகாராணியின் பிள்ளைகளுக்கும் ஸ்பென்ஸரின் பிள்ளை களுக்கும் அறிமுகம் ஏற்பட்டது.

1977ல் டயானாவின் அக்காவான சேரா, சார்லஸின் பெண் சிநேகிதியாக இருந்தார். சார்லஸ் சேராவை ஒருநாள் சந்தித்தபோது, அங்கு வந்த டயானாவை சேரா சார்லஸுக்கு அறிமுகம் செய்துவைத்தார். அன்றிலிருந்து டயானா சார்லஸை கவர்வதற்கு தீவிரமாக முயற்சி செய்து வந்தார். ஆனால் சார்லஸ் அக்கறை எடுத்ததாகத் தெரியவில்லை. டயானாவின் விடாமுயற்சியும் தளரவில்லை.

இந்தக் காலகட்டத்தில் ஒரு நாள், தனது அன்னையின் இரண்டாவது கணவரிடம், தான் ஒரு பெரிய ஸ்தானத்தை அடைவது நிச்சயம் என்றும், அதனையொட்டியே தான் 'துப்புரவாக' (கன்னிமை கழியாமல்) இருந்துவருவதாகவும் டயானா சொல்லியிருக்கிறார். அவரும் டயானாவைக் கேலி செய்து விட்டு, அவருக்கு 'டச்சஸ்' (DUCHESS) என்ற பட்டத்தை வழங்கினாராம். 'டச்சஸ்' என்பது மகாராணியின் இளைய குமாரர்களைத் திருமணம் செய்யும் மனைவிமாருக்கு வழங்கப்படக்கூடிய கௌரவப் பட்டம். அதற்குப் பிறகு டயானாவை அவரது குடும்பத்தினர் 'டச்சஸ்' என்பதைச் சுருக்கி 'டச்' என்று அழைத்து வந்தனராம்.

ஆனால் -

டயானா உண்மையில் குறிவைத்தது மகாராணியின் இளைய குமாரர்களின் மனைவிமாருக்கு வழங்கப்படும் 'டச்சஸ்' பட்டத்தை அல்ல, மகாராணியின் முடிக்குரிய மூத்த குமாரரின் மனைவிக்கு வழங்கப்படும் 'வேல்ஸ் இளவரசி' என்ற பட்டத்தையே என்பது டயானாவின் குடும்பத்தினருக்கே தெரியாது.

1978ல் டயானாவின் அக்கா ஜேன், மகாராணியினுடைய உதவி அந்தரங்கச் செயலாளர் ராபர்ட் ஃபெல்லோஸை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்தார். திருமணச் சடங்குகள் பக்கிங்ஹாம் அரண்மனைக்கு மிக அருகில் உள்ள ஒரு தேவாலயத்தில் நடைபெற்றனவாம்.

"என்னுடைய திருமணம் வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில்தான் நடைபெறும்," என்று இத்திருமணத்தை அடுத்து டயானா பலரிடம் கூறியதாக சேரா பிராட்பட் எழுதுகிறார். மன்னர்களினதும் முடிக்குரிய இளவரசர்களினதும் திருமணம்தான் வேஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில் நடைபெறும். இளவரசர் சார்லஸ்தான் தனது கணவர் என்று டயானா அன்றே உறுதியாகத் தீர்மானித்துவிட்டார் என்பதை இது உறுதிப் படுத்துகிறது. அந்த நேரத்தில்கூட சார்லஸின் மனதில் டயானாவைப் பற்றி எந்தவித எண்ணமும் இல்லை.

ஜேனின் திருமணத்திற்கு பிரிட்டிஷ் தினப்பத்திரிகைகளின் அரண்மனை நிருபர்கள் அத்தனை பேரும் வந்திருந்தார்கள். அவர்கள் யார் என்று கண்டறிந்து, அவர்களை வலியத் தேடிச் சென்று, தன்னை யார் என்று அறிமுகப்படுத்தி, அவர்களோடு 'சல்லாபம்' செய்யத் தொடங்கினாராம் டயானா. அங்கிருந்த மிகச் சிரேஷ்ட அரண்மனை நிருபரான ஜேம்ஸ் விட்டக்கரை டயானா அணுகி,

"எனக்கு உங்களைத் தெரியும். நீங்கள் தானே அந்தப் பொல்லாத விட்டக்கர்? நான் தான் டயானா," என்றாராம்!

"பத்திரிகைகளுடன் டயானா ஏற்படுத்திக்கொண்ட காதல் தொடர்பு அன்றுதான் ஆரம்பமானது," என்கிறார் சேரா பிராட்பட்.

இளவரசர் சார்லஸின் இதயத்தில் ஒரு துளிக்கூட இடம் பெறாத நிலையிலேயே, எதிர்காலத்தில் சார்லஸை தான் திருமணம் புரிந்து, தனக்கென அமைக்கப்போகின்ற 'அரசியல் தளத்திற்கு' அனுசரணையாக வரக்கூடிய அரண்மனை நிருபர் களைக் கவர்வதற்கு அன்றே அஸ்திவாரக்கல் நாட்டிவிட்டார் டயானா. 'பெரும் சூழ்ச்சிக்காரி' என்று இளவயதிலேயே அவரை அடையாளம் கண்டுவிட்ட அவரது பாடசாலை ஆசிரியையின் வாயில் வெல்லம் தான் போடவேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது நீண்ட நாளைய திட்டத்தை நிறைவேற்றக்கூடிய உன்னத வாய்ப்பு டயானாவுக்கு மவுன்ட்பேட்டனின் மரணத்தை அடுத்து ஏற்பட்டது. கிடைத்த வாய்ப்பை விடுவாரா என்ன? ஜூலை 1980ல் அந்த சந்தர்ப்பம் டயானாவுக்குக் கிடைத்தது. ஒரு விருந்துபசார வைபவத்தின்போது சார்லஸுடன் நீண்டநேரம் பேசுவதற்கு சந்தர்ப்பம் சரியாக அமைந்தது.

"மவுன்ட்பேட்டனின் மரணச் சடங்குகளின்போது நீங்கள் அனுபவித்த வேதனையை தொலைக்காட்சி வாயிலாக நான் பார்த்து கவலைப்பட்டேன். நீங்கள் அனுபவித்து வரும் தனிமையை என்னால் உணரமுடிகிறது. உங்களுக்கு அனுசரணை யாக இருந்து உங்களுக்கு எந்நேரமும் ஆதரவுதர ஒரு பெண்துணை தேவை," என்ற ரீதியில் டயானா அனுதாபம் தெரிவித்தார்.

மவுன்ட்பேட்டனின் மறைவு தனது வாழ்க்கையில் ஏற்படுத்திய வெற்றிடத்தை நிறைவு செய்ய முடியாமல் தவித்துக்கொண்டிருந்த சார்லஸுக்கு அந்த ஆதரவு வார்த்தைகள் தேனாக இனித்தன.

"சார்லஸ், நீங்கள் சிரிக்கும்போது அந்த மகிழ்ச்சியை உங்களுடன் சேர்ந்து அனுபவிக்க உங்களுக்கு ஒரு மனைவி வேண்டும். நீங்கள் கவலையில் மூழ்கும்போது, உங்கள் கவலையில் பங்கு கொண்டு உங்களைத் தேற்றுவதற்கும் ஒரு மனைவி வேண்டும். அந்த ஸ்தானத்தை நிரப்ப நான் தயார்," என்று நாசூக்காக டயானா சொன்ன கருத்து சார்லஸின் இதய வீணையை மீட்டத் தொடங்கியது.

இருவரும் அடிக்கடி பழகத் தொடங்கினர்.

தவிர்க்க முடியாத அந்தக் கேள்வி சார்லஸிடம் இருந்து வர அதிக காலம் பிடிக்கவில்லை.

"டயானா, நீ என்னைத் திருமணம் செய்து கொள்கிறாயா?"

கலகலவென்ச் சிரித்தவாறே, "நிச்சயமாக", என்று பதில் அளித்தார் டயானா. தனது வாழ்க்கையின் மிக முக்கியமான முடிவை, பதிலை ஒருசில நொடிகளுக்குள் சொல்லிவிட்டார் டயானா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேல்ஸ் இளவரசரை திருமணம் செய்யப்போகின்ற ஒரு பெண் அனுபவிக்க வேண்டிய பல்வேறு சுமைகளை சார்லஸ் அறிந்திருந்தார். இந்தச்சுமைகளை தோளில் ஏற்றிக்கொள்ள விரும்பாத அமன்டா அவரைத் திருமணம் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டதை சார்லஸ் மறக்கவில்லை. எனவே நிச்சயதார்த்தச் செய்தி பத்திரிகைகளுக்கு அறிவிக்கப்பட்ட போது, தன்னைத் திருமணம் செய்துகொள்ள டயானா சம்மதம் தந்ததை மிகுந்த ஆச்சரியத்துடன்தான் குறிப்பிட்டார்.

அரச திருமணம் என்றால் என்ன? அதுபற்றி சார்லஸின் கருத்துக்கள் யாவை? பல்வேறு காலகட்டங்களில் சார்லஸ் அளித்த பல்வேறு பேட்டிகளை ஜானதன் டிம்பிள்பி தனது நூலில் தொகுத்துத் தந்துள்ளார்.

“மனைவி ஸ்தானத்தை வகிக்க வேண்டியவரை மிகவும் கவனமாகத் தேர்ந்தெடுக்கவேண்டும். அப்படிப்பட்டவர் மிகவும் விசேஷமான குணாதிசயங்களைக் கொண்டவராக அமைதல் வேண்டும்..” *(1969).*

“..இளவரசரை ஒரு பெண் திருமணம் செய்வதோடு, மட்டும் முடிவடையும் கதை அல்ல இது. இளவரசரைத் திருமணம் செய்யும் அதே வேளையில், அவரது அரச வாழ்க்கைமுறையையும் அப்பெண் திருமணம் செய்தல் வேண்டும். அத்தகைய வாழ்க்கை முறைக்கும் தன்னாலான பங்களிப்புகளைச் செய்தாக வேண்டும். அப்பெண்ணுக்கு அத்தகைய வாழ்க்கை முறையைப் பற்றி ஓரளவு அறிவும் இருக்கவேண்டும், ஓரளவு உணர்வும் இருக்கவேண்டும். அப்படி இல்லாவிடின், அந்தப் பெண்ணின் திருமண வாழ்வு வீணாகி விடக்கூடிய வாய்ப்பு உண்டு..” *(1974).*

“...என்னுடைய திருமணம் நிரந்தரமாக நீடிக்கவேண்டும்..” *(1975)*

இளவரசருடைய இந்தக் கருத்துக்கள் அவருடைய சொந்தக் கருத்துக்கள் மட்டுமல்ல. பிரிட்டிஷ் அரசியலமைப்புச் சட்டரீதியாகவும், ஒரு இளவரசர் அல்லது மன்னர் எத்தகைய மனைவியைத் தேர்ந்தெடுக்கலாம் என்பது திட்டவட்டமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையறுக்கப்பட்டுள்ளது. 1701ம் ஆண்டுச் சட்டம் ஒன்றின்படி அவர் ஒரு கத்தோலிக்கப் பெண்ணைத் திருமணம் செய்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்து. 1772ம் ஆண்டின் அரச திருமணங்கள் சட்டத்தின்கீழ் அவரது மணப்பெண்ணை மகாராணியும், பாராளுமன்றமும், பிரபுக்கள் சபையும் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கவேண்டும். அது மட்டுமல்ல, சர்ச் ஆஃப் இங்க்லான்ட் மதப்பிரிவின் எதிர்கால அதிபதி என்ற ரீதியில், அவர் ஏற்கெனவே விவாகரத்துச் செய்த ஒரு பெண்ணை அல்லது வேறு ஆண்களோடு ஏற்கெனவே காதல் தொடர்புகள் வைத்திருந்த ஒருபெண்ணை திருமணம் செய்ய முடியாது.

ஒரு சாதாரணக் குடிமகனுக்கு இருக்கின்ற திருமணச் சுதந்திரம் ஒரு அரசருக்கோ அல்லது முடிக்குரிய இளவரசருக்கோ இல்லை. "கண்டவுடன் காதலே கொண்டாள் என் மீதிலே, பெண்டாட்டி ஆகிடும் நாள் எப்போது?" என்று முடிக்குரிய ஒரு இளவரசர் தனது காதலியைப் பற்றிக் கற்பனை செய்து காதல்வானில் சிறகடித்துப் பறக்க முடியாது.

இந்தக் கடுமையான கட்டுப்பாடுகளைப் பற்றிய தனது கருத்துக்களை பிரிட்டிஷ் மக்களுடன் ஒரு பத்திரிகைப் பேட்டியில் பகிரங்கமாக பகிர்ந்து கொண்டார் இளவரசர்:

"...நான் சொல்லப்போவதை பெரும்பான்மையான மக்கள் புரிந்துகொள்ள மாட்டார்கள்... காதல் என்றால் என்ன என்பதைப் பற்றி பலருக்கு ஏற்படுவது தவறான எண்ணமாகும்.. காதலின் அடிப்படை மிகவும் ஆழமான நட்புறவு தான். இருவருக்கும் பொதுவான பொழுதுபோக்குகளும் பொதுவான கருத்துக்களும் இருக்கவேண்டும். ஒருவரை ஒருவர் பெரிதும் நேசிக்கவேண்டும். பொதுமக்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள் என்று நினைக்கிறேன் - உடற்கவர்ச்சி, உளக் கவர்ச்சி உள்ள ஒரு பெண்ணை கண்டுபிடித்தவுடன் எல்லாமே சரியாகி விடுகிறது. ஆனால் எனது நிலையில், எனது வாழ்க்கையைப் பொறுத்தமட்டில், திருமணம் என்பதை நான் எடுக்கக்கூடிய மிகப்பெரிய - மிகப் பொறுப்பு வாய்ந்த முடிவுகளில் ஒன்றாக நான் கருதுகிறேன். அது ஐம்பது ஆண்டுகளுக்காவது நீடிக்கவேண்டும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"...ஒரு திருமணம் நீடித்து நிலைப்பதற்கு கடுமையான முயற்சி எடுக்கவேண்டும். நான் சொல்வது தவறு என்று நிரூபிக்கப்படலாம், ஆனால் எனக்குத் திருமணம் ஆனதும் அத்தகைய முயற்சி எடுப்பதே எனது உத்தேசம்.ட." (1975).

இளவரசர் சார்லஸின் முன்னோர்களான ஏழாவது எட்வர்டும் எட்டாவது எட்வர்டும், அரச கடமையா காதலா என்ற நிலை வந்தபோது அரச கடமையில் தவறியது சார்லஸுக்குப் பிடிக்கவில்லை.

தனது தாத்தா ஆறாவது ஜார்ஜ் மன்னரும் தனது பாட்டியும் வாழ்ந்து காட்டிய இல்லற வாழ்க்கையையே தனது இலட்சியமாக சார்லஸ் கொண்டிருந்தார். தமது திருமணத்தின் பின்னர்தான் அவர்கள் ஒருவரை ஒருவர் காதலிக்கத் தொடங்கினார்கள். தமது அரச கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டும், தமது பிள்ளைகளைச் சரிவர வளர்க்கவேண்டும் என்று அவர்கள் வரித்துக்கொண்ட இலட்சியங்களின் அடிப்படையில் தான் அவர்களது காதலே வளரத் தொடங்கியது. எனவே - அரச கடமைகளின் பாரத்தைப் பகிர்ந்து கொள்வதில் பிறப்பதுதான் காதல். நாடாளும் தனது அன்னையைப் போல், நாடாண்ட தனது தாத்தாவைப் போல், அவர்கள் காதலுக்கு வகுத்துக்கொண்ட வரைவிலக்கணத்தையே சார்லஸும் வகுத்துக்கொண்டதில் ஆச்சரியம் ஏதும் இல்லை.

சார்லஸை திருமணம் செய்துகொள்வதற்கு சம்மதம் என்று அவரிடம் கூறியதை அடுத்து டயானா சொன்ன வார்த்தைகள்:

"நான் உங்களை எவ்வளவு தீவிரமாகத் காதலிக்கிறேன் தெரியுமா? நான் உங்களை எவ்வளவு தீவிரமாகக் காதலிக்கிறேன் தெரியுமா?"

"காதலின் அர்த்தம் என்ன என்பதைப் பொறுத்தது அது." என்று டக்கென்று பதிலளித்தார் சார்லஸ்.

திருமணத்திற்குச் சில நாட்களின் முன்னர், இருவரும் பத்திரிகைகளுக்கும் தொலைக்காட்சிக்கும் கூட்டாகப் பேட்டி அளித்தனர். அந்த வேளையிலும், தான் சார்லஸை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருக்குயிராகக் காதலிப்பதாக டயானா சொன்னபோது, காதலின் அர்த்தம் என்ன என்பதைப் பொறுத்தது அது என்று சார்லஸ் கூறினார்.

காதல் என்றால் என்ன என்பதுபற்றி இளவரசருடைய தெளிவான நிலைப்பாட்டையே இது வலியுறுத்துகிறது.

சார்லஸ் டயானாவைத் தனது மணப்பெண்ணாகத் தேர்ந்தெடுத்ததில் எலிஸபெத் மகாராணி தரப்பிலிருந்தோ அல்லது எடின்பரோ கோமகன் தரப்பிலிருந்தோ எந்தவிதமான சிபாரிசோ வற்புறுத்தலோ வரவில்லை. டயானாவின் சம்மதத்தைப் பெற்ற மறுநிமிடமே தனது பெற்றோருக்கு தொலைபேசி மூலம் செய்தியை அறிவிக்க ஓடினார் சார்லஸ். அவர்களும் மனம் மகிழ்ந்து தமது நல்லாசிகளைத் தெரிவித்தனர்.

மகாராணியும் அவரது அன்னையும் குதிரைப் பந்தயத்தில் மிகவும் ஈடுபாடு உள்ளவர்கள். மகாராணிக்குச் சொந்தமான பந்தயக் குதிரைகள் நிறைய உள்ளன. பந்தயக் குதிரை லாயமும் உண்டு. அவருடைய குதிரைகளைப் பந்தயத்துக்கு பயிற்றுவிப்பவர் மேஜர் டிக் ஹேர்ன். அவரது பந்தயக் குதிரை ஜாக்கி வில்லி கார்ஸன்.

பந்தயக் குதிரை உரிமையாளர்கள் சிறந்த ஆண்குதிரைகளையும் சிறந்த பெண்குதிரைகளையும் கூட்டி வைத்துக் குட்டிகள் எடுப்பது வழக்கம். இவ்வாறு தேர்ந்தெடுக்கும் குதிரைகளின் ஓட்டத்திறமை, அவர்களது பரம்பரைக் குதிரைகளின் ஓட்டத்திறமை, "அடாவடித் தனங்கள்" போன்ற பல அம்சங்களை ஆராய்ந்தபின்னர் தான் குட்டி பெறுவதற்கு அவை தேர்ந்தெடுக்கப்படும். சில குதிரைகள் பயிற்சியில் எவ்வளவுதான் திறமையாக ஓடினாலும், பந்தய மைதானத்துக்கு வந்தவுடன் தமது மனோவலிமையை இழந்துவிடுகின்றன. இதன் விளைவாக, இவைகளுக்கு வியர்வை முத்து முத்தாகக் கொட்டித் தள்ளும். இத்தகைய குதிரைகள் பந்தயத்தில் தோற்றுவிடும். சில குதிரைகள் அரண்டு மிரண்டு அட்டகாசம் செய்யும். இக்குதிரைகளுக்கு, முன்னால் உள்ள பந்தய ஓட்டப்பாதை மட்டுமே தெரியக்கூடியவகையில் அமைக்கப்பட்ட கண் அங்கிகளைக் கட்டி விடுவார்கள். அதன்பின் அவை ஓட்டத்தில் ஜமாய்த்துக் கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில குதிரைகள் பந்தய ஆரம்பக்கோட்டு அடைப்புகளுக்குள் புகமறுத்து அடம்பிடிக்கும். முன்னால் இருவர் கடிவாளத்தைப் பிடித்து இழுக்க, முதுகைத் தடவி ஜாக்கி தாஜா பண்ண, பின்னால் நின்று குதிரையின் பின்புறத்தில் ஐந்துபேர் தள்ள ஒருவாறாக அடைப்புகளுக்குள் புகுந்துவிடும். சில குதிரைகள் தள்ளுபவர்களை உதைத்துவிட்டு ஓடிவிடும். சில குதிரைகள், ஜாக்கியைத் தூக்கி வீசிவிட்டு பந்தயப் பாதையில் தாறு மாறாக ஓடி முடிவுக்கோட்டை தாமாகவே வந்தடையும்.

எனவே குட்டிபோடுவதற்கு குதிரைகளைத் தேர்ந்தெடுக்கும்போது இத்தகைய அடாவடித்தனங்கள் இல்லாத பரம்பரையில் வந்த குதிரைகளைத் தான் தேர்ந்தெடுப்பார்கள். உடல்வலிமை, வேகத்திறன், மனோவலிமை, பரம்பரை இயல்பு ஆகிய அம்சங்களை கவனமாக ஆராய்ந்த பின்னரே குட்டி போடுவதற்கான ஆண் குதிரையும் பெண்குதிரையும் தேர்ந்தெடுக்கப் படுகின்றன.

குட்டி போடுவதற்கு குதிரைகளைத் தேர்ந்தெடுப்பதில் பழுத்த அனுபவம் உள்ள எலிஸபெத் மகாராணி அதற்குச் செலவு செய்த அதே அளவு நேரத்தை தன்னுடைய பிள்ளைகளின் ஜோடிகளைத் தேர்ந்தெடுப்பதிலும் செலவிட்டிருந்தாரே யானால் இந்தப் பிரச்னைகள் எதுவுமே வந்திருக்காது என்று அரண்மனை ஊழியர் ஒருவர் சார்லஸ் - டயானா திருமண முறிவு பற்றி சேரா பிராட்பட்டிடம் கருத்துத் தெரிவித் திருக்கிறார்.

இது ஒரு கிண்டல் அல்ல. ஸ்பென்ஸர் பரம்பரையின் ஓடுகாலிப் பண்புகளையும், டயானா பிறந்த வீட்டின் அடிதடிகள் - இல்லறச் சீரழிவு - அன்புச் சூன்யம் போன்ற அம்சங்களையும் அந்த நேரத்தில் எவரும் தூண்டித் துருவி ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. அப்படி ஆராயக்கூடிய ஆற்றல் உள்ள மவுன்ட்பேட்டனும் உயிருடன் இல்லை.

அதனால்தான் பலமற்ற ஒரு அஸ்திவாரத்தின்மீது படாடோபமான ஒரு மாளிகை கட்டியெழுப்பப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டயானா இளவரசருக்கு உகந்த ஜோடி அல்ல என்று பலருக்கு அப்போதே தெரியும்.

டயானாவின் அம்மா வழிப் பாட்டியும், மகாராணியின் அன்னையின் அந்தரங்க உதவியாளருமான றுத் ஃபெர்மோய் அவர்களுக்கு அப்போதே அது தெரியும். தனது மகளும் டயானாவின் அப்பாவும் விவாகரத்துச் செய்தபோது பிள்ளைகளை வளர்க்கும் அருகதை தனது சொந்த மகளுக்கு இல்லை, மருமகனோடுதான் பிள்ளைகள் வளரவேண்டும் என்று நீதிமன்றத்தில் நக்கீரன் பாணியில் சாட்சி சொன்ன அம்மையார் தான் அவர்.

இளவரசர் சார்லஸை தனது பேத்தி டயானா தான் திருமணம் செய்யக்கூடும் என்று பேச்சுகள் அரண்மனையில் அடிபடத் தொடங்கியபோது றுத் ஆடிப்போய் விட்டாராம். அதிர்ச்சி அடைந்து விட்டாராம். செய்தி உண்மை தானா என்று பலரிடம் விசாரித்தாராம். "எனக்கு யாருமே சொல்வதில்லை" என்று சலித்துக் கொண்டாராம். இதை சேரா பிராட்பட்டிடம் அரண்மனை ஊழியர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

றுத், மகாராணியின் அன்னையின் தோழி. எனவே றுத்தின் பேத்தியை இருவரும் சேர்ந்துதான் சார்லஸின் தலையில் கட்டி வைத்திருந்தார்கள் என்று ஒரு கருத்து உண்டு. இக்கருத்து தவறானது என்பதை சேராவின் நூல் உறுதி செய்கிறது.

இதே கருத்தை டிம்பிள்பியின் நூலும் வலியுறுத்துகிறது. றுத் மரணம் அடைவதற்குச் சில மாதங்களின் முன்னர் டிம்பிள்பியுடன் பேசும்போது, சார்லஸ் - டயானா திருமணம் அறிவிக்கப்படுவதற்கு முன்பாகவே தான் அதற்கு எதிராக இருந்ததை விளக்கியிருக்கிறார். ஆனால் தான் தலையிட்டுத் தடுத்தால் யாரும் தன்னை ஆதரிக்கமாட்டார்கள் என்று கருதியதால் பேசாமல் இருந்து விட்டாராம். இளவரசர் சார்லஸிடம் சென்று உங்களது மணப்பெண் தேர்வு ஒரு மாபெரும் தவறு என்று சொன்னால் அவர் கேட்கவா போகிறார்? சிலர் சார்லஸைத் தூண்டி விட்டுக் கொண்டிருந்தனர் என்று கூறினார் றுத்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே கருத்து அன்ட்ரூ மார்ட்டன் எழுதிய டயானா பற்றிய நூலின் 1977 பதிப்பிலும் வந்துள்ளது. நூலின் புதிய சேர்ப்பான டயானாவின் ஒலிப்பதிவில் டயானா தனது திருமணத்திற்கு றுத்தின் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார். ஆனால், வழக்கம் போல உண்மையை தனக்குச் சாதகமாகத் திரித்து ஒரு பொய் சொல்லியுள்ளார்.

"டார்லிங், அவர்களுடைய (அரச குடும்பத்தினரின்) இன்பதுன்ப உணர்வுகளும் அன்றாட வாழ்க்கைமுறைகளும் வித்தியாசமானவை. அவை உனக்குச் சரிப்பட்டுவராது. இதை நீ புரிந்து கொள்ளவேண்டும்," என்று றுத் பாட்டி எப்போதும் சொல்வாராம்.

அதாவது, இளவரசரைத் திருமணம் செய்வதற்கு உனக்கு அருகதை கிடையாது என்று றுத் பாட்டி டயானாவுக்குச் சொன்ன விஷயத்தோடு டயானா "கற்பனையை இணைத்துச் சுவைபட" (சார்லஸ் ஸ்பென்ஸர் - மன்னிக்கவும்) உன்னைத் திருமணம் செய்வதற்கு இளவரசருக்கு அருகதை கிடையாது என்று "உண்மை" சொல்லியுள்ளார். அவ்வளவு தான்!

சார்லஸ் - டயானா திருமணம் கசக்கத் தொடங்கிய காலத்தில் டயானாவின் அப்பா சார்லஸின் உற்ற நண்பர் ஒருவரிடம் பின்வருமாறு கூறினாராம்:

"அவளுக்குப் (டயானா) பொல்லாத பயத்தில்தான் நாம் இருந்தோம்."

இந்தக் தகவல் சேரா பிராட்பட்டின் நூலில் வெளிவந்துள்ளது. ஒரு முரட்டு முன்கோபியான அப்பாவே கண்டு கதிகலங்கும் அளவுக்கு ஒரு இராட்சசியா டயானா? இதை ஏன் அவர் ஆரம்பத்திலேயே தனது எஜமானியான மகாராணியிடம் சொல்லவில்லை? சின்ன எஜமானான இளவரசர் சார்லஸிடம் ஏன் சொல்லவில்லை? செம்மறி ஆடு விற்றுச் செல்வம் குவித்து சீர் சேர்த்த பரம்பரை சிம்மாசனம் ஏற வேண்டும் என்பதாலா? சிம்மாசனம் ஏறவேண்டிய சின்ன எஜமானை சீர்குலைந்த மனித உறவுகள் நிலவிய தனது இல்லத்தின் சின்ன மருமகனாக ஆக்கிக் கொள்ளவேண்டும் என்பதாலா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1981ம் ஆண்டு, பெப்ரவரி மாதம் 24ம் தேதி, பக்கிங்ஹாம் அரண்மனை அரச அமர்க்களங்களுடன் சார்லஸ் - டயானா நிச்சயதார்த்தத்தை அறிவித்தபோது தண்ணீர் பனிக்கட்டியாக மாறும் கொடுங்குளிரையும் பொருட்படுத்தாது, பெரும் ஜனத் திரள் அரண்மனை முன்னால் குழுமியது. அந்தக் கூட்டத்தின் மத்தியில் டயானாவின் அப்பாவும் மாற்றாந்தாயும் சுழன்றடித்துக் கொண்டு டயானாவின் சிறப்புக் குணாதிசயங்களைப் பற்றிப் பத்திரிகை நிருபர்களுக்குப் பிரசாரம் செய்து கொண்டிருந்தனர்.

அடுத்த நாள் 'டைம்ஸ்' பத்திரிகையில் வெளியான இந்தப் பேட்டியின் சுருக்கம் டிம்பிள்பியின் நூலில் வெளிவந்துள்ளது:

"டயானா உண்மையிலேயே அதியற்புதமான ஒரு பெண்.."

"...பத்திரிகைப் பரபரப்பினால் டயானா மனச்சோர்வு அடையவில்லை. ஏனென்றால் டயானாவுக்கு ஒரு நாளும் மனச்சோர்வு வருவதே இல்லை..." என்றார் டயானாவின் அப்பா.

"டயானாவுக்கு மனக் கிளர்ச்சியும் இல்லை, மனச்சோர்வு வருவதும் இல்லை" என்று வலியுறுத்தியிருக்கிறார் டயானாவின் மாற்றாந்தாய்.

ஒரு மனிதப் பிறவிக்கு வரக்கூடிய நோய்கள் பலநூறு இருக்கும்போது, அவற்றை எல்லாம் பெயர்சொல்லி, "டயானாவுக்கு காக்காய் வலிப்பு இல்லை", "டயானாவுக்கு பீனிஸம் இல்லை" என்றெல்லாம் இவர்கள் பகிரங்க மெடிக்கல் சர்டிபிக்கட் தராமல், மனநோய் சம்பந்தப்பட்ட மனச்சோர்வு, மனக்கிளர்ச்சி அவருக்குக் கிடையவே கிடையாது என்று 'ஓ.கே. சர்டிபிகேட்' தந்தது ஏன்?

"பொல்லாத பொண்ணு தான், தொடை நடுங்கும் பெற்றோர் நாம்," என்ற அசல் ரிக்கார்டை ஏன் போட்டுக் காட்டவில்லை?

சார்லஸின் மிக நெருங்கிய நண்பர்களில் இருவர் அவர் டயானாவைத் திருமணம் செய்வதற்கு தீவிர எதிர்ப்புத் தெரிவித்ததாக சேரா எழுதுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர், மவுன்ட்பேட்டனின் பேரனான ரொம்ஸே பிரபு. டயானா உண்மையில் சார்லஸ் என்ற மனிதனைக் காதலிக்க வில்லை. சார்லஸ் என்ற இளவரசரைத் தான் காதலித்தார் என்பதுதான் ரொம்ஸே பிரபுவினதும் அவரது மனைவி பென்னி சீமாட்டியினதும் கணிப்பு.

பென்னியிடம் டயானா சம்பாஷித்தபோது (நிச்சய தார்த்தம் அறிவிக்கப்படுவதற்கு முன்னால்), "எனக்கு வேல்ஸ் இளவரசியாக வரும் அதிர்ஷ்டம் இருந்தால்.." என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தாராம்." "சார்லஸின் மனைவியாக வரும் அதிர்ஷ்டம் இருந்தால்.." என்று சொல்லவே இல்லையாம்.

டிம்பிள்பி எழுதிய நூலில் கூட இது விரிவாகத் தரப்பட்டுள்ளது.

"டயானாவை நம்பாதே" என்று ரொம்ஸே பிரபு எவ்வளவு தூரம் எடுத்துக்கூறியும் சார்லஸ் கேட்கவில்லையாம். எந்த மவுன்ட்பேட்டனின் பெயரைச் சொல்லி, தன்னால் அதுவரை காலமும் நெருங்க முடியாதிருந்த சார்லஸின் இதயவீணையை டயானா மீட்டினாரோ, அதே மவுன்ட்பேட்டனின் பேரன், அந்த வீணையில் ஒலிப்பது அபஸ்வரம் என்று சார்லஸுக்கு எடுத்துச் சொல்லியும் அது சார்லஸின் செவியில் ஏறவில்லை.

ரொடீஷியாவில் (இப்போது ஸிம்பாப்வே) முன்னாள் பிரிட்டிஷ் கவர்னராகக் கடமையாற்றிய நிக்கலஸ் ஸோம்ஸ் என்பவரும் சார்லஸின் நெருங்கிய நண்பர். சார்லஸைத் திருமணம் செய்வதற்கு டயானா அறவே அருகதை அற்றவர் என்பது அவரது திட்டவட்டமான முடிவு. அவரும் தடுத்துப் பார்த்தார். சார்லஸ் கேட்கவில்லை.

தனது ஏமாற்றத்தை எடின்பரோ கோமகனின் மீது திருப்பினார் ஸோம்ஸ். பத்திரிகைகள் கிசு கிசு எழுதத் தொடங்கிவிட்டதால் டயானாவுடன் ஏற்பட்டுள்ள நட்பை இழுத்தடிக்காமல், "ஆம்" அல்லது "இல்லை" என்ற ஒரு முடிவுக்கு சீக்கிரம் வருவது நல்லது என்று சார்லஸுக்கு அவரது தந்தை ஒரு கடிதம் எழுதியிருந்தார் என்று முன்னர் கண்டோம். எடின்பரோ கோமகனுக்கு ஏன் இந்த அவசரம்? அவர் அப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கடிதம் எழுதப்போய்த்தான் டயானாவைத் திருமணம் செய்வது என்ற அவரச முடிவுக்குச் சார்லஸ் வந்ததாக ஸோம்ஸ் ஆத்திரப்பட்டார்.

எடின்பரோ கோமகனின் அந்தரங்கச் செயலாளரான நூபர்ட் நெவில் என்பவர் ஸோம்ஸ் கலந்துகொண்ட ஒரு விருந்து வைபவத்திற்கு வந்தபோது தனது மனக்குமுறலை பலபேர் முன்னிலையில் வைத்து நெவிலிடம் வெளிப் படுத்தினாராம் ஸோம்ஸ்.

தனது இரு ஆப்த நண்பர்கள் கூறிய ஆலோசனையை சார்லஸ் வெளிப்படையாக நிராகரித்தாலும், என்ன முடிவு எடுப்பது என்பது பற்றி அவரது மனதில் ஒரு போராட்டமே நடந்து கொண்டிருந்தது. 1981ஆம் ஆண்டு, ஜனவரி 31ஆம் தேதி தனது நண்பர் ஒருவருக்கு சார்லஸ் எழுதிய கடிதத்திலிருந்து மேற்கோள் காட்டுகிறார் சேரா:

"...என்ன ஏது என்று தெரியாத ஒன்றுக்குள் குதித்து எனக்குப் பழக்கமில்லை. இது எனது மனதைக் குழப்புவது இயல்பே. கடைசியில் எல்லாம் சரியாக அமையும் என்று நம்புகிறேன். இந்த நாட்டுக்கும் எனது குடும்பத்துக்கும் சரியானது எதுவோ அதனைச் செய்யவே நான் நிச்சயமாக விரும்புகிறேன். அதனால் தான் இதெல்லாம் முட்டாள்தனமாகத் தெரிகிறது. ஆனால் ஒரு வாக்கைக் கொடுத்துவிட்டு, பின்னால் ஏன் இதனைச் செய்தோம் என்று கவலைப்படவேண்டி வந்துவிடுமோ என்பதே எனக்குப் பெரும் அச்சமாக உள்ளது..."

சரியாக ஐந்து நாட்கள் கழித்து, "என்னைத் திருமணம் செய்து கொள்கிறாயா?" என்று டயானாவைக் கேட்டு விட்டார் சார்லஸ்.

விதி அவருக்கு எழுதிய தீர்ப்பு அதுதான்.

டயானாவுக்கு வேல்ஸ் இளவரசி - வருங்கால பிரிட்டிஷ் அரசி ஆகிய பதவிகளின்மீதுதான் காதலே தவிர, சார்லஸ்மீது அல்ல என்று ரொம்ஸே பிரபுவும் அவரது மனைவியும் கணித்தது நூற்றுக்கு நூறு சரிதான் என்பது பதினேழு வருடங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் நிரூபிக்கப்பட்டது. அப்போது டயானா இறந்து, பத்து வாரங்கள் ஓடிவிட்டன. டயானா உயிரோடிருந்த கடைசி மூன்று ஆண்டுகளின்போது, கென்ஸிங்டன் அரண்மனைக்கு வந்து அவருக்குத் தினமும் சிகையலங்காரம் செய்த நட்டாலி சைமன்ஸ் என்ற பெண் வாயைத் திறந்தாள்.

டயானா இறப்பதற்கு ஐந்து மாதங்களுக்கு முன்னர் - ஒரு நாள் டயானாவுக்கு தான் சிகையலங்காரம் செய்து கொண்டிருந்தபோது டயானா ஒரு சஞ்சிகையைப் புரட்டிக் கொண்டிருந்தாராம். அந்தச் சஞ்சிகையில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜான் கென்னடியின் மகனதும் (அவருக்கும் ஜான் கென்னடி என்ற பெயர் தான்) அவரது மனைவி கரலின் பெஸட் என்பவரதும் படம் வெளியாகியிருந்தது.

**ஜான் கென்னடி (ஜூனியர்) திருமணம் செய்துகொண்டார் என்று கேள்விப்பட்டபோது தனது தலையில் இடி விழுந்ததைப் போலிருந்தது என்று டயானா சொன்னாராம். தனது மனதில் கென்னடி தனக்குத்தான் என்ற ஆசையை சிறுவயது முதலே வளர்த்து வந்தாராம் டயானா. கென்னடியைத் தான் கொத்தியிருந்தால், நிச்சயம் அவர்தான் அமெரிக்க ஜனாதிபதியாக வந்திருப்பார், தான் தான் அமெரிக்காவின் 'முதலாவது பெண்மணியாக' வந்திருப்பேன் என்றாராம் டயானா!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரேயொரு நிமிடத்தில் இளவரசியான ஒரு அனாமதேயம் போர்க்கொடி ஏந்தி அரண்மனையில் இழைத்த அட்டகாசம்!

நிச்சயதார்த்தம் அறிவிக்கப்பட்ட சிலநாட்களுக்குள் பக்கிங்ஹாம் அரண்மனையில் ஒரு பகுதி டயானாவுக்கு ஒதுக்கப்பட்டது. லண்டன் நகரில் அவர் ஏற்கெனவே வசித்து வந்த அடுக்குமாடி வீட்டில் பத்திரிகையாளர்களால் தொல்லை ஏற்பட்டுவிடும் என்று கருதி இந்த ஒழுங்கு செய்யப்பட்டது.

பக்கிங்ஹாம் அரண்மனையில் தன்னைத் தனியாக விட்டுவிட்டார்கள் என்றும் தன்னைக் கவனிப்பதற்கு யாருமே இருக்கவில்லை என்றும் மார்ட்டனின் நூலில் குற்றம் சாட்டியிருக்கிறார் டயானா. தனக்கு புலீமியா நோய் ஏற்பட்டதற்கு இதுதான் காரணம் என்றும் ஒரு பெரிய பழியைத் தூக்கிப் போட்டிருக்கிறார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் அபாண்டமானவை என்று டிம்பிள்பியின் நூலில் விளக்கம் தரப்பட்டுள்ளது.

டயானா அரண்மனைக்கு வந்து நான்கு வாரம் கழித்து இளவரசர் சார்லஸ் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு அவுஸ்திரேலியா, நியுசீலாந்து, வெனிஸுவேலா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குப் புறப்பட்டார். ஐந்து வாரங்கள் நீடித்த இந்த விஜயம் ஒரு வருடத்துக்கு முன்னாலேயே நிர்ணயம் செய்யப்பட்டதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவரசர் பயணம் புறப்படுவதற்கு முன்னால் தனது எதிர்கால மனைவியின் தேவைகளைக் கவனிக்க நான்கு அதி உயர்மட்ட அரண்மனை அதிகாரிகளை நியமித்துவிட்டுச் சென்றார்:

இளவரசரின் அந்தரங்கச் செயலாளர் எட்வர்ட் அடியேன் (இவர் மகாராணியின் முன்னாள் அந்தரங்கச் செயலாளர் மைக்கல் அடியேன் அவர்களின் மகன்); பிரான்ஸிஸ் கார்னிஷ் (இவர் இளவரசரின் உதவி அந்தரங்கச் செயலாளர் - அந்தப் பதவிக்கு வருமுன்னர், பிரிட்டனின் வெளிநாட்டுறவு அமைச்சில் உயர் பதவி வகித்தவர்); ஆலிவர் எவரெட் (இவரும் பிரிட்டனின் வெளிநாட்டுறவு அமைச்சில் உயர்பதவி வகித்தவர் - அங்கிருந்து பிரத்தியேகமாக வரவழைக்கப்பட்டு டயானாவின் அந்தரங்கச் செயலாளராக நியமிக்கப்பட்டவர்); மைக்கல் கோபன் (1975 வரை கடற்படையில் உயர் அதிகாரியாகக் கடமை வகித்துவிட்டு, அதை அடுத்து இளவரசர் சார்லஸின் அலுவலகத்தில் உயர்பதவி வகித்தவர்).

இது போதாதென்று, எலிஸபெத் மகாராணியார் தனது அந்தரங்க உதவியாளரான (தமிழகத்து அரச மரபின்படி - 'தோழி') சூசன் ஹுசே சீமாட்டியை டயானாவின் நலன்களைக் கவனிக்க நியமித்தார்.

சிரேஷ்ட அரண்மனை ஊழியர்களெல்லாம் எங்கே டயானா தங்களை அழைப்பார், எப்போது தங்களுக்குப் பணிகள் சொல்லுவார் என்று பேராவலுடன் காத்திருந்தார்களாம். அழகு மணிமாளிகையின் அலங்காரத் திருவுருவம் போல் வந்த புதிய இளவரசிக்கு சேவகம் செய்ய நான் முந்தி, நீ முந்தி என்று ஊழியர்கள் போட்டி போடுவது மனிதஇயல்பு தானே!

தன்னைக் கவனிக்க யாருமே இருக்கவில்லை என்று டயானா பழிசுமத்தியபோது அரண்மனை ஊழியர்கள் ஆத்திரம் கொண்டனர். டயானா சுமத்திய பழி ஒரு 'இராட்சத அபாண்டம்' என்று பல ஊழியர்கள் சேராவிடம் சொல்லியிருக்கிறார்கள்.

அரண்மனையில் கோபனின் அலுவலகத்தில் டயானாவுக்கு ஒரு பெரிய ஆபீஸ் மேஜையும் நாற்காலியும் வேறு போடப்பட்டிருந்ததாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிறிய அடுக்குமாடி வீட்டு அறையில் முடங்கிக்கிடந்த ஒரு நர்சரி ஆசிரியைக்கு, திருமணத்தின் முன்பாகவே இத்தனை ஆரவாரம், ஆலவட்டம், தடபுடல் செய்தது அவர் புகுந்த வீடு.

கல்லறைக்கு முன்னால் விரக்தி வேதாந்தம் பேசிக் கொண்டு, தனது பிறந்த வீட்டில் தேடுவாரற்று வெதும்பிய டயானா தனது புகுந்தவீடு தந்த பெருமையை மறந்ததோ மறைத்ததோ நியாயம் தானா?

டயானாவின் திருமணத்தின் முன்னரும் பின்னரும் மகாராணியும் எடின்பரோ கோமகனும் அவருக்கு மிகவும் அனுசரணையாக இருந்திருக்கிறார்கள். மகாராணி பல தடவைகள் டயானாவைத் தனியாகச் சந்தித்து அவர்களது இல்வாழ்க்கை சிறப்பாக அமைய ஆலோசனைகள் சொல்லி யிருக்கிறார். தனது மருமகளிடம் தனது மகனின் சில குறைகளையும் சொல்லி, அவற்றை டயானா எப்படி அணுகவேண்டும் என்றும் புத்திமதி சொல்லியிருக்கிறார்.

எடின்பரோ கோமகனுக்கு தனது மூத்த மருமகள்மீது அலாதி பிரியம். பலபேர் குழுமியிருக்கும் அறைகளுக்குள் வரும்போது டயானா அச்சமும் பதட்டமும் அடைவார். எடின்பரோ கோமகன் டயானாவுக்கு தெம்பூட்டி, அவரது தோளின்மீது தனது கரங்களை ஆதரவுடன் பதித்து அழைத்துவந்த சந்தர்ப்பங்கள் எத்தனையோ!

“பக்கிங்ஹாம் அரண்மனையில் நாதியற்றுக் கிடந்தேன்” என்று சொல்கிறார் டயானா.

அதே அரண்மனையில் தானே அவருடன் கூடப்பிறந்த அக்கா ஜேன் வசித்து வந்தார்? ஜேனுடைய கணவர்தானே அரண்மனையில் மகாராணியின் அந்தரங்கச் செயலாளர்? டயானா நாதியற்றுக் கிடந்தது உண்மையானால் ஏன் ஜேனிடம் முறையிடவில்லை? அந்த அரண்மனையில் மகாராணிக்கு அடுத்தபடியாக அதிகாரமும் செல்வாக்கும் உள்ள தனது சொந்த அத்தானிடம் ஏன் முறையிடவில்லை?

அரண்மனையின் அன்பற்ற சூழ்நிலையில்தான் தனக்கு புலீமியா நோய் ஏற்பட்டது என்பது மார்ட்டனின் நூலில் டயானா முன்வைத்த முக்கிய பழியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியானால், அவர் பிறந்தவீட்டில் அவர் பிறந்தநாள் முதல் அன்பு கொட்டோகொட்டு என்று கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டியதா? அந்த அன்புச்சூன்ய சூழ்நிலை ஏற்படுத்தாத புலீமியா நோயையா அரண்மனை ஏற்படுத்தியது? டயானாவின் மூத்த அக்காவான சேராவும் புலீமியா நோயை மிகவும் ஒத்த அனோரெக்ஸியா நேர்வோசா என்ற நோயினால் பீடிக்கப்பட்டார். அவருக்கு அந்த நோய் எப்படி ஏற்பட்டது? அவரும் அரண்மனைவாசியா என்ன?

டயானாவின் தம்பி சார்லஸ் ஸ்பென்ஸர் விக்டோரியா என்ற மாடல் அழகியை திருமணம் செய்தார். சார்லஸ் ஸ்பென்ஸருக்கு நான்கு பிள்ளைகளைப் பெற்றுக்கொடுத்தபின் விக்டோரியாவுக்கும் புலீமியா நோய் ஏற்பட்டது. குடிப்பழக்கத்துக்கும் விக்டோரியா அடிமையானாள். விக்டோரியாவுக்கு இந்த நோய்கள் எவ்வாறு ஏற்பட்டன? அரண்மனையின் அன்பற்ற சூழ்நிலைகள் காரணமாகவா? விக்டோரியாவும் அரண்மனைவாசியா என்ன?

நான்கு பிள்ளைகளை தனக்குப் பெற்றக்கொடுத்து, புலீமியா, நோய் கண்ட தனது மனைவிக்கு சார்லஸ் ஸ்பென்ஸர் என்ன செய்தார்? ஈவு இரக்கம் இல்லாமல் விக்டோரியாவை வீட்டை விட்டு விரட்டி, அதன் 'அவுட் ஹவுஸில்' வசிக்கச் சொன்னார். அவள்மீது தென்னாப்பிரிக்க நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்குப் பதிந்தார். அவளோ பிரிட்டனில் விவாகரத்து வழக்கு வருவதை விரும்பினாள். ஆனால் சார்லஸ் ஸ்பென்ஸர் மசியவில்லை. காரணம், விவாகரத்துத் தீர்வுத் தொகை பிரிட்டனில் தென்னாப்பிரிக்காவை விட அதிகமாக வரும் என்பதால் தென்னாப்பிரிக்க நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு நவம்பர் - டிசம்பர் 1997-ல் நடைபெற்றது. தென்னாப்பிரிக்காவில் வழக்கு நடைபெற்றால் 'பப்ளிசிட்டி' அதிகம் இருக்காது என்று ஸ்பென்ஸர் தப்புக் கணக்கு போட்டிருக்கக்கூடும். ஆனால், உலகெங்கும் இருந்து சிறப்புப் பத்திரிகை நிருபர்கள் தென்னாப்பிரிக்கா சென்று குவிந்தனர். உலகப் பத்திரிகைகளில் எல்லாம் ஸ்பென்ஸரின் வண்டவாளம் அம்பலமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினாறு கோடி டாலர் சொத்துக்கு அதி பதியான ஸ்பென்ஸர் தனது மனைவியை எத்தகைய உளரீதியான கொடுமைக்கு ஆளாக்கினார் என்பது வெளியாயிற்று. விக்டோரியாவுடன் இல்வாழ்க்கை நடத்திக்கொண்டே சன்டல் கலோப்பி என்ற தென்னாப்பிரிக்க அழகி ஒருத்தியைக் குறி வைத்தார். சன்டலுக்கு 37 வயது. திருமணமானவர். நவநாகரிக ஆடை அணி தயாரிப்பவர். சன்டலுக்குப் பின்னால் நாயாக அலைந்து அவர் இதயத்தில் இடம் பிடித்தார். அவளைத் திருமணம் செய்வதாக வாக்குறுதி அளித்து, அவளைத் தனது கணவரிடமிருந்து பிரித்தெடுத்தார். அவளோடு காமசுகம் அனுபவித்துவிட்டு அவளை விரட்டிவிட்டார்.

ஸ்பென்ஸர் - விக்டோரியா விவாகரத்து வழக்கில் விக்டோரியாவுக்கு ஆதரவாக சன்டல் சாட்சி சொல்ல முன் வந்தது எதிர்பாராத ஒரு திருப்பம். ஸ்பென்ஸரின் மனைவியும் வைப்பாட்டியும் ஒருங்கிணைந்து போர்க்கொடி தூக்கியதால் ஸ்பென்ஸரை நாற்றமடிக்க வைத்துவிட்டார்கள்.

சன்டலுக்கு ஸ்பென்ஸர் எழுதிய காதல்பிச்சைக் கடிதங்கள் நீதிமன்றத்தில் வெளியாகின. இக் கடிதங்களில் சன்டல் மீது கொண்ட காதலின் விளைவாக தனது மனைவியை தான் இம்சைப் படுத்தியதை ஸ்பென்ஸர் ஒத்துக் கொள்கிறார்.

புலீமியா நோய்ச் சிகிச்சைக்காக விக்டோரியா ஐந்து மாதகாலம் ஒரு மருத்துவ மனையில் தங்கியிருந்தார். சிகிச்சை முடிந்து அவர் வீடு திரும்பியதும் அவரைச் சொல்லம்புகளால் துளைத்துச் சித்திரவதை செய்திருக்கிறார் ஸ்பென்ஸர். "நீ வீட்டில் இல்லாத இந்த ஐந்து மாதகாலத்தில் பன்னிரண்டு பாவையர்களுடன் நான் உடலுறவு கொண்டிருக்கிறேன். நீ ஏன் திரும்பி வந்தாய்?" என்ற ரீதியில் தனக்கு நான்கு பிள்ளைகளைப் பெற்றுத் தந்த மனைவியைக் கேட்டிருக்கிறார். அவரது உள்ளத்தைச் சுக்கு நூறாக உடைத்திருக்கிறார்.

அது மட்டுமல்ல. ஒரு நாள், குளியலறையில் தண்ணீர்த் தொட்டியில் அம்மணமாகக் குளித்துக் கொண்டிருந்தார் ஸ்பென்ஸர். "விக்டோரியா இங்கே வா," என்று உரத்த குரலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மனைவியை அழைத்தார், கணவரின் குரல் கேட்டு குளியலறைக்கு ஓடோடிச் சென்றார் விக்டோரியா.

"நான் உன்னை விரும்பவில்லை. உன்னை மனைவியாக வைத்திருப்பதால் எனக்கு எந்தப் பிரயோஜனமும் இல்லை. உன்னுடனான திருமண வாழ்க்கை இன்றோடு முடிவடைந்து விட்டது," என்று மிகமிக அலட்சியமாக, இரத்தினச் சுருக்கமாகத் தீர்ப்பு எழுதி, தனக்கு நான்கு பிள்ளைகளைப் பெற்றுக் கொடுத்த தனது மனைவிக்கு நான்கே நான்கு வினாடிகளில் கல்தா கொடுத்தார் டயானாவின் மதிப்புக்குரிய தம்பி ஸ்பென்ஸர் பெருமகன்.

ஸ்பென்ஸர் தனது மனைவிக்கு **32** இலட்சம் டாலர்கள் செலுத்தவேண்டும் என்ற தீர்ப்புடன் விவாகரத்து வழங்கப் பட்டது. **4.8** இலட்சம் டாலர்களுடன் கதையை முடிக்க ஸ்பென்ஸர் எடுத்த முயற்சி பலிக்கவில்லை.

"வரிசையாகக் கள்ளக்காதல் புரிபவர்" (SERIAL ADULTERER) என்று இந்த வழக்கின்போது ஸ்பென்ஸரை வர்ணித்தனர் விக்டோரியாவின் வழக்கறிஞர்கள். உலகப் பத்திரிகைகளில் அது தலைப்புச் செய்தியாக வந்து ஸ்பென்ஸர்களின் குடும்ப கௌரவத்தைக் கப்பலேற்றியது.

அவரது வாழ்க்கையே இப்படிச் சீரழிந்த நிலையில் இருந்தபோதுதான் அவர் வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில் பிரசங்க மேடையில் ஏறி நின்று, சார்லஸ் - டயானாவின் பிள்ளைகளை வளர்ப்பதில் 'இரத்த உறவுக்காரரான' தனக்கு உள்ள புனிதமான பங்கையும் உரிமையையும் பற்றி வேதம் ஓதினார்!

விவாகரத்து என்று வந்ததும் நாலு பிள்ளை பெற்றுத்தந்த தனது மனைவியை அவுட்ஹவுஸுக்கு பிரஷ்டம் செய்தார் டயானாவின் தம்பி.

விவாகரத்து என்றதும் இரண்டு பிள்ளை பெற்றுத் தந்த சார்லஸ் ஸ்பென்ஸரின் அக்காவுக்கு முழு கென்ஸிங்டன் அரண் மனையையே கொடுத்துவிட்டு, சென்ஜேம்ஸ் அரண்மனையின் இரு அறைகளுக்குள் ஒதுங்கிவிட்டார் இளவரசர் சார்லஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவரசர் சார்லஸ் தொடர்ந்தும் கொடுத்துவந்த பணத்தில் இயங்கிய கென்ஸிங்டன் அரண்மனையில் சுகவாசம் செய்துகொண்டு, அங்கிருந்துகொண்டே மகாராணியின் பக்கிங்ஹாம் அரண்மனைக்கும் இளவரசர் சார்லஸுக்கும் எதிராக போட்டி தர்பார் நடத்திவந்தார் சார்லஸ் ஸ்பென்ஸரின் அக்கா டயானா. அதுமட்டுமல்லாமல் தனது கணவருடன் விவாகரத்து நிறைவேறுவதற்கு முன்பாகவே தனது 'சின்ன வீடுகளையும்' அந்த அரண்மனையில் வசிக்கவைத்து சிற்றின்பம் கண்டார் டயானா.

திருமணத்திற்கு ஓரிரு வாரங்களே இருக்கையில் பிபிஸி தொலைக்காட்சியினர் டயானாவைப் பேட்டி கண்டனர். "அரச குடும்ப வாழ்க்கைக்கு ஏற்றபடி உங்களை மாற்றிக்கொள்ள முடியும் என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டார்கள். "ஓ முடியுமே, ஏற்கெனவே எத்தனையோ விஷயங்களைக் கற்றுக்கொண்டேன். அது ஒரு பிரச்னையே அல்ல," என்று அடித்துச் சொல்லிவிட்டார் டயானா.

சொன்னது ஒன்று. செய்ததோ இன்னொன்று.

அரண்மனைக்கு ஏற்றபடி தன்னை மாற்றிக்கொள்வதற்குப் பதிலாக தனக்கேற்ப அரண்மனையை மாற்றியமைக்க முயன்றார். வெண்கலக் கடையில் புகுந்த யானை போல் நடந்துகொண்டார். தேவதைகளே காலடி வைக்கத் தயங்கும் இடத்திற்கு மூடர்கள் நாலுகால் பாய்ச்சலில் செல்வார்கள் என்பது ஷேக்ஸ்பியர் சொன்ன பொன்மொழி. அரச குலத்தில் பிறந்த அமன்டாவே காலடி வைக்கத் தயங்கிய பக்கிங்ஹாம் அரண்மனைக்கு நாலுகால் பாய்ச்சலில் வந்தார் டயானா. பக்கிங்ஹாம் அரண்மனை என்ன, வாய்ப்புக் கிடைத்தால் வாஷிங்டனிலுள்ள வெள்ளை மாளிகைக்கே நாலுகால் பாய்ச்சலில் செல்லமுடியுமா என்று நப்பாசை வைத்துக்கொண்டவர்தானே டயானா.

திருமணம் நடைபெறுவதற்கு முன்னர் ஒரு நாள், சார்லஸ் டயானாவை மகாராணியின் நண்பர் ஒருவரின் இல்லத்திற்கு அழைத்துச் சென்றிருக்கிறார். அந்தச் சந்தர்ப்பத்தில் டயானா சார்லஸுக்கு கட்டளைகளிடுவதும் விரட்டியடிப்பதுமாக இருந்தாராம். திகைத்துப் போனார் மகாராணியின் நண்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்லஸை டயானா அவமானப் படுத்திய விதத்தைப்பற்றி இந்த நண்பர் பிம்லட்டிற்கு விவரித்துள்ளார். திருமணத்திற்கு முதலில் இருந்தே வீட்டு அதிகாரத்தை தனது கைகளில் டயானா எடுத்ததோடு மட்டுமல்லாமல் வருங்காலக் கணவரை ஒரு வேலைக்காரன் போல நடத்த முற்பட்டதற்கும் இது ஒரு எடுத்துக்காட்டு.

நான்கு பேர் முன்னிலையிலேயே டயானா சார்லஸை இந்தப் பாடுபடுத்தினார் என்றால் நான்கு சுவர்களுக்குள் என்ன போடு போட்டிருப்பார் என்பதைக் கற்பனை செய்து பார்க்கவேண்டும். திருமணம் ஆவதற்கு முன்னாலேயே இத்தனை கெடுபிடி என்றால், திருமணத்தின் பின்னர் எத்தகைய கொடுமுடி ஆட்சியை டயானா கட்டவிழ்த்து விட்டிருப்பாரோ?

சிறுவயதில் தனது பிறந்த வீட்டில் டயானா நிறைவேற்றிய 'ஆயாவதைப் படலம்' ஞாபகம் இருக்கலாம். அத்தகைய ஒரு 'ஊழியர்களை படலத்தை' தனது திருமணத்தின் பின்னர் ஆரம்பித்தார். சார்லஸுக்கு விசுவாசமுள்ள ஸ்டீபன் பறி என்ற அந்தரங்க உதவியாளரை வேலையை விட்டுவிரட்டினார். இளவரசரின் அந்தரங்கச் செயலாளரான எட்வர்ட் அடியேனுக்கு நெருக்கடி தந்தார். சார்லஸ் தனது உத்தியோகபூர்வமான கடிதப் போக்குவரத்துகளை உடனுக்குடன் செய்வதில்லை. காலையில் அடியேன் சார்லஸைப் பிடித்து உட்காரவைத்து அந்தக் கடிதவேலைகளைக் கவனிப்பார். டயானா அடியேனுக்கு ஒரு கடிதம் எழுதினார். அடியேன் கடிதப் போக்குவரத்துகளை சார்லஸுடன் இதுநாள் வரையில் கவனித்து வந்த நேரம் இனிமேல் சார்லஸுக்கு ஒத்துவராது. அந்த நேரத்தில் அவர் இனிமேல் இளவரசர் வில்லியத்துடன் விளையாடப்போகிறார் என்று எழுதி அந்த அதிகாரியை டயானா அவமானப் படுத்தினார். 'சார்லஸுக்கும் எஜமானி தானே' என்பதை சொல்லாமல் சொல்லிக் காட்டினார். இத்தகைய குத்துவெட்டுக்கள் குடும்பத்தினுள் அதிகரிக்கவே அடியேன் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

தனது அந்தரங்கச் செயலாளரான ஆலிவர் எவரெட்டை ஏறெடுத்தும் பார்க்காமல் டயானா சித்திரவதை செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரும் ராஜினாமா செய்தார். சார்லஸின் அலுவலகத்தில் செயலாளராக இருந்த மைக்கல் கோபன் முன்னிலையில் சார்லஸுடன் கத்திக்கூச்சலிட்டு பலதடவைகள் சண்டை போட்டார் டயானா. டயானாவுக்கு சமாதானம் சொல்ல கோபன் முயன்றால் அவரை ஏறெடுத்தும் பார்க்கமாட்டாராம் டயானா. நிம்மதி இழந்த சார்லஸ், டயானாவுடன் கத்துவதற்குப் பதிலாக அலுவலகத்தில் கோபனுடன் கத்துவாராம். இந்த வேதனையைத் தாங்க முடியாமல் கோபனும் தானாகவே போய்விட்டார்.

கென்ஸிங்டன் அரண்மனையில் எந்தநேரமும் சண்டை. விருந்துபசார வைபவங்களும் நடைபெறுவதில்லை. சார்லஸின் நண்பர்கள் விருந்துக்கு வந்தால் தான் கலந்துகொள்ளமாட்டேன் என்று டயானாவின் கெடுபிடி. இந்த அரண்மனையில் எனக்கென்ன வேலை என்று பிரதம சமையற்காரரும் கழன்றுவிட்டார்.

ஹார்வி என்ற பெயருள்ள லப்ரடார் நாயை சார்லஸ் ஆசையுடன் வளர்த்து வந்தார். இரண்டு காலுள்ள ஜீவன்களுக்குத் தான் கல்தா என்றால், அந்த வாயில்லாத நாலு கால் ஜீவனுக்கும் கல்தா கொடுத்தார் டயானா. "நான் வேண்டுமா, நாய் வேண்டுமா," என்று கெடு விதித்தார். நன்றி, விசுவாசம் உள்ள நாயையும் துறந்தார் இளவரசர்.

இளவரசர் சார்லஸிடமிருந்து, கென்ஸிங்டன் அரண்மனையிலிருந்து, அந்த அமானுஷ்ய உறவும் பிரிக்கப்பட்ட போது, அந்த நாய்க்கு மட்டும் பேசும் சக்தி இருந்தால், "எஜமான், அவளை நம்பாதீர்கள், அவளை நம்பாதீர்கள், அவள் சண்டாளி," என்று தொண்டை வரளும்வரை கத்தியிருக்குமோ என்னவோ?

விசுவாசமான ஊழியர்களை வெட்டிவிட்டது போல, நன்றியறிதல் உள்ள நாயைத் தொலைத்தது போல, உனது நண்பர்களுக்கும் குடிமுழுகிவிடு என்று ஆர்ப்பரித்தார் டயானா. 'உயிர் காப்பான் தோழன், கொலையும் செய்வாள் பத்தினி' என்ற ஆன்றோர் வாக்குக்கமைய இளவரசர் சார்லஸுக்காக உயிரையே கொடுக்கக்கூடிய நண்பர்கள் சிலரைக் குறிவைத்தார் டயானா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பால்ய வயதுமுதலே இளவரசருடன் நெருங்கிப் பழகியவர்கள். பிரிட்டிஷ் சமுதாயத்திலே மிக உயர் மட்டத்தைச் சேர்ந்த பிரமுகர்கள்.

இவர்களால் தான் எங்கள் குடும்ப வாழ்வில் குழப்பம். இவர்களை ஒதுக்கித் தள்ளினால்தான் எங்கள் வாழ்வில் வசந்தம் பிறக்குட் நானா? அவர்களா? - என்று கெடு விதித்தார் டயானா.

கைகேயியின் கெடுவிற்கு இரையான தசரதன் போல், உயிர் காக்கும் தோழர்களையும் விட்டுக் கொடுத்தார் சார்லஸ். அன்றிலிருந்து அவர்களுக்கு கடிதம் எழுதுவதை நிறுத்தினார். தொலைபேசியில் பேசுவதை நிறுத்தினார். விருந்துகளுக்கு அழைப்பு அனுப்புவதை நிறுத்தினார்.

தனது நாட்டுக்காக, தனது குடும்பத்துக்காக டயானாவைத் திருமணம் செய்து கொள்வதாக திருமணத்திற்கு முன்னரே அறிவித்த சார்லஸ், அந்தத் திருமணம் சின்னாபின்னம் ஆவதைத் தடுப்பதற்காக தனது உயிர் காக்கக்கூடிய தோழர்களையும் துறந்தார்.

இந்த நண்பர்களுள் பிரபோண் தம்பதிகள், ரொம்ஸே தம்பதிகள், பாமர் டாம்கின்ஸன் தம்பதிகள், ஸோம்ஸ் ஆகியோரும் அடங்குவர்.

சார்லஸ் தங்களுடைய உறவை வெட்டிவிட்டதற்காக அவர்கள் வேதனைப்பட்டார்கள். ஆனால் அம்பை நொந்துகொள்ளவில்லை. எய்தது யார் என்று அவர்களுக்குத் தெரியும். எட்ட இருந்தாலும் சார்லஸின் நலன்களை கவனித்துக்கொண்டுதான் இருந்தார்கள். சார்லஸ் மீது அவர்கள் வைத்த பாசம் இம்மியளவும் குறையவில்லை.

போர்க்கொடி ஏந்தி டயானா அட்டகாசம் செய்தபோதெல்லாம் வெள்ளைக்கொடி ஏந்தி சமாதானம் பேசினார் பிரிட்டிஷ் மகாராணியின் முடிக்குரிய மூத்த மகன். பலியாக டயானா கேட்ட தலைகளையெல்லாம் (விசுவாசமான நாயின் தலை உட்பட) பலிபீடத்திலும் வைத்தார். எதற்காக? இல்லற வாழ்க்கையின் இலக்கணம் என்று வர்ணிக்கப்பட்டு வந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச குடும்பத்தின் பெயரைக் காப்பாற்றுவதற்காக! தனது நாட்டிற்கும் குடும்பத்திற்கும் நல்லதையே செய்வதற்காக! இந்தத் தியாகங்களை எதிர்கால பிரிட்டிஷ் அரசனின் பலம் என்று சார்லஸ் கருதினார். பலவீனம் என்று கணக்கிட்ட டயானா அதனை மேலும் பயன்படுத்தத் திட்டம் தீட்டினார்.

அன்ட்ரூ மார்ட்டனின் நூலில் சார்லஸ் மீது டயானா சுமத்திய பெரிய பழிகளில் ஒன்று அவருக்கும் கமிலாவுக்கும் இருந்த தொடர்பு. 'சார்லஸ் தன்னைக் காதலித்த அதே வேளையிலும் கமிலாவின் தொடர்பை விடவில்லை. தன்னைத் திருமணம் செய்த பின்பும் கமிலாவின் தொடர்பை விடவில்லை'. இதுதான் டயானாவின் குற்றச் சாட்டு.

இந்தக் குற்றச்சாட்டு நியாயமானதா?

இதைப்பற்றி டிம்பிள்பி சில தகவல்களைத் தருகிறார். சார்லஸுக்கும் டயானாவுக்கும் நிச்சயதார்த்தம் நிறைவேறியதை அடுத்து ஒரு நாள், கமிலா விவகாரத்தை தானாகவே வலியவந்து டயானாவுக்கு விளக்கியிருக்கிறார் சார்லஸ். அதுநாள்வரை தனக்கு மிகமிக நெருக்கமான பெண்சிநேகிதியாக கமிலா விளங்கிவந்திருக்கிறாள். அது இறந்தகாலம். டயானாவைத் திருமணம் செய்யும் நோக்கத்துடன் நிச்சயதார்த்தமும் நடந்துவிட்டது. இனிமேல் அவரது வாழ்க்கையில் டயானாவைத் தவிர வேறெந்தப் பெண்ணுக்கும் இடமில்லை என்று அறுதியிட்டுச் சொன்னார் சார்லஸ்.

டயானாவைத் திருமணம் செய்துகொள்வதற்கு முன்னால், பதினொரு ஆண்டுகாலமாக சார்லஸின் பெண்சிநேகிதியாக இருந்தவர் கமிலா. இதை நாடறியும். டயானாவும் அறிவார். சார்லஸை (அல்லது வேல்ஸ் இளவரசி என்ற பதவியை) டயானா விரட்டி விரட்டிக் காதலித்த காலத்திலேயே இந்த உறவின் பக்கவிளைவுகளைச் சந்திக்கத் தயாராக இருந்திருக்கவேண்டும். இரவோடிரவாக சார்லஸின் மனதில் இருந்து பதினோராண்டு களின் பசுமையான நினைவுகளைக் கூட்டிப்பெருக்கிச் சுத்தம் செய்துவிட முடியாது. கமிலாவினுடைய உறவின் நினைவுச் சின்னங்கள் சார்லஸின் இல்லத்தில் இருக்கத்தான் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்லஸின் மனதிலிருந்து கமிலாவை அகற்றுவதானால் டயானா சார்லஸை தனது அன்பு வெள்ளத்தினால் மூழ்கடித்திருக்க வேண்டும். அத்தகைய வெள்ளம்தான் சார்லஸின் மனதிலிருந்து கமிலாவின் நினைவுகளை உடனடியாக அடித்துச் சென்றிருக்க முடியும்.

ஆனால் டயானா என்ன செய்தார்? 'எனது வாழ்க்கையில் உன்னைத் தவிர வேறெந்தப் பெண்ணுக்கும் இனி இடமில்லை' என்று கூறிவிட்டு இளவரசர் சார்லஸ் ஐந்துவாரம் வெளிநாடு சென்றிருந்தார். இளவரசர் சார்லஸின் அலவலகத்தில் தனக்குப் போடப்பட்டிருந்த மேஜை நாற்காலியில் வந்தமர்ந்தார் டயானா. தனது 'அலுவலகப் பணியை' ஆரம்பித்தார். அப்படி என்ன பணி?

தனது நிரந்தரச் செயலாளர் திருவாளர் சந்தேகப் பிசாசின் உதவியுடன் ஒரு புலன் விசாரணையை ஆரம்பித்தார். 'இளவரசர் சார்லஸின் வாழ்க்கையில் அதுகாறும் சம்பந்தப்பட்ட பெண்கள் யார் யார்? அவர்களுக்கும் இளவரசருக்கும் எவ்வளவு தூரம் உறவு நிலவியது? குறிப்பாக, கமிலாவுக்கும் சார்லஸுக்கும் இடையே என்னென்ன நடைபெற்றது?' கோபன், கார்னிஷ் இருவரும் தீவிர குறுக்கு விசாரணைக்கு உள்ளானார்கள்.

சார்லஸ் - டயானா திருமணத்தை ஒட்டி எத்தனையோ பேரிடமிருந்து பல்வேறு பரிசுப் பொருட்கள் சார்லஸின் அலுவலகத்திற்கு வரத் தொடங்கியிருந்தன. இவை யாவும் டயானாவின் தீவிர பரிசீலனைக்கு உள்ளாகின. பரிசை அனுப்பியது யார் யார், அவர்களுடைய பின்னணி என்ன என்பது கவனமாக விசாரிக்கப்பட்டது. டயானா கமிஷனின் விசாரணை ஜெயின் கமிஷனை விட ஜரூராக நடைபெற்றது. கோபன், கார்னிஷ் குறுக்கு விசாரணையுடன் ஆரம்பித்த ஆராய்ச்சி விரிவடைந்தது. சார்லஸுடன் தொடர்புடைய ஊழியர்கள் அத்தனை பேரையும் உள்ளடக்கியது.

அப்போது தான் அந்தக் காப்பு அகப்பட்டது. கமிலாவுக்குக் கொடுப்பதற்காக சார்லஸ் தருவித்த காப்பு!

வெளிநாட்டுப் பயணங்களை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு சார்லஸ் நாடு திரும்பியதும் திரும்பாததுமாக போர்முரசு கேட்டுத் திகைத்துப்போனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியன் சபையில் "இந்தச் சிலம்புக்குப் பதில் சொல் கொற்றவனே" என்று கண்ணகி தலைவிரித்து நீதிகேட்டு நின்றதுபோல, கென்ஸிங்டன் சபைய்யில் "இந்தக் காப்புக்குப் பதில் சொல்லடா மகாராணி மைந்தா" என்று முடிசிலிர்த்து சந்தேகம்கேட்டு நின்றனர் ரௌத்ராதேவி டயானாவும் அவரது நிரந்தரச் செயலாளர் ஐயதேவனும்!

"கமிலாவுடன் இத்தனைகாலம் பழகியிருக்கிறேன். அவள் எனக்கு மிகவும் ஆதரவாக எந்நாளும் இருந்தாள். அவள் எந்தத்தப்பும் செய்யவில்லை. கமிலாவை எனது வாழ்க்கையில் இருந்து முற்றாக விலக்கி வைக்கும் நேரம் வந்துவிட்டது. இது எனக்கும் தெரியும். அவளுக்கும் தெரியும். இதை ஒரு நாகரீகமான முறையில் செய்தாக வேண்டும். அதை எப்படிச் செய்வது என்று சில உற்ற நண்பர்களுடன் பேசினேன்; ஒரு முடிவுக்கு வந்தோம்.

"கமிலாவுக்குக் கடைசிப் பரிசாக அளிக்க ஒரு காப்பை வாங்கும்படி கோபனைப் பணித்தேன். அவரும் ஒரு காப்பை விலைக்கு வாங்கினார். திருமணத்திற்கு முன்னர் கமிலாவைக் கடைசி முறையாகச் சந்தித்து அந்தக் காப்பை நேரடியாகக் கொடுத்துவிடலாம் என்று இருக்கிறேன்."

இது சார்லஸ் கொடுத்த விளக்கம்.

அப்படியே கமிலாவைச் சந்தித்தார். காப்பைக் கொடுத்தார். கதை அத்தோடு முடிந்தது என்று இருவரும் விட்டுவிட்டனர்.

ஆனால் கதையை முடிக்க டயானா விடவில்லை. டயானா விட்டு விட்டாலும் அவரது நிரந்தரச் செயலாளர் திருவாளர் சந்தேகப் பிசாசு விடவில்லை. அவர் குப்பையைத் தொடர்ந்து கிளறிக்கொண்டே இருந்தார்.

அம்பட்டன் குப்பையைக் கிளறினால் என்ன வரும்?

இந்த நிலையில்தான் டயானா இருந்தார். மார்ட்டனின் நூலுக்காக அவர் ஒலிப்பதிவு செய்ததில் இருந்து இதோ ஒரு பகுதி:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கமிலாவின் நினைவு என்னைப் பைத்தியம் பிடித்தவள் போல் ஆக்கியது. அவரை (சார்லஸை) நான் நம்பவில்லை. அவர் ஐந்து நிமிடத்திற்கொரு தடவை கமிலாவுக்கு தொலைபேசி எடுத்து தன்னுடைய திருமண வாழ்க்கையை நடத்துவது எப்படி என்று ஆலோசனை கேட்டுக் கொண்டிருந்தார் என்று நம்பினேன்."

சந்தேகம் என்பது எல்லா மனிதர்களுக்கும் இயல்பாக இருக்கவேண்டிய ஒரு குணம். ஆனால் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சன்றோ? சந்தேகம் அளவுக்கு மீறி அமையும்போது அது கொடிய ஒரு மனநோயாக மாறிவிடுகிறது. சோவியத் சர்வாதிகாரி ஸ்டாலினுக்கு சந்தேகம் என்ற மனநோய் இருந்தது. "மருண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பது போல, தனக்கு எதிரானவர்கள் என்று யார் யாரையெல்லாம் அவர் சந்தேகித்தாரோ, அவர்களையெல்லாம் ஒருவித விசாரணையும் இல்லாமல் தயவு தாட்சணியம் இல்லாமல் கொன்று குவித்தார். இலட்சக்கணக்கானோர் உயிர் துறந்தனர்.

டயானாவின் சந்தேக நோயோ அவரது இல்வாழ்க்கையைச் சின்னாபின்னப்படுத்தியது. இளவரசருக்குக் களங்கத்தைத் தேடித் தந்தது. அரண்மனையின் கௌரவத்தைக் கெடுத்தது. இறுதியில் அவரது வாழ்க்கையையும் அணைத்துவிட்டது.

திருமணம் என்றால் என்ன என்பதைப் பற்றி சார்லஸின் எதிர்பார்ப்புகள் என்ன, அமன்டாவின் எதிர்பார்ப்புகள் என்ன என்பதனை ஏற்கெனவே கண்டோம். டயானாவின் எதிர்பார்ப்புகள் என்ன? மார்ட்டனின் ஒலிப்பதிவு விடை தருகிறது.

"இளம் பெண்ணாக இருந்தபோது நான் பல கனவுகள் கண்டேன். எனக்கு என்னென்ன வேண்டும் என்பன பற்றிய கனவுகள். என்னென்னவோ கனவுகள். என்னுடைய கணவர் என்னை நல்லமுறையில் கவனிக்க வேண்டும் என்ற கனவு. **அவர் எனக்கு ஒரு தந்தை ஸ்தானத்தில் இருக்க வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு நல்லாதரவு தரவேண்டும். எனக்கு ஊக்கமளிக்க வேண்டும். **ஏதாவது செய்யும்போது, ஒன்றில் "சபாஷ் டயானா" என்று சொல்லவேண்டும்; அல்லாவிடின் "ஊஹூம், அது போதாது" என்று சொல்லவேண்டும்.** அப்படியொன்றும் எனக்குக் கிடைக்கவில்லை. என்னால் அதனை நம்பமுடியவில்லை... அவர் என்னைக் கணக்கில் சேர்க்கவேயில்லை.."

டயானாவுடைய திருமண எதிர்பார்ப்பு விசித்திரமாக இல்லை? இளவரசர் சார்லஸுக்கும் டயானாவுக்கும் பன்னிரண்டு வயது வித்தியாசம் என்பதனால் தனக்கு மகள் ஸ்தானத்தில் ஒரு மணப்பெண்ணை இளவரசர் தேடினாரா என்ன? தன்னையே முடிக்குரிய இளவரசியாகவும், எதிர்கால மகாராணியாகவும் உருவகித்துக்கொண்டு, சார்லஸை, வேறு வேலைவெட்டி இல்லாத, தனக்கு ஜால்ரா போடுவதற்கென்றே அமர்த்தப்பட்ட கணவர் என்று டயானா உருவகித்துக் கொண்டாரா என்ன?

இந்தக் காட்சியை சினிமாப் படமாக இயக்கும் வாய்ப்பு இந்த நூலாசிரியருக்குக் கிடைத்திருந்தால், டயானா பாத்திரத்திற்கு கோவை சரளாவையும் சார்லஸ் பாத்திரத்திற்கு செந்திலையும் ஒப்பந்தம் செய்திருப்பார். 24 மணி நேரமும் செந்தில் கோவை சரளாவைச் சுற்றிச் சுற்றி வந்து, மாறி மாறி "சபாஷ் டயானா," என்றும் "ஊஹூம் போதாது டயானா," என்றும் கூறிக்கொண்டிருப்பார்!

முடிக்குரிய இளவரசருக்கு வேறு வேலை கிடையாதா? உண்டு உறங்குவதும், உடலுறவு கொள்ளுவதும், பெண்டாட்டிக்குப் பின்னால் சுற்றிக்கொண்டு ''சபாஷ்'', "ஊஹூம்", "சபாஷ்", "ஊஹூம்" என்று ஜால்ரா போடுவதும் தான் வாழ்க்கை என்று டயானா நினைத்திருப்பாரோ?

தான் இறப்பதற்குச் சில நாட்களுக்கு முன்னர் அமெரிக்கப் பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் டயானா கூறியது கவனத்திற்குரியது. மகாராணி ஆகும் வாய்ப்பைத் தான் இழந்தது கவலைக்குரியது என்பதை அவர் ஒத்துக்கொண்டார். காலையில் இருந்து மாலைவரை தான் பலரது கைகளைக் குலுக்கிக் கொண்டு இருந்திருப்பாராம்! சீரியஸான பிரசங்கங்களை எல்லாம் சார்லஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனித்திருப்பாராம்! 'எவ்வளவு ஆனந்தமாக இருந்திருக்கும்' என்று டயானா சலித்துக்கொண்டார்!

நல்ல ராஜா! நல்ல ராணி! பிரசங்கம் செய்வது ராஜாவின் தொழில்! கைகுலுக்குவது ராணியின் தொழில்! சொன்னவர் மாஜி நர்சரி ஆசிரியை! பத்தாம் வகுப்புப் பரீட்சையை முக்கி முக்கி மூன்று தடவைகள் எடுத்தும் பத்துப் பாடங்களில் ஒன்றிலாவது சித்தி அடையாமல் போனது ஏனென்று மேலும் விளக்கத் தேவையில்லை.

எல்லாருடைய கவனத்தையும் எந்நேரமும் ஈர்க்கவேண்டும் (ATTENTION SEEKING BEHAVIOUR) என்பது டயானாவின் ஆளுமைக் கோளாறின் தன்மைகளுள் ஒன்று. எல்லாருடைய கவனத்தையும் எந்நேரமும் ஈர்க்கவேண்டிய முடிக்குரிய இளவரசருக்கு வாழ்க்கைப்பட்டுவிட்டு, ஈர்ப்பு மையமாகதானே இருக்கவேண்டும் என்று கருதுவது விபரீதம். இந்தப் பிரச்னை சார்லஸ் - டயானா வாழக்கையில் சதா தலைவிரித்து ஆடியது.

லண்டனில் உள்ள பிரதம இருதய சத்திரசிகிச்சை நிலையத்தில் இருதய சர்ஜனாக ஹஸ்னத் கான் என்ற டாக்டர் கடமையாற்றினார். டயானா பிற்காலத்தில் அவருடன் இரகசியக் காதலுறவு வைத்திருந்தார். அவருடனும் அடிக்கடி சண்டை தானாம். "உங்களுக்கு என்னைப் பற்றிக் கவலையில்லை. முழு நாளும் உங்களுக்கு ஆபரேஷன் தானா?" என்ற ரீதியில் அந்த டாக்டரைத் திட்டுவாராம். தொழில் நேரத்தைக் குறைத்துக் கொண்டு தன்னோடு கூடுதல் நேரத்தைச் செலவிடவேண்டு மென்று சண்டை போடுவாராம்.

பின்னர், டோடி அல்பாயத்துடன் காதல் உறவு மலர்ந்தபோது, தான் சொர்க்க சுகத்தை அனுபவித்துக்கொண்டு இருப்பதாகக் கூறினாராம் டயானா. டோடியை டயானாவுக்கு மிகவும் பிடித்துப் போனதற்கு காரணம் என்ன தெரியுமா? டோடியின் வாழ்க்கையைப் பொறுத்த மட்டில் முதல் இடம் டயானாவுக்குத் தானாம், அதற்குப் பிறகுதான் வேறு எதுவும் வருமாம். டயானாவை மையமாக வைத்து, அந்த மையத்தைச் சுற்றித் தான் டோடி தனது அன்றாட வாழ்க்கையை அமைத்துக் கொண்டாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குச் சிகையலங்காரம் செய்வதற்காக தினமும் வரும் பெண்ணிடம் இந்தக் கருத்துக்களை அன்றாடம் சொல்லுவாராம் டயானா. தனது தந்தை சம்பாதித்து வைத்த பில்லியன் அளவிலான செல்வத்தை அனுபவிப்பதையே அன்றாட தொழிலாகக் கொண்ட டோடியைப் போல் எந்நேரமும் டயானாவைச் சுற்றிச் சுற்றி வர ஒரு சர்ஜனாலும் முடியாது. முடிக்குரிய இளவரசராலும் நிச்சயமாக முடியாது.

1986-ம் ஆண்டுவரை டயானா புலீமியா வாந்தியோடு வாழ்க்கை நடத்தி அதற்கான பழியை சார்லஸ் மீதுண்டும் அரண்மனை மீது போட்டுக்கொண்டும் சண்டையிழுத்துக் கொண்டும் இருந்தார். சார்லஸ் வரவழைத்த மனநோய் மருத்துவர்களுக்கு உண்மைப் பிரச்னையைச் சொல்லவும் இல்லை. அவர்களோடு ஒத்துழைக்கவும் இல்லை. தனக்கு மனநோய் எதுவும் இல்லை என்று அடித்துக் கூறி அவர்களை வரவேண்டாம் என்றும் சொல்லிவிட்டார். ஆனால் திருமணத்திற்கு முன்பாகவே டயானாவுக்கு சாப்பாட்டைப் பொறுத்தமட்டில் ஒரு பிரச்னை இருந்ததை பல அரண்மனை ஊழியர்கள் அவதானித்தனர். தன்னந்தனியாக டயானா அடுக்களைக்குள் சென்று, 'கடோற்கஜ போசனம்' நடத்துவதை அவர்கள் பார்த்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு தனது பாத்ரூமுக்கு வந்து வாயில் விரலைவிட்டு டயானா வாந்தியை வரப் பண்ணுவது அவர்களுக்குத் தெரியாது. இது ஒரு மனநோய் என்பதும் அவர்களுக்குத் தெரியாது.

எஜமானி கடோற்கஜ போசனம் புசிக்கிறார் என்று எந்த வேலைக்காரராவது எஜமானிடம் முறையிடுவாரா என்ன?

தனக்கு புலீமியா நோய் இருப்பதை டயானா ஒத்துக் கொண்டு மனநோய் மருத்துவர்களுடன் ஒத்துழைத்து, சிகிச்சை ஆரம்பித்தது எப்போது தெரியமா?

<u>1986ல்.</u>

அப்போது அவரது திருமணம் குடைசாய்ந்து விட்டது. அவரும் சார்லஸும் ஏற்கெனவே உத்தியோகப் பற்றற்ற முறையில் பிரிந்து வாழ ஆரம்பித்த காலம் அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ, அன்ட்ரூ மார்ட்டனின் நூல் ஒலிப்பதிவிலிருந்து:

"..கரலின் பத்தோலமியூ ஓரிரவு என்னுடன் தொலைபேசியில் பேசினார். 'வாந்தி எடுக்கும்போது உடலிலுள்ள பொட்டாசியம், மக்னீஸியம் கனிப்பொருள்கள் வெளியேறுவதால் பயங்கரமான மனச்சோர்வு ஏற்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியுமா?' 'இல்லை', என்று நான் சொன்னேன். 'அப்படியா, உங்களுக்கு உள்ள நோய் அதுவாகத் தான் இருக்கவேண்டும். இதைப்பற்றி எவரிடமாவது சொன்னீர் களா?' 'இல்லை', என்று நான் சொன்னேன். 'நீங்கள் இதைப்பற்றி ஒரு டாக்டருக்குச் சொல்லவேண்டும்,' என்றார் அவர். 'என்னால் சொல்ல முடியாது', என்று மறுத்துவிட்டேன். கரலின் சொன்னார்: 'இல்லை, நீங்கள் சொல்லித்தான் ஆகவேண்டும். உங்களுக்கு நான் ஒரு மணிநேர அவகாசம் தருகிறேன். அது முடிவதற்குள் நீங்கள் உங்கள் டாக்டருக்குத் தொலைபேசி எடுத்து எல்லா உண்மைகளையும் சொல்லித்தான் ஆகவேண்டும். சொல்லத் தவறினால் அதை நான் உலகத்திற்குச் சொல்லப் போகிறேன்.' கரலின் சரியான கோபத்தில் இருந்தார். அதன் விளைவாக எனக்குச் சிகிச்சைசெய்ய வந்துசேர்ந்த மனநோய் மருத்துவர்தான் மொறிஸ் லிப்செட்ஜ்."

ஆறுமாத சிகிச்சையின் பின் புலீமியா அகன்றது. கடோற்கஜ போசனமும் நின்றது. வாந்தியும் மறைந்தது. அந்தக் கட்டத்திலாவது டயானா தனது நோய் தந்த வேதனைக்கு இளவரசரையும் அரண்மனையையும் பழிசொன்னது தவறு என்பதை உணர்ந்து நேசக் கரம் நீட்டியிருக்கலாம். இல்வாழ்வு இனிதே தொடர்ந்திருக்க முடியும்.

அது நடக்கவில்லை.

புலீமியா நோய் அகன்றாலும், அதனுடன் ஒட்டி, சிலருக்கு இருக்கும் ஆளுமைக் கோளாறு அகல வழியில்லை. அது தவறான பாதையில் டயானாவைத் தொடர்ந்து உந்தித் தள்ளியிருக்க வேண்டும்.

போர் முரசு ஒலித்தும்விட்டது. யுத்தபேரிகை முழங்கியும் விட்டது. உறையிலிருந்து வாளை டயானா உருவியும் ஆகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ அரசனாக ஒரு நாளும் வரமுடியாது. உன்னை அரசனாக வர நான் விடமாட்டேன்," என்று முடிக்குரிய இளவரசரிடமும் சூளுரைத்தாகிவிட்டது. (டயானா இளவரசரிடம் இவ்வாறு சபதமிட்டார் என்று இளவரசரின் மிக நெருங்கிய நண்பர் ஒருவர் பேராசிரியர் பென் பிம்லட்டிடம் கூறியிருக்கிறார். இது பிம்லட்டின் நூலில் பிரசுரம் ஆகியுள்ளது.)

எனவே யுத்தத்தைத் தொடர விரும்பினார் டயானா. அரச குடும்பத்தின் பெயரைக் கெடுக்கவேண்டும், சார்லஸை அரியணை ஏற விடக்கூடாது, சார்லஸுக்குப் பதிலாக 50 சதவீதம் ஸ்பென்ஸரான வில்லியம் அரியணை ஏறவேண்டும் என்ற இலட்சியங்களை அடைவதற்காக டயானாவின் யுத்தம் தொடர்ந்தது. புலீமியா நோய் ஏற்படுத்திய வேதனைகளும் அகன்றுவிட்டதால், ஆளுமைக் கோளாறினால் மட்டும் வழிநடத்தப்பட்ட வஞ்சனைப்போரை புதிய உத்வேகத்துடன் முன்னெடுத்துச்செல்ல டயானாவுக்கு வழிபிறந்தது.

இந்த யுத்தங்களுக்கு உரிய செலவிற்கு யார் பொறுப்பு? திருமணமாகி சண்டை சச்சரவோடு வாழ்க்கை நடத்திய காலத்திலுஞ் சரி, உத்தியோகப்பற்றற்ற முறையில் சார்லஸுடன் பிரிந்து வாழ்ந்த காலத்திலுஞ் சரி, சட்டபூர்வமாகப் பிரிந்து வாழ்ந்த காலத்திலுஞ் சரி, விவாகரத்து நிறைவேறிய பின்னருஞ் சரி, டயானாவின் அமளிதுமளியான படாடோபச் செலவுகளுக்கு வேல்ஸ் இளவரசர் சார்லஸின் வருமானத்தில் இருந்து தான் பணம் வந்தது. வேல்ஸ் இளவரசரின் விவாகரத்துத் தீர்விலிருந்துதான் பணம் வந்தது. ஸ்பென்ஸர்களின் பரம்பரைச் சொத்திலிருந்து எதுவும் வரவில்லை.

டயானா தனது நிச்சயதார்த்தத்தை அடுத்து அரண்மனைக்கு வந்தபோது அவரிடம் இருந்த துணிமணிகள் என்ன, தெரியுமா? இதோ, மார்ட்டனின் நூல் ஒலிப்பதிவில் இருந்து:

"எங்களுடைய நிச்சயதார்த்தம் நடைபெற்ற தினத்தன்று என்னிடம் உண்மையாக இருந்தது, ஒரு நீண்ட கவுன், ஒரு சில்க் சட்டை, ஒரு ஜோடி அழகிய காலணிகள், அவ்வளவு தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென்று நானும் எனது அன்னையும் கடைக்குப் போய் எல்லா ஆடைகளிலும் ஆறு ஆறு என்று வாங்கவேண்டியதாய் இருந்தது..."

கூட்டிக் கழித்துச் சொல்லப்போனால், உடுத்திய ஆடைகளுடன் அரண்மனைக்கு வந்தவர் தான் டயானா. அவருக்கு பிரிட்டனின் உயர்மட்ட சமூகத்திலுள்ளோர் அணியும் நவநாகரீக ஆடைகளைப் பற்றி எதுவும் தெரியாது. அத்தகைய நவநாகரீக ஆடையணிகளை உருவாக்குவோர் பற்றியும் எதுவும் தெரியாது.

உலகப் புகழ் பெற்ற "வோக்" (VOGUE) ஃபாஷன் சஞ்சிகையின் உதவி ஆசிரியையான அன்னா ஹார்வியை டயானாவின் அக்காமார் அறிந்திருந்தனர். அவர்கள் அந்தப் பத்திரிகையில் சிறு தொழில்கள் செய்த காலத்தில் ஏற்பட்ட பரிச்சயம் அது. இளவரசி ஒருவருக்கு ஏற்ற ஆடைகளைத் தேர்ந்தெடுக்க டயானாவை அன்னாவிடம் அனுப்பி வைத்தனர்.

"என்ன ரக ஆடைகள் உங்களுக்கு வேண்டும்?" என்று அன்னா கேட்டபோது, என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தடுமாறினார் டயானா. "நாகரீகமான ஆடைகளாகவும் இருக்க வேண்டும், அதே நேரத்தில் அரண்மனைக் கட்டுப்பாடுகளுக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும்," என்று பதிலளித்தார் டயானா. 'சரிதான், இவருக்கு ஃபாஷன் ஆடைகள் இதுதான் முதல் அறிமுகம்' என்று புரிந்து கொண்ட அன்னா, பல ஆடைகளை டயானாவுக்கு எடுத்துக்காட்டி அவற்றின் சிறப்புக்களை விளக்கினார்.

சார்லஸின் எதிர்கால மனைவி என்ற அடிப்படை ரீதியில் ஃபாஷன் உலகில் அடியெடுத்து வைத்தவர்தான் டயானா. அதன் பின்னர்தான் விக்டர் எடெல்ஸ்டெயின், கதறீன் வாக்கர், வேர்சேய்ஸ் போன்ற சர்வதேச ஃபாஷன் ஆடை அமைப்பாளர்களின் தொடர்பும் சேவைகளும் அவருக்குக் கிடைத்தன. 'செக்' ஓலையை எப்போதும் எழுதியவர் சார்லஸ் தான்.

ஆயிரம் டாலர்களுக்கு மேல் விலையுள்ள ஆடைகளை அணியத் தொடங்கினார் டயானா. முதலில் அவை அழகான,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அடக்கமான ஆடைகளாக அமைந்தன. கவர்ச்சியைக் காட்டும் ஆடைகளை அரண்மனைப் பெண்மணிகள் அணியக் கூடாது என்ற தடை இருந்தது. ஆரம்பத்தில் இந்தக் கண்ணியமான கட்டுப்பாட்டை அனுசரித்துப்போன டயானா, திருமண வாழ்வில் விரிசல் அதிகரிக்க அதிகரிக்க, கட்டுப் பாடுகளை மீறி மேலும் மேலும் கவர்ச்சிகரமான ஆடைகளை அணியத் தொடங்கினார்.

டயானாவுடைய பொறுப்பற்ற ஷாப்பிங் செலவுகளைப் பற்றி தினப் பத்திரிகைகளும் எழுதத் தொடங்கின. பிரிட்டிஷ் மக்கள் எத்தனையோ தசாப்த காலமாக அனுபவிக்காத பொருளாதாரக் கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டிருந்த காலமது.

அந்தக் காலகட்டத்தில் டயானாவின் சிகையலங்காரச் செலவு மட்டும் ஒரு வருடத்திற்கு 2,35,000 டாலர்கள்! ஆயிரம், இரண்டாயிரம் டாலர்கள் பெறுமதியுள்ள ஒரு ஆடையை விலைக்கு வாங்கி ஒரு தடவை மட்டும் அணிந்துவிட்டு பீரோவில் மாட்டிவிடுவார். ஒரு தடவை அணிந்த ஆடையை இரண்டாவது தடவை டயானா அணிவது கிடையாது.

அரண்மனையின் வரலாற்றில் ஆடை, அணி, அலங்காரத்திற்கென்று இவ்வளவு பணத்தை அதுகாறும் யாரும் செலவு செய்தது கிடையாது.

மிகப்பெரும் பணக்காரியான போதிலும், மகாராணி சிக்கனமானவர். பக்கிங்ஹாம் அரண்மனையில் அரச குடும்பத்தினர், வேலைக்காரர்கள் அனைவரும் உறங்கியபின்னர், மகாராணி அறை அறையாகச் சென்று அணைக்கப்படாத மின்விளக்குகளைத் தானே அணைப்பாராம். அரண்மனையில் வளர்க்கப்படும் நாய்களின் கழுத்துச் சங்கிலி காணாமல் போய்விட்டால், பாரிய அரண்மனைத் தோட்டத்தில் போய்ச் சங்கிலியைத் தேடியெடுத்து வருமாறு முடிக்குரிய இளவரசர் சார்லஸை அனுப்புவாராம் மகாராணி.

மிகச் சமீபத்தில், மகாராணியின் இரண்டாவது குமாரரான இளவரசர் அன்ட்ரூ ஒரு பொதுவைபவத்தில் பிரதம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிதியாகக் கலந்து கொள்ளச் சென்றபோது, தனது காலணிகளை வெளியே களைந்து விட்டு உள்ளே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. பத்திரிகைப் படப்பிடிப்பாளர்கள் இளவரசரின் காலுறை (சாக்ஸ்) அணிந்த பாதங்களைப் படம் பிடித்து பத்திரிகைகளில் போட்டனர். இளவரசருடைய சாக்ஸில் ஒரு பெரிய பொத்தல், தையல் செய்து மூடப்பட்டிருந்தது!

இந்தியப் பணத்தில் ஐந்தே ஐந்து ரூபாய் பெறுமதிப்புள்ளது தான் ஒரு ஜோடி சாக்ஸ். அது கிழிந்தால், அதைக் தூக்கித் தூர எறிந்துவிட்டு புது சாக்ஸ் அணியாமல், அதைத் தைத்து தொடர்ந்து அணிந்தார் இளவரசர் அன்ட்ரூ.

இந்த அரண்மனைக்கு, தான் அணிந்த ஆடைகளுடன் மருமகளாக வந்த டயானா, மாமியார் வீட்டுப் பணத்தை குதூகலத்துடன் அள்ளிவீசி படாடோபச் செலவு செய்த பாங்கே அலாதி! ஆடம்பரச் செலவுகள் அளவுக்கு அதிகம் என்று சார்லஸ் சொன்னபோது. எதிர்த்து வாதித்து அதைப் பெரும் சண்டை ஆக்கிவிட்டார் டயானா.

தன்னுடைய தந்தையின் பணத்தை வீணாகச் செலவு செய்கிறாய் என்று குற்றம்சாட்டி தனது சிற்றன்னை ரெயினுடன் ஒரு காலத்தில் பயங்கரச் சண்டை போட்டவர் தான் இந்த டயானா.

உடுத்திய ஆடைகளுடன் அரண்மனைக்கு வந்த டயானா அகாலமரணம் அடைந்தபோது, அரண்மனையின் ஒரு மாடி நிறைய மிகப்பெரிய பீரோக்கள். பீரோக்களின் கதவைத் திறந்தால், உள்ளே தாமாகவே எரியத்தொடங்கும் மின்விளக்குகள். அந்த பீரோக்களினுள்ளே ஒருவர் நடந்து சென்றுதான் அடுக்கடுக்காகத் தொங்கும் ஆடைகளைப் பார்வையிடவேண்டும் (WALK IN WARDROBES)!

அத்தனையும், மாமியார் வீட்டில் 'பிரிட்டனின் அன்னை தெரேசா' அனுபவித்த அபரிமிதான சொகுசு!

"ஒரு நிமிடம், ஒரு அனாமதேயமாக இருந்தேன், மறு நிமிடம், இளவரசி ஆனேன்.." என்று தனக்குத் திடீரெனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்த அந்தஸ்தைப் பற்றி மார்ட்டனின் ஒலிப்பதிவில் கூறியுள்ளார் டயானா.

டயானா தனது வாழ்க்கையில் சொன்ன மிகப் பெரிய உண்மைகளுள் ஒன்றாக இந்த வாக்கியம் அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான் என்பது தமிழ்நாட்டுப் பழமொழி. இது டயானாவுக்குப் பொருந்துமோ என்னவோ தெரியாது.

ஆனால் - ஒன்று மட்டும் நிச்சயம்.

ஒரேயொரு நிமிடத்தில் இளவரசியாக மாறிய ஒரு அனாமதேய டயானா ஸ்பென்ஸர், போர்க்கொடி ஏந்தி அரண்மனையில் அட்டகாசம் செய்தார் என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மையாகி விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டயானாவும் பிரிட்டிஷ் பத்திரிகைகளும் திரைமறைவில் நடத்திய திருவிளையாடல்கள்

பத்திரிகைகளும், அவற்றின் நிருபர்களும், பப்பரட்சிகளும் டயானாவை வஞ்சித்தார்களா? அல்லது டயானா பத்திரிகைகளை வஞ்சித்தாரா?

டயானாவுக்கும் பத்திரிகைகளுக்கும் இடையே இருந்த தொடர்பை ஆராயப் புகுந்தால், திரைக்குப் பின்னால் தினம் தினம் நடைபெற்ற உடன்பாடுகள், ஒத்துழைப்புகள், தில்லுமுல்லுகள், சூழ்ச்சிகள் கணக்கில் அடங்காதவை. 'டயானாவும் பததிரிகைகளும்' என்ற தலைப்பில் தனியாக ஒரு நூல் எழுத முடியும். தணிந்து வரும் டயானா ஆதரவு அலை மேலும் அடங்கியதும் இந்த விஷயத்தைப் பற்றி பிரிட்டிஷ் வரலாற் றாசிரியர்கள் எழுதப்போவது நிச்சயம்.

டயானாவுக்கும் பத்திரிகைகளுக்கும் இடையே நிலவிய உறவை சுருக்கமாக ஆராய்வோம்.

தனது அக்கா - ஜேனின் திருமணத்தின்போது, அங்கு வருகை தந்திருந்த பத்திரிகைகளின் அரண்மனை நிருபர்களை வலியத்தேடிச் சென்று, டயானா தன்னைத்தானே அறிமுகம் செய்துகொண்டதை ஏற்கெனவே கண்டிருக்கிறோம். "பத்திரிகைகளுடன் டயானா ஏற்படுத்திக்கொண்ட காதல் தொடர்பு அன்றுதான் ஆரம்பமானது," என்று இந்தக் கன்னிச் சந்திப்பை சேரா பிராட்பட் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வர்ணித்ததையும் ஏற்கெனவே கண்டிக்கிறோம். அன்றைய சந்திப்பின் போது மிகச் சிரேஷ்ட நிருபர் ஜேம்ஸ் விட்டக்கருடன் நல்ல சிநேகம் ஆகிவிட்டார் டயானா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சந்திப்பு நடைபெற்றபோது (1978) இளவரசர் சார்லஸுக்கும் டயானாவுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென்றாலும், அந்தக் காலகட்டத்திலேயே சார்லஸ் மீது குறிவைத்துவிட்டார் டயானா.

1980-ல் சார்லஸுக்கும் டயானாவுக்கும் தொடர்பு ஏற்பட்டு, அவர்கள் திருமணம் செய்வார்களா இல்லையா என்று வதந்திகள் பத்திரிகைகளில் வரத்தொடங்கிய காலத்தில் டயானா பலதடவைகள் விட்டக்கருடன் தொடர்பு கொண்டிருக்கிறார். இந்த வதந்திகள் பரவுவதற்கு டயானாவே மூலகாரணமாக இருந்திருக்கலாம். சார்லஸையே திருமணம் செய்வேன் என்ற விடாப்பிடியான உறுதியுடன் டயானா இருந்ததாக விட்டக்கர் எழுதினார். தன்னுடைய மகளைப்பற்றி எழுதவேண்டாம் என்று டயானாவின் அன்னை பத்திரிகைகளைக் கெஞ்சி வேண்டுகோள் விடுத்தார். (ஒரு கன்னிப் பெண்ணின் பெயர் கெட்டுவிடப் போகிறது, சீக்கிரமாக ஒரு முடிவு எடுக்கும்படி வற்புறுத்தி எடின்பரோ கோமகன் தனது மகனுக்குக் கடிதமும் எழுதினார்)

தனது அம்மா கெஞ்சியதற்கு நேர்மாறாக, டயானா விட்டக்கரிடம் தான் பத்திரிகையாளர்களுடன் ஒத்துழைப் பதையே விரும்புவதாகத் தனிப்பட்டமுறையில் கூறினார் என்று சேரா எழுதுகிறார். "டயானா தன்னிடம் உள்ள போர்க்கலன் களில் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு ஆயுதத்தை - பத்திரிகைகளை - எப்படி ஏவுவது என்று ஏற்கெனவே கற்றுக்கொண்டார்," என்று விட்டக்கர் எழுதினார்.

சார்லஸ் - டயானா திருமணம் நடந்தபின் பத்திரிகைகள் டயானாவை விரட்டி, விரட்டி படமெடுத்து அவரது அந்தரங் கத்தை ஊடுருவுவது கண்டு மகாராணி மிகவும் வேதனைப் பட்டார். அவரது பணிப்பின்பேரில் அவரது பத்திரிகைச் செயலாளரான மைக்கல் ஷியா சகல பத்திரிகை ஆசிரியர் களையும் மகாராணியுடன் ஒரு சந்திப்பிற்காக அரண்மனைக்கு அழைத்தார். அந்தச் சந்திப்பின்போது, 'இளவரசி டயானாவின் பொது வாழ்க்கை வேறு, தனிப்பட்ட வாழ்க்கை வேறு, பொது வாழ்க்கையைப் பற்றி செய்திகள் பிரசுரிப்பதில் தவறில்லை, தனிப்பட்ட வாழ்க்கையை தயவுசெய்து ஊடுருவாதீர்கள்' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினயமாகக் கேட்டுக்கொண்டார் ஷியா. பிம்லட்டின் நூல் இந்தத் தகவலைத் தருகிறது.

அந்தப் பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்று மூன்று மாதங்களின் பின்னர், இளவரசரும் டயானாவும் தமது விடுமுறைகளைக் களிக்க பஹாமாஸ் தீவுகளுக்குச் சென்றனர். அப்போது டயானா கருவுற்றிருந்தார். விட்டக்கர் உட்பட பல நிருபர்கள் அவர்களைத் தொடர்ந்து பஹாமாஸ் சென்றனர். அங்கே தனியாருக்குச் சொந்தமான ஒரு கடற்கரைப் பகுதியில் (அது பொது இடம் அல்ல) சார்லஸும் டயானாவும் நீச்சலுடையில் கடலில் குளித்தனர். டயானா ஒரு பிக்கினி (மார்க்கச்சும் அரைத்துணியும் வேறு வேறாக உள்ள நீச்சல் உடை) அணிந்திருந்தார். விட்டக்கரும் அவரது பரிவாரங்களும் சக்தி வாய்ந்த லென்சுகளைப் பாவித்து கர்ப்பிணியான டயானா பிக்கினியில் தோன்றிய காட்சியை தம்பதிகளுக்குத் தெரியாமல் மிகத் தொலைவிலிருந்து படம்பிடித்துவிட்டனர். 'சன்' பத்திரிகையிலும் 'டெயிலி ஸ்டார்' என்ற பத்திரிகையிலும் இந்தப் படங்கள் பிரசுரமாயின. மகாராணி வெகுண்டெழுந்தார். தாய்மையின் புனிதம் கேவலப்படுத்தப்பட்டதென்று கொதித்தார். பிம்லட்டின் நூல் இந்தத் தகவலைத் தருகிறது.

"பிரிட்டிஷ் செய்தித்துறையைப் பொறுத்தமட்டில் இது ஒரு கரி நாள்," என்று மகாராணி வேதனைப்பட்டார். ஆனால் தன்னுடைய படங்களைப் பத்திரிகைகளில் பார்ப்பதற்கு மகாராணியின் மருமகள் எவ்வளவு ஆசைப்பட்டார் என்று மகாராணிக்குத் தெரியாது. குற்றம் செய்ததாக மகாராணி சுட்டிக் காட்டிய பத்திரிகையாளர்களுடன் டயானா தொடர்பு கொண்டு அந்தப் படங்கள் பிரசுரிக்கப்பட்டது குறித்து தனக்கு ஆட்சேபனை இல்லை என்று கூறியதும் மகாராணிக்குத் தெரியாது என்று எழுதுகிறார் சேரா.

இந்த இரு பத்திரிகைகளும் என்ன செய்தன தெரியுமா?

தாம் பிரசுரித்த படங்கள் மகாராணிக்கு வேதனை தந்திருந்தால் அவரிடம் மன்னிப்புக் கோருகிறோம் என்று ஒரு மன்னிப்பை வெளியிட்டன. அதோடு நிற்காமல், அந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்களையும் மறுபிரசுரம் செய்து, மகாராணியை வேதனையில் ஆழ்த்திய படங்கள் இவைதான் என்று படவிளக்கமும் தந்தன.

மகாராணிக்கு இரட்டிப்புக் கோபம், கவலை. டயானாவிற்கு தனது படம் மறுபிரசுரம் ஆகிவிட்டதே என்று இரட்டிப்பு மகிழ்ச்சி. என்ன கோலத்தில் (அல்லது அலங்கோலத்தில்) படம் வந்தாலும் பரவாயில்லை, விளம்பரம் கிடைத்தால் போதும் என்ற டயானாவின் வெறியை பத்திரிகையாளர்கள் இனம் கண்டுகொண்டனர்.

டயானா திருமணம் செய்த நாளிலிருந்து, அரச குடும்பத்தவர்களைப் போலல்லாது, தான் மனிதாபிமானம் உள்ளவர், முற்றிலும் வேறுபட்டவர் என்ற ஒரு 'ஐந்தாம் படை' அடிப்படையில் ஒரு உறவை ஏற்படுத்திக் கொண்டார் என்று பிம்லட் கூறுகிறார். இதே கருத்தை சேராவும் வலியுறுத்தி யுள்ளார். சார்லஸின் தம்பியான அன்ட்ரூ, அவரது மனைவி சேரா ஆகியோரின் திருமணமும் முறிவு அடைந்துகொண்டிருந்த வேளையில் சேரா தனது வழக்கறிஞர்களைச் சந்தித்தது பற்றிய அந்தரங்கத் தகவல்கள் டெயிலி மெயில் பத்திரிகையில் வெளிவந்து ஒரு பெரிய பூகம்பத்தை ஏற்படுத்தின. அந்தப் பத்திரிகையின் ஆசிரியரும் அரண்மனை நிருபரும் டயானாவுக்கு மிக மிக நெருக்கமானவர்கள். எனவே டயானாதான் இந்தச் செய்திகளை அவர்களுக்குக் கூறியிருப்பார் என்று (அன்ட்ரூவின் மனைவி) சேராவின் குடும்பத்தினர் உறுதியாக நம்பியதாகவும் நூலாசிரியர் சேரா எழுதியுள்ளார்.

பத்திரிகைகள் தனது அந்தரங்க வாழ்வை ஊடுருவி, தனது வாழ்க்கையை நரகமாக்கி வருகின்றன என்று டயானா அடிக்கடி சொல்லி வந்திருக்கிறார்.

இதெல்லாம் உண்மையல்ல, வெறும் பாசாங்கு தான். இப்படி நடிப்பதெல்லாம் இரட்டை வேடம். பொதுமக்களின் அனுதாபத்தைச் சம்பாதித்துக்கொள்வதற்காக டயானா போடும் திட்டம் தான் என்று பத்திரிகையாளர் பலர் கூறியுள்ளனர்.

டயானாவின் மரணத்தின் பின்னர் இத்தகைய கருத்துக்களைக் கொண்ட கட்டுரையொன்று பிரபல அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகையான 'ஸ்பெக்டேட்டர்' 27.9.97 இதழில் வெளிவந்தது. மார்க் ஹானிக்ஸ்பாம் என்பவர் எழுதிய இந்தக் கருத்துரையில் இருந்து சில பகுதிகள் இதோ:

"...தனக்குக் கும்பிடு போட்ட மக்களைப் போல இளவரசியும் சின்னப் பத்திரிகைகளின் போதைக்கு அடிமையாய் இருந்தார். கென்ஸிங்டன் அரண்மனையில் காலைப்போசனம் சாப்பிட்டவாறே அவர் தினமும் சன், டெயிலி மிர்ரர், டெயிலி மெயில், எக்ஸ்பிரஸ் ஆகிய பத்திரிகைகளை வாசிப்பாராம்... இதை அவரது நண்பர்களில் ஒருவர் எனக்குச் சொல்லியிருக்கிறார். ஆழமான கருத்தற்ற இந்த ஆரம்ப உணவை ஜீரணித்த பின்னர் தான், பெரிய பத்திரிகைகளுக்கு வருவார். அவருடைய அன்றாடப் பணிகள் பற்றி பெரிய பத்திரிகைகளில் பிரசுரமாகும் சங்கதிகளில் கருத்துச்செறிவு அதிகமாய் இருந்தாலும் அவை சுவையில் குறைந்தவையாகவே அவருக்கு இருக்கின்றன."

ஒரு விருந்துபசார வைபவத்திற்கு டயானா போனாராம். அந்த விருந்துக்கு வந்திருந்த ஒருவரோடு பேசிக்கொண்டிருந்த டயானா திடீரென்று பேசுவதை நிறுத்திவிட்டு அவருக்குப் பின்னாலிருந்த எதையோ வைத்தகண் இமைக்காது பார்த்தாராம். டயானாவின் சிந்தனை தடைபடுவதற்கு காரணம் என்ன என்று அந்த நண்பரும் பின்னால் திரும்பிப் பார்த்தாராம். அங்கே இருந்தது ஒரு தினப் பத்திரிகைக் குவியல். அதன் மீது தான் டயானாவின் கண்கள் லயித்து நின்றன. 'பத்திரிகைகளைப் பாருங்களேன்' என்று நண்பர் சொன்னதும் டயானா பக்கம் பக்கமாக அவற்றைப் புரட்டி, அவற்றில் தன்னைப் பற்றி என்ன என்ன செய்திகள் வந்துள்ளன என்று ஆர்வத்துடன் தேடினாராம். எல்லாப் பத்திரிகைகளையும் அலசியபின், "பரவாயில்லை. எனக்கு இது ஒரு மோசமான நாள் அல்ல," என்று திருப்திப் பட்டுக் கொண்டாராம்.

'சாக்கடைப் பத்திரிகை'களின் மீது டயானாவுக்கு இருந்த ஆர்வம் அத்தோடு நிற்கவில்லை. சின்னப் பத்திரிகைகளின் பெரும்பாலான ஆசிரியர்களை அவர்களது செல்லப் பெயரைச் சொல்லிப் பழகும் அளவிற்கு அவருக்கு நெருக்கம் இருந்தது. சின்னப் பத்திரிகை ஆசிரியர்கள் அத்தனை பேரையும் ஏதோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமயத்தில் தன்னுடன் விருந்துண்ண கென்ஸிங்டன் அரண்மனைக்கு அழைத்திருக்கிறார் டயானா. தனது சாவிற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர்கூட 'சன்', 'டெயிலி மிர்ரர்' ஆசிரியர்களை அரண்மனைக்கு அழைத்து விருந்து வைத்திருக்கிறார்.

டயானாவின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்வதற்கு சின்னப் பத்திரிகை ஆசிரியர்களுக்கு அரசகுடும்பம் விடுத்த அழைப்பை டயானாவின் தம்பி வாபஸ் வாங்கினார். அது மட்டுமல்ல, டயானாவின் சாதனைகளின் முக்கியத்துவத்தை சின்னப் பத்திரிகைகள் மழுங்கடித்தன என்றும் அவரது அந்த ரங்கத்தை ஊடுருவப்போய் அவரது மரணத்திற்கு வழிவகுத்தன என்றும் தனது வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலய உரையின்போது கனல் கக்கியிருந்தார் சார்லஸ் ஸ்பென்ஸர்.

"டயானாவுக்கும் சின்னப்பத்திரிகைகளுக்கும் இடையே நிலவிய நெருக்கமான இரகசிய உறவைப் பற்றி சார்லஸ் ஸ்பென்ஸருக்கும் தெரியாது, மக்களுக்கும் தெரியாது," என்கிறார் ஹானிஸ்பாம்.

''எனக்கும் டயானாவுக்கும் இடையே நிலவிய உறவைப்பற்றி எதிர்காலத்தில் ஏதோ ஒரு கட்டத்தில் சொல்வதற்கு நான் தயார். அதைப் பற்றி சொல்வதற்கு ஏற்ற சூழ்நிலை இன்று இல்லை. தவறான கருத்துக்களுக்கு இன்று அது வழிவகுக்கும்,'' என்று ஒரு சின்னப் பத்திரிகை ஆசிரியர் ஹானிஸ்பாமிடம் கூறினாராம்.

சின்னப் பத்திரிகைகளை டயானா நன்கு அறிந்து வைத்திருந்தார். இளவரசர் சார்லஸுக்கும் அவருக்கும் இடையே விவாகப் பிரிவும் விவாகரத்தும் ஏற்பட்டபின்னர் பத்திரிகைகளைத் தனது அணிக்குச் சார்பாக மாற்றுவதற்கு அவர் அயராது உழைத்தார் என்கிறார் ஹானிஸ்பாம்.

டெயிலி மெயில் பத்திரிகையின் அரண்மனை நிருபரான ரிச்சட் கே என்பவருடன் மிக நெருக்கமான உறவு வைத்திருந்தார் டயானா. டயானாவின் இறுதி இரவன்று, பாரிஸில் பப்பரட்சிகளுக்கு டிமிக்கி கொடுப்பதற்காக தனது திட்டங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டுச் சட்டென்று மாற்றியமைத்துக் கொண்டிருந்த அந்தப் பரபரப்பான வேளையிலும்கூட, பாரிஸிலிருந்து லண்டனுக்கு தொலைபேசி எடுத்து கேயிடம் நீண்டநேரம் பேசினார் டயானா. எவ்வளவு நெருக்கம் கேயுடன். கேயுக்கும் அவருக்கும் இருந்த நெருக்கத்தைப் பற்றி எல்லாருக்கும் தெரியும். ஒரு சமயம் கேயை லண்டனின் பேய்ஸ்வாட்டர் பகுதியில் உள்ள ஒரு சந்தில் வைத்து நள்ளிரவில் டயானா சந்தித்துப் பேசியதை இன்னொரு சின்னப் பத்திரிகை படம் எடுத்துப் பிரசுரித்துவிட்டது.

ஆனால் கேயுடன் எவ்வளவு நெருக்கமாக டயானா பழகினாரோ, அதேயளவு நெருக்கத்துடன் சகல சின்னப் பத்திரிகை ஆசிரியர்களுடன் பழகினார் என்பது கேயுக்கும் தெரியாது. வேறு எவருக்கும் தெரியாது. எல்லாரும் நினைத்தது இளவரசிக்கு மிக நெருக்கமான பத்திரிகையாளர் தான் மட்டும்தான் என்று. ஆனால் ஒருவருக்கு ஒருவர் தெரியாமல், எல்லாரோடும் மிக நெருக்கமான அந்தஸ்துடன் பழகி தனது காரியத்தைச் சாதித்துவிட்டார் டயானா. சின்னப் பத்திரிகை ஆசிரியர்கள் அனைவரையும் 'இளிச்சவாயன்கள்' ஆக்கி, தான் கறக்க வேண்டியதைக் கறந்துகொண்டார். டயானாவுடைய 'இமேஜை' மக்கள் மத்தியில் தட்டியெழுப்பி அவரை ஒரு மாபெரும் தியாகியாக உருவாக்கியவர்கள் இவர்கள்தான். ஆனால் சாணக்கியக் கூர்மையுடன் டயானா தங்களைப் பயன்படுத்திக் கொண்டதை அவர்கள் உணர்ந்து கொண்ட போது காலம் கடந்துவிட்டது. டயானாவைக் காரசாரமாகத் தாக்கினால் பிரிட்டிஷ் மக்களின் சினத்தைச் சாம்பாதிக்க வேண்டிய அளவிற்கு உன்னதமான உயர் நிலைக்கு அவர் போய்விட்டார்.

அதனால்தான் டயானாவுடன் தனக்கிருந்த உறவைப் பற்றி "எதிர்காலத்தில் ஏதோ ஒரு கட்டத்தில் சொல்வேன்" என்று ஒரு சின்னப் பத்திரிகை ஆசிரியர் கூறவேண்டி வந்தது. "ஏற்றி வைத்தோம், ஏமாற்றிவிட்டாள், இன்றைக்கு இறக்கி வைக்க முடியவில்லை, நாளை காலம் மாறும், அப்போது அறுப்போம், பெயரைக் கெடுப்போம், அதுவரை கட்டுண்டு இருப்போம்," என்பதைத் தான் சூசகமாக அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகள் என்ன தீவிரத்துடன் டயானாவை விரட்டினவோ, அதே தீவிரத்துடன் டயானாவும் பத்திரிகைகளை விரட்டினார். மகாராணி எலிஸபத்தோ அல்லது இளவரசர் சார்லஸோ கையாண்ட பத்திரிகை அணுகுமுறை முற்றிலும்வேறுபட்டது, மிகவும் கௌரவமானது. 'பத்திரிகைச் செயலாளர்' என்ற ஒரு முழுநேர ஊழியரைப் பதவியில் அமர்த்துவார்கள். அவர் ஒரு முன்னாள் பத்திரிகையாளராக இருப்பார். அல்லது, பத்திரிகைளுடன் நெருங்கிய தொடர்பு உடையவராக இருப்பார். மகாராணியினுடைய அல்லது இளவரசருடைய பத்திரிகைத் தொடர்புகள் யாவும் இந்த அதிகாரியினூடாகத்தான் நடைபெறும். மகாராணியோ இளவரசரோ பத்திரிகையாளர்களுக்கு விருந்து வைப்பதென்றால், அந்த நிகழ்ச்சியையும் பத்திரிகைச் செயலாளரே ஒழுங்கு செய்வார். அழைப்புகளையும் அனுப்புவார். சகல பத்திரிகையாளர்களும் சம அந்தஸ்துடன் அந்த வைபவத்தில் கலந்துகொள்வார்கள். மகாராணியோ இளவரசரோ பகிரங்கமாக அவர்கள் எல்லாருடனும் பேசுவார்கள்.

இந்த நிலையை மாற்றி, பத்திரிகை ஆசிரியர்களையும் நிருபர்களையும், தனித்தனியாக, ஒருவர் ஒருவராக, அரண்மனையில் இரவு விருந்துக்கழைத்து, அவர்களுடன் சேர்ந்து மதுவுண்டு, இரவு உணவுண்டு, "உனக்குமட்டும்தான் இந்த விருந்துபசாரம்" என்று அவர்களை ஏமாற்றி, தனக்குச் சாதகமான செய்திகளை அவர்கள் மூலமாக பத்திரிகைகளில் போடவைத்து, தனக்குப் பிடிக்காத குடும்ப உறுப்பினர்களைப் பற்றி வத்தி வைத்து, அவர்களது பெயரைக் கெடுக்கும் செய்திகளையும் பொய்களையும் பிரசுரிக்கவைத்து, ஒரு சாக்கடைப் பத்திரிகைக் கலாச்சாரத்திற்கு வழிவகுத்தவரே டயானாதான்.

ஹானிஸ்பாமிடம் டயானாவைப் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார் இன்னொரு பத்திரிகை ஆசிரியர்:

"அவரோடு பேசத் தொடங்கினால் நேரம் ஓடுவதே தெரியாது. சுயகுற்றங்களை ஒப்புக்கொள்ளுதல், இரகசியங்களை அம்பலப்படுத்துதல் போன்ற சங்கதிகள் அவருடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பாஷணைக்குச் சுவையூட்டுகின்றன. வேறு யாருக்கும் சொல்ல வேண்டாம் என்று சொல்லிவிட்டு கவனத்தை ஈர்க்கும் பரபரப்பான சங்கதிகளைச் சொல்லுவார். இப்படிச் சொல்லி வைத்த சமாச்சாரங்களைப் பற்றி அவர் தொடர்ந்து என்ன நினைக்கிறார், தொடர்ந்து என்ன செய்து வருகிறார் என்று அவ்வப்போது தகவல் தந்துகொண்டே இருப்பார். ஒருவகையில் சொல்லப்போனால், சட்டமன்றத்து உறுப்பினர்களின் வாக்கைத்தேடி அவர்களின் ஆதரவைத் திரட்டும் (LOBBYING) முறைபோல் டயானாவின் செயற்பாடு அமைந்தது. அவருடைய அலுவலகத்திற்கு நாங்கள் போவோம். ஒரு செய்தியைப் பற்றி விசாரிப்போம். அவரும் தகவல் தருவார். யாருக்கும் சொல்லவேண்டாம், தனது பெயர் வெளியே வரக்கூடாது என்று சொல்லிவிட்டு எல்லா விஷயத்தையும் கக்கிவிடுவார். அது ஒரு விசித்திரமான உறவு."

டயானாவும் டோடியும் உல்லாசக் கப்பலின் தளத்தில் கட்டியணைத்து முத்தம் கொடுத்து நின்ற காட்சிகளை சின்னப் பத்திரிகைகள் பிரசுரித்தன. பப்பரட்சிகள் எடுத்த இந்தப் படங்களைப் பிரசுரிக்கும் முதல் உரிமை 'சன்டே மிர்ரர்' பத்திரிகைக்கும் இரண்டாம் உரிமை 'மெயில்' பத்திரிகைக்கும் கிடைத்தன. டயானாவின் ஆப்த நண்பர் றிச்சட் கே 'மெயில்' பத்திரிகையில்தான் பணிபுரிந்தார். எனவே டயானாவின் மறைமுக அனுமதி இல்லாமல் 'மெயில்' அந்தப் படங்களைப் பிரசுரம் செய்திருக்காது.

படங்கள் பிரசுரமானதை அடுத்து டயானாவுடைய அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு அவர் என்ன 'மூடில்' இருக்கிறார் என்று தான் விசாரித்ததாகவும், படங்கள் பிரசுரமானதைப் பற்றி டயானா விசனப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டதையும் ஹானிஸ்பாமிற்குச் சொல்லியிருக்கிறார் ஒரு பத்திரிகை ஆசிரியர். டயானாவைப் பொறுத்தமட்டில், அந்த அறிவிப்பினது உள்ளார்ந்த அர்த்தம் படங்கள் வெளிவந்ததை அடுத்து அவர் மிக மகிழ்ச்சி அடைந்துள்ளார் என்பதே என்று வாதிட்டாராம் அந்தப் பத்திரிகை ஆசிரியர். "தன்னையும் டோடியையும் படம் பிடிக்க, பத்திரிகையாளர்களும் பப்பரட்சிகளும் சக்திவாய்ந்த லென்சுகள் பூட்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமராக்களுடன் தொலைவில் நிற்கிறார்கள் என்பது டயானாவுக்கு நன்கு தெரியும். பயாத் குடும்பம் நினைத்திருந்தால் படப்பிடிப்பைத் தடுத்திருக்க முடியும். அவ்வளவு ஆற்றல் அவர்களுக்கு இருந்தது. அதற்குப்பதிலாக, உல்லாசக் கப்பலின் தளத்தில் தோன்றி தினம்தினம் வெவ்வேறு போஸ்கள் கொடுப்பது மாதிரி அவர்கள் நடந்துகொண்டார்கள். ஒரு கட்டத்தில், எமது படப்பிடிப்பாளர்களை வாபஸ்பெற நாங்கள் தயார் என்று அவர்களுக்கு அறிவித்தோம். அதெல்லாம் தேவையில்லை என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். இதிலிருந்து அவர்கள் படப்பிடிப்பிற்கு நாசூக்கான முறையில் தெள்ளத்தெளிவான ஆதரவு வழங்கியது தெரியவில்லையா?" என்று கேட்டாராம் அந்த ஆசிரியர்.

டயானாவுடைய பத்திரிகைத் தொடர்புகளைப் பற்றி இன்னொரு பத்திரிகை ஆசிரியர் சொன்ன கதை இது:

புலீமியா - அனோரெக்ஸியா சிகிச்சை நிலையம் ஒன்றுக்கு டயானா அந்தரங்க விஜயம் மேற்கொண்டு போயிருக்கிறார், உரையாற்றியிருக்கிறார். அந்த உரையைப் பற்றி கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தனக்குச் சொன்ன தகவலை அடிப்படையாக வைத்து, ஒரு செய்தி அறிக்கை தயார் செய்வதாக அந்த ஆசிரியர் கென்ஸிங்டன் அரண்மனைக்குத் தொலைபேசி எடுத்து, டயானாவின் அலுவலகப் பணியாளர்களிடம் சொல்லிக்கொண்டிருந்தாராம். அந்த உரையாடலை இன்னொரு தொலைபேசி இணைப்பில் அதுவரையும் இரகசியமாகக் கேட்டுக்கொண்டிருந்த டயானா திடீரென்று பேச ஆரம்பித்தாராம். பத்திரிகைகள் அந்தச் செய்தியையும் அவருடைய உரையினையும் நிச்சயமாகப் பிரசுரிக்கப்போகின்றன என்பது அவருக்குத் தெரியும். தான் பேசியது என்ன, அதன் அர்த்தம் என்ன என்று வெகு தெளிவாக தொலைபேசியில் நாற்பது நிமிடநேரத்திற்கு விளக்கினாராம் டயானா. அதன் இறுதியில், "செய்திகளைச் சரியாகப் பிரசுரியுங்கள். ஆனால் அது நான் உங்களுக்குத் தந்த செய்தியாக வரக்கூடாது. நீங்களாக விசாரித்து அறிந்து பிரசுரித்த செய்தியாக வரவேண்டும்," என்ற ஒரு கட்டுப்பாட்டையும் விதித்தாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டயானா விதித்த கட்டுப்பாட்டை அனுசரித்து, அவரே கொடுத்த பக்கா அந்தரங்கத் தகவல்கள் யாவும், மறுநாள் காலையில் பத்திரிகையே தேடிக் கண்டுபிடித்த பிரத்தியேக செய்திக்கட்டுரையாக வெளிவந்தது.

டயானா என்ன செய்தார் தெரியுமா?

அந்தக் காலைப்பத்திரிகை வெளிவந்து சிலமணி நேரத்திற்குள்ளாகவே, அந்தச் செய்தி அறிக்கையைக் கண்டித்து பத்திரிகையாளர் சங்கத்தினூடாக ஒரு அறிக்கையை வெளியிட்டாராம்! அந்த ஆசிரியர் அன்று காலை தனது அலுவலகத்திற்கு பரம திருப்தியுடன் வந்து சேர்ந்தபோது அவரது மேசையில் டயானாவின் கண்டன அறிக்கை இருந்ததாம். அதிர்ச்சி அடைந்த ஆசிரியர் டயானாவுக்கு தொலைபேசி எடுத்து அவருடைய மிகப்பிரமாதமான சூழ்ச்சித் திறனுக்கு வாழ்த்துச் சொன்னாராம். தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளும் சாமர்த்தியம் டயானாவுக்கு பால்யத்திலிருந்தே கைவந்த கலையாயிற்றே! தனது காரியத்தைச் சாதித்துக் கொண்டார். பத்திரிகை ஆசிரியரின் நெற்றியில் பட்டை நாமம்!

தன்னுடைய சூதுவாதுகளுக்கு டயானா பத்திரிகைகளை இரையாக்கியது சகஜமாக நடைபெற்று வந்த ஒரு சங்கதி என்கிறார் ஹானிஸ்பாம்.

1995ல் டயானா ஹஸ்னத் கான் என்ற பாகிஸ்தானிய இருதய சர்ஜனுடன் கள்ளக் காதல் வைத்திருந்தார். தனது காதலன் பணியாற்றிய மருத்துவமனையில் அவருடன் கூடியிருந்துவிட்டு பின்னிரவில் வெளியேறியபோது 'நியூஸ் ஆஃப் த வேர்ல்ட்' பத்திரிகைப் படப்பிடிப்பாளர் டயானாவைக் கையும் மெய்யுமாகப் படம் பிடித்துவிட்டார். டயானாவுக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. தனது கள்ளக் காதலை அந்தப் பத்திரிகை அம்பலப்படுத்திவிட்டால் அவரது (போலி) ''இமேஜ்'' என்னாவது? இளவரசருடன் விவாகரத்து இன்னும்நிறைவேறவில்லை. அதற்கிடையில் கள்ளக்காதல் வைத்துக் கொள்வதை பிரிட்டிஷ் சமூகம் ஏற்கவே ஏற்காது. டயானாவுடைய சூழ்ச்சி மூளை துரிதகதியில் வேலை செய்தது. பத்திரிகையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு கொண்டார். இரகசியமாக பேரம் பேசினார். தான் பாகிஸ்தானிய சர்ஜனுடன் வைத்திருக்கும் தொடர்பைப் பற்றி பத்திரிகை மூச்சுவிடக்கூடாது. அதற்குப் பிரதியுபகாரமாக தான் அந்தப் பத்திரிகைக்குப் பிரத்தியேகமான, தன்னால் அங்கீகரிக்கப்பட்ட செய்தி ஒன்றைத் தருவார்.

அது என்ன செய்தி?

பகல் நேரத்தில் மட்டும் நோயாளிகளை மருத்துவ மனைகளில் சந்தித்து ஆறுதல் சொல்லிவந்த டயானா இப்போது தனது கால அட்டவணையை மாற்றத் தொடங்கிவிட்டார். பகல் வேளைகளில் அவர் மருத்துவமனைகளுக்குச் செல்லும்போது அதைப்பற்றி அறிந்து பத்திரிகையாளர்களும் வந்துவிடுவது நோயாளிகளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துகிறது. எனவே நோயாளிகளின் நலன்கருதி டயானா இப்போது இரவு நேரத்தில் யாருக்கும் தெரியாமல் மருத்துவ மனைகளில் நோயாளிகளைச் சந்தித்து வருகிறார். ஹஸ்னத் கானை ஆலிங்கனம் செய்துவிட்டு வந்தபோது எடுக்கப்பட்ட படத்தை இரவு வேளையில் டயானா நோயாளிகளை இரகசியமாகச் சந்தித்துவிட்டுத் திரும்பும்போது எடுக்கப்பட்ட படம் என்று போடும்படி சொன்னார்.

இந்தக் கபட்டுப் பேரத்திற்கு அந்தப் பத்திரிகையும் ஒத்துக் கொண்டது. டயானாவின் பெயர் மேலும் ஓங்கியது. அந்தப் பத்திரிகை பிரசுரித்த இந்தப் பிரத்தியேக செய்தியை ஏனைய பத்திரிகைகளும் மறுபிரசுரம் செய்தன. டயானாவின் கள்ளக் காதல் மூடி மறைக்கப்பட்டுவிட்டது.

இதுபோலவே இங்கிலாந்தின் றக்பி விளையாட்டுக் கோஷ்டியின் தலைவரான வில் காளிங் என்பவருடனும் சிறிது காலத்திற்கு கள்ளக் காதல் தொடர்பு வைத்திருந்தார் டயானா. தனது மகன்களுக்கு றக்பி சொல்லிக் கொடுக்கிறார் என்ற சாக்கில் அவரை கென்ஸிங்டன் அரண்மனைக்கு வரவழைத்து அவரோடு காதலின்பம் அனுபவித்தார் டயானா. ஆனால் சிறிது காலத்தின்பின்னர் இந்தக் காதல் அவருக்கு போரடித்து விட்டது?

கார்ளிங்கைக் கழற்றுவது எப்படி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடியாக ஒரு சதித்திட்டத்தை உருவாக்கினார் டயானா. தனது மகன்கள் அணிவதற்கேற்ற றக்பி சட்டைகளை வாங்கிக்கொண்டு கென்ஸிங்டன் அரண்மனைக்கு வருமாறு கார்ளிங்கிற்கு தகவல் அனுப்பினார். கார்ளிங் இளவரசியை இரகசியமாகச் சந்திக்கவருகிறார் என்ற தகவலை சகல பத்திரிகை களுக்கும் தனது சகாக்கள் மூலம் அறிவித்துவிட்டார் டயானா.

கார்ளிங் தனது 'கள்ளக் காதலியைச்' சந்திக்க அரண்மனை வந்தார். அங்கே டயானாவும் இல்லை, அவரது மகன்களும் இல்லை. அவர்கள் எப்போதோ அரண்மனையின் பின்வாயில் வழியாக வெளியேறிவிட்டார்கள். முன்வாயிலில் தடுமாறிக் கொண்டிருந்த கார்ளிங்கை சந்திக்கத் தயாராக சகல பிரிட்டிஷ் பத்திரிகைகளின் படப்பிடிப்பாளர்களும் பதுங்கிக் காத்திருந்தார்கள்.

மறு நாள் -

சகல பத்திரிகைகளிலும் கார்ளிங்கின் படம் வந்தது. கென்ஸிங்டன் அரண்மனையில் கள்ளக் கோழி பிடிக்கப்போன அவலட்சண சூழ்நிலையில் அவருக்கு மூக்கறுப்பு நிறைவேறியது. தொலைக்காட்சியில் பணிபுரிந்த கார்ளிங்கின் மனைவி ஜூலி யா தனது குடும்பத்தைக் கலைத்ததற்காக டயானாவைக் கண்டித்துவிட்டு கணவர்மீது விவாகரத்து வழக்குத் தொடர்ந்தார். கார்ளிங்கின் இல்லறவாழ்வு அழிந்ததோ என்னவோ, டயானா வைத்த குறி தப்பவில்லை. கார்ளிங்கை கழற்றிவிடும் தனது திட்டத்தில் வெற்றிகண்டார்.

பலியானது யார்?

கார்ளிங்கின் மனைவியும் பத்திரிகைகளும்!

வென்றது யார்?

டயானா! தனது குறுகிய நலன்களை நிறைவேற்று வதற்காகவும் தனது சொந்தக் கோபதாபங்களைத் தீர்த்துக் கொள்வதற்காகவும் இவர் சூழ்ச்சித் திறனுடன் பத்திரிகைகளைப் பாவித்து வந்தது பலருக்கும் தெரியும் என்கிறார் ஹானிஸ்பாம். குறிப்பாக, அவரது திருமண வாழ்வில் விரிசல் ஏற்பட்ட பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னப் பத்திரிகைகளைத் தனது கணவர் சார்லஸுக்கு எதிராக ஏவிவிட்டு மக்கள் மத்தியில் சார்லஸுக்கு இருந்த மதிப்பைக் குலைத்து வந்தார்.

ஈடற்ற பத்தினியாக, வஞ்சிக்கப்பட்ட அபலையாகத் தன்னையும், ஈடற்ற பத்தினியின் இன்பத்தைக் கொன்றவராகச் சார்லஸையும் அந்தப் பத்திரிகைகள் சாடியதன் பின்னணியில் டயானாவின் சூழ்ச்சிக் கரம்தான் இருந்தது.

தாஜ்மகாலின் முன்னிலையில் சோகமே உருவாகத் தனிமையில் மூழ்கியிருந்த டயானாவின் படம் உலகெங்கும் விமர்சிக்கப்பட்டது. டயானாவின் தனிமை ஏக்கத்தையும் நிராசையான காதலைப் பற்றியும் எழுதாதவர்களே இல்லை. இந்தப் படச் சந்தர்ப்பம் டயானாவால் திட்டமிட்டு நிறைவேற்றப்பட்டது என்கிறார் ஹானிஸ்பாம்.

உன்னதமான காதலுக்கு காலத்தால் அழியாத நினைவுச் சின்னம் தாஜ்மகால். கசாப்புக் கடைக்காரன் நந்தியின் சிலைக்கு முன்னால் நின்று போஸ் கொடுத்தால் எப்படி இருக்கும்? அதைத்தான் டயானா செய்தார்.

"டயானாவுக்கும் பத்திரிகைகளுக்கும் இடையே நிலவியது ஊடல் - கூடல் உறவென்று சொல்லப்படுகிறது. அதெல்லாம் கிடையாது. பச்சையாகச் சொல்லப்போனால் அவர் ஒரு பெரிய அரசியல்வாதி. தன்னுடைய சுயதேவைகளுக்காக பத்திரிகைகளை வளைத்துப் பிடிக்கும் கலையில் பெரிய கில்லாடி," என்று இன்னொரு சின்னப் பத்திரிகை ஆசிரியர் ஹானிஸ்பாமிடம் சொல்லியிருக்கிறார்.

டயானா அகால மரணம் அடைந்த மூன்றாவது நாள், 'டைம்ஸ்' (பெரிய) பத்திரிகையில் அதன் ஆசிரியர் பீட்டர் ஸ்டாட்ஹார்ட் டயானாவின் பத்திரிகை உறவுகளைப்பற்றி ஒரு கட்டுரை எழுதியிருந்தார். ஹானிஸ்பாம் எழுதிய கருத்துக்களைப் போலவே ஸ்டாட்ஹார்டின் கருத்துக்களும் அமைந்துள்ளன.

1994ம் ஆண்டு, மே 18ம் தேதி, அவரை மதிய விருந்துக்காக லண்டனில் உள்ள ஒரு ஓட்டலுக்கு வரைவழைத்திருந்தார் டயானா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1995 - பிரிட்டிஷ் றக்பி விளையாட்டு வீரர் வில் கார்ளிங்குடன் டயானா கள்ளக் காதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்டாட்ஹார்ட்டை முதன்முறையாக நேருக்கு நேர் சந்தித்து ஐந்தே ஐந்து நிமிடங்கள் ஆவதற்குள், ஆயுட்காலம் முழுவதும் அவரை அறிந்து வைத்தவர் போல் எத்தனையோ அந்தரங்கமான விஷயங்களை கக்கத் தொடங்கினாராம் டயானா. சார்லஸைப் பற்றி, சார்லஸினுடைய கமிலா தொடர்புகளைப் பற்றி, சார்லஸினுடைய குடும்பத்தைப் பற்றி, தன்னுடைய வேதனைகளைப் பற்றிய பரம இரகசியங்களை எல்லாம் கொட்டித் தீர்த்துவிட்டாராம். அதுவரையில் சின்னப் பத்திரிகை களில் அரச குடும்பத்தைப் பற்றி வந்த செய்திகள் எல்லாம் வதந்தியின் அடிப்படையில் எழுதப்பட்டவை என்றே ஸடாட்ஹார்ட் நம்பியிருந்தார். உள் வீட்டுச் செய்திகள் எப்படி வெளியே வந்தன என்பது டயானாவுடன் சில நிமிடங்கள் பேசிய வுடனேயே தனக்குப் புரிந்துவிட்டது என்கிறார் ஸ்டாட்ஹார்ட்.

தனக்கு மிகவும் நெருக்கமான நண்பர்களின் உள்வீட்டு இரகசியங்கள் தனக்குத் தெரிந்ததைவிட பன்மடங்கு அதிகமான அரசகுடும்ப இரகசியங்களை அந்த ஒருவேளை உணவின்போது டயானா சொல்லிவிட்டாராம்.

ஸ்டாட்ஹார்ட்டோடு அறிமுகம் ஏற்படுத்திக் கொள்வதற்காக மதிய உணவுடன் ஒரு சந்திப்பு என்றுதான் டயானா அழைப்பு விடுத்திருந்தார். அதற்கேற்ப, வளவளாவென்று பொதுவான பல சங்கதிகளைப்பற்றிப் பேசுவார் என்று ஆசிரியர் எதிர்பார்த்தார். நடந்ததோ வேறு. என்னத்தைப் பற்றி பேசுவது என்று திட்டவட்டமான நிகழ்ச்சி நிரலை டயானா ஏற்கெனவே தீர்மானித்து விட்டார். அந்த நிகழ்ச்சி நிரலை விட்டு இம்மியளவும் விலகாமல் ஒரு நிமிடத்தையும் வீணடிக்காமல் தான் எடுத்த காரியத்தைப் பற்றியே அந்த உணவு வேளைச் சந்திப்பின்போது பேசினாராம் டயானா.

பத்திரிகைகளைப் பயன்படுத்திக்கொள்ளும் கலையில் டயானாவுக்கு இருந்த திறமை இப்போது தெரியவந்தது என்கிறார் ஸ்டாட்ஹார்ட்.

அரச குடும்பத்தின் அழுக்குத் துணிகளை ஸ்டாட்ஹாட் முன்னிலையில் போட்டுச் சலவை செய்தபின் இன்னொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையையும் ஆசிரியர் காதில் போட்டு வைத்தாராம் டயானா. அன்று காலையில் லண்டனில் உள்ள றீஜன்ட்ஸ் பூங்காவில் ஒரு வாய்க்காலுக்குள் விழுந்துவிட்ட ஒரு பிச்சைக்காரனை தான் காப்பாற்றியதாகவும், அவனைச் சுகம் விசாரிக்க அன்று பிற்பகல் மருத்துவமனைக்கு செல்லப்போவதாகவும் சொன்னாராம். எந்த மருத்துவமனை, எத்தனை மணிக்குப் போகிறார் போன்ற விபரங்கள் எல்லாம் ஆசிரியர் கேட்காமலே தரப்பட்டனவாம். சரிதான், இந்தக் கதையை பத்திரிகையில் போடு என்று சொல் லாமல் சொல்கிறார் டயானா என்பதை ஆசிரியர் புரிந்து கொண்டார். டயானா சொன்ன கதையில் சில ஓட்டைகள் இருந்தன. அதைப்பற்றி ஒரு இளவரசியைக் குறுக்கு விசாரணை செய்வது எப்படி என்று ஒன்றும் கேட்காமலே விட்டுவிட்டா ராம் ஆசிரியர். 'இந்தக் கதையை என் தலைமேல் கட்டியடிக்கப் பார்க்கிறார் டயானா. நான் இளிச்சவாயனா என்ன இந்தக் கதையைப் பிரசுரிப்பதற்கு?' என்று மனதில் நினைத்துக் கொண்டாராம்.

மறுநாள் காலை - சகல பத்திரிகைகளிலும் டயானா பிச்சைக்காரனைக் காப்பாற்றிய செய்தி வந்ததாம். 'டைம்ஸ்' பத்திரிகையிலும் வந்ததாம்! அந்தச் செய்தியை ஆசிரியர். ஸ்டார்ட்ஹார்ட் கொடுக்கவில்லையாம்! தனக்கு வேண்டிய செய்திகளைப் புகுத்துவதற்கு ஒவ்வொரு பத்திரிகையிலும் ஒன்றுக்கு மேற்பட்டவர்களை டயானா வைத்திருந்தார் என்பது புலப்படுகிறது அல்லவா?

ஓட்டலில் ஆசிரியர் - டயானா சந்திப்பு முடிவடையும் தருணத்தில், ஓட்டல் முன்வாசலில் பப்பரட்சிகள் நிற்பதாக தகவல் வந்ததாம். 'டைம்ஸ்' பத்திரிகையின் கார் ஓட்டலின் பக்கவாசலி ல் நின்றது. ஆசிரியர் டயானாவையும் அழைத்துக் கொண்டு 'டைம்ஸ்' காரில் புறப்பட்டார். பப்பரட்சிகளுக்கு இது தெரியாது.

போகும் வழியெல்லாம் பப்பரட்சிகள் பதுங்கி இருப்பதை டயானா சுட்டிக் காட்டினாராம். ஒரு உயர்ந்த மரத்தின் கிளையையும் சுட்டிக் காட்டினாராம். ஆனால் டயானாவின் கண்களுக்கு மட்டுமே தெரிந்த பப்பரட்சிகள் ஆசிரியரின் கண்களுக்குத் தெரியவே இல்லையாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டயானா இறங்கவேண்டிய இடத்தில் அவரை இறக்கிவிட்டு ஆசிரியர் போய்விட்டார்.

டயானாவுடைய தம்பி சார்லஸ் ஸ்பென்ஸரும் பத்திரிகைகளைச் சாடிக்கொண்டே அவைகளுடன் ஒட்டி உறவாடுவார். 'சின்னப் பத்திரிகைகள் தனது குடும்பத்தின் அந்தரங்கத்தை ஊடுருவுகின்றன, நிம்மதியைக் குலைக்கின்றன,' என்று காரணம் காட்டி தென்னாப்பிரிக்கா சென்று குடியேறியவர் தான் இவர்.

ஸ்பென்ஸர் - விக்டோரியா விவாகரத்து வழக்கின் போது, ஸ்பென்ஸர் தென்னாப்பிரிக்காவில் குடியேறியதற்கான உண்மைக் காரணத்தை அவரது கள்ளக் காதலிகளில் ஒருவரான சன்டல் பிட்டு வைத்தார். சன்டலின் காதலை வென்றெடுத்து, அவரைத் தனது கணவரிடமிருந்து பிரித்தெடுப்பதற்காகவே ஸ்பென்ஸர் தென்னாபிரிக்காவில் குடியேறினாராம். "எலி அம்மணத்தோடு போனதற்கான" காரணம் புரிகிறதல்லவா?

இவரது இரட்டை வேடத்தை 'பிரைவேட் ஐ' சஞ்சிகை படம்பிடித்துக் காட்டியது. அவருக்குக் கடைசிப் பிள்ளை பிறந்தபோது, தனது வீட்டிற்கு வந்து பிள்ளை மற்றும் மனைவி மக்களின் படங்களை எடுத்து செய்திக் கட்டுரை ஒன்றை வெளியிடுவதற்கு 'ஹெலோ' என்ற சஞ்சிகையிடம் மூன்று இலட்சம் டாலருக்கு மேல் வாங்கிக் கொண்டு அனுமதித்தாராம் சார்லஸ் ஸ்பென்ஸர். தான் தென்னாப்பிரிக்காவிற்குச் சென்ற பிறகு, அங்குவந்து தனது இல்லத்தைப் படம்பிடித்து தனது புது வாழ்க்கையைப் பற்றி எழுதுவதற்கு மேலும் மூன்று இலட்சம் பேரம் பேசினாராம். "வேண்டாம், நன்றி", என்று சஞ்சிகை சொல்லிவிட்டதாம்.

ஒருபுறம், தனது அந்தரங்கத்தைப் பத்திரிகைகள் ஊடுருவு வதாக ஓலம் இடுவார். மறுபுறம், தனது அந்தரங்கத்தை ஊடுருவ அழைப்புவிடுத்து அதற்கு இலட்சக்கணக்கில் பணம் கேட்பார்.

அவர் தான் டயானாவின் தம்பி - சார்லஸ் ஸ்பென்ஸர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாட்சிமை தங்கிய வேல்ஸ் இளவரசிக்கு வரிசையாக வந்த கள்ளக் காதலர்கள்!

இளவரசர் சார்லஸுக்கும் அவரது முன்னாள் காதலி கமிலாவுக்கும் முடிச்சுப்போட்டு வதந்திகளைக் கட்டவிழ்த்து விட்டு, அவரது மதிப்பை மக்கள் மத்தியில் படிப்படியாக இறக்கிவந்தார் டயானா. சார்லஸோ திருமணத்திற்கு முன்னர் டயானாவுக்குக் கொடுத்த வாக்குறுதிக்கமைய, கமிலாவைச் சந்திப்பதை நிறுத்திவிட்டார். அது மட்டுமல்ல, திருமணத்திற்குப் பின்னர் தனது வாழ்க்கையில் வேறெந்தப் பெண்ணுக்கும் இடமில்லை என்ற வார்த்தையையும் காப்பாற்றி வந்தார். தனது திருமணம் முற்றுமுழுதாக உடைந்துவிட்டது என்ற நிலை வந்த பின்னரே கமிலாவைச் சந்திக்கத் தொடங்கினார். வேறு எவரோடும் காதல் தொடர்பு வைக்கவில்லை. கண்ட கண்ட தோட்டத்துப் புல்லை எல்லாம் மேயவில்லை.

சின்னப் பத்திரிகைளில் சார்லஸுக்கு எதிராக தினம் தினம் டயானா புகுத்தி வந்த அபாண்டச் செய்திகளுக்கு மறுப்பு தரவும் இல்லை. அந்தப் பத்திரிகை ஆசிரியர்களுக்குப் போட்டி விருந்து வைத்து அவர்களைக் கவர்வதற்கு முயற்சிகள் எடுக்கவும் இல்லை. உண்மையை உலைமூடி கொண்டு நீண்ட நாளைக்கு மறைக்க முடியாது என்ற திடமான நம்பிக்கையுடன் இளவரசருக்குரிய அன்றாட பணிகளைச் செவ்வனே ஆற்றிக்கொண்டு பிரம்மச்சாரியாக வாழ்ந்து வந்தார். சின்னப் பத்திரிகைகளின் அபாண்டம் அதிகரித்ததும் அவற்றை வாசிப்பதையே நிறுத்திவிட்டார்.

படிதாண்டாப் பத்தினி, வஞ்சிக்கப்பட்ட அபலை போன்ற முகமூடிகளை அணிந்துகொண்ட டயானா என்ன செய்தார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்லஸும் டயானாவும் உத்தியோகப்பற்றற்ற முறையில் தனித்தனியாக வாழ ஆரம்பித்தது நவம்பர் 1986ல். ஆனால் வெளி உலகத்திற்கு இது தெரியாது. உலகறிய சட்டரீதியாக அவர்கள் பிரிந்து வாழத் தொடங்கியது டிசம்பர் 1992ல். விவாகரத்து சட்டபூர்வமாக நிறைவேறியது ஆகஸ்ட் 1996ல்.

விவாகரத்து நிறைவேறுவதற்கு முனனர் எவராவது காதல் தொடர்புகள் வைத்தால், அது சர்ச் ஆஃப் இங்கிலான்ட் மதப் பிரிவிற்கோ அல்லது பிரிட்டிஷ் சமுதாயத்தின் ஒழுக்க நெறிகளுக்கோ ஏற்புடையது அல்ல. அத்தகைய ஒரு உறவு கள்ளக் காதலாகவேதான் கருதப்படும்.

"கமிலா (ஓநாய்), கமிலா (ஓநாய்)" என்று கத்திக்கொண்டு, 'வஞ்சிக்கப்பட்ட அபலை'யான டயானா அரங்கேற்றிய 'உன்னத லீலை'களை ஆராயாவிட்டால் இந்த நூல் நிறைவு பெறாது. இது காமத்தை மூலாதாரமாக வைத்து எழுதப்படும் நூல் அல்ல என்ற அடிப்படையில் பல உலக வெளியீடுகளில் ஏற்கெனவே அம்பலமான கிளர்ச்சியூட்டும் விபரங்களைத் தவிர்த்து, அரசியல் - சமூகவியல் - சமூகநீதிக் கண்ணோட்டத்தில் மட்டும் இவற்றை அணுகுவோம்.

## 1985

தனது மெய்காப்பாளரான பறி மனக்கீ என்ற துப்பறியும் அதிகாரியுடன் டயானா கள்ளக்காதல் தொடர்பு வைத்திருந்தார் என்று செய்திகள் வெளிவந்தன. இந்தச் செய்திகளை உறுதி செய்வது போல, பறி டயானாவின் மெய்காப்பாளர் பதவியில் இருந்து வேறு பதவிக்கு போலீஸ் மேலிடத்தினால் இடமாற்றம் செய்யப்பட்டார்.

இடமாற்றம் செய்யப்பட்டு குறுகிய காலத்தினுள் அவர் ஒரு மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்தார். அவரை பிரிட்டனின் உளவுப்படை கொலைசெய்ததாக வதந்திகள் வெளிவந்தன. தந்திரத்தில் திறமை உள்ள டயானாவுக்கு மந்திரத்திலும் நம்பிக்கை இருந்தது. பிரிட்டனில் மாந்திரீக சக்தி இருப்பதாகச் சொல்லப்படுபவர்களை அவர் அடிக்கடி சந்திப்பார். அத்தகைய ஒரு சந்திப்பின்போது, பறியின் மரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு சம்பவித்தது என்று கேட்க தனது மனம் துடித்ததாக மார்ட்டனின் நூலில் டயானா சொல்கிறார். அந்த விஷயத்தைக் கேட்டாரா இல்லையா, கேட்டிருந்தால் கிடைத்த பதில் என்ன என்று டயானா நூலில் சொல்லவில்லை.

1985ம் ஆண்டில், பறியின் மரணத்திற்குப் பிறகு, டயானாவுடன் தொடர்பு படுத்தப்பட்ட ஆண்மகன் யார் தெரியுமா? ஸ்பெயின் நாட்டு மன்னர் ஜுவான் கார்ளோஸ். டயானாவின் தந்தைக்குச் சமமான வயது அவருக்கு.

சார்லஸும் டயானாவும் ஸ்பெயின் நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த வேளையில் அது நடைபெற்றது. டயானாவும் கார்ளோஸும் ஒருவரை ஒருவர் காற்றுக்கூட இடையேபுக முடியாத அளவிற்கு இறுகத் தழுவி முத்தம் கொடுத்துக் கொண்டிருந்த வேளையில், சிவபூஜையில் கரடியாக இளவரசர் சார்லஸ் அறைக்குள் நுழைந்தாராம். அந்தக் கள்ள உறவை உடனடியாகக் கைவிடும்படி சார்லஸ் டயானாவுக்குக் கட்டளை இட்டார் என்று 'நாஷனல் இன்குவயரர்' என்ற அமெரிக்க சஞ்சிகை கூறுகிறது. பிரிட்டனில் நாடுதழுவிய ரீதியில் அவதூறும் அவமானமும் ஏற்படப்போகிறது என்று சார்லஸ் டயானாவை எச்சரித்தாராம். டயானாவை ஸ்பெயினில் விட்டு விட்டு சார்லஸ் தனியாக பிரிட்டன் திரும்பினாராம்.

சார்லஸின் கட்டளைப்படி கார்ளோஸின் காதலை டயானா துறந்தார் என்று இந்தச் சஞ்சிகை கூறுகிறது. அதன் விளைவாக, "மீண்டும் தனிமையில் மூழ்கினேன்," என்று டயானா சொன்னதாக அவரது சிநேகிதர் ஒருவர் இந்தச் சஞ்சிகைக்குக் கூறியுள்ளார்.

## 1986

பிலிப் டன் என்ற பெயருடைய அழகான, நெட்டையான ஆணுடன் டயானா காதல் தொடர்பு கொண்டார். அவர் ஒரு வங்கி உயர் அதிகாரி. ஆங்கிலத் திரைப்படங்களில் 'சூப்பர் மான்' வேடம் போடும் கிறிஸ்டோபர் றீவைப் போல் அவர் தோற்றமளித்ததால் பிலிப்பை "சூப்பர் மான்" என்றே டயானா செல்லமாக அழைப்பாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் என்ன காரணமோ தெரியாது, அவரும் டயானாவை அனுபவித்துவிட்டு ஒரு வருடத்திற்குள் தானாகவே கழன்று விட்டாராம். அரண்மனை தான் பிலிப்பை எச்சரித்து விரட்டி விட்டது என்று டயானா தனது நண்பர்களிடம் கூறினாராம்.

## 1987

பழைய கார்களை வாங்கி விற்கும் வியாபாரியான ஜேம்ஸ் கில்பி என்பவருக்கும் டயானாவிற்கும் கள்ளக் காதல் ஏற்பட்டது. இவர்களது உறவு ஜாம் ஜாம் என்று போய்க்கொண்டிருந்தது.

ஆனால் 1989ல் இவர்கள் தொலைபேசியில் பேசிக்கொண்ட ஒரு சம்பாஷணையை யாரோ ஒலிப்பதிவு செய்துவிட்டார்கள். அந்த ஒலிப்பதிவு 1992ல் பகிரங்கப் படுத்தப்பட்டு, சகல பத்திரிகைகளிலும் பிரசுரமானது. டயானாவுக்கு கில்பி வைத்த செல்லப்பெயர் “ஸ்குவிட்ஜி” என்பது இந்த ஒலிப்பதிவிலிருந்து வெளியானது. அதனையொட்டி இந்த ஒலிப்பதிவு “ஸ்குவிட்ஜிகேட்” என்று உலகெங்கும் (அவமான முத்திரையுடன்) வழங்கப்படலாயிற்று.

“ஸ்குவிட்ஜிகேட்” ஒலிப்பதிவிலிருந்து ஒரு பகுதி இதோ:

கில்பி: “ஸ்குவிட்ஜி, எனக்கு ஒரு முத்தம் தா. (டயானா முத்தமிடும் ஓசை). அட கடவுளே, எவ்வளவு அற்புதமாக இருக்கிறது தெரியுமா இந்த உணர்ச்சி?”

டயானா: “எனக்குக் காதல் மீறிடுகிறது”.

இந்த ஒலிப்பதிவின்போது அரச குடும்பத்தை துர்மொழியில் திட்டுகிறார் டயானா.

டயானாவுக்கும் கில்பியிற்கும் இடையே இருந்த உறவு 1987ல் தான் மிக நெருக்கமாக இருந்தபோதிலும், விட்டகுறை தொட்டகுறையாக 1992 வரை நீடித்தது. இந்த ஒலிப்பதிவு 1992ல் வெளியானதும், “பிச்சை வேண்டாம் தாயே, நாயைப் பிடி,” என்று டயானாவிடம் சொல்லிவிட்டு கில்பி ஓடி ஒளிந்துவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1988

மேஜர் ஜேம்ஸ்' ஹெவிட் என்ற பட்டாளத்தானிடம் குதிரைச்சவாரி கற்றுக்கொள்ள டயானா ஆரம்பித்தார். இரண்டு வருடங்களுக்கு முன்னர், டயானா அவனை ஒரு வைபவத்தில் சந்தித்தபோது, அவனால் கவரப்பட்டு, மனம் திறந்து அளவளாவினாராம். அவனது தொலைபேசி இலக்கத்தைக் கவனமாகக் குறித்துக் கொண்டாராம். அவனிடம் குதிரைச் சவாரி கற்கவேண்டும் என்ற எண்ணம் டயானாவுக்கு 1988ல் வந்ததாம்.

அதன் விளைவு?

1994ல், 'காதலில் ஒரு இளவரசி' என்று ஒரு நூலை அவனது சார்பில் அன்னா பாஸ்டர்நாக் என்ற பத்திரிகையாளர் எழுதினார். அந்த நூலில், டயானாவுக்குக் குதிரைச் சவாரி கற்றுக் கொடுக்க வந்தவன் டயானாவையே சவாரி செய்த கதை பச்சை பச்சையாகச் சொல்லப்பட்டிருந்தது. கென்ஸிங்டன் அரண்மனைக்கு இரவு விருந்துக்கு அவனை அழைத்தாராம் டயானா. அவரே சமைத்துப் பரிமாறினாராம். அதன்பின் அவனது கரங்களைப் பற்றிப் பிடித்து இழுத்துச் சென்று தனது அம்சதூளிகா மஞ்சத்தில் தள்ளினாராம்.

அதன்பிறகு என்ன?

“மதன மாளிகை.... கென்ஸிங்டன் மாளிகை... உதயகாலம் வரை உன்னத லீலைகளாம்..” என்ற கதைதான்.

கறையான் புற்றெடுக்க கருநாகம் குடிபுகுந்த கதையாக, இளவரசர் சார்லஸின் அரண்மனையில் ஒரு பகுதிக்கு அவன் குடிவந்தான். இரவில் டயானாவின் மகன்கள் உறங்கியதும், டயானாவின் படுக்கை அறைக்குள் பதுங்கிப் பதுங்கி அவன் நுழைந்து விடுவான். அப்புறம் என்ன? உதயத்தின்போது பதுங்கிப் பதுங்கி வெளியேறி, தனது அறைக்குப் போய்விடுவான். காலை உணவை டயானாவும் மகன்களும் புசிக்கும்போது, அப்போதுதான் அவர்களைச் சந்திப்பது போல உரத்த குரலில் அனைவருக்கும் ''குட் மார்னிங்'' தெரிவித்துக் கொண்டு வருவானாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாடகம் அந்த அரண்மனையில் எவ்வளவோ காலமாக நடைபெற்றது. போதாக்குறைக்கு டெவன் என்னும் ஊரில் உள்ள அவனது அன்னையின் இல்லத்திற்கும் டயானா சென்று காமக் களியாட்டங்களைத் தொடர்ந்தாராம்.

சதாம் ஹுசைனின் ஈராக் நாட்டின்மீது மேற்கு நாடுகள் தாக்குதல் நடத்தியபோது பிரிட்டனின் சார்பில் ஹெவிட்டும் போர்முனை சென்றான். போர்முனையில் இருந்த அவனுக்கு தினம் தினம் காதல் கடிதம் எழுதினார் டயானா. "மீண்டும் உங்களோடு படுப்பதற்கு, உங்கள் உடலோடு ஒன்றாகச் சங்கமிப்பதற்கு, உங்கள் கரங்களில் உறக்கம் கொள்வதற்குக் காத்திருக்கிறேன்," என்கிறது ஒரு கடிதம்.

ஹெவிட் - டயானா உறவு பற்றி பத்திரிகைகளில் செய்திகள் வரத்தொடங்கின. 1994ல் டயானா ஹெவிட்டை அணுகி அவனுக்கு ஒரு பணி விதித்தார். தங்களுக்கிடையே நிலவியது வெறும் நட்புத்தான்; காதல் அல்ல என்று 'எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்குப் பேட்டி அளிக்குமாறு ஹெவிட்டைப் பணித்தார் டயானா. ஹெவிட்டும் அப்படியே செய்தான். இந்தப் பேட்டியின் விளைவாக வதந்திகள் பெருகினவே தவிரக் குறையவில்லை.

அதன் விளைவு?

டயானா ஹெவிட்டை முற்றுமுழுதாக வெட்டிவிட்டார்.

ஆத்திரமடைந்த ஹெவிட் தனக்கும் டயானாவுக்கும் இடையே நிலவிய உண்மையான உறவை அப்படியே பச்சை பச்சையாக எழுதி ஒரு நூலை வெளியிட்டான். அதன் விற்பனை அவனுக்கு 47 இலட்சம் டாலர்களைத் தேடித் தந்தது.

ஹெவிட்டிற்கும் டயானாவிற்கும் இடையே நிலவிய உறவு ஒரு முக்கிய பாடத்தை நமக்குப் புகட்டுகிறது. டயானாவோடு 'கள்ளக் காதல்' ரீதியாகச் சம்பந்தப்பட்ட பல்வேறு ஆடவர்களைப் பற்றி செய்திகள் வெளிவந்தபோது, "டயானாவுக்கு நல்ல நண்பர்களும் அமையப் பிராப்தம் இல்லை - நண்பர்கள் எல்லாரையும் காதலர்கள் என்று சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டயானாவின் பிரதான "சின்ன வீடு" (1988-1994) : குதிரைச் சவாரி சொல்லித்தர வந்த மேஜர் ஜேம்ஸ் ஹெவிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதந்திகள் வெளிவருவதால் அவர்களும் விலகிவிடுகிறார்கள் - டயானாவின் தனிமை தொடர்கிறது," என்ற ரீதியில் பரிதாபக் கதைகளை டயானா பரப்பி வந்தார். ஹெவிட் விஷயத்திலும் அவர் செய்தது அதுதான். ஆனால் ஹெவிட் உண்மையை அப்படியே அப்பட்டமாக நூலாக எழுதப்போக, டயானாவின் 'திருகு தாளம்' அம்பலமானது.

டயானா ஹெவிட்டிற்கு எழுதிய 62 காதல் கடிதங்களை ஹெவிட் தனது வீட்டு இரும்புப் பெட்டியில் பத்திரமாக வைத்திருந்தான். இவற்றை என்றாவது ஒரு நாள் பத்திரிகைகளுக்கு வெளியிட்டு மேலும் பணம் சம்பாதிக்கலாம் என்பது அவனது நோக்கம். ஆனால் கடந்த ஏப்ரல் மாதம் அவன் ஊரில் இல்லாத சமயத்தில் இக் கடிதங்கள் திருட்டுப் போயின. திருடியது அவனது புதுக் காதலியான அனா பெரிட்டி. 39 வயது நிறைந்த இத்தாலியப் பெண். 62 கடிதங்களையும் 'டெயிலி மிர்ரர்' பத்திரிகைக்கு 2.4 இலட்சம் டாலர்களுக்கு விற்பதற்குப் பேரம் பேசியிருக்கிறாள். 'டெயிலி மிர்ரர்' பத்திரிகை அவற்றை விலை கொடுத்து வாங்குவது போலப் பாசாங்கு செய்துவிட்டு, அத்தனை கடிதங்களையும் காலஞ்சென்ற டயானாவின் உயிலை நிர்வகிக்கும் வழக்கறிஞர்களிடம் ஒப்படைத்து விட்டது. ஆத்திரமடைந்த ஹெவிட் புதிய காதலியை விரட்டி விட்டான். அந்தக் கடிதங்கள் தனக்கே உரிமையானவை, அவற்றைத் தனக்குத் திருப்பித் தரவேண்டும் என்று டயானாவின் வழக்கறிஞர்கள் மீது வழக்குத் தொடர ஹெவிட் தயாராகி வருவதாக (இந்நூல் அச்சேறும் வேளையில்) அறிவிக்கப்பட்டுள்ளது.

1988ல் ஹெவிட்டுடன் உறவை வளர்ப்பதற்கு முன்னால், மேஜர் டேவிட் வாட்டர்ஹவுஸ் என்ற பட்டாளத்தானுடன் கள்ளக் காதல் வைத்திருந்தார் டயானா. அது ஒரு குறுகிய கால உறவாகவே அமைந்தது. டயானாவுடன் உறவைத் தொடர்வது இராணுவத்தில் தனது பதவி உயர்வுகளைப் பாதிக்கக்கூடும் என்று சந்தேகித்த டேவிட் விரைவில் விலகிப் போய்விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டயானா காதல் தொடர்பு வைத்திருந்த சில பிரமுகர்கள் (இடமிருந்து வலமாக)

மேலே : "சூப்பர்மான்" என்று டயானா வர்ணித்த வங்கி அதிகாரி பிலிப் டன் (1986), கார் வியாபாரி ஜேம்ஸ் கில்பி (1987), அமெரிக்க கோடீஸ்வரர் ரெடி போர்ஸ்ட்மான் (1996).

கீழே : கலைப்பொருள் வியாபாரி ஆலிவர் ஹோர் (1992), பாகிஸ்தானிய இருதய சர்ஜன் ஹஸ்னத் கான் (1996-97), பாகிஸ்தானிய எலக்ட்ரோனிக்ஸ் தொழிலதிபரும் கோடீஸ்வரருமான குலு லால்வானி (1997).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1992

கலைப்பொருள் வர்த்தகரான ஆலிவர் ஹோர் என்பவருடன் காதல் தொடர்பை ஆரம்பித்தார் டாயானா. தமது நெருங்கிய நண்பர்களின் இல்லங்களில் ஒரு வாரத்திற்கு மூன்று அல்லது நான்கு தடவைகள் பிற்பகலில் சந்தித்தனர். பிறகு என்ன? சூரிய அஸ்தமனம் வரை உன்னத லீலைகளாம்!

பகலில் ஹோர்! இரவில் ஹெவிட்! கணவரோ சார்லஸ்!

டயானாவின் இத்தகைய சவாரிகளை, "பாவம் டயானா, தனது வாழ்நாள் முழுவதும் அன்பைத் தேடி அலைந்தார்," என்று தனது நூலில் சமாளிக்கிறார் அன்ட்ரூ மார்ட்டன். அப்படி என்ன புதுரக அன்போ, புதுரக அலைச்சலோ!

ஹோர் ஏற்கெனவே திருமணமானவர். தனது பிரெஞ்சு மனைவியை விவாகரத்துச் செய்துவிட்டு தன்னைக் கட்டிக்கொள்வார் என்று டயானா நம்பினார். அது நடக்க வில்லை. தானாகவே கழன்று விட்டார் ஹோர். அரண்மனை ஹோரைப் பயமுறுத்தி விரட்டிவிட்டது என்று தனது நண்பர்களிடம் சொல்லி அங்கலாய்த்தார் டயானா. அத்தோடு நிற்கவில்லை. ஹோர் வீட்டிற்கு பின்னிரவு நேரத்தில் தொலைபேசி எடுத்து "என்னைக் காண வா" என்று தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தார். 300க்கு மேற்பட்ட அழைப்புகள் சென்றன. சில வேளைகளில் போன் எடுத்துவிட்டு மறு பக்கத்தில் பதில் வந்ததும் எதுவும் பேசாமலே லைனைப் பிடித்துக்கொண்டு நிற்பாராம்.

அனாமதேய தொலைபேசி அழைப்புகள் வருவதாக ஹோர் முறையீடு செய்தார். போலீஸார் ஹோரின் தொலைபேசியை ஒட்டுக் கேட்கத் தொடங்கினார்கள். ஹோருக்கு அனாமதேய அழைப்புகள் வருவது கென்ஸிங்டன் அரண்மனையின் தொலைபேசி இலக்கங்களில் ஒன்றிலிருந்து தான் என்று போலீஸார் அறிவிக்க, அது சகல பத்திரிகைகளிலும் முதல் பக்கச் செய்தியாகக் கொட்டை எழுத்துக்களில் பிரசுரமானது. இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா என்பது போல கப்பென்று அமைதியுடன் இருந்தார் டயானா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1995

பிரிட்டிஷ் றக்பி விளையாட்டுக் குழுத் தலைவர் வில் கார்ளிங்குடன் வாரத்துக்கு மூன்று தடவைகள் திருவிளை யாடல்களை ஆரம்பித்தார் டயானா. ஆனால் இந்தச் சல்லாபம் ஏனோ வெகு விரைவில் கசந்துவிட்டது. பழத்தைச் சூப்பிச் சுவைத்துவிட்டு விதையைச் தூர வீசிவிடுவது போல கார்ளிங்கை விரட்டி விட்டார் டயானா. மிக அநாகரிகமான முறையில் கொடுக்கப்பட்ட இந்தக் கல்தாவைப் பற்றி ஏற்கெனவே கண்டுவிட்டோம்.

## 1996-1997

அதன் பின்பு டயானாவின் மதனகாமராணிக் கேளிக்கைகளில் கலந்துகொள்ள மளமளவென்று பலர் வந்தனர். வந்த விஷயத்தை முடித்துக் கொண்டு மளமளவென்று போயும் விட்டனர். அவர்களில் சிலர்: சுவீடனைச் சேர்ந்த எறிக் வக்மெய்ஸ்டர். இவர் டயானாவின் பரம்பரைக்குக் கிடைத்த 'ஏர்ள்' அரசவிருதுக்கு நிகரான 'கவுன்ட்' விருதை சுவீடனில் பெற்ற ஒரு குடும்பத்தில் வந்தவர்; பல பில்லி யன்களுக்கு அதிபதியான அமெரிக்க வர்த்தகப் பிரமுகர் ரெடி ஃபோர்ஸ்ட்மான்; லண்டன் உணவு விடுதி அதிபர் சைமன் சிலேட்டர்; பிரிட்டிஷ் வர்த்தகரான வில்லியம் வன் ஸ்டிராபென்ஸி.

மேற்கு நாட்டுக் காதல் உறவுகள் சலித்து விட்டனவோ என்னவோ, டயானாவின் கடாட்சம் கிழக்கு நோக்கித் திரும்பியது. காம சூத்திரத்தை உலகுக்குத் தந்த இந்திய உபகண்டம் அவரது கண்களுக்குத் தெரிந்தது.

பாகிஸ்தானிய இருதய சர்ஜன் ஹஸ்னத் கான் டயானாவின் ஒட்டல் அறையை ஒத்த இதயத்தில் நிறைந்தார்.

ஹஸ்னத் கான் பாகிஸ்தானில் பிறந்தவர். அழகானவர். 39 வயது நிறைந்தவர். லண்டனில் உள்ள உலகப் புகழ் பெற்ற றோயல் பிராம்டன் மருத்துவ மனையில் இருதய சர்ஜனாகப் பணி புரிந்து வந்தார். உலகப்புகழ் பெற்ற இருதய சர்ஜனான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சர் மக்டி யாகூப் அவர்களின் இருதய சர்ஜன் குழுவில் ஹஸ்னத்தும் ஒருவர். கென்ஸிங்டன் அரண்மனையில் இருந்து ஒரு சில மைல் தூரத்தில்தான் இந்தச் சிகிச்சை நிலையம் அமைந்திருந்தது.

இருதய நோய் ஆராய்ச்சிக்குப் பணம் திரட்டும் ஒரு அறக்கட்டளையின் தலைவராக டயானா இயங்கி வந்தார். 1995ல் அவர் ஹஸ்னத்தை முதல் முறையாகச் சந்தித்தார். அன்றே குறியும் வைத்துவிட்டார்.

இருதயநோய் ஆராய்ச்சிக்குப் பணம் திரட்டுவதென்றால் இருதய ஆபரேஷன்களைப் பற்றி நன்கு தெரிந்துவைத்திருக்க வேண்டும் என்ற நொண்டிச் சாக்கைச் சொல்லிக் கொண்டு ஆபரேஷன் தியேட்டருக்குள் தொப்பி, முகமூடி எல்லாம் போட்டுக்கொண்டு நுழைந்து விட்டார் டயானா.

ஒரு தடவை அல்ல, இரு தடவைகள் அல்ல, எல்லாமாக எட்டுத் தடவைகள் நுழைந்தார் பத்தாவது பாஸ் பண்ண முடியாமல் போன டயானா. ஆபரேஷன் மேசையில் மயக்க மருந்து கொடுக்கப்பட்டு இருதய அறுவைக்கு ஆளான நோயாளியைப் பார்க்கப் போனாரா? அல்லது அந்த நோயாளிக்கு அறுவைச் சிகிச்சை செய்துகொண்டிருந்த ஹஸ்னத் கானின் இதயத்தைச் சுண்டி இழுத்து, அவருக்கு மயக்க மருந்து கொடுக்கப்போனாரா?

டயானாவினுடைய அதிகாரத் துஷ்பிரயோக ஆபரேஷன் விஜயங்கள் எட்டோடு நின்றன. காரணம், 'மேக்கப் சுந்தரி' கோலத்தில் அவர் ஆபரேஷனைப் பார்வையிட்ட இலட்சணத்தைப் படமெடுத்து பத்திரிகைகளில் போட்டு விட்டார்கள்!

ஆபரேஷன் தியேட்டரின் சுகாதார விதிகளின்படி மேக்கப்புடன் உள்ளே போகக்கூடாது. பாக்டீரியா கிருமிகள் தியேட்டருக்குள் வருவதைத் தடுக்கும் பலதரப்பட்ட ஏற்பாடுகளில் இதுவும் ஒன்று.

மேக்கப் இல்லாத டயானாவை எவரும் அடையாளம் கண்டு கொள்ள மாட்டார்கள். ஒரு சமயம் கென்ஸிங்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்மனைக்குள் எவரோ அத்துமீறிப் புகுந்துவிட்டார்கள். அலாரம் மணிகள் அலறத் தொடங்கிவிட்டன. ஆழ்ந்த தூக்கத்திலிருந்த டயானா பதறிக்கொண்டு கண்விழித்தார். என்ன, ஏது என்று கீழே போய்ப் பார்க்க விரும்பினார். புருவத்துக்கு மைதீட்டும் பென்சிலைத் தேடினார். கிடைக்கவில்லை. வெளியே போகாமல் படுக்கை அறையிலேயே இருந்து விட்டார். தனக்குச் சிகை அலங்காரம் செய்யும் பெண்ணிடம் இந்தச் சம்பவத்தைப் பற்றி டயானா விளக்கியிருக்கிறார்:

"கண் புருவத்திற்கு மை தீட்டாமல் உலகத்துக்கு முன்னால் நான் வரமாட்டேன். பயங்கரவாதிகளின் குண்டு என்னைத் தகர்த்தாலென்ன, அல்லது அவர்கள் உயிரோடு என்னைக் கைப்பற்றினாலென்ன, மேக்கப் இல்லாமல் வெளியே வரமாட்டேன்.."

டயானா சம்பூர்ண மேக்கப்போடு ஆபரேஷன் பார்த்தது பத்திரிகைகளில் பெரும் சர்ச்சை ஆகிவிடவே தனது ஆபரேஷன் விஜயங்களை நிறுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால் அவருக்கு பெரிய இழப்பு ஏதும் ஏற்பட்டுவிடவில்லை. காரணம், ஹஸ்னத் கானை ஏற்கெனவே தனது முந்தானையோடு இறுகப் பிணைத்து விட்டார் டயானா. பிறகு என்ன? உதயகாலம் வரை உன்னத லீலைகள் தான்!

முன்னாள் பாகிஸ்தானிய கிரிக்கட் வீரர் இம்ரான்கான் பாகிஸ்தானில் ஒரு புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் ஒன்றை நிறுவி நடத்தி வருகிறார். அவர் திருமணம் செய்துகொண்டது ஜெமீமா கோல்ட் ஸ்மித் என்ற பிரிட்டிஷ் யூத இனப் பெண்ணை. டயானாவுக்கும் ஜெமீமாவுக்கும் நல்ல பழக்கம் உண்டு. இம்ரான் கானின் சிகிச்சை நிலையத்துக்கு நிதிதிரட்ட உதவப்போவதாக டயானா அறிவித்தார். இரு தடவைகள் பாகிஸ்தான் சென்றும் வந்தார். பாகிஸ்தானில் அவர் அணிந்தது சல்வார் கமீஸ்!

பாகிஸ்தானை அடைந்ததும் அடையாததுமாக ஹஸ்னத் கானின் பெற்றோர்கள் இருந்த கிராமத்தைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்களைப் போய்ச் சந்தித்தார். ஹஸ்னத்தை தான் திருமணம் செய்ய விரும்புவதாக அவர்களிடம் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டன் திரும்பியதும் திரும்பாததுமாக தனக்கு சிகை அலங்காரம் செய்யும் பெண்ணிடம் இந்தச் சந்திப்பைப் பற்றி சொல்லியிருக்கிறார். ஹஸ்னத்தின் பெற்றோர்கள் திருமணத்திற்குச் சம்மதம் தந்துவிட்டார்கள். அதுமட்டுமல்ல, ஹஸ்னத்தை திருமணம் செய்வதற்காக தான் முஸ்லீமாக மாற வேண்டிய அவசியமும் இல்லை என்றும் அவர்கள் சொல்லி விட்டார்கள்.

"இந்தச் செய்தியை எல்லாருக்கும் பரப்புங்கள். நாங்கள் திருமணம் செய்துகொள்ளப் போகிறோம்," என்றும் அவர்களை வேண்டியிருக்கிறார்.

இதைப் போல எத்தனை பேருக்குச் சொன்னாரோ?

செய்தி புகைந்தது. பத்திரிகைகளுக்கு எட்டியது. பத்திரிகையாளர்கள் பாகிஸ்தானுக்குப் படையெடுத்தனர். ஹஸ்னத்தின் பெற்றோர்கள் வசித்த அமைதியான கிராமம் அல்லோலகல்லோலப்பட்டது. ஹஸ்னத்தின் குடும்பத்தினர் படம் பிடிக்கப்பட்டனர், பேட்டி காணப்பட்டனர். பக்கா பரபரப்போடு உலகப் பத்திரிகைகளின் முதற் பக்கங்களை அந்தக் கிராமவாசிகள் அலங்கரித்தனர்.

ஹஸ்னத் கான் எரிமலையெனக் கனல் கக்கினார். பத்திரிகைகளில் வெளிவந்த அதிரடி விளம்பரத்தை அவர் ஒரு பெரிய அவமானமாகக் கருதினார். "இதெல்லாம் உனது வேலை தான்," என்று டயானாவுடன் சண்டை போட்டார். "உன்னுடைய தலைக்குள் ஒரு அவரைவிதையளவு மூளையாவது இருந்திருந்தால் இப்படியான ஒரு அசட்டுக் காரியத்தைச் செய்திருக்க மாட்டாய்,'' என்று பொரிந்து தள்ளினார். பத்திரிகைகளுக்கு தான் செய்தி கொடுக்கவில்லை என்று டயானா மறுத்தார்.

டயானா சொன்னது உண்மை தானே? பத்திரிகைகளுக்கு அவரா நேரடியாகச் செய்தியைக் கொடுத்தார்? அவர் சொல்லி, அவருக்கு வேண்டியவர்கள் தானே (அவர் பணித்தபடி) செய்தியைப் பரப்பினார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னோடு ஒரு வாரத்துக்காவது பேசாதே. அப்போதுதான் என் கோபம் தணியும்," என்று கத்திக்கொண்டே ஹஸ்னத் வெளியேறினாராம்.

ஹஸ்னத் ஏற்கெனவே ஒரு பெண்ணைக் காதலித்து அவளால் ஏமாற்றப்பட்டவர். எனவே கல்யாணம் என்று வரும்போது அவர் கவனமாக இருந்தார். மேலும் டயானாவைப் போல் ஹஸ்னத் விளம்பர வெறிபிடித்து அலைபவர் அல்ல. தமது காதலைப்பற்றி பத்திரிகைகளில் கிசுகிசுச் செய்திகள் வருவதற்கு வழிவகுக்கக்கூடாது என்று ஏற்கெனவே டயானாவை எச்சரிக்கை செய்தும் இருந்தார்.

தனது தூண்டிலில் விழுந்த இளவரசர் சார்லஸை தப்பிப்போகாமல் இழுத்துப் பிடிப்பதற்கு பத்திரிகைகளில் வந்த கிசுகிசுச் செய்திகள் எவ்வளவு தூரம் உதவின என்று டயானாவுக்குத் தெரியும். அதனால்தான் ஹஸ்னத்தை மாட்டுவதற்கும் அதே கிசுகிசு முறையைக் கையாண்டாரோ என்னவோ?

ஹஸ்னத் கொடுத்த சொல்லடி டயானாவுக்கும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. அவர் என்ன செய்தார் தெரியுமா?

புதிய ஆடவர்கள் இருவருடன் சல்லாபிக்கத் தொடங்கினார். பகலில் கிறிஸ்தோபர் வாலி! இரவில் குலு லால்வானி!

கிறிஸ்தோபர் வீடு மனையிருப்புகளை நிர்மாணிப்பவர். பெரிய பணக்காரர்.

குலு லால்வானி பாகிஸ்தானிய கோடீஸ்வரர். லண்டனில் எலக்ட்ரானிக்ஸ் தொழிற்சாலை அதிபதி. அவருக்கு 58 வயது. இருமுறை விவாகரத்துச் செய்தவர்.

குலுவைத் திருமணம் செய்வது தனது நோக்கமல்ல என்றும், தான் சம்பந்தப்பட்ட ஒரு அறக்கட்டளைக்கு அவர் நன்கொடையாக நிறையப் பணம் தந்ததால் அவருடன் போய்வருவதாகவும் டயானா தனது சிகையை அலங்கரிக்கும் பெண்களிடம் கூறியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண் தனது கணவனுடன் கூடுவது தாம்பத்தியம் எனப்படும். ஒரு பெண் ஒரு ஆடவனுக்கு காசுக்காகப் பாய்விரிப்பது விபச்சாரம் எனப்படும். தாம்பத்தியத்தை உலகம் போற்றும். விபச்சாரத்தை உலகம் பழிக்கும். தாளாத வறுமையின் காரணமாக விபச்சாரம் செய்பவளையும் உலகம் பழிக்கத் தவறுவதில்லை. இது உலகின் எந்தக் கலாச்சாரத்திற்கும் பொருந்தும். காசைக் குறிவைத்து குலுவுடன் டயானா செய்த குளு குளு கேளிக்கைகளுக்கு விபச்சாரம் என்ற முத்திரை ஏன் குத்தப்படவில்லை? "தனது வாழ்நாளெல்லாம் அன்பைத் தேடி அலைந்த டயானா" என்ற பாவ விலக்கு வியாக்கியானம் தரப்படுவது ஏன்?

ஹஸ்னத் கான் மேலும் கோபமடைந்தார். இந்தப் புதிய தொடர்புகளைப் பற்றி டயானாவுடன் சண்டை போட்டிருக்கிறார். சண்டை சச்சரவுகள் இடையிடையே நடைபெற்று வந்தாலும் டயானா ஹஸ்னத்தை முற்று முழுதாக விடுவதாகவும் இல்லை.

இந்த வேளையில் தான் சென் டிரோபேஸ் என்ற இடத்திற்கு அல்பாயத் குடும்பத்தினரோடு தனது விடுமுறையைக் கழிக்கச் சென்றார் டயானா. அப்போது தான் டோடியுடன் ஒட்டிக் கொண்டார்.

'டோடி ஒரு ஸ்தீரிலோலன், அவரை நம்பாதே,' என்று பலர் எச்சரித்தும்கூட டயானா கேட்கவில்லை.

முகம்மது அல்பாயத் தனது மகனுக்கு மாதாமாதம் கைச் செலவுக்கென்று இரண்டு இலட்சம் டாலர்கள் கொடுத்துவந்தார். தனது உல்லாசக் கப்பலையும் மகனின் தேவைக்காக அவ்வப்போது ஒதுக்குவார். 'ஜானிக்லால்' என்ற இந்தக் கப்பல் 190 அடி நீளமுடையது. 3.2 கோடி டாலர் பெறுமதிப்புள்ளது. பாரிஸில் அல்பாயத்துக்குச் சொந்தமான ரிட்ஸ் ஓட்டல் உலகின் மிகப் பெரிய ஓட்டல்களில் ஒன்று. அதில் ஒரு பகுதி டோடியின் தனிப்பட்ட தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இதைவிட உலகின் பல்வேறு உல்லாசபுரிகளில் பதினோரு இல்லங்கள் டோடிக்குச் சொந்தமாக இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புறம், பெண்கள் - காமக் கிழத்திகள் - கூத்து - கும்மாளத்திற்குக் கேட்கவா வேண்டும்? எப்போதும் ஹாலிவுட் நடிகைகளுடன் சுற்றிக் கொண்டிருப்பார் டோடி. அவர்களுக்கு விலை உயர்ந்த நகைகளைப் பரிசாக அளிப்பார்.

1987ல் சுசான் கிரிகாட் என்ற மாடல் அழகியைத் திருமணம் செய்தார் டோடி. எட்டே எட்டு மாதம்தான் அந்த உறவு நீடித்தது. பின்னர் விவாகரத்து. சுசானுக்கு தீர்வுப் பணமாக 35 இலட்சம் டாலர்கள் கிடைத்தது.

அதன் பின்பு பறவைகள் பலவிதம், ஒவ்வொன்றும் ஒரு விதம் என்ற அடிப்படையில் வாழ்ந்து வந்தார். டயானாவை அவர் சந்தித்தபோது அவர் வாழ்ந்து வந்தது கெலி ஃபிஷர் என்ற மாடல் அழகியுடன். மத்தியதரைக் கடலில் 'ஜானிக்லால்' கப்பலில் டயானாவுடன் காதல் பயணம் செய்த வேளையில், சற்றுத் தொலைவில் இன்னொரு கப்பலில் கெலியையும் வைத்திருந்தாராம் டோடி!

தன்னைத் திருமணம் செய்துகொள்வதாக டோடி கொடுத்த வாக்குறுதியை மீறிவிட்டார் என்று சொல்லி அவர்மீது வழக்குப் போடப்போவதாக கெலி அறிவித்தார். டயானா அதைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல் டோடியைத் தனது மணாளனாகத் தேர்ந்தெடுத்தார்.

டயானாவின் தம்பி - சார்லஸ் ஸ்பென்ஸரின் விவாகரத்து வழக்கு தென்னாப்பிரிக்க நீதிமன்றத்தில் நடைபெற்றபோது, அவர்மீது 'தொடர்வரிசையாகக் கள்ளக் காதல் புரிபவர்' (SERIAL ADULTERER) என்ற முத்திரை குத்தப்பட்டதை ஏற்கெனவே கண்டோம். 'தொடர்வரிசையாகக் கொலை செய்பவர்' (SERIAL KILLER), 'தொடர்வரிசையாகக் கற்பழிப்பு செய்பவர்' (SERIAL RAPIST) என்பன தான் குற்றவியல் ரீதியில் உலகுக்கு ஏற்கெனவே அறிமுகமான பதங்கள். SERIAL KILLER என்ற சொற்கள் உலகப் புகழ் பெற்ற ஆக்ஸ்பர்ட் அகராதியில் இடம் பெற்றுள்ளன. இத்தகைய 'உலகப்புகழ் பெற்ற' குற்றவாளிகளைப் பற்றி மேற்கு நாடுகளில் ஏற்கெனவே பல நூல்கள் வெளிவந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தொடர்வரிசையாகக் கள்ளக்காதல் புரிபவர்' என்ற பதப்பிரயோகத்தின் கீழ் உலகில் முதன்முதலாக அறிமுகம் செய்துவைக்கப்பட்ட ஆண் பிரமுகர் என்ற (அப) கீர்த்திக்கு உரியவர் சார்லஸ் ஸ்பென்ஸர் தான். இதன் விளைவாக, இனி வருங்காலத்தில் SERIAL ADULTERER என்ற சொற்கள் ஆக்ஸ்பர்ட் அகராதியில் இடம்பெறக்கூடிய வாய்ப்பு உண்டு.

நூலறுந்த பட்டம் போல, டயானா வாழ்ந்த கள்ளக் காதல் - காம வாழ்க்கையை ஆராயும்போது, அவருக்கு 'தொடர் வரிசையாகக் கள்ளக்காதல் புரிந்த பெண்' (SERIAL ADULTERESS) என்ற முத்திரையைக் குத்துவதில் எந்தச் சிரமமும் இருக்காது.

இத்தனை அவப் பெயர்கள் போதாதென்று, டயானா தனது கடைசி காலத்தில் ஒரு ஹாலிவூட் திரைப்படத்திலும் நடிப்பதற்கு ஒப்புக்கொண்டு பேச்சுவார்த்தைகள் நடத்தி வந்திருக்கிறார். இந்த விவகாரத்தைப் பற்றிய செய்திகள் டயானாவின் மரணத்தை அடுத்து வெளிவந்தன (அமெரிக்க சஞ்சிகை - 'நாஷனல் இன்குவயரர்,' ஜனவரி 6, 1998).

பிரபல ஹாலிவுட் நடிகர் கெவின் காஸ்னருடன் ஜோடி சேர்ந்து நடிக்கவேண்டும் என்பது டயானாவின் ஆசைக் கனவுகளில் ஒன்றாம். கெவின் காஸ்னருக்கு போன் செய்து தனது ஆசையை டயானா வெளிப்படுத்தினாராம். அந்த வேளையில் காஸ்னர் தான் நடித்து ஏற்கெனவே சக்கைப்போடு போட்ட BODYGUARD (மெய்காப்பாளன்) என்ற படத்தின் தொடர்ச்சியாக BODYGUARD II என்ற படத்தைத் தயாரிப்பதற்குத் திட்டமிட்டுக் கொண்டிருந்தார். அந்தப் படத்தில் கதாநாயகியாக டயானா நடிப்பதற்கு காஸ்னர் ஒப்புக் கொண்டார்.

டயானாவுக்கு ஏற்ற கதை - வசனம் உருவாயிற்று. பூரண திரைக்கதை - வசனம் டயானா உயிர் துறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன் பூர்த்தியாயிற்று. இந்தப் படத்தில் டயானா பிறந்த மேனியுடன் தோன்றும் காட்சியும் காஸ்னருடன் மஞ்சத்தில் சங்கமமாகும் படுநெருக்கமான படுக்கையறைக் காட்சிகளும் இடம்பெறவிருந்தனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹாங்காங் நாட்டில் இடம்பெறும் இந்தக் கதையில் ஒரு அழகிய, எப்போதும் விலை உயர்ந்த ஆடைகளை அணியும் இளவரசியாக டயானா வருகிறார். அரண்மனையில் வசிக்கும் டயானாவுக்கு ஒரே ஒரு குறை தான் இருந்தது. அது - 'சுதந்திரம் இல்லாமை'. அரச மரபுகளுக்கு அப்பாற்பட்டு தனது இஷ்டம் போல் சுற்றித் திரிவதற்கு, அடுத்த வீட்டு இளைஞனைக் காதலிப்பதற்கு எல்லாம் விரும்பினாராம். அந்த அடுத்த வீட்டு இளைஞன் - கெவின் காஸ்னர் - அவரது மெய்க்காப்பாளன்.

அந்த சந்தர்ப்பம் டயானாவுக்குக் கிடைத்தது. அவரது கணவர் வியாபார நிமித்தம் வெளிநாடு போய்விடுகிறார். நள்ளிரவு நேரம். புயற்காற்று வீசுகிறது. பளிங்கினாலான அந்த மாளிகையின் ஜன்னல்கள் ஆடுகின்றன, கதவுகள் படபடக்கின்றன. ஏதோ ஓசை கேட்டு அதை என்னவென்று அறிந்துகொள்ள காஸ்னர் வருகிறார்.

டயானாவின் மஞ்சம் காலியாகக் காணப்படுகிறது. ஏதோ அரவம் கேட்டு காஸ்னர் திரும்பிப் பார்க்கிறார். அங்கே மெல்லிய ஒரு கவுனினூடாக தனது உடலின் அழகினை எல்லாம் காட்டி டயானா நிற்கிறார். இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்கின்றனர். சங்கமிக்கும் வெறியுடன் அவர்களது உடலின் இரத்தக்குழாய்களில் குருதி உருவெடுத்துப் பாயத் தொடங்குகிறது. காஸ்னர் டயானாவை நெருங்குகிறார். அந்த கவுனின் பொத்தான்களை ஒன்றன்பின் ஒன்றாக கழற்றுகிறார். இங்கிதம் தெரிந்த அந்த கவுனும் டயானாவின் தோள்மேல் வழுகி பின்புறமாகத் தரையில் வீழ்கிறது. காமராவின் பார்வையில் இரு உடல்கள் ஒன்றை ஒன்று நெருங்கிவந்து ஒரே உடல் உருவமாக மாற காட்சி FADE OUT ஆகிறது.

சிலமணி நேரத்தின்பின் புயல் ஓய்கிறது. மங்கிய நிலவொளியில் டயானாவின் மஞ்சம் தெரிகிறது. காஸ்னரை மஞ்சத்துக்கு இழுத்து வருகிறார் டயானா. போர்வைக்கு அடியில் பிறந்த மேனிகள் புகுந்து கொள்கின்றன. சங்கீத லயத்துடன் மேலும் கீழும் உயர்ந்து தாழ்ந்து போர்வை ஒரு மோகக் கதை சொல்ல, காமரா நாணத்துடன் தனது பார்வையை வேறு 'பக்கமாக மெல்ல மெல்லத் திருப்ப காட்சி FADE OUT ஆகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு காட்சியில் டயானாவின் படுக்கை அறைக்கு காஸ்னர் வருகிறார். மஞ்சம் காலியாக இருக்கிறது. குளியலறைக் கதவு சற்றே திறந்திருக்கிறது. திடீரென்று குளியலறையிலிருந்து டயானா வெளிப்படுகிறார். உச்சிமுதல் உள்ளங்கால் வரை தண்ணீர் சொட்டச் சொட்ட தனது முன்னழகை எல்லாம் ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்தி டயானா வெளி வருகிறார்.

கதை படிப்படியாக கிளைமாக்ஸை நோக்கி வளர்கிறது. வில்லன்கள் டயானாவை கடத்திச் செல்ல காஸ்னர் அவரைக் காப்பாற்றுகிறார். தங்களது கள்ளக் காதல் நிலைக்காது என்பதை உணர்ந்து டயானாவிடமிருந்து பிரியாவிடை பெறுகிறார்.

டயானாவின் நிஜவாழ்க்கையின் சாயலுடன் திரைக்கதை அமைந்திருக்கிறது.

இப்படி ஒரு மருமகள் எலிஸபெத் மகாராணிக்கு தேவை தானா? இப்படி ஒரு மனைவி இளவரசர் சார்லஸுக்குத் தேவைதானா? இப்படி ஒரு அன்னை இளவரசர்கள் வில்லியம், ஹரி இருவருக்கும் தேவைதானா?

மாமியாரோடு முறைப்பு - கணவரோடு கடுப்பு என்றாலும் தனது மகன்கள்மீது அளவற்ற பாசம் வைத்திருப்பதாக அடிக்கடி வலியுறுத்தி வந்த டயானா அவர்களது நலன் கருதியாவது தனது தான்தோன்றித் தனமான போக்குகளுக்குக் கடிவாளம் இட்டிருக்கலாம் அல்லவா? எதிர்காலத்தில் ஐக்கிய ராஜ்யத்தின் மன்னராக அரியணை ஏறப்போகும் இளவரசர் வில்லியத்தின் கௌரவத்தையும் கண்ணியத்தையும் காப்பதற்காவது தனது உணர்ச்சியின் உந்தல்களுக்கு அணைகட்டியிருக்கலாம் அல்லவா?

ஆளுமைக் கோளாறுகளுக்கு முறையான சிகிச்சை தான் ஏது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 240 கோடி டாலர் சொத்துக்களை ஆண்ட அல்பாயத்துகளுக்கு பிரிட்டன் பாஸ்போட் வழங்க மறுத்தது எதற்காக?

டயானா இளவரசர் சார்லஸின் மனைவி என்ற அந்தஸ்தை இழந்தார். எதிர்கால பிரிட்டிஷ் மகாராணி என்ற அந்தஸ்தை இழந்தார். வேல்ஸ் இளவரசி என்ற அந்தஸ்தை இழந்தார். இளவரசர் சார்லஸோடு சண்டை போட்டுக்கொண்டு, அவரை விவாகரத்துச் செய்துகொண்டதால்தான் இத்தகைய இழப்புகள் அவருக்கு ஏற்பட்டன. தன்னுடைய பொறுப்பற்ற நடவடிக்கைகளின் விளைவாகவே இந்த இழப்புகள் அவரை வந்தடைந்தன.

எந்த அந்தஸ்த்தைத்தான் அவர் இழந்தாலும் ஒரேயொரு அந்தஸ்தை மட்டும் அவர் இழக்கவில்லை. இளவரசர் சார்லஸ் அரியணை ஏறிய பின்னர், அவருக்கு அடுத்த சட்டபூர்வமான வாரிசான இளவரசர் வில்லியத்தின் - எதிர்கால பிரிட்டிஷ் மன்னரின் அம்மா என்ற அந்தஸ்துதான் அது.

தனக்காக இல்லாவிட்டாலும், எதிர்கால பிரிட்டிஷ் மன்னரின் அன்னை என்ற ரீதியில் அவர் பொறுப்புணர்ச்சியுடன் சில ஒழுக்க மரபுகளைக் கடைப்பிடித்திருக்க வேண்டும். அதைக்கூட அவர் செய்யவில்லை. டோடி அல்பாயத்தைத் திருமணம் செய்ய அவர் தீர்மானித்தார். டோடியுடன் காதல் உறவை ஆரம்பித்த ஓரிரு மாதங்களுக்குள்ளாகவே இந்த அவசர முடிவிற்கு அவர் வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டோடியை டயானா திருமணம் செய்திருந்தால், இஸ்லாமியரான டோடி எதிர்கால பிரிட்டிஷ் மன்னரின் 'சிறிய தகப்பன்' என்ற ஸ்தானத்தை அடைந்திருப்பார். முகம்மது அல்பாயத் எதிர்கால பிரிட்டிஷ் மன்னரின் 'சிறிய தாத்தா' என்ற ஸ்தானத்தை அடைந்திருப்பார். கிறிஸ்தவ நாடான பிரிட்டன் இதை மத அடிப்படையில் ஏற்றுக் கொண்டிருக்குமா?

மன்னர்கள் ஆட்சி புரியும் மத்திய கிழக்கின் தீவிர இஸ்லாமிய நாடுகள் தமது எதிர்கால மன்னருக்கு ஒரு கிறிஸ்தவ 'சிறிய தகப்பனை' அல்லது கிறிஸ்தவ 'சிறிய தாத்தாவை' ஏற்றுக் கொண்டிருக்குமா? நிச்சயமாக ஏற்றுக் கொண்டிருக்காது.

அரச குடும்பத்தினருடன் கல்யாண சம்பந்தம் வைத்துக்கொள்ள மத அடிப்படையில் மட்டுமல்ல, வேறு அடிப்படையிலும் அல்பாயத்து குடும்பத்திற்குத் தகுதி இருக்கவில்லை.

அல்பாயத்துகள் 240 கோடி டாலர் சொத்துக்கு அதிபதிகள் என்ற அந்தஸ்தில் இருந்தபோதிலும், அவர்கள் அகௌரவமான, அநாகரிகமான, நேர்மையற்ற வழிகளில்தான் அந்தச் சொத்துக்களைச் சம்பாதித்தார்கள் என்ற அவப் பெயரையும் சம்பாதித்திருந்தார்கள். பண்டங்களை வாங்குவதிலும் விற்பதிலும் மட்டுமல்ல, பொய் பித்தலாட்டங்களை பிரயோகிப்பதிலும் பலே கில்லாடிகள் என்ற முத்திரை அவர்கள்மீது பதிந்திருந்தது. சட்டப்படி தண்டனைக்குரிய குற்றங்களை அவர்கள் புரியாவிட்டாலும், சட்டத்தின் தூரவிளிம்புகளில் உள்ள சிறிய ஓட்டைகளினூடாகப் புகுந்து விளையாடும் அகட விகட சாமர்த்தியங்களில் ஒன்றைக்கூட அவர்கள் விட்டுவைக்கவில்லை என்ற பொதுவான கருத்து நிலவி வந்தது.

அதனால் தான் அவர்களுக்கு பிரிட்டிஷ் பிரஜா உரிமை மறுக்கப்பட்டு வந்தது. சாதாரண ஏழை எளியவர்களுக்குக்கூட கிடைத்து விடுகின்ற பிரிட்டிஷ் பாஸ்போட் அல்பாயத்துகளுக்கு மறுக்கப்பட்டு வந்திருக்கிறது. கோடிக்கணக்கான டாலர் சொத்துக்களுக்கு அதிபதியான தனக்கு பிரிட்டிஷ் பாஸ்போட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்கப்பட்டது முகம்மது அல்பாயத்தின் மனதில் தீராத ஒரு வடுவாக, ஓயாத ஒரு வலியாக இருந்து வந்தது.

முகம்மது அல்பாயத் 1954ல் சாமிரா காஷோகி என்ற எகிப்தியப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். அப்போது அவரை ஒரு பணக்காரர் என்றே சொல்ல முடியாது. அது ஒரு சராசரிக் குடும்பம். அப்போது அவர்கள் எகிப்தின் துறைமுக நகரமான அலெக்ஸாந்திரியாவில் வசித்து வந்தனர்.

சாமிராவின் அண்ணன் அட்னன் காஷோகி உலகப் புகழ் பெற்ற யுத்ததளவாட வியாபாரி. அட்னன் வழியாக அதிர்ஷ்டம் அல்பாயத்தை எட்டிப் பார்த்தது.

அல்பாயத்துக்கு உடல்வருந்தி உழைக்கவேண்டும், நிறையப் பணம் சம்பாதிக்கவேண்டும் என்ற கட்டுக்கடங்காத ஆவல் இருந்தது. இதை உணர்ந்துகொண்ட அட்னன் அவரை சவூதி அராபியாவைத் தளமாகக் கொண்ட தனது வீட்டுத் தளவாட இறக்குமதி வியாபாரத்திற்குப் பொறுப்பாக நியமித்தார்.

தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை முகம்மது அல்பாயத் செவ்வனே பயன்படுத்திக் கொண்டார். கோடீஸ்வர சம்பத்தை நோக்கிய ஏணியில் முதலாவது படியில் அன்று கால் வைத்தவர், தொடர்ந்து ஏறிக்கொண்டே இருந்தார்.

அவருக்கு ஐந்து பிள்ளைகள் பிறந்தனர். மூத்தவர் தான் டோடி. அல்பாயத் பிரிட்டனில் 23 வருடகாலமாக வசித்து வருகிறார். அவரும் அவரது சகோதரர் அலியும் பாரிஸில் உள்ள ரிட்ஸ் ஓட்டலை 1979ல் கூட்டாக வாங்கினர். 1985ல் அவர்கள் இருவரும் லண்டனில் உள்ள ஹரட்ஸ் நிறுவனத்தை விலைக்கு வாங்கினர். ஹரட்ஸ் உள்ளடங்கிய ஹவுஸ் ஆஃப் பிறேஸர் குழுவின் நிறுவனங்களை விலைக்கு வாங்குவதில், அல்பாயத் டைனி றோலன்ட் என்ற வர்த்தகப் பிரமுகருக்குச் சொந்தமான லொன்றோ ஸ்தாபனத்துடன் கடுமையாகப் போட்டியிட வேண்டி வந்தது. போட்டியில் தோல்வியடைந்த றோலன்ட் தனக்குச் சொந்தமான 'ஆப்சேவர்' பத்திரிகையில் அல்பாயத்து களுக்கு எதிராக ஒரு இயக்கத்தை ஆரம்பித்தார். இதன் விளைவாக, பிரிட்டனின் வர்த்தக, கைத்தொழில் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு விசாரணையை மேற்கொள்ளவேண்டி வந்தது. விசாரணை முடிவுகள் 1990ல் வெளியிடப்பட்டன. இந்த அறிக்கை அல்பாயத் சகோதரர்களைப் 'பொய்யர்கள்' என்று கண்டித்தது.

அல்பாயத்துக்கு பிரிட்டிஷ் குடியுரிமை வழங்கப்படாததற்கு இந்த அறிக்கைதான் காரணம் என்று நம்பப்படுகிறது. இந்த நேரத்தில் றோலன்டின் ஆதரவுடன் "ஸீரோவிலிருந்து ஒரு ஹீரோ" என்ற ஒரு பிரசுரமும் வெளிவந்தது. தங்களுடைய பணத்தைவைத்து ஹரட்ஸை விலைக்கு வாங்கியதாக அல்பாயத் சகோதரர்கள் சொல்வது பச்சைப் பொய். உண்மையில் ஹரட்ஸை விலைக்கு வாங்கப் பாவிக்கப்பட்ட பணம் புரூனை நாட்டு சுல்தானுக்கே சொந்தமானது என்று அந்தப் பிரசுரம் சாதித்தது. அல்பாயத் ஒரு 'ஹீரோ' (வீரர்) அல்ல, அவர் ஒரு 'ஸீரோ' (பூஜ்யம்) என்று எள்ளி நகையாடியது அந்தப் பிரசுரம்.

பிரிட்டனின் 1981ம் ஆண்டுக் குடியுரிமைச் சட்டத்தின்படி நற்குணம் உள்ள விண்ணப்பதாரர்களுக்கே பிரிட்டிஷ் குடியுரிமை வழங்கப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. ஹரட்ஸ் ஸ்தாபனத்தை விலைக்கு வாங்கிய சர்ச்சையில் அல்பாயத்தின் பெயர் களங்கப்பட்டதனால்தான் அவருக்கு பிரிட்டிஷ் குடியுரிமை வழங்கப்படவில்லை.

அல்பாயத் விடவில்லை. றோலன்டுக்கும் குடியுரிமைக்குப் பொறுப்பான உள்நாட்டுத்துறை அமைச்சர் மைக்கல் ஹவார்டிற்கும் இடையே குடும்பரீதியான தொடர்புகள் உண்டு என்று குற்றம் சாட்டி அமைச்சரை பதவி இறக்க முயன்று தோல்வியும் கண்டார்.

பல ஆண்டு காலமாக பிரிட்டனின் ஆளும் வர்க்கத்தின் வட்டத்தினுள் புகுவதற்கு அல்பாயத் பகீரதப் பிரயத்தனம் செய்து வந்திருக்கிறார். றோயல் வின்ட்ஸர் குதிரைப் பந்தயத்தை நடத்துவதற்கு வருடாவருடம் பணத்தை அள்ளி வீசினார். இதன் விளைவாக பந்தயத்தின்போது மகாராணிக்கு அருகே நின்று படம்பிடித்துக் கொள்ளவும் அந்தப்படங்கள் பத்திரிகைகளில் வருவதற்கும் வாய்ப்புக் கிடைத்தது. தனது அமெரிக்கக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலியைத் திருமணம் செய்வதற்காக பிரிட்டிஷ் மகுடத்தையே துறந்த வின்ஸர் கோமகனுக்கு உரிமையான - பாரிஸில் உள்ள மாளிகையை விலைக்கு வாங்கினார். அதைத் திருத்தி அமைத்து மீண்டும் அழகுபடுத்துவதற்காக பல கோடிகளைக் கொட்டினார். அந்த மாளிகையில் இருந்த வின்ஸர் கோமகனின் உடைமைகளில் என்னென்ன வேண்டுமோ, அதையெல்லாம் எடுத்துக்கொள்ளும் படி இளவரசர் சார்லஸுக்கு அன்புடன் வேண்டுகோள் விடுத்தார்.

அல்பாயத்திற்கு குடியுரிமை வழங்கப்படாதது ஏன் என்று பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்கும்படி முன்னாள் கன்வர்சட்டிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை ஏவி விட்டார். அதற்குச் சன்மானமாக (நேரடியாகச் சொல்லப் போனால் இலஞ்சமாக) டிம் ஸ்மித், நீல் ஹமில்டன் ஆகிய எம்பிக்களுக்கு பழுப்புநிறக்கவர்கள் நிறைய கரன்ஸி நோட்டுக் களை வாரி வழங்கினார். அவருக்குக் குடியுரிமை கிடையாது என்று அறிவிக்கப்பட்டவுடன் அந்த எம். பிக்களைக் காட்டிக் கொடுத்தார். பத்திரிகையாளர்களை வரவழைத்து, அந்த எம்.பிக்.களுக்கு சன்மானம் வழங்கிய விபரங்களைப் பகிரங்கப் படுத்திவிட்டார்.

கன்சர்வட்டிவ் கட்சி எம்.பி.க்கள் இலஞ்சம் வாங்கிய இந்தச் செய்தி பிரிட்டனை உலுக்கியது. கடந்த பொதுத் தேர்தலின்போது "ஊழல் கட்சி" என்ற அவப்பெயரை அவர்களுக்கு வாங்கித் தந்து, தேர்தலில் வரலாறு காணாத தோல்வியை அவர்களுக்கு ஏற்படுத்தித் தருவதற்கு ஒரு முக்கிய காரணமாகவும் அமைந்தது.

ஜானதன் அயிட்கென் என்ற கன்சர்வட்டிவ் கட்சி எம்.பி.யை விடுமுறைக்குப் போய்வாருங்கள் என்று சொல்லி பாரிஸிலுள்ள தனது றிட்ஸ் ஒட்டலுக்கு அனுப்பி வைத்தார் அல்பாயத் தனது செலவில். பின்னர் அவரது முதுகிலும் கத்தியால் குத்தி விட்டார். தனது 'ஓசி விருந்தாளியாக' பாரிஸ் றிட்ஸில் அயிட்கென் தங்கியிருந்தபோது, அங்கே சவூதி அராபியாவின் யுத்தத் தளவாட வியாபார முதலைகளும் தங்கியிருந்தனர் என்ற செய்தியை அவிழ்த்துவிட்டார் அல்பாயத்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச குடும்பத்தோடு சகவாசம் வைத்துக்கொள்ள முடியாவிட்டால், அரச குடும்பத்தோடு நேரடித் தொடர்பு உள்ளவர்களோடாவது நேரடித் தொடர்பு வைத்துக்கொள் வோமே என்ற தத்துவத்தின் அடிப்படையில் அல்பாயத் தேடிக்கொண்ட சிநேகிதர்களில் ஒருவர் தான் டயானாவின் அப்பா. அந்த உறவைச் சாக்காக வைத்து டயானா - சார்லஸின் மகன்களுக்கு ஆண்டுதோறும் நத்தார்ப் பரிசுகளை அனுப்பி வந்தார் அல்பாயத். "முகம்மது மாமாவின் அன்பளிப்பு" என்று அந்தப் பரிசுப் பொருள்களில் அல்பாயத்தின் பெயர் பளிச்சிடும்!

ஹரட்ஸ் ஸதாபனத்தில் பொதுமக்கள் தமது நகைநட்டுக்களை, முக்கிய பத்திரங்கள் முதலியவற்றை பாதுகாப்பான சேமிப்புப் பெட்டிகளில் பத்திரப்படுத்தி வைக்கும் வசதிகள் உள்ளன. இதற்கு ஆண்டுக்கொருமுறை சுமார் 800 டாலர்கள் வாடகை வசூலிக்கப்படும். நான்கு வருட காலமாக வாடகை கட்டத்தவறிய ஒரு பெண்மணியின் பாதுகாப்புப் பெட்டியை ஹரட்ஸ் ஸ்தாபனம் உடைத்து, அதற்குள் இருந்த பெறுமதி வாய்ந்த நகைகளைக் கையாடிவிட்டதாக ஒரு குற்றச்சாட்டு அக்டோபர் 1997ல் வெளி வந்துள்ளது. அந்தப் பெண் ஹரட்ஸுக்கு கொடுக்க வேண்டிய வாடகைப் பாக்கியைவிடப் பன்மடங்கு அதிகமான பெறுமதிப்புள்ள நகைகளை அதில் வைத்திருந்தாராம்.

ஹரட்ஸ் ஸ்தாபனத்தின் பாதுகாப்புப் பெட்டியொன்றில் டைனி றோலன்டும் தனது முக்கியமான பத்திரங்கள் சிலவற்றைப் பாதுகாத்து வைத்திருந்தார் என்றும், அல்பாயத் - றோலன்ட் இழுபறி உச்சக்கட்டத்தில் இருந்தபோது, அல்பாயத் சட்ட விரோதமான முறையில் றோலன்டின் பெட்டியை கள்ளத்தனமாகத் திறந்து அதனுள் இருந்த பத்திரங்களைச் சோதனை செய்தார் என்றும் சமீபத்தில் றோலன்ட் குற்றம்சாட்டியிருந்தார். இது நடைபெற்ற காலகட்டத்தில் ஹறட்ஸ் ஸ்தாபனத்தில் பாதுகாப்பு அதிகாரிகளில் ஒருவராகக் கடமையாற்றிவிட்டு, பின்னர் தானாகவே பதவியை ராஜினாமா செய்த ஒருவரைத் தனது சாட்சியாக றோலன்ட் அறிவித்தார். இது சமபந்தமாக ஹறட்ஸ் ஸ்தாபனத்தின்மீது வழக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரப்போவதாகவும் அக்டோபர் 1997ல் இது சம்பந்தமாக அறிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை ஸ்காட்லன்ட் யார்ட் துப்பறியும் போலீஸார் புலன்விசாரணை செய்தனர். அல்பாயத்தைக் கைதுசெய்து விசாரிக்க முடிவு எடுத்தனர். இதைக் கேள்விப்பட்ட அல்பாயத் தானாகவே ஸ்காட்லன்ட் யார்டுக்கு ஓடோடிச் சென்று சரணடைந்தார். ஹரட்ஸ் நிறுவனத்துக்கே போலீஸார் வந்து தன்னைக் கைது செய்து அழைத்துச் செல்லும் பப்ளிசிட்டியைத் தவிர்ப்பதற்காகவே அல்பாயத் தானாகச் சரணடைந்தார்.

போலீஸார் ஸ்காட்லன்ட் யார்டில் வைத்து அல்பாயத்தைக் கைது செய்தனர். விசாரணையின் பின் ஜாமீனில் செல்ல அனுமதித்தனர். புலன் விசாரணை மேலும் தொடர்கிறது.

முகம்மது அல்பாயத்தின் மகன் டோடியும் தந்தையைப் போலவே நல்ல பெயரைச் சம்பாதிக்கவில்லை. பெண்கள் விஷயத்தில் அவர் சம்பாதித்த அவப் பெயரை ஏற்கெனவே தரிசித்திருக்கிறோம். தனது தொழில் ரீதியாகவும் பணம் கொடுக்கல் - வாங்கல் ரீதியாகவும்கூட கெட்ட பெயரைத்தான் ஈட்டியிருந்தார்.

தனது சொந்தக்காலில் நிற்கக்கூடிய எந்த உருப்படியான தொழிலையும் அவர் செய்யவில்லை. செய்திருந்தால் தனது தந்தையிடமிருந்து தனது மாதச் செலவுக்கென இரண்டு இலட்சம் டாலர்கள் கைநீட்டி வாங்கவேண்டிய அவசியம் வந்திராது.

மாடல் அழகிகள், ஹாலிவூட் சினிமா நடிகைகளை அனுபவிக்க வேண்டும் என்ற உடலிச்சையுடன் அவர் அலைந்தார். அதற்கு உதவியாக இருக்கக்கூடிய ஒரு தொழிலைத் தேர்ந்தெடுத்தார். அது தான் ஹாலிவூட் படத் தயாரிப்பாளர் என்ற தொழில். 'அலைட் ஸ்டார்ஸ்' (ALLIED STARS) என்ற பெயரில் ஒரு படக்கம்பனியைப் பதிவு செய்துகொண்டார். படத் தயாரிப்பில் இறங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1981ல், டேவிட் பட்னம் பிரபுவுடன் கூட்டுத் தயாரிப்பாளராக 'சாரியட்ஸ் ஆஃப் ஃபயர்' (அக்னி ஊர்திகள்) என்ற ஆங்கிலப் படத்தை தயாரித்தார். அது ஆஸ்கார் விருது பெற்றது. பத்து ஆண்டுகள் கழித்து, ஸ்டீவன் ஸ்பீல்பேர்க்கூடன் கூட்டாக 'ஹுக்' என்ற படத்தைத் தயாரித்தார். அதற்குப் பின் தனியாக இரண்டு படங்கள் தயாரித்தார். அவை தோல்வி அடைந்தன.

தான் இறப்பதற்குச் சில வாரங்களுக்கு முன்னர் ஒரு புதிய படம் எடுப்பதற்குத் தயாராகிக்கொண்டிருந்தார். தன்னோடு கூட்டுத் தயாரிப்பாளராக டயானாவின் பெயரையும் போட்டுக் கொண்டு தனது சொந்தச் செலவில் அதை எடுக்கத் திட்டமிட்டார்.

அவருடைய அளவுக்கு மீறிய ஆடம்பரச் செலவுகள் காரணமாக எப்போதும் பணக் கஷ்டத்தில் இருந்தார். அவர் எழுதிக் கொடுத்த செக் ஓலைகள் அவரிடம் வங்கியில் பணம் இல்லை என்ற காரணத்தால் திரும்பி வந்தன. அவருடைய ஆடம்பரக் கேளிக்கைகள், விருந்துகளுக்கு உரிய செலவுகளைக் கட்டாததால் அவர்மீது பல வழக்குகள் நீதிமன்றத்தில் பதியப்பட்டன.

'அமெரிக்கன் எக்ஸ்பிரஸ்' கார்ட் கம்பனி அவர்மீது பல வழக்குகளைப் பதிவு செய்தது. அமெரிக்காவின் மிக விலை உயர்ந்த பெவர்லி ஹில்ஸ் பகுதியில், சினிமா நடிகைகளையும் மாடல் அழகிகளையும் 'மேய்வதற்காக' பல சொகுசு இல்லங்களை மாதத்திற்கு 35,000 டாலர்கள் வாடகைக்கு எடுத்திருந்தார். வாடகையைக் கட்டாமல் வீட்டு உரிமையாளர்களை ஏமாற்றி யதற்காக எத்தனையோ வழக்குகள் அவருக்கு எதிராக நீதி மன்றத்தில் பதிவாகியிருந்தன.

அவரது முதல் மனைவி சுசான் கிரிகாட்டை 1988ல் விவாகரத்துச் செய்தபோது தீர்வுத்தொகையாக 35 இலட்சம் டாலர்கள் கட்டினார் டோடி.

ஒரே வானம், ஒரே கடல், இரு கப்பல்கள், இரு அணங்குகள் என்ற அடிப்படையில் அவர் மாடல் அழகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெலிஃபிஷருடனும் டயானாவுடனும் ஒரே நேரத்தில் "சடுகுடு" விளையாடினார் அல்லவா? கெலியின் வாயை மூடவைப்பதற்காக இரண்டு இலட்சம் டாலருக்கு காசோலை எழுதி அவரிடம் கொடுத்தாராம். டோடியின் வங்கிக் கணக்கில் பணம் இல்லை என்ற குறிப்புடன் அந்தக் காசோலையும் திரும்பி வந்ததாம்.

மேலும், டோடிக்கு 'கொக்கேன்' என்ற போதைப்பொருளைப் புகைக்கும் பழக்கமும் இருந்ததாம். வாராவாரம் பத்து கிலோகிராம் கொக்கேன் வாங்குவாராம். தானும் புகைப்பாராம். தனது சிநேகிதர்களுக்கும் தாராளமாக வழங்குவாராம். டோடியின் நண்பர் ஒருவர் பத்திரிகைகளுக்கு அளித்த இந்தப் பேட்டியை அல்பாயத் உண்மையல்ல என்று மறுத்துவிட்டார்.

'முகம்மது மாமா'வினதும் 'டோடி மச்சான்'தும் பின்னணி இது தான்.

டயானா முகம்மது அல்பாயத்தை அணுகி, தனக்கும் தனது இரு மகன்களுக்கும் அல்பாயத்துக்குச் சொந்தமான வெளிநாட்டு உல்லாசப் பயணத் தளங்கள் ஏதாவது ஒன்றில் ஒரு விடுமுறையைக் கழிக்க ஒழுங்கு செய்து தரும்படி கேட்டார். ஹஸ்னத்தோடு டயானா ஊடல் கொண்டிருந்த நேரம் அது. தனது வாழ்நாளில் 240 கோடி டாலர்களைச் சம்பாதித்த அல்பாயத்தின் மூளையில் மின்னல் வேகத்தில் ஒரு அதிரடித் திட்டம் உருவானது.

தனக்குக் குடியுரிமை தரமறுத்த பிரிட்டிஷ் ஆட்சி பீடத்தின்மீது பழி தீர்ப்பதென்றால் பிரிட்டிஷ் அரச பீடத்தின் குடுமியையே இறுகப் பிடித்து தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும்.

"ஹஹ்ஹஹ்ஹஹ்ஹா... சபாஷ்... சரியான திருப்பம்," என்று ஒரு பி.எஸ். வீரப்பா பிரான்ட் கர்ஜனை வெளிவந்திருக்கலாம்! அந்தக் கர்ஜனையின் அதிர்வின் விளைவால் ஹரட்ஸ் கட்டடமே ஆடியிருக்கலாம்! அதற்கு ஒளியை அள்ளி வீசிய 11,000 மின்விளக்குகளே ஒரு கணம் ஸ்தம்பித்திருக்கலாம்! ஆச்சரியப்படுவதற்கில்லை. அல்பாயத் அதிரடி நடவடிக்கையில் இறங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுமுறை ஆரம்பமாயிற்று. முகம்மது மாமாவின் ஜெட் விமானம் டயானாவின் சேவையில் அமர்த்தப்பட்டது. முகம்மது மாமாவின் உல்லாசக் கப்பல் டயானாவின் சேவையில் அமர்த்தப்பட்டது. முகம்மது மாமாவின் உல்லாசப் பயணத் தளங்கள் யாவும் டயானாவின் சேவையில் அமர்த்தப்பட்டன. முகம்மது மாமாவும் அவரது குடும்பத்தினரும் தம்மை முற்று முழுதாக டயானாவின் சேவையில் அமர்த்திக் கொண்டனர். உலக மக்களின் கனவுக் கன்னிகளையெல்லாம் ஹாலிவூட்டில் பிடித்து விளையாடிய டோடியும் டயானாவின் சேவையில் அமர்த்தப்பட்டார். மத்தியதரைக் கடலே டயானாவின் சேவையில் அமர்த்தப்பட்டது.

இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த பாகிஸ்தானியர்களான ஹஸ்னத் கானும் குலு லால்வானியும் டயானாவுக்கு ஜோடியாக வரமுடியும் என்றால் இவர்களுடைய தலைமுறைகளையே விலைக்கு வாங்கக்கூடிய வசதி படைத்த டோடி ஜோடியாவதில் என்ன தப்பு? கிளியோ பாட்ரா ஒரு காலத்தில் ஆட்சி புரிந்த நாட்டின் இளவலுக்கு என்ன குறைச்சல்? அல்பாயத்தின் மனதில் எழுந்திருக்கக்கூடிய கேள்விகள் இவை.

விடுமுறைக்குச் சென்ற டயானா அங்கே தனக்குக் கிடைத்த அன்பு உபசரிப்பினால் திக்குமுக்காடிப் போய்விட்டார். 24 மணி நேரமும் டயானாவுக்கு ஜால்ரா. அன்பைப் பொழிந்து தள்ளினர் அல்பாயத் குடும்பத்தினர்.

பல ஸ்திரீகளை ஏற்கெனவே நோக்கிய அண்ணலும் நோக்கினான்; பல புருஷர்களை ஏற்கெனவே நோக்கிய அவளும் நோக்கினாள். "கண்ணொடு கண் நோக்கி ஒன்றை ஒன்று உண்ணவும் நேராது உணர்வும் ஒன்றிட அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்."

ஒரு நாளின் 86,400 வினாடிகளும் தனது கணவனின் கவனத்தை ஈர்த்து நிற்பதையே நாடிய - தேடிய டயானா அந்த ஈர்ப்பில் சொர்க்கத்தைக் கண்டார். முதலாவது விடுமுறை இரண்டாவது விடுமுறைக்கு வித்திட்டது. இரண்டாவது விடுமுறை மூன்றாவது (இறுதி) விடுமுறைக்கு வழி வகுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவுலகத்தில் சொர்க்கம் தொடர்ந்தது. தனது உற்ற நண்பர்களுக்கு தொலைபேசி அழைப்பு எடுத்து "இது சொர்க்கம்", "இது சொர்க்கம்" என்று டயானா சொல்லிக் கொண்டிருந்தார்.

டயானாவின் மரணத்தை அடுத்து, டயானா இறப்பதற்கு முன்னர் பேசிய இறுதி வார்த்தைகள் பிரெஞ்சு மருத்துவமனையில் அவரைப் பராமரித்த ஒரு நர்ஸின் வாயிலாக தனக்கு அறிவிக்கப்பட்டதாகவும், அந்த இறுதி ஆசைகளை ஸ்பென்ஸர் குடும்பத்திற்குத் தான் அறிவித்துவிட்டதாகவும் அல்பாயத் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். அந்த இறுதி ஆசைகள் என்ன என்பதை பகிரங்கப்படுத்த அவர் மறுத்துவிட்டார்.

டயானாவின் இறுதி ஆசை என்னவாய் இருந்திருக்கக் கூடும் என்ற விவாதம் டயானா அடக்கம் செய்யப்பட்டு பல வாரங்கள் போன பின்னரும் தொடர்ந்தது. அல்பாயத்திற்கு ஒரு பிரிட்டிஷ் பாஸ்போட் வழங்கப்படவேண்டும் என்று டயானா ஆசைப்பட்டதாகவும் கிண்டல்கள் வெளிவந்தன!

1998 பிப்ரவரி 12ம் தேதி 'டெயிலி மிர்ரர்' பத்திரிகைக்கு அல்பாயத் பேட்டி அளித்தார். அந்தப் பேட்டியில் டயானாவின் 'கடைசி ஆசை' பற்றி ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். **டோடியினுடைய வீட்டிலுள்ள தனது துணிமணிகள், நகைநட்டுகள் உட்பட தனது சகல உரிமைகளையும் தனது அக்கா சேராவிடம் ஒப்படைத்துவிட வேண்டும். தனது பையன்களின் பராமரிப்புப் பொறுப்பையும் சேராவே ஏற்றுக்கொள்ள வேண்டும்.** இந்தக் 'கதை' பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியது. அல்பாயத்தின் 'வம்பு வேலைகளில்' இதுவும் ஒன்று என்ற விமர்சனத்துக்கு உள்ளானது.

டயானாவின் கார் சுரங்கச் சாலையில் விபத்துக்குள்ளானபோது அந்தச் சாலையில் டாக்டர் பிரடரிக் மலியேஸ் என்ற பிரெஞ்சு டாக்டரும் காரில் சென்றுகொண்டிருந்தார். அவர் அவசர மருத்துவ சிகிச்சைப் பிரிவைச் சேர்ந்தவர். தனது காரை நிறுத்திவிட்டு, உதவிக்கு ஓடிச் சென்றார். அரைமயக்க நிலையில் இருந்த டயானா வலி தாங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிய வில்லை என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தாராம். அவருக்குத் தெம்பூட்டி, முதலுதவி அளித்தார் மலியேஸ். ஆம்புலன்ஸ் வண்டி வந்து, டயானாவுடன் புறப்படும்வரை அருகிலிருந்தார் மலியேஸ். ஆம்புலன்ஸ் டயானாவுடன் புறப் படும்போது அவர் பூரணமாகப் பிரக்ஞை இழந்துவிட்டார்.

மலியேஸ் உறுதிப்படுத்திய தகவல் இது.

ஆம்புலன்ஸ் வண்டியில் டயானாவுக்குப் பிரக்ஞை திரும்பவில்லை என்று அந்த வண்டியிலிருந்தவர்கள் உறுதிப்படுத்தினர்.

டயானா மருத்துவமனையை வந்தடைந்தபோது, பிரக்ஞை இழந்த நிலையிலேயே வந்தார் என்றும், எக்கட்டத்திலும் அவருக்குப் பிரக்ஞை திரும்பவில்லை என்றும் மருத்துவமனை உறுதி செய்தது.

மேலும், அல்பாயத் சொன்ன பெயருடைய எந்த ஒரு நர்ஸும் அந்த மருத்துவமனையில் அன்றிரவு கடமையில் இருக்கவில்லை என்றும் தெரியவந்தது.

அப்படியென்றால், டயானாவின் கடைசி வார்த்தைகள் என்று அல்பாயத் கூறிய செய்தி...?

இத்தகைய இலட்சணங்கள் பொருந்திய குடும்பத்தில் இரண்டாம் தாரமாக மாப்பிள்ளை எடுக்கத்தான் டயானா - எதிர்கால பிரிட்டிஷ் மன்னரின் அன்னை - துடியாகத் துடித்தார், துடிதுடித்து மரணமடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயிருடன் டயானா - கடைசிப் படம். றிட்ஸ் ஓட்டலிலிருந்து புறப்படுமுன் டோடியின் அரவணைப்பில் காணப் படுகிறார். முன்னால் நிற்பது காரோட்டிய ஹென்றி போல். இது றிட்ஸ் ஓட்டலின் பாதுகாப்பு காமராக்கள் பதிவு செய்த படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டயானாவின் மரணம் - விபத்தா? திட்டமிட்ட சதியா? வஞ்சிக்கொடி வஞ்சித்தாரா? வஞ்சிக்கப்பட்டாரா?

*டயானாவின் மரணவிசாரணை எந்தக் கட்டத்தில் தற்போது உள்ளது?*

விபத்துக்காளான ஹென்றி போலைப் பற்றி மேலும் தகவல்கள் வெளிவந்துள்ளன. அவர் காதலிலே தோல்வி அடைந்தவர். அதன் விளைவாக மனச்சோர்வு அடைந்திருந்தார். மனச்சோர்வைப் போக்குவதற்காக மாத்திரைகளும் சாப்பிட்டு வந்தார். இந்த மாத்திரைகள் சாப்பிடும்போது மதுபானம் அருந்தக்கூடாது என்று தெரிந்திருந்தும், அவர் அதைக் கவனத்தில் கொள்ளாமல் இஷ்டம்போல மது அருந்தி வந்தார். அவரது இரத்தப் பரிசோதனையின் போது, இரத்தத்தில் ஆல்கஹால் (மதுசாரம்) மட்டுமல்ல மனச் சோர்வு மருந்தும் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மருந்து, மது ஏற்படுத்தும் போதையை மேன்மேலும் தீவிரப்படுத்தும் தன்மை கொண்டது.

எனவே ஹென்றி போல் வெறும் மதுபோதையில் மட்டும் இருக்கவில்லை, மதுவும் மருந்தும் சேர்ந்து ஏற்படுத்திய மிதமிஞ்சிய போதையில் இருந்தார் என்பது தெளிவாகிறது.

எனவே விபத்திற்குப் பிரதம பொறுப்பாளி என்ற பழி அவர்மேல் மேலும் வன்மையாக விழுகிறது. அவரைக் காரோட்ட அனுப்பி வைத்த றிட்ஸ் ஓட்டல் நிர்வாகத்தின் மீதுள்ள பழியும் அதிகரிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரிய ஊழல் செய்து மாட்டிக் கொண்ட தனது நண்பருடன் (வலம்) டயானாவின் தம்பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹென்றி போல் பிரெஞ்சு விமானப்படையில் காப்டனுக்கு இணையான பதவியில் என்றுமே இருக்கவில்லையாம். ஒரு சிறிய பதவியே வகித்தாராம். றிட்ஸ் ஓட்டலில் வேலைக்குச் சேரும்போது அவர் பொய்சொல்லியிருக்கிறார் அவரது முன்னாள் தகைமைகளை சரிவர விசாரித்து உறுதிப்படுத்தாமல், றிட்ஸ் ஓட்டல் அவரை வேலையில் சேர்த்துக்கொண்டது ஓட்டல் நிர்வாகத்தின் சீர்கேட்டையே சுட்டிக் காட்டுகிறது.

விபத்தில் அடிபட்டதன் விளைவாக பலநாட்கள் பிரக்ஞை இழந்திருந்த டயானாவின் மெய்காப்பாளர் ட்ரெவர் றீஸ் ஜோன்ஸ் கண்களைத் திறந்தார். பலமாக அடிபட்ட அவரது முகத்திற்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. அதன் பின்னர் தான் அவரால் வாய்திறந்து பேச முடிந்தது.

அவரிடமிருந்து விபத்தைப் பற்றிய பயனுள்ள தகவல்கள் எதுவுமே கிடைக்கவில்லை. தலையில் அடிபட்ட அதிர்ச்சி அவரது ஞாபக சக்தியை பறித்துவிட்டது. இத்தகைய ஞாபகசக்தி இழப்பை (Retrograde Amnesia) என்று மருத்துவத் துறையில் குறிப்பிடுவர். றிட்ஸ் ஓட்டலை விட்டு காரில் புறப்பட்ட பின்னர் நடைபெற்ற எதுவுமே அவரது நினைவில் இல்லை. அந்தக் கட்டத்திலிருந்து அவரது நினைவு அறுந்துவிட்டது. ஹென்றி போலை வரவழைத்து, காரை ஓட்டும்படி சொன்னது டோடி எடுத்த முடிவுதான் என்பது அவரது நினைவில் தெளிவாகப் பதிந்திருந்தது.

றீஸ் ஜோன்ஸ் பிரெஞ்சு மருத்துவ மனையிலிருந்து வெளியேறலாம் என்ற அனுமதி வந்தவுடன் அல்பாயத் அவரைப் பொறுப்பேற்றார். அவரைத் தனது பிரத்தியேக ஹெலிகாப்டரில் ஏற்றி பிரிட்டனுக்குக் கொண்டுவந்தார். அவரை யார் கண்ணிலும் படாமல், ஸ்காட்லாந்தில் தனக்குச் சொந்தமாக இருந்த ஒரு மாளிகைக்கு அழைத்துச் சென்று தங்கவைத்தார். அரச உபசாரம் செய்தார். றீஸ் ஜோன்ஸ் தனது வாயைத் திறந்து பாரிஸ் றிட்ஸ் ஓட்டல் நிர்வாகத்துக்கெதிராக ஏதும் சொல்லிவிடக்கூடாதே என்பதை உறுதிப்படுத்தவே அல்பாயத் இந்த அன்புமழை பொழிந்தார் என்று சொல்லப்பட்டது.

ஆனால் றீஸ் ஜோன்ஸ் மசியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிஸில் நடைபெறும் போலீஸ் புலன்விசாரணைகளில் அக்கறை உள்ள ஒரு தரப்பினராகத் தன்னை நியமித்துக் கொண்டார். தனது நலன்களை விசாரணைகளில் கவனிப்பதற்காக வழக்கறிஞர்களையும் நியமித்தார். விபத்துக்கான முக்கிய பொறுப்பை ஹென்றி போலின்மீதும் அவரைக் காரோட்ட அனுமதித்த றிட்ஸ் ஓட்டல் நிர்வாகத்தின்மீதும் புலன்விசாரணைக்குழு போட்டால், றிட்ஸ் ஓட்டலிடம் கணிசமான நஷ்ட ஈடுகோரி றீஸ் ஜோன்ஸ் வழக்குப் போட இது வழிவகுத்தது.

டயானாவைத் தனது மருமகளாக்கிக்கொள்ள அதிரடி நடவடிக்கை எடுத்த அல்பாயத், "அவளைத் தொடுவானேன், அவலப்படுவானேன்?" என்று கவலைப்பட்டிருப்பாரோ?

விபத்து சம்பவித்து எத்தனையோ மாதங்கள் ஆகியும் பிரெஞ்சுப் போலீஸாரின் விசாரணைகள் முடிந்தபாடில்லை. ஏற்கெனவே பூர்த்தியாகி உள்ள விசாரணைக் கோப்பு பல அடிகள் உயரத்துக்கு வளர்ந்து விட்டதாம். இதிலே புகைப்படங்கள், சாட்சிகளின் வாக்குமூலங்கள், போலீஸ் அறிக்கைகள், பரிசோதனை முடிவுகள் என்பன அடங்கியுள்ளதாம். விஞ்ஞானப் பரிசோதனைகளுக்காக மட்டும் இதுவரை 3,60,000 டாலர்கள் செலவிடப்பட்டுள்ளது.

இந்தப் புலன் விசாரணையின் பரிமாணத்தையும் அதற்கான பிரமாண்டமான செலவையும் பற்றி ஏற்கெனவே ஆட்சேபனைகள் தொடங்கிவிட்டன. போலீஸ் தொழிற் சங்கங்களும் பல்வேறு சட்டக் குழுக்களும் முணுமுணுக்கத் தொடங்கிவிட்டன. இவ்வளவு பணமும் முயற்சியும் இந்த விபத்து விசாரணைக்கு மட்டும் ஒதுக்கப்பட்டது எப்படி? சில வீதி விபத்துக்கள் ஒழுங்கான விசாரணைக்கே ஆளாவதில்லை.

ஏனிந்தப் பாரபட்சம்? வரி செலுத்துபவர்களின் பணத்தை இப்படி வீணாக்குவதா என்ற ரீதியில் ஆட்சேபனைகள் பிரான்ஸில் எழுந்துள்ளன.

பிரெஞ்சுப் போலீஸாரின் புலன் விசாரணைகள் 1998ம் ஆண்டின் நடுப்பகுதியில்தான் பூர்த்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலீஸ் புலன் விசாரணைக்கோப்பு 31.8.97, முற்பகல் 12.23க்கு ஆரம்பிக்கிறது. இடம் - சுரங்கச் சாலை.


தனது கடமை முடிந்து அவ்வழியாக வீடு திரும்பிக் கொண்டிருந்த தீயணைக்கும் படையின் ஊழியர் ஒருவர் ஒரு நிமிடத்திற்குள் விபத்துக்குள்ளான காரை அடைந்துவிட்டார். முன் சீட்டில் இருந்த றீஸ் ஜோன்ஸை கவனித்தார். சில வினாடிகளுக்குள் டாக்டர் பிரடறிக் மலியேஸ் அங்கு வந்து சேர்ந்தார். அவரும் கடமையில் இருக்கவில்லை. சுரங்கப்பாதையில் எதிர்த்திசையில் வந்துகொண்டிருந்த அவருக்கு ஒரு கார் மோதிய ஓசை கேட்டதும்,தனது மோபைல் போனில் அவசர உதவிச் சேவைகளுக்கு அழைப்புக் கொடுத்தார். தனது காரை சுரங்கச் சாலையில் நிறுத்திவிட்டு அடிபட்ட காரடிக்கு ஓடிவந்தார்.

இரத்தம், வாகன எரிபொருள் என்பனவற்றின் நெடியும் ஏதோ எரிந்த நெடியும் அவரது மூக்கைத் துளைத்தன. கார்ச்சாரதியும் பின்சீட்டிலிருந்த ஒரு ஆணும் இறந்துகிடந்தனர். முன்சீட்டிலிருந்த ஒரு ஆணுக்கு ஒரு தீயணைக்கும்படை ஊழியர் முதலுதவி கொடுத்துக் கொண்டிருந்தார். பின்சீட்டில் முனகிக் கொண்டிருந்த டயானாவுக்கு மலியேஸ் முதலுதவி கொடுத்தார். மலியேஸ் வந்து சேர்ந்த பின்னர் தான் பப்பரட்சிகள் வந்து சேர்ந்தனர். படம் எடுக்கத் தொடங்கினர். முதலுதவி செய்தவர்களுக்கு அவர்கள் எந்தவித இடைஞ்சலும் தரவில்லை.

ஐந்து நிமிடங்களில் இரு ஆம்புலன்ஸ் வண்டிகள் ஸ்தலத்திற்கு வந்து சேர்ந்தன. ஒவ்வொரு வண்டியிலும் ஒரு டாக்டர் வந்தார். ஒருவர் டயானாவுக்கு முதலுதவி செய்தார். மற்றவர் டோடிக்கு முதலுதவி அளிக்கத் தொடங்கினார். ஹென்றி போல் இறந்துவிட்டதாகக் கணிக்கப்பட்டது. அவருக்கு முதலுதவி அளிக்கப்படவில்லை.

விபத்துப் பற்றிய செய்தி பரவியது. முற்பகல் 12.32க்கு டெலிவிஷன் காமராக்கள் ஸ்தலத்தை அடைந்தன. 12.55க்கு பாரிஸ் போலீஸின் பிரதம அதிகாரி வந்து சேர்ந்தார். 5. நிமிடங்கள் கழித்து, டயானாவை ஏற்றிக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுரங்கச் சாலையில் டயானா சென்ற மேர்சீடிஸ் பென்ஸ் கார் முன்னால் சென்ற பியட் யூ.என்.ஓ. காருடன் எப்படி மோதியிருக்கலாம் என்பதை விளக்கும் வரைபடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்புலன்ஸ் வண்டி புறப்பட்டது. மோட்டார் சைக்கிளில் ஒரு போலீஸ் அதிகாரி ஆம்புலன்ஸை வழிநடத்தி முன்னால் சென்றார். மருத்துவமனையை அண்மித்துக் கொண்டிருந்த வேளையில் ஆம்புலன்ஸ் பிரதான பாதையை விட்டுத் திரும்பி, ஒரு பக்கத் தெருவுக்குள் நுழைந்து நின்றது.

டயானாவின் இருதயம் துடிப்பது நின்றுவிட்டது. அவருக்கு அட்ரினலின் என்ற மருந்து ஊசிமூலம் ஏற்றப்பட்டு முதலுதவி அளிக்கப்பட்டபின் ஆம்புலன்ஸ் மீண்டும் புறப்பட்டது. முற்பகல் 2.05க்கு மருத்துவ மனையை அடைந்தது. விபத்து நடந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டு 43 நிமிடங்கள் கழிந்தபின்னரே ஆம்புலன்ஸ் மருத்துவ மனைக்கு வந்து சேர்ந்தது. டயானாவின் உயிரைக் காப்பாற்ற அங்கிருந்த மருத்துவ நிபுணர்கள் இருமணிநேரம் போராடினர். பலன் கிடைக்கவில்லை. அவர் இறந்துவிட்டார் என்று முற்பகல் 4.05க்கு அறிவிக்கப்பட்டது.

விபத்து நடந்த இடத்திற்கு ஆம்புலன்ஸ் வந்து சேர்ந்து 105 நிமிடங்களின் பின்னரேயே டயானா மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்டார். ஏன் இத்தனை தாமதம்? டயானாவின் உயிரைக் காப்பாற்ற முடியாமல்போனது இதனால் தானா?

இல்லை என்கிறார்கள் பிரெஞ்சு அதிகாரிகளும் டாக்டர்களும். பிரெஞ்சு ஆம்புலன்ஸ்களில் ஒரு நோயாளியின் உயிரைக் காப்பாற்றுவதற்குத் தேவையான சகல வசதிகளும் உள்ளன. ஒரு டாக்டரும் எப்போதும் இருப்பார். ஒரு நடமாடும் மருத்துவமனை போன்றதே பிரெஞ்சு ஆம்புலன்ஸ். அரக்கப் பரக்க ஓடாமல் சாவதானமான வேகத்திலேயே பிரஞ்சு ஆம்புலன்ஸுகள் ஓடுவது வழக்கம். உள்ளே நோயாளிக்கு சிகிச்சை தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கும்.

நோயாளிக்கு இரத்த அழுத்தம் குறைவாக இருக்கும்போது ஆம்புலன்ஸ் வேகமாகவே ஓடக்கூடாது என்றார் டாக்டர் மலி யேஸ். ஆம்புலன்ஸின் வேக அதிகரிப்பின்போதும், பிரேக் போடும்போது ஏற்படும் வேகத்தடையின்போதும், உடலில் உள்ள இரத்தம் மாறிமாறித் தலைப்பகுதிக்கும் காற்பகுதிக்கும் செலுத்தப்படுகிறது. அது நோயாளியைக் கொன்றுவிடும் என்று விளக்கியுள்ளார் டாக்டர் மலியேஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டயானா அனுமதிக்கப்பட்ட PITIE-SALPETRIERE மருத்துவ மனைக்குப் போகும் வழியில் மேலும் இரு மருத்துவ மனைகள் இருந்தன. அந்த மருத்துவ மனைகளில் டயானாவை அனுமதிக் காது தூரத்திலிருந்த மூன்றாவது மருத்துவ மனையில் டயானா அனுமதிக்கப்பட்டது ஏன் என்ற கேள்வி எழுப்பப்பட்டது.

இரவு வேளைகளில் பாரிசிலுள்ள சகல மருத்துவ மனைகளிலும் சகல துறைகளைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்களும் தயார்நிலையில் இருப்பதில்லை. ஒவ்வொரு இரவுக்கும் பூரண தயார்நிலையில் இருப்பதற்கு ஒவ்வொரு மருத்துவ மனை நியமிக்கப்படும். அன்றிரவு தயார் நிலையில் இருந்தது அந்த மூன்றாவது மருத்துவமனை தான்.

பொதுவான சர்ஜன்கள், மூளை - நரம்புத் துறை சர்ஜன்கள், இருதயச் சிகிச்சை நிபுணர்கள் போன்ற பலரும் தயார்நிலையில் இருந்தது அந்த மருத்துவ மனையில்தான். அதனால்தான் டயானா அந்த மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் என்று விளக்கம் தரப்பட்டது.

மேலும் டயானாவின் உடலில் காணப்பட்ட காயங்கள் மிகவும் மோசமானவை. ஒரு மருத்துவ மனையின் சிகிச்சை அறைக்கு முன்னால் அந்த விபத்து நடந்திருந்தாற்கூட அவரது உயிரைக் காப்பாற்றியிருக்க முடியாது என்றும் விளக்கம் தரப்பட்டது.

அவரது மண்டையில் பலமான அடி. ஒரு காலும் ஒரு கையும் முறிந்துவிட்டன. ஒரு தொடையில் பலத்த காயங்கள். இவை யாவற்றையும்விடப் பலமான காயம் நெஞ்சறையில் ஏற்பட்டிருந்தது. நுரையீரல்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட இரத்தத்தை இருதயத்திற்கு எடுத்துச் செல்லும் இரத்தக்குழாய் துண்டிக்கப்பட்டிருந்தது. இந்தக் காயத்திலிருந்து உயிர்தப்பவே முடியாது என்று விளக்கப்பட்டது.

டயானாவுடைய கார் விபத்தில் இன்னொரு காரும் சம்பந்தப்பட்டதா? அப்படியானால், அந்தக் கார் எங்கே? அதில் சென்றவர்கள் யார்? அவர்கள் சாட்சியம் அளிக்க ஏன் முன்வரவில்லை? அவர்கள் தலைமறைவாகிவிட்டார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டயானா கார்விபத்தின் மிகப் பெரிய மர்மம் இதுதான். இந்த முடிச்சை அவிழ்த்துவிட்டால் புலன் விசாரணை பூர்த்தி ஆகிவிடும்.

டயானா பயணம் செய்த பென்ஸ் வண்டிக்கு முன்னால் இன்னொரு கார் பாதையை அடைத்துக்கொண்டு குறைந்த வேகத்தில் போய்க்கொண்டிருந்தது என்று ஒருசில சாட்சியங்கள் அளித்த வாக்குமூலத்தை போலீஸார் ஆரம்பத்தில் முக்கியத் துவம் கொடுத்து ஆராயவில்லை. எனினும் பென்ஸ் வண்டியின் டயர்கள் சுரங்கச் சாலையில் ஏற்படுத்திய (பிரேக் பிடித்தபோது சம்பவித்த) அடையாளக் கோடுகளுக்கு அருகில் சில கண்ணாடித் துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அவை இன்னொரு காருக்குச் சொந்தமானவை. அந்தக் காரின் பின்புறத்தில் உள்ள TAIL LIGHTS களிலிருந்து உடைந்து வந்தவை என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அடிபட்ட பென்ஸ்கார் ஆய்வுகூடப் பரிசோதனைகளுக்கு உள்ளானபோது, அதனுடைய வலதுபக்கத்தில் உள்ள முன் கதவை ஒட்டி அமைந்த (பின்புறம் நோக்கும்) கண்ணாடியில் வெண்ணிறப் பெயின்ட் துகள்கள் ஒட்டிக்கொண்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

கண்ணாடித் துண்டுகளும் பெயின்ட் துகள்களும் SPECTROMETRY போன்ற நுணுக்கமான விஞ்ஞானப் பரிசோதனைகளுக்கு ஆளாயின. இவற்றிலிருந்து ஆச்சர்யகர மான கண்டுபிடிப்புகள் வெளிவந்தன.

கண்ணாடித் துண்டுகளும் பெயின்ட் துகள்களும் ஒரே காருக்குச் சொந்தமானவை! அந்தக் கார் ஒரு வெள்ளை நிற FIAT UNO! 1983க்கும் 1989க்கும் இடையே தயாரிக்கப்பட்ட மாடலைச் சேர்ந்தது அது!

கார் உரிமையாளர் விபரங்களை அரசு குறித்து வைக்கும் கம்பியூட்டர் பதிவுகளை போலீஸார் ஆராய்ந்தனர். அசாத்தியப் பொறுமையுடன் பலநாட்களாக இந்த ஆராய்ச்சி நடைபெற்றது. பாரிஸிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள, 1983க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுரங்கச் சாலையில் பியட் காருடன் அடிபட்டபின் டயானா சென்ற கார் கட்டுப்பாட்டை இழந்து எப்படி மோதி நொறுங்கியிருக்கலாம் என்பதை விளக்கும் வரைபடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989க்கும் இடையே விலைப்பட்ட, 1,12,000 வெள்ளைநிற FIAT UNO கார்களின் இலக்கங்களையும் அவற்றின் உரிமையாளர்களின் பெயர் - முகவரிகளையும் போலீஸார் சேகரித்துள்ளனர். இவர்கள் அத்தனை பேரையும் தனித்தனியாகச் சந்தித்து விசாரணை நடத்தும் பணியில் பெருந்தொகையான போலீஸ் குழுக்கள் ஈடுபட்டுள்ளன!

இது சுலபமான காரியமா என்ன?

வெள்ளைநிறக் காரில் வந்தவன் டயானாவைக் கொல்லும் நோக்கத்துடன் வந்தவனென்றால் விபத்து நடந்த அதே இரவே காரை ஒளித்திருப்பான், அல்லது அழித்திருப்பான்; அல்லது பிரெஞ்சு நாட்டு எல்லையை அன்றிரவே கடந்திருப்பான்.

அப்படியில்லை, வெள்ளைக் காரில் போனவன் இன்னொருவனின் பெண்டாட்டியோடு 'கள்ளச் சவாரி' போனவன் என்றால், விபத்து நடந்தவுடன் அவனும் ஓடி ஒளிந்திருப்பான். அங்கு நின்று சாட்சி சொல்லப்போக, அவனுடன் காரிலிருந்த காரிகை யாரென்று போலீஸார் தூண்டித் துருவ, அவனது லீலைகள் அம்பலம் ஆக... எனக்கேன் இந்த வம்பு என்று அவனும் ஓடி மறைந்திருப்பான். காரைத் தொலைத்திருப்பான்.

பியட் கார் குறைந்த வேகத்தில் சுரங்கச் சாலையில் சென்றது. பெருவேகத்தில் பின்னால் வந்த பென்ஸ் வண்டி பியட்டை நெருங்கியதும் ஹென்றி போல் சடுதியாக தனது பிரேக்குகளை அழுத்தினார். பின்னர், பியட் காரை அதனது இடப்புறமாக முந்திக்கொண்டு செல்ல ஆக்ஸலரேட்டரை அழுத்தினார். (பிரான்ஸில் சாலையின் வலது புறமாகவே வாகன ஓட்டம் உள்ளது).

பியட் காரை பென்ஸ் முந்தியபோது, பென்ஸின் வலப்புறமும் பியட்டின் இடப்புறமும் முட்டிக் கொண்டன. பியட்டை பென்ஸ் முந்திவிட்டது. ஆனால் மோதலின் விளைவாக பென்ஸின் ஸ்டியரிங் கட்டுப்பாடு சீர்குலைந்தது. மீண்டும் பென்ஸை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஹென்றி பால் முயற்சி செய்திருக்கிறார். அப்போது தெரிந்தோ தெரியாமலோ பென்ஸின் ஸ்டியரிங் கட்டுப்பாட்டை அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றாக இழந்தார். பென்ஸ் உறுமிக் கொண்டு முன்னால் பாய்ந்து சென்று, இடப்புறத்தில் சுரங்கத்தினுள் உள்ள பதின் மூன்றாவது தூணுடன் மோதியிருக்கிறது. அதன் விளைவாக, சாலையில் ஓரிரு தடவைகள் குட்டிக்கரணம் அடித்தபின் நேராக வந்தது. அதன் இயந்திரமும் ஓய்ந்தது. சவாரியும் முடிந்தது. அதன் சப்த நாடிகளும் அடங்கின. பின்னால் வந்த பியட் கார் அடிபட்ட பென்ஸ் வண்டியை விலக்கிக்கொண்டு சுரங்கப் பாதையில் முன்னேறி சுரங்கத்தைவிட்டு வெளியே வந்தது. பாரிஸின் நள்ளிருளில் மறைந்தது.

விபத்து நடைபெற்றது இப்படித்தான் என்பது பிரெஞ்சுப் போலீஸாரின் தற்போதைய கணிப்பு.

பியட் காரில் ஓடி ஒளிந்தது யார்? இது தான் 1997ன் இணையற்ற கேள்வி?

பப்பரட்சிகள்தான் பியட் காரில் சென்றிருப்பார்கள் என்று பிரெஞ்சுப் போலீஸார் சந்தேகிக்கிறார்களாம்.

பிரிட்டனின் உளவுப் படையான எம்.ஐ. 6ன் ஏஜண்டுகள் அல்லது இஸ்ரேலின் உளவுப் படையான மொசாட்டின் ஏஜண்டுகள்தான் பியட் காரில் சென்றார்கள் என்று ஒரே குரலில் ஓலமிடுகின்றன மத்திய கிழக்கு நாட்டுப் பத்திரிகைகள்.

வருங்கால பிரிட்டிஷ் மன்னரின் 'சிறிய தகப்பனாக' ஒரு இஸ்லாமியர் வரக்கூடாது என்பதற்காக திட்டமிடப்பட்டு செய்யப்பட்ட சதிநாசவேலை தான் இந்த விபத்து என்பது அவர்களது அசைக்கமுடியாத நம்பிக்கை.

கண்ணிவெடி தயாரிக்கும் உலக ஆயுத உற்பத்தி யாளர்களின் சம்பளத்தில் இருந்த கொலைஞர்கள்தான் பியட் காரில் சென்றார்கள் என்கின்றனர் இன்னும் சிலர்.

டயானாவின் முயற்சியால் உலகெங்கும் கண்ணிவெடித் தடை விரைவில் வரக்கூடிய வாய்ப்பு இருந்தது. இதனால் கண்ணிவெடித் தொழிற்சாலைகள் இழுத்து மூடப்படும் அபாயம் ஏற்பட்டது. அதனால்தான் ஆயுத உற்பத்தி யாளர்கள் டயானாவைத் தீர்த்துக் கட்டிவிட்டார்கள். இது ஒரு ஊகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலீஸ் - விசாரணை என்று தேவையில்லாத வம்பில் மாட்டிக் கொள்ளவிரும்பாத யாரோ ஒருவர் பியட் காரில் போயிருக்கக்கூடும். அவர் இன்னொருவன் பெண்டாட்டியோடு 'கள்ளச் சவாரி' போனவராக இருக்கலாம். அந்தக் காரில் போதைப் பொருள் கொண்டுபோனவராக இருக்கலாம். மது அருந்தி விட்டுக் காரோட்டியவராக இருக்கலாம். ஒழுங்கான லைசன்ஸ் இல்லாமல் காரோட்டியவராக இருக்கலாம். அல்லது, விபத்தில் யாராவது இறந்துவிட்டால் அந்தப்பழி தன்மீது விழுந்து அபராதம் - நஷ்டஈடு என்று கட்ட வேண்டிவருமோ என்று பயந்து ஓடியவராக இருக்கலாம். இவை இந்த நூலாசிரியரின் ஊகங்கள்.

இவற்றைப் போல், ஊகத்திற்கு மேல் ஊகம் சொல்லிக் கொண்டே போகலாம். இது ஒரு முடிவில்லாத சமாச்சாரம். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜான் கென்னடியைக் கொன்றது யார்? மாஃபியாவா? அல்லது சி.ஐ.ஏ தானா? எத்தனையோ வருடங்களுக்குப் பின்னர் இன்னும் இந்த விவாதம் முடிந்தபாடில்லை. அது போலவே, டயானாவின் அகால மரணம் விபத்தா அல்லது சதிநாசவேலையா என்று அடுத்த நூற்றாண்டிலும் விவாதம் தொடரும். இது சதிதான் என்று நிரூபிக்கவும் முடியாது, சதியல்ல என்று நிரூபிக்கவும் முடியாது.

'த பீப்பிள்' என்பது பிரிட்டனில் வெளிவரும் ஒரு சிறு பத்திரிகை. நான்கு 'பிரபல' சிறு பத்திரிகைகளையும்விட குறைவான விற்பனை உடையது இது. சமீப காலத்தில் இந்தப் பத்திரிகை டயானாவைக் கொன்றது பிரிட்டனின் உளவுப்படையா அல்லது இஸ்ரேலின் உளவுப்படையா என்று குட்டையைக் கிளறிக் கொண்டிருந்தது. ஆனானப்பட்ட பெரிய சோழியன்களின் குடுமியே ஆடாமலிருக்க, இந்தச் சின்னச் சோழியனின் குடுமி மட்டும் ஆடியது ஏன் என்று "பிரைவேட் ஐ" சஞ்சிகை விசாரணை மேற்கொண்டது.

'த பீப்பிள்' பத்திரிகையையும் ஏனைய சில பத்திரிகைகளும் வெளியிடும் எம்.ஜி.என். நிறுவனத்தில் பெரும்பான்மைப் பங்குகளை வாங்குவ்தற்கு முகம்மது அல்பாயத் இரகசிய முஸ்தீபுகள் செய்து வருவது வெளிப்பட்டது. அல்பாயத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கா பிடிப்பதற்காகத்தான் இத்தகைய செய்திகள் பிரசுரிக்கப் பட்டன.

மதுபோதையிலும் மருந்துப் போதையிலும் இருந்த ஹென்றி போல், பாரிஸின் போக்குவரத்து நெரிசல் நிறைந்த பகுதியினூடாக பைத்தியக்கார வேகத்தில் காரோட்டினான், அவனைக் காரோட்ட அமர்த்திய முட்டாள்தனமான முடிவை எடுத்தது டோடி அல்பாயத். இதுதான் யதார்த்தம். இந்த யதார்த்தத்திலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்பும் வகையில் எழுதப்படும் எந்தச் செய்தியும் அல்பாயத்திற்கு 'ஐஸ் வைக்கும்' செய்தியாகவே அமையும்.

'பிரைவேட் ஐ' வெளியிட்ட செய்தி, சின்னச் சோழியனின் குடுமி விறுவிறுவென்று ஆடியதேன் என்பதற்கு விளக்கம் தந்தது. அதுமட்டுமல்ல, 'ஆப்சேவர்', 'டுடே' போன்ற பத்திரிகைகளை விலைக்கு வாங்க முயன்று ஏற்கெனவே தோல்வியடைந்த அல்பாயத்தின் ஏகாதிபத்திய விரிவாக்கல் முயற்சிகள் இன்னும் ஓயவில்லை என்பதையும் கோடிட்டுக் காட்டியது.

டயானாவின் அகால மரணம் விபத்தா, அல்லது சதிநாசவேலையா என்ற கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது.

ஆனால் -

இந்த நூலின் வாசகர்கள் பதில் சொல்லக்கூடிய சில கேள்விகள் உள்ளன.

டயானா இளவரசர் சார்லஸை வஞ்சித்தாரா? அரச குடும்பத்தை வஞ்சித்தாரா? பத்திரிகைகளை வஞ்சித்தாரா?

அல்லது -

டயானா இளவரசர் சார்லஸால் வஞ்சிக்கப்பட்டாரா? அரச குடும்பத்தால் வஞ்சிக்கப்பட்டாரா? பத்திரிகைகளால் வஞ்சிக்கப்பட்டாரா?

வஞ்சிக் கொடி வஞ்சித்தாரா? வஞ்சிக்கப்பட்டாரா?

துணிவே துணை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பக்க அட்டைப்படம் சொல்லும் கதை

டயானாவின் வாழ்க்கையின் இரு கட்டங்களை இந்த இரு படங்களும் ஒப்பிடுகின்றன.

24.2.1981-ல் சார்லஸ் - டயானா நிச்சயதார்த்தம் அறிவிக்கப் பட்டதை அடுத்து வலது பக்கத்தில் உள்ள படம் எடுக்கப்பட்டது.

பத்திரிகைப் படப்பிடிப்பாளர்கள் டயானா வேலை செய்த நர்சரிக்கு விரைந்தனர். அப்போது டயானா மெல்லிய துணியில் தைக்கப்பட்ட ஒரு கவுனை அணிந்திருந்தார். உள்ளே பாவாடை ஏதும் அணிந்திருக்கவில்லை. அவர் படத்திற்குப் போஸ் கொடுத்தபோது சூரியனது கதிர்கள் அவருக்குப் பின்னாலிருந்து வந்து கொண்டிருந்தன. ஒளிக் கதிர்கள் அவரது மெல்லிய கவுனைத் துளைத்து அவரது தொடைகளின் வடிவத்தினை அப்படியே படத்தில் பதிந்துவிடுகின்றன.

**அறியாமல் தெரிந்த அங்கங்களின் கதை இந்தப் படம்.**

29.6.94-ல் இடது பக்கத்திலுள்ள படம் எடுக்கப்பட்டது. திருமண முறிவை அடுத்து தம்பதிகள் பிரிந்து வாழ்ந்த காலமது.

'சார்லஸ், அந்தரங்கமான மனிதர் : பகிரங்கமான கடமைகள்' என்ற பெயரில் சார்லஸின் தொலைக்காட்சிப் பேட்டி அன்று ஒளிபரப்பாகவிருந்தது. பேட்டி பரபரப்பாக இருக்கும் என்று நாடு எதிர்பார்த்தது. மறுநாள் காலை, பத்திரிகைகளிலெல்லாம் முதற் பக்கச் செய்தியாக பேட்டி விபரங்கள், சார்லஸ் படங்கள் வரும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

"சார்லஸூக்கு இப்படி ஒரு பப்ளிசிட்டியா? இதை விடக் கூடாது," என்று தீர்மானித்த டயானா ஒரு "குசும்பு வேலை' செய்தார்.

சார்லஸின் பேட்டி நடைபெற்ற அதே நேரத்தில் டயானா வுக்கும் சர்ப்பன்டைன் கலறியில் ஒரு சிறிய நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கு பல மாதங்களின் முன்பே ஒழுங்காகியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டயானாவின் நண்பர்கள், பத்திரிகைகளுக்கெல்லாம் போன் செய்து, "இன்று மாலை சர்ப்பன்டைன் கலறி நிகழ்ச்சியில் டயானாவைக் காணத் தவறாதீர்கள். உங்களுக்கு இன்ப அதிர்ச்சியைத் தரப்போகும் ஒரு ஆடையை டயானா அணிந்து வருவார்," என்று சொல்லிவிட்டார்கள்.

அங்கங்களின் அழகைக் காட்டிநின்ற கவர்ச்சி ஆடை அணிந்து டயானா வந்தார். மறுநாள் ்பத்திரிகைகளின் முதற் பக்கங்களில் டயானா நிறைந்தார். சார்லஸினுடைய 'மிக முக்கியமான' பேட்டி உட்பக்கங்களுக்குப் பிரஷ்டம் செய்யப்பட்டது!

**அறிந்து தெரியவைத்த அங்கங்களின் கதை இந்தப் படம்.**

கையின் ஆள்காட்டி விரலையும் நடுவிரலையும் மட்டும் நீட்டி, ஏனைய விரல்களை மடக்கி உள்ளங்கையை வெளியே நோக்கிய நிலையில் காட்டினால் அது வெற்றியின் அறிகுறி (V FOR VICTORY). சர் வின்ஸ்டன் சர்ச்சில் செய்து காட்டிய புகழ் பெற்ற சைகை அது.

ஆனால் விரல்களை அதே நிலையில் வைத்துக்கொண்டு உள்ளங்கையை தன்னை நோக்கித் திருப்பினால், அந்தச் சைகைக்கு "UP YOURS" என்று மேற்கு நாடுகளில் அர்த்தம். இது துர் அர்த்தம் கொண்ட சைகை.

இந்தக் கவர்ச்சி ஆடை மூலம் டயானா சார்லஸுக்கு "UP YOURS" என்று சொல்லிவிட்டார் என்ற அர்த்தத்தில் அந்த ஆடைக்கு "UP YOURS" ஆடை என்ற பெயர் வழங்கி வரலாயிற்று. பின்னால், டயானாவின் சில ஆடைகள் அறக்கட்டளைகள் நிதிக்காக ஏலத்தில் விற்கப்பட்டபோது, இந்தக் கவர்ச்சி ஆடைக்காக அமெரிக்கர்கள் போட்டி போட்டுக் கொண்டனர். பல ஆயிரம் டாலர்களுக்கு அந்த ஆடை விலை போனது.

**முற்றும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6/99

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அந்த நாள்
ஞாபகம்
நெஞ்சிலே
வந்ததே
இந்த நாள்
அன்று போல்
நிம்மதி
இல்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org